Under the final phase, the Ministry of Education targets 50,000 students to benefit, at a cost of Rs 1,000 million, for the purchase of tabs, laptops and infrastructure facilities.

The programme was first launched in 42 schools in 2016 and thereafter, in Stage II, 150 more schools were given the facility. The students are allowed to continue their education until 13 years, will also have the option to learn IT related studies in future.

**References:**


Abraham R.G. Liou H.C. (1991). Analysis of functions of spoken language

Bagui S. (1998). Reasons for Increased Learning Using Multimedia. Journal of Educational Multimedia and Hypermedia.

Brett P. (1998). Using Multimedia: A Descriptive Investigation of Accidental Language Learning. Computer Assisted Language Learning.

Clark R.E. (1998). Technology or Craft: What Are We Doing? Educational Technology.

Chapelle C. / Jamieson J. (1986). Computer-Assisted Language Learning as a Predictor for Success in Acquiring English as a Second Language. TESOL Quarterly .

Muyskens J.A. (Ed.) (1998). New Ways of Learning and Teaching: Focus on Technology and Foreign Language Education. Heinle & Heinle Publishers, Boston MA.

The Sunday Times (2018 September)

The Sunday Observer (2019 September)

# முயற்சி திருவினையாக்கும்

ஜெ. விதுர்சிஹா
2021 A/L Arts

"முயற்சிக்குச் சீதேவி முன்னாகும் சோம்பும்
அயர்ச்சிக்கு மூதேவியாம்"

தனிமனிதனாயினும், சமுதாயமாயினும் முன்னேறுவதற்கு முயற்சி மிக அவசியம் என்பது யாவரும் அறிந்ததே. "முயற்சியில்லா சோம்பல் மனம் இபிசாசின் தொழிற்சாலை" என்ற ஆங்கிலப்பழமொழி முயற்சியில்லாமையால் விளையக்கூடிய தீமைகளைச் சுருக்கமாக கூறுகின்றது. எனக்குச் செயல் புரிய வேண்டிய தேவை ஏதும் இல்லை. இருந்தும் எந்நேரமும் செயல்புரிந்த வண்ணமே உள்ளேன். ஏனெனில் நான் செயல்புரியாவிட்டால் உலகுயிர்கள் செயலிழந்துவிடும் என்பது பகவத்கீதையில் வரும் கண்ணனின் அருள்வாக்காகும். அத்தகைய பரம்பொருளே எப்போதும் செயல்புரிந்து கொண்டிருப்பாரானால் சக்தி குறைந்த மனிதராகிய நாம் செயலற்று வாழ்வது எங்ஙனம்? அவ்வாறு வாழ்வோமானால் அழிவையே நாம் அறைகூவி அழைப்பதாக அமையும் என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிகள், தனிமனித முன்னேற்ற முயற்சிகள், குறைபாடான அரசியல் சார்ந்த கூட்டங்கள் போன்றவை இன்னும் நல்ல நிலைக்கு வரவில்லை என்பது மறுக்க முடியாத உண்மைகளாகும். இதற்குக் காரணம் எம்மவர்களின் முயற்சி இன்மையே ஆகும்.

எம்மில் பெரும்பான்மையினர் ஒரு நாளின் பெரும் பகுதியை வீண் பேச்சுக்களிலும், பயனற்ற பொழுது போக்குகளிலும் கழித்து வருகின்றனர். மற்றும் முக்கியமாக நாட்டைக் கட்டியெழுப்பும் பெரும் கடமையைச் செய்ய வேண்டிய இளைஞர்கள் வீதிகளில் தேவையில்லாமல் அங்கும் இங்கும் அலைந்து தமது பொன்னான நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது மனவருத்தத்திற் குரிய விடயமாகும். இத்தகைய மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட சமுதாயம் முன்னேறுமா? என்று வினா எழுப்பினால் அதற்குப்பதிலாக "நிச்சியமாக இல்லை" என்பதையே கூறமுடியும்.

உலகில் முன்னேறிச் சாதனைகள் புரிந்து தம் பெயர்களை வரலாறுகளிலே பொன்னெழுத்துக்களால் பொறித்தவர்கள் இன்றுவரை பலர் உள்ளனர். அவர்களது வரலாற்றை எடுத்து நோக்கினால் அவர்கள் யாவருமே மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது, பசியைப்பொருட்படுத்தாது, கருமமே கண்ணாக நினைத்து உழைத்தவர்கள் என்பதை நாம் அறியக்கூடியதாக உள்ளது. அவர்கள் தாம் உரிமையாக்காது தமது சமுதாயத்திற்கும் வழங்கினார்கள். இதனால் வாய்ப்புக் கிடைத்தது.

நெப்போலியன், மகாத்மகாந்தி, ஆபிரகாம் லிங்கன், ஜவகர்லாநேரு போன்ற உலகிலேயே பெரும் தலைவர்களின் வரலாறுகள்" முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு அழிக்க முடியாத சான்றுகளாக விளங்குகின்றன. உலகியலில் மட்டுமன்றி ஆன்மீகவியலில் கூட இறைவனையே எந்நேரமும் துதித்து தொண்டுகள் செய்து முத்திப்பேறு அடைந்தவர்களது வரலாறுகளையும் முயற்சிக்கு சான்றுகளாக வைத்துக்கொள்ளலாம். இதன்மூலம் இம்மைக்கு மட்டுமன்றி மறுமைக்கும் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

நெப்போலியன் மிக இளம் வயதிலேயே இராணுவக் கல்லூரியில் மாணவன். ஆனால் அந்த அந்த இராணுவக்கல்லூரியில் கற்ற யாவருமே பிரபுக்களின் பிள்ளைகள், ஆயினும் ஏழைச்சிறுவனை அவன் தனது அயராத

முயற்சிகளால் உலகையே கிடுகிடுக்க வைத்து மாபெரும் வீரனாகினான் என்பது நாம் அறிந்ததே. இதனாலேயே நெப்போலியன் புகழ் இன்றும் அழியாது உள்ளது. இன்று நாம் ஜப்பானையே உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அங்கு அணுகுண்டால் ஏற்பட்ட பாதிப்பு எத்தகையது என்பது எமக்கத் தெரியும். "சுனாமியும், புயலும் தந்துவரும் தாக்கங்கள் சொல்லொணா .துவண்டார்களா? இல்லை எழுந்தாளர்கள், முயன்றார்கள். இருப்பினும் அங்கு வாழும் மக்கள் பாதிப்பினால் சோர்ந்து விடாமல் தன்னம்பிக்கையுடன் உழைத்து இன்று யாவருமே நினைக்காத அளவில் பெரும் வெற்றியை தனதாக்கிக் கொண்டுள்ளனர். இதற்குக் காரணம் அவர்கள் "முயற்சி திருவினையாக்கும்" என்பதை தமது தாரக மந்திரமாக மாற்றி உழைத்தமையே ஆகும்.

ஆகவே மாணவர் நாம் எமது நாட்டை நல்லதொரு வழியில் இட்டுச் செல்வது இளைஞர் சமுதாயத்தின் முயற்சிலேயே உள்ளது என்பதைப் புரிந்து கொண்டு எம் நேரத்தை வீண் செய்யாமல் இடைவிடாது சோர்வின்றி முயலவேண்டும் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

"மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்."

# தமிழா நீ பேசுவது தமிழா!

உன்னை சுமந்தவளுக்கும் மூன்றெழுத்து – அம்மா
உன்னை தோளில் சுமந்தவருக்கும் மூன்றெழுத்து –அப்பா
உன்னை நல்வழிப்படுத்தியவளுக்கும் மூன்றெழுத்து – அக்கா
உன்னை வளப்படுத்தியவனுக்கும் மூன்றெழுத்து – அண்ணா
உன்னில் பாசத்தை பொழிந்தவளுக்கும் மூன்றெழுத்து – பாட்டி
நீ மீசையை பிடித்து இழுத்தவனுக்கும் மூன்றெழுத்து- தாத்தா
நீ கைபிடித்தவளுக்கும் மூன்றெழுத்து – தங்கை
உன்னை இறுதி வரை காப்பாற்றுபவர்களுக்கும் மூன்றெழுத்து - பிள்ளை
நீ வாழும் வாழ்வும் மூன்றெழுத்து
மூன்றெழுத்து உறவுகள் தரும் மூன்றெழுத்தான
தமிழில் ஏன் வேற்றெழுத்து
**தமிழா நீ பேசுவது தமிழா!**

அ.தேவப்பிரியன்
தரம் 10D

# Sports and Games

**S.Niranjali**
**2020 Arts**

Sports and games may appear a waste of time and energy to those who know nothing about sports at all. The development of a country depends on its healthy and active citizens. Sports help us to build our body and strengthen it. It is vital for the proper functioning of the organs. Physical development must go hand in hand with mental development. Sportsmen can be active citizens. They can play a vital role in the country's development.

Sportsmen learn how to lead and how to follow. They at time enjoy the fruit of their hand work and practice. It is possible to learn good manners, to acquire tolerance and to treat defeat and success a like children can thus learn these qualities essential for men to engage in development activities.

A high sense of discipline develops in the minds of true sportsmen. They learn good manners, gain worthy friendships. Self-confidence and perseverance will lead them in all walks of life as in sports. The late president Mr.J.R.Jeyawardena once observed. "The development of the country in possible only when our citizens are disciplined" Sports and games can indeed discipline a nation and pave the way for the speedy development.

Sports are not an end in itself. It is more than more physical exercise of pastime. Sports can develop the personalities of these who will in future steer the development projects of their nation. Sports and games are important for everyone.

# தித்திக்கும் தமிழ்மொழி

பா.கௌதமி
A/L 2020 Arts

"தமிழுக்கு அமுதென்று பெயர் - அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்றார் புரட்சிக்கவிஞர் பாரதி தாசன். கிடைத்தற்கரிய பொருளான அமுதம் தமிழுக்கு ஒப்பானது என்கிறார். எங்கள் உயிரினும் மேலான தமிழ்மொழியானது செந்தமிழ், பைந்தமிழ், நற்றமிழ், தீந்தமிழ் என பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இத்தகைய தமிழ்மொழி எங்கள் தாய்மொழி என்பதில் நாங்கள் அளவிடமுடியாத பெருமை கொள்ளலாம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் "தாம் தமிழர்" என்று சொல்கிறார்களா? இல்லை. தமிழ்மொழியைத் தான் சரியாகப் பேசுகின்றார்களா என்றால், அதுவுமில்லை.

உலகம் போற்றும் உத்தம நூலாம் திருக்குறள். அந்த வான்மறையைப் பொய்யா மொழிப் புலவன் வள்ளுவன் தந்தான். ஆத்திசூடி, கொன்றைவேந்தன் எனும் அரும்பெரும் பொக்கிஷங்களை ஔவைப் பிராட்டியார் எமக் களித்தார். "கேட்டாலும் இன்பம் கிடைக்கும் கேண்மின்" எனச் சிறப்பிக்கப்படும் நளவெண்பாவை புகழுக்குரிய புகழேந்திப் புலவர் ஆக்கினார். கற்பையும் காதலையும் கவி ஊற எடுத்துரைத்த பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதி காரத்தை இளங்கோவடிகள் உருவாக்கினார். பாமரரும் படித்துணரப் பாடல்களைத் தந்து தமிழ்மண்ணை புகழ் பரப்பித் துயர்துடைத்த பாவேந்தன் பாரதிதாசன் போன்றோர் தித்திக்கும் தமிழ்மொழியின் சிறப்பிற்கு அணிசேர்க்கின்றார்கள்.

ஆனால் நாங்களோ? வார்த்தைக்கு வார்த்தை அந்நியமொழியையே பேசுகின்றோம். அழகும் சிறப்பும் பொருந்திய தமிழ்ச்சொற்கள் இருந்தும் அதை மறந்தது போல நடித்து தமிழை ஏளனப்படுத்துகின்றோம். தாய்ப்பாலுடன் அந்நியமொழியையும் கலந்து குடித்து அந்நியரின் நாகரீகத்தைப் பேணுகின்றோம். தாய்மொழியில் படிப்பதை விட்டுவிட்டு சர்வதேச மொழியில் படிப்பதே தற்கால வழக்கமாகிவிட்டது. மானிடத்தில் முதற்குரலாய் "அம்மா" எனும் சொல்லை தன்னுள் கொண்டது தமிழ்மொழி. அதுவும் மாறி "மம்மி" என்கின்ற நிலையில் உள்ளோம்.

பல்மொழித்தேர்ச்சி பெற்ற பாரதி,
"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

என ஆணித்தரமாகக் கூறியுள்ளார். அந்த தீர்க்கதரிசியின் வார்த்தையை மறுக்க இயலாது. திருவாசகம் எனும் தேனைத் தந்த மாணிக்கவாசகரின் திருவாசகத்திற்கு உருகாதோர் வேறொரு வாசகத்திற்கும் உருகார் என்பதெல்லாம் பொய்யா? உணர்வுக்கு தமிழ் என்று உலகமே ஒத்துக்கொண்ட பின்னும் தாய்மொழியைத் தமிழாய்க் கொண்டவர்கள் ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள்.

"சங்கம் வளர்த்த தமிழ், தமிழ்ப்புலவர் காத்த தமிழ்
கங்கை கொண்ட எங்கள் தமிழ் - வெல்லும்
ஒரு காலம் நல்ல பதில் சொல்லும்."

என்று துணிவுடன் பாடினார் கவியரசர் கண்ணதாசன். ஆனால் இன்றையநிலை இதற்கு மாறாக உள்ளது. தித்திக்கும் தீந்தமிழில் பாடினால் அன்பில்லாத கல்நெஞ்சங்களும் கனியாய் மாறும் என்கிறார். "தமிழ் படித்து என்ன பயன்?" என தமிழர்களே கேட்கும் ஈனநிலை வந்துவிட்டது.

"தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா"

என்று பெருமையும் தன்னம்பிக்கையும் கொண்டு முன்னைய காலத்தில் தமிழர்கள் இருந்தனர். இத்தகைய சிறப்புப்பொருந்திய தமிழை, அகதிகளாக வேறு நாடுகளுக்கச் சென்ற தமிழர்கள் வளர்க்கின்றார்களா? தமிழ்ப் பண்பாடு, கலாசாரம், மொழிச்சிறப்பு என்பவற்றை காக்கிறார்களா? என்பதை எண்ணும் போதெல்லாம் தமிழன்னை கண்ணீர் வடிக்கிறாள். இதனை மாற்றிய மைத்து தமிழன்னையை எழில்கோலத்திற்கு கொண்டு வர அனைவரும் ஒன்றிணைவோம்.

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

## சிந்தனைத்துளிகள்

### சுவாமி விவேகானந்தர்

- பூக்களாக இருக்காதே உதிர்ந்து விடுவாய் செடிகளாக இரு அப்போதுதான் பூத்துக்கொண்டே இருப்பாய்!
- உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம் ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது
- கீழ்ப்படியக் கற்றுக்கொள் கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்து அடையும்
- உன்மீது உனக்கே நம்பிக்கை இல்லை என்றால் கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை
- தோல்விகளால் அடிபட்டால் உடனே எழுந்துவிடு இல்லையென்றால்.... இந்த உலகம் உன்னை புதைத்துவிடும்.

### அன்னை தெரேசா

- வெறுப்பது யாராக இருந்தாலும் ....நேசிப்பது நீங்களாக இருங்கள்.....
- தண்டனை கொடுப்பதற்கு தாமதம் செய் ஆனால் மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனை கூட செய்யாதே
- உன்மேல் அன்பு செலுத்துபவர்களை நேசி உன் மேல் கோபம் கொண்டவர்களை அதைவிட அதிகமாக நேசி
- வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில் வாழும் வரை
- கண்ணுக்கு தெரிந்த மனிதரை மதிக்காவிட்டால்.....
  கண்ணுக்கு தெரியாத கடவுளை மதித்தும் பயன் இல்லை

# போதைப்பொருள் அற்ற நாடாக மாற்றுதல்

மே.சாங்கவி
தரம் – 11C

போதைப் பொருள் அற்ற தூய்மையான இலங்கை நமது தேசம் இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு சிறந்த தீவாகும். இந்தத்தீவில் பண்டை காலம் தொட்டு சிங்களம், தமிழ், முஸ்லீம், கிறிஸ்தவர் என நான்கு இன மக்களும் வாழ்ந்து வருகின்றார் கள். 1505 ஆம் ஆண்டு இலங்கையை போர்த்துக்கேயர் வந்தடைந்தபோது அவர்கள் பாவித்த மதுவை அதாவது சாராயத்தை அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களும் நுகரத் தொடங்கினார்கள். இதன் பின் வந்த ஒல்லாந்தரிடம் இருந்து இலங்கை மக்கள் இந்தப்பழக்கத்தை பழகினார்கள். அதன் பின்பு ஆங்கிலேயர் சாராயத்தை இலவசமாக இந்தக் காலத்தில் இருந்த மக்களுக்கு பருகக் கொடுத்தார்கள். நாளடைவில் அது பணத்திற்காக விற்கப்பட்டது.

சாராயம் அருந்தியவர்களுக்கு அது இல்லாமல் இருக்க முடியவில்லை. அதன்பின்பு ஆங்கிலேயர்கள் பெருந்தோட்டத்தை உண்டாக்கினார்கள். அங்கு வேலை செய்பவர்களுக்கும் மது அருந்தும் பழக்கத்தை தோட்ட அதிகாரிகளாகிய ஆங்கிலேயர்கள் பழக்கினார்கள். அதன் பின்பு தோட்டம் தொழிலாளர்களுக்கும் மது இன்றி வாழ முடியாத நிலை ஏற்பட்டது. காலம் செல்லச் செல்ல தோட்டத் தொழிலாளர்கள் யாவரும் பொதுவாக நாட்டு மக்களும் மது அருந்தும் பழக்கத்தை பழகி அதிலிருந்து விடுபட முடியாத சூழ்நிலையை அடைந்தார்கள். காலம் செல்ல போதைப் பொருட்களான ஹெரோயின், கஞ்சா, மாவா ஆகியவையும் இலங்கை மக்களிடையே பாவனையில் இடம்பெற்றுள்ளன. "குடிக்காதே குடிக்காதே அது குடியைக் கெடுத்துவிடும்" என்றெல்லாம் கூறியும் கூட மதுபானத்தில் ஈடுபட்டவர்களுக்கு அதிலிருந்து விடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தீவுக்கு பல வெளிநாடுகளில் இருந்து மறைமுகமாக போதைப்பொருட்கள் வந்த வண்ணமே இருக்கின்றன. கேரளா கஞ்சா பெருமளவில் இலங்கைக்கு களவாக கொண்டு வரப்பட்டு விற்கப்படுகின்றது.

இதனைத் தடுக்க இன்னமும் எவருக்கும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனை கவனத்தில் கொண்ட அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால ஸ்ரீசேன 'போதைப் பொருள் அற்ற நாடு' என்ற பிரகடனத்தை பிரகடனப்படுத்தி அந்தப் போதைப் பொருட்களில் இருந்து விடுபட மக்களைத் தூண்டும் பொருட்டு பல நிகழ்ச்சிகளை ஆரம்பித்துள்ள அதே வேளையில் ஜனாதிபதிக்காக போட்டியிடும் எந்தவொரு அபேட்சகர் தமது காலத்தில் போதைப்பொருள் அற்ற நாடாக திகழ வேண்டும் என்பதை மையமாக வைத்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளார். இப்போதைய இலங்கை மக்களின் பெரும்பாலானோர் போதைவஸ்து பாவிப்பதில் ஈடுபட்டுள்ளனர். அதனால் அவர்கள் பொருளாதார ரீதியில், தாழ்ந்த நிலையை அடைந்துள்ள அதே வேளையில் குடும்ப நிலையிலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். பாடசாலைக்கு அண்மித்து உள்ள வியாபார நிலையங்களில் இனிப்புப்பண்டங்களில் போதைப் பொருட்கள் கலந்து வழங்குவதன் மூலம் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி பாழடைந்து அவர்களின் எதிர்காலம் மங்கிப்போகும் நிலையில் உள்ள படியால் இலங்கை நாடு போதைப் பொருள் அற்ற நாடாக ஆக்க வேண்டும் என்பதில் எந்த வித வாதப்பிரதிவாதங்களும் கிடையாது என்பது என்னுடைய ஆணித்தரமான முடிவாகும்.

# உலகமயமாதலும் மின்வணிகமும்

மோ.லோகா
A/L (2021)com

"திரைகட.லோடியும் திரவியம் தேடு" என்று சொன்னார்கள் நம் முன்னோர்கள் இன்று திரைகடலோடி திரவியம் தேடவேண்டிய அவசியம் இல்லை. கணினி முன் அமர்ந்து திரவியம் தேடினால் மட்டுமே போதுமானது. சில நொடிகளில் உலகில் உள்ள திரவியங்களின் விபரங்களைக் கணினித்திரை தொகுத்து தந்து விடும். உலகம் சுருங்கிக்கொண்டிருக்கின்றது என்று சொல்வார்கள். அதற்குக்காரணம் இல்லத்தில் நாம் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் சில மணித்துளிகளில் உலகின் எப்பகுதியில் உள்ளவருடனும் தொடர்பு கொள்ள முடிகிறது என்பதனால்தான் ஆகும். இன்று தொலை பேசிகள், தொலைநகல் கருவிகள், இணையம் என்று அறிவியல் ஆய்வின் வெளியீடுகள் மொத்த உலகத்தினையும் சில மணித்துளிக்குள் சுருங்கி விட்டன. இவற்றுள் உலகின் முக்கிய கண்டுபிடிப்பாக இருந்து வருவது கணனி என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதுமட்டுமல்லாது இக்கணினியைப் பயன் படுத்தும் இணையமே இன்று உலகின் மொத்த தொலைத்தொடர்புகளையும் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றது எனின் மிகையாகாது. இந்த இணையத்தின் பயன்பாடும் ஆதிக்கமும் உலகின் மொத்த செல்வங்களை உள்ளடக்கிய வணிகச் செயற்பாடுகளையும் விட்டுவைக்க வில்லை.

21ம் நூற்றாண்டின் வணிக மாற்றத்திற்கு வித்திட்டது உலகமயமாதல் கொள்கை ஆகும். பல்வேறு கட்டுப்பாடுகளையும் தடைகளையும் தகர்த்தெறிந்து உலக வணிகத்தை வில் நுனியில் கையகப்படுத்த பெரும்பங்காற்றி வருவது இணையத் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகும். பாரம்பரிய வணிகத்தில் காகிதத்தின் பயன்பாடு மிகுந்திருந்தது. மின் வணிகத்திலோ காகிதங்கள் காணாமல் போய் எல்லாம் மின்னஞ்சல் வழியும் இணையதளங்கள் வழியும் பரிமாறப்படுகின்றன.

இன்று உலகின் முன்னணி நிறுவனங் கள் அடங்கிய நியூயோர்க் நகரம் முதற் கொண்டு சிறுதொழில் செய்து வரும் இக் கிராமம் வரையில் பலகோடி நிறுவனங்கள் தமது வியாபாரத்தை இணையத்தின் மூலமாக நடத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன. இவ்வாறாக கணினிகளைப் பயன்படுத்தி இணையத்தின் மூலமாக நடத்தும் வியாபாரத் தைத்தான் நாம் மின்வணிகம் என்று கூறுகின்றோம்.

மின்வணிகம் செய்ய கணினி மற்றும் இணையத்தின் இணைப்பு இவை இருந்தால் போதுமானது. மேலும் நாம் உற்பத்தி செய்யும் பொருள்களை, விற்பனை செய்யும் பொருள் களை வழங்கும் வேலைகளை பிறர் பார்த்து அதன் தன்மைகளையும், தரத்தையும் அறிந்து கொள்வதற்கு ஏற்றவகையில் ஒரு சிறந்த வலைத்தளம் அமைக்கப்பட்டு அதன் மூலம் உற்பத்தி பொருட்களையும் சேவைகளையம் பற்றி அறிவதற்கு ஏற்றவசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். மாதிரிப் பொருட்களை உள்ளது உள்ளபடி காட்டிட முப்பரிமாண வசதி கொண்ட மென்பொருட்களை அகப்பக்கத்தில் உள்ளீடு செய்தால் மேலும் சிறப்பு.

இதன்வழி, பாரம்பரிய வணிக முறையில் மேற்கொள்ளப்படும் வணிகப் பொருட்களை அயல்நாட்டிற்கு எடுத்துச் சென்று விளம்பரப்படுத்தும் செலவும் நேரமும் மிச்சப்

படுகிறது. அதே வேளையில் வணிகத்திற்கு உகந்த விநியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்க நல்ல வாய்ப்பும் ஏற்படுகிறது. மின் வணிகத்துறைக்கு வரையறைகள் ஏதும் இல்லை. எல்லையற்ற வணிகமான இம் முறையில் எந்தப் பொருளையும் சேவை களையும் விற்கலாம் வாங்கலாம். இதன்வழி மின் வணிகத்தில் ஈடுபடும் ஒருவர் தமக்குத் தேவையான விபரங்களை அலசிய பிறகு அவற்றை வாங்குவதற்காக வலைப்பக்கத்தில் உள்ள விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து பணத்தை மின்கடன் அட்டையின் வாயிலாகச் செலுத்தி பொருளையோ சேவையையோ பெற வேண்டியதுதான். வணிகத்தில் நேரடியாக தொடர்பு இல்லாதவர்களும் மின் வணிகம் வாயிலாக தரகு வணிகம் செய்து இல்லத்தில் இருந்தபடியே பெரும் பொருளீட்டலாம்.

மின் வணிகத்துறை பல்வேறு வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி தருகிறது. மின்வணிகம் செய்ய வலைத்தளங்கள் வடிவமைப்பது, வணிக கொடுக்கல் வாங்கலை முறையாக கணினியில் பதித்து பயன்படுத்தத் தேவையான நிரல்களை எழுதித் தருவது, கணினி வழி கணக்குப் பதிவு போன்ற துறைகளின் நிறைவான வேலைவாய்ப்புக்கள் தினமும் பெருகிவருகின்றன. சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துவம் மிக்கவர்கள் உலகின் எந்தமூலையிலும் வேலைக்கு மனு செய்யலாம். அரசியல், இனம், வம்சாவளி போன்ற பிரிவினை வாதமெல்லாம் இங்கே அப்பாற்பட்டதாகும்.

உலகளாவிய வணிகச் சந்தையின் தரத்தையும் இந்த மின் வணிகம் வழங்கு கின்றது. குறிப்பாக ஏற்றுமதி, இறக்குமதி போன்ற துறைகளில் நிறைவான வாய்ப்புக் களையும் வசதிகளையும் மின்னியல் வணிகம் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் ஏற்படுத்தித் தருகிறது.

பொதுவாக போதிய பாதுகாப்பு அம்சங்கள் மின்வணிகத்தில் பின்பற்றப் பட்டாலும் சில வேளைகளில் ஆபத்தையும் மின் வணிகம் ஏற்படுத்தி விடுகிறது. புதிதாக இம் முறையிலான வணிகத்தில் ஈடுபடுவோரும் இணையத்தள நெளிவு சுளிவுகளை அதிகம் அறிந்திராதவரே இதில் பாதிக்கப்படுவர். மின்னட்டைகளை பயன்படுத்தி கட்டணம் செலுத்துவதில் மூன்றாம் தரப்பினர் அழையா விருந்தினராக ஒருவரின் வங்கிக் கணக்கைச் சூறையாடும் போக்கு ஒரு மருட்டலாகவோ இருந்து வருகிறது. மேலும் பொருள் அல்லது சேவை வழங்குவதில் நம்பிக்கை மோசடி செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது என்பன இங்கே கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய அம்சமாகும்.

இணைத்தின் வருகையால் வணிகத் துறைக்கு கிட்டிய மாபெரும் மூலதனம் மின்வர்த்தகம். இன்றைய சூழலில் மின்வர்த்த கத்தில் ஈடுபடாவிட்டால் பின்தங்கிய ஒருவ ராகவே கருதப்படுவார். குறிப்பாக வளரும் நாடுகள் இச்சவாலை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் நிலவுகிறது. இவ்வணிக முறையே இந்நூற்றாண்டின் தன்னிகரற்ற வணிக முறையாக உலகம் கொண்டு வருகிறது.

# சிந்துவெளி தொல் நாகரிகம்

ந.சுசிந்தன்
12 கலை (2021)

உலகின் ஏனைய நதிக்கரை நாகரிகங்களோடு சமமானவை சிந்துவெளி நாகரிகமாகும். கி.மு.3250 தொடக்கம் 2750 வரையான காலப்பகுதியில் சிறப்புடன் இருந்திருக்கலாம் என ஆய்வாளர் கூறுகின்றனர். சிந்துவெளியில் வாழ்ந்த மக்கள் இந்து சமயத்தை கடைப்பிடித்து வாழ்ந்தனர். சிந்துவெளி மக்கள் கப்பல்கட்டுதல், தச்சுத்தொழில், சிற்பத் தொழில் கைவினைத் தொழில் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இந்து சமயம் 5000 ஆண்டுகள் பழமையானது. 1921ல் இருந்து சிந்துவெளி நாகரிகச் சின்னாங்கள் அகழ்வில் வெளிப்பட்டது. நாகரிக காலங்களில் சிவவழிபாடு, மரவழிபாடு, எருது, யானை போன்ற விலங்குகள் வழிபாடு லிங்க வழிபாடு மற்றும் பெண் தெய்வ வழிபாடும் இருந்தவையெனக் கூறப்படுகின்றது.

பசுபதி முத்திரை யோகி உருவில் அமைந்த முத்திரை சிவனைக் குறிப்பது என்பது ஜோன் மார்சல் கருத்து. திராவிடரின் தாய்த்தெய்வமாக கொற்றவை, பழையோள், கானமர் செல்வி, காடுகிளாள் கடல்கெழுசெல்வி எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டாள். எல்லையம்மனின் மறுபிறவியே மறுவடிவமே ரேணுகா என்று சிலர் கூறுகின்றனர். இந்தியாவில் இருந்த ஆரியல்லாதார் வழிபாட்டு முறைகளில் இருந்தே பிராமணியத்துக்கு வந்திருந்தது. 1923இல் மறைமலையடிகள் "வேளார் நாகரிகம்" என்ற நூலினை வெளியிட்டுள்ளார். பழைய உபநிடதங்களில் மறுபிறவிக் கொள்கை புதுமையானதாகவும் சிலருக்கு மட்டும் மறை பொருளாகவும் குறிப்பிடப்பட்டு இருந்தது. சிந்துவெளி ஆய்வில் லிங்க வடிவங்கள் பலவும் கிடைத்துள்ளன. சிந்துவெளி நாகரிக முத்திரைகள் விவரித்த செய்திகளை உணர்ந்த நிலையில் எழுத்துக்களைப் பற்றிக் கூறப்புகுவதாகும். எனவே சிந்துவெளி நாகரிகங்களில் இந்து சமயம் பற்றிய தத்துவம் சிந்துவெளிக்காலம், சமயநிலை, நுண்கலைகள், வாழ்க்கைமுறை என்பன பற்றி கூறத் தெளிவதாகும்.

# வாழ்க்கை


வாழ்க்கை எனும் வட்டத்தில்
நானும் ஓர் புள்ளியானேன்
அந்த சிறுபுள்ளியில்
நானும் ஓர் ஏழையானேன்
நானும் ஓர் ஏழையானதில்
துன்பங்கள் பல சந்தித்தேன்.
அத்துன்பம் கூட இன்பமனதில்
அவ் இன்பத்துடனே வாழ்கின்றேன்.

பு.லவன்
தொழில்நுட்பபிரிவு


# சாதனையாளர் விருது பெறும் மாணவர்கள் – 2019




செல்வன்
தி.சுடர்மயன் 7D




செல்வன்
சி.நர்த்தனன் 8D



செல்வன்
ர.கணாத்சயன் 9D



செல்வி
உ.அஷ்வினி 10D



செல்வி
வி.தாரணி 11D




செல்வி
ஜெ.பபிஜனா 12 Bio



செல்வி
இ.ஹார்த்தியாயினி 13 Com.

# கல்லூரியின் தாரகைகள்

**2018 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சையில் கலைப்பிரிவில்**
**3A சித்திகளைப் பெற்ற மாணவர்கள்**



செல்வன் த.அன்ரூட் ஜக்ஷன்



செல்வன் அ.நிசன்

**2018 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த)**
**பரீட்சையில் 9A சித்திகளை பெற்ற மாணவி**



செல்வி ஜெ.பபிஜனா

**2019 தேசிய மட்ட அறிவிப்பாளர் போட்டியில்**
**இரண்டாம் இடத்தினைப் பெற்ற மாணவி**




செல்வி. இ.ஹார்த்தியாயினி

**2019 இல் மாகாணப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டியில்**
**சிறந்த வீரர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள்**



செல்வி ந.ரனுசியா
வலைப்பந்து



செல்வன் ஜெ.மதீசன்
எறிபந்து



செல்வி ப.றேணுகா
எறிபந்து

# தாய்த் தலைமைத்துவம்

க.கயன்ஷிகா
தரம் 10$^{C}$

"தற்காத்துத் தற்கொண்டார் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

ஆம் கற்பு நெறியில் தன்னையும் காத்துக்கொண்டு தன்னை மணம் புரிந்து கொண்ட கணவனையும் அவனது கற்பு நெறி தவறாது பேணி, தகுதியமைந்த புகழையும் காத்து மனையரங்கிலும் தளர்ச்சி இல்லாதவளே இல்லத்திற்குச் சிறந்த பெண் என்று வள்ளுவப் பெருந்தகையார் பெண்ணின் பெருமையைக் கூறி இருக்கின்றார் இது மட்டுமல்ல.

"புகழ்புரிந்த இல் இல்லோர்க்கு இல்லை
இகழ்வார் முன் ஏறு போல் பீடுநடை"

என்னும் குறளினூடாக தலைவனின் புகழைக் காக்க விரும்பும் மனைவி (தலைவி) இல்லாதவர்க்கு தம்மை இகழ்ந்து பேசும் பகைவர் முன் சிங்கம் போல் இறுமாப்புடன் தலைநிமிர்ந்து நடக்கும் பெருமிதம் நடையில்லை. குடும்பத்தலைவன் தலை நிமிர்ந்து நடப்பதும் தலைகுனிந்து நடப்பதும் அந்தக் குடும்பத் தலைவியின் நற்குண செயல்களில் பெரிதும் தங்கியுள்ளமை இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த நிலைகளுக்கு மட்டுமல்ல, அவன் பெற்றெடுத்த பிள்ளைக்கும் அவனை பெற்றெடுத்த குடும்பத்தவர்களில் அவள் வாழும் சுற்றம், சமூகம் அனைத் திற்குமே பெருமிதத்தை வழங்கி நிற்கின்றது. ஒரு குழந்தையைச் சுமந்து பெற்றெடுக்கும் தகுதிப்பாடும், பொறுப்பும் ஒரு பெண்ணின் கைகளிலேயே இயற்கையால் வழங்கப பட்டுள்ளது.

பெண்மையை மாபெரும் சக்தி சமுத்திரமாக வர்ணிக்கும் பாரதியின் வரிகள் பெண்மைக்கு இலக்கணம் வகுத்த வரிகளாக தாய்த்தலைமைத்துவ மாண்பைப் பறைசாற்றி நிற்கின்றன. கண்டவர் போற்றும் பெண்மை "நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச்செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்பு வதில்லையாம்" எனும் வரிகளில் இருந்து பெண்மையின் திடசித்தம் வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம்.

பெண்ணை வெறும் போகப் பொரு ளாக பார்த்த நிலை மாறி அவள் கரத்தில் பாரிய பொறுப்புக்களை வழங்கி உன்னதமான தோர் மனித சமுதாயத்தை உருவாக்கிக் கட்டிக் காக்கும் நிலைக்கு இன்றைய மானிடம் உயர்ந்துள்ளமை உண்மையில் போற்றுவதற் குரிய ஒன்றாகும். மனிதர் தம்மை அமரர்களாக் கும் வல்லமை கொண்ட அன்னை பராசக்தியின் வடிவமாகவே பெண்மை பெருமிதம் கொள்கி றது. ஆடவர்கள் திசை மாறாமல், நெறி நிறைவான வாழ்வை திறம்பட நடத்துவதற்கு உந்து சக்தியாகப் பெண் என்பவள் பல்வேறு பரிமாணங்களில் விதந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒரு மனிதன் நடத்தை, உருவாக்கம் பெறுவதில் முதன்மைப் பொறுப்பை தாயானவள் ஏற்று வழிநடத்தி அவன் இளமை, மத்திய கால வாழ்வியலில் காதலி, மனைவி ஆகிய உறவுகளால் சீர்செய்து மீண்டும் முதுமை யில் ஆதரவாகக் காப்பாற்றும் தருணத்தில் தாரமே தாயாகி அரவணைக் கிறான் பெண்மைக்குரிய அன்புடைமை, விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு, தியாகசித்தம் ஆகிய குணாம்சங்கள் நல்லதோர் தலைமைத்துவத்தை இங்கு வழங்கி நிற்பதைக் காணமுடிகின்றது. எனவே, தாயானவள் உலகிலேயே முதன் முறையாக மதிக்கப் படுகின்ற பெண் ஆவாள். ஆகவே அவளை மதித்து அவரின் கனவை நியமாக்கி அன்புடன் வாழ்வோம்.

# சுவாமி விபுலானந்தர்

உ.வைஸ்ணவி
தரம் 10$^{C}$

சுவாமி விபுலானந்தர் அவர்கள் மார்ச் 27.1892 பிறந்தார். இவர் கிழக்கிலங்கையில் பிறந்து தமிழ்மொழி வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியவர். இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலிய பல துறைகளில் கற்றுத் தேர்ந்தவர்.

பிறப்பு : மயில்வாகனம் சின்னத்தம்பி
மார்ச் 27.1892
காரைதீவு, இலங்கை

இறப்பு : ஜீலை 19.1947 (அகவை 55)
மட்டக்களப்பு, இலங்கை

இறப்பிற்கான காரணம் : சுகவீனம்

கல்லறை : சிவானந்த வித்தியாலயத்தில் இவரது நினைவுச் சின்னம் (சமாதி) உள்ளது

தேசியம் : இலங்கையர்

மறுபெயர்கள் : விபுலாநந்த அடிகள்

கல்வி : இளமாணி (அறிவியல், இலண்டன் பல்கலைக்கழகம்)

பணி : பேராசிரியர்

பணியகம் : இலங்கைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அறியப்படுவது : தமிழிசை ஆய்வாளர், பண்டிதர், நூலாசிரியர், இந்து மறு மலர்ச்சியாளர்.

சமயம் : இந்து

**இவரின் வாழ்க்கை வரலாறு**

**பிறப்பு :**

சுவாமி விபுலானந்தரின் இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் 27.03.1892 ஆம் ஆண்டு, மார்ச் மாதம், 27 ஆம் தேதி சாமித்தம்பி, கண்ணம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார்.

**கல்வி :**

இவர் ஆரம்பக்கல்வியை கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் கற்றார். கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், அவர் புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராகச் சிலகாலம் பணிபுரிந்து, அதன் பின் கொழும்பிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு விரிவுரையாளராயிருந்த தென்கோவை கந்தையாபிள்ளையிடம் பண்டைய தமிழ் இலக்கியத்தைக் கற்றார்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 1912 ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற சான்றிதழுடன் மீண்டும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். 1915ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் தொழில்நுட்பக்கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916இல் அறிவியலில் பட்டத்தையும் பெற்றார். அத்துடன் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் பங்கேற்று பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையில் இருந்து இப்பட்டத்தை முதன்முதல் பெற்றவர் சுவாமி விபுலானந்தரே

**ஆசிரியர்ப்பணி :**

கொழும்பு அரசினர் தொழிநுட்பக் கல்லூரியில் இரசாயன உதவி விரிவுரை யாளராக பணியாற்றினார். மயில்வாகனனாரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பைத் தேடிக் கொடுத்தார். அதனால் 1917

ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெரு விருப்புடன் ஏற்றுக்கொண்டார். அத்துடன் 1920 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய B.Sc. தேர்வில் தோற்றி சித்தியடைந்தார். மயில் வாகனனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி முகாமையாளரும், திருப்புகழ், சிவப்பிரகாசம், சிவஞானசித்தியார் என்ப வற்றுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

திருகோணமலை கோணேஸ்வரர் இந்துக்கல்லூரியில் 1925ஆம் ஆண்டிலிருந்து முகாமையாளராகக் கடமையாற்றிய சுவாமி விபுலானந்தர் அவர்கள் கல்லூரியில் வளர்ச்சியில் தனது செறிவான கவனத்தைச் செலுத்தும் பொருட்டு 1928 இல் அதிபர் பதவியையும் ஏற்றுக்கொண்டார்.

**ஆன்மீகப்பணி :**

மனதை ஈர்த்து வந்த துறவுணர்வு, நாளும் பொழுதும் பெருகி இராமகிருஷ்ண மிஷனில் சங்கமிக்கத் துடித்துக் கொண்டி ருந்தார். ஆசிரியப் பதவியைத் துறந்து 1922 ஆம் ஆண்டில் ராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார். மயில்வாகனனுக்கு, சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சிவானந்தரினால் பிரபோதசைத்தன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும், சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன. இரண்டு வருடங்கள் அங்கு பயின்ற அவர், இராமகிருஷ்ண மிஷன் நடத்திய ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் என்ற தமிழச் சஞ்சிகைக்கும், வேதாந்த கேசரி என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராக இருந்து பல அரிய கட்டுரைகளை எழுதினார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டித பரீட்சையின் பரீட்சார்த்த கரான நியமிக்கப்பட்டார். தமிழ்ச்சங்க வெளி யீடான செந்தமிழ் எனும் சஞ்சிகையில் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் பல திறனாய் வுக் கட்டுரைகளை வெளியிட்டி ருக்கிறார். இக்கட்டுரைகள், "மதங்க சூளாமணி" என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

1924ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் சுவாமி விபுலானந்தர் என்ற துறவறப் பெயர் வழங்கப்பட்டது. அதன்பின்னர். அவர் இலங்கை திரும்பி, இராமகிருஷ்ண மிஷன் மேற் கொள்ளும் கல்விப் பணிகளை ஒழுங்கமைத்தார்.

**மறைவு :**

யாழ் நூல் அரங்கேற்றத்துக்கு பின்னர் உடல் பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பினார். 1947ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை இரவு சுவாமி விபுலானந்தர் இறந்தார். அவரது உடல், அவர் உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. ஈழத்து மக்களுக்கு இவர் ஆற்றிய சேவையினைப் பாராட்டி இலங்கையரசு தேசியவீரர் வரிசையில் ஒருவராக இவரைச் சேர்த்துள்ளது. இத்துடன் நாட்டிலுள்ள பாடசாலைகளிடையே கொண்டாடப்படும் அகில இலங்கை தமிழ்மொழி தினம் இவரது மறைவு தினமான அன்றே கொண்டாடப்படுகின்றது.

# வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்

சி.நர்த்தனன்
தரம் 8^D^

"வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான்" இந்த வாசகம் ஒரு சிறந்த பொன்மொழியாகும். மனிதன் தன் வாழ்க்கையிலே பூரணம் அடைவதென்பது மிகவும் அசாதாரணமான ஒரு விஷயம். ஆனால், அவ்விஷயத்தைச் சாதிப்பதற்கு சுலமான ஒரு வழியினை இப்பொன்மொழி எமக்கு உணர்த்துகின்றது.

வாசிப்பது என்பது சிரமமான செயலல்ல; மிகவும் சுலபமானதே; தினமும் குறிப்பிட்ட நேரம் மனமொன்றி வாசிக்க வேண்டும். வாசித்ததைக் கிரகித்து மனதிலே பதித்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு மனிதனது அறிவாற்றல் சுயமாகவே வளர்கின்றது. எல்லா உயிர்களிலும் பார்க்க மனிதனே ஆறாவது அறிவான பகுத்தறிவைப் பெற்று இருக்கின்றான். அவனது பகுத்தறிவை வளர்த்துப் பெருக்கிக் கூர்மைப்படுத்துவதில் கல்வியே பெரும்பங்கு வகிக்கின்றது. கல்வியின் சுயதேடல் முயற்சியின் முதன்மை விஷயமாக விளங்குவது வாசிப்புப் பழக்கமாகும்.

வாசிக்கும்போது ஒரு முக்கிய விடயத்தை நாம் கவனித்திற் கொள்ள வேண்டும். அதாவது, வாசிப்பதற்கு என்று ஏராளமான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பன வெளியிடப்பட்டு வருகின்றன. இவற்றிலே நல்லனவற்றையே நாடி நாம் வாசிக்கவேண்டும். அத்தகைய நல்ல நூல்களே எமக்கு நல்ல நண்பன் உதவுவது போல நல்லறிவு தருவன ஆகும்.

பேரறிஞர்களால் எழுதப்பட்ட அறிவுக் களஞ்சியமான நூல்கள், ஆன்மீகஞானிகளால் உருவாக்கப்பட்ட ஆன்மீகநூல்கள் போன்ற நூல்களை நாம் வாசிக்கவேண்டும். தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்கள் வாசிப்பைப் பற்றி மிகவும் அழகாகக் கூறுகின்றார். "விலங்கோடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றவரோடு ஏனையவர்" அதாவது, விளங்கிய நூல்களைக் கற்றவரோடு கூடியிருக்கும் கல்லாத மனிதர்கள் மக்களோடு கூடிய விலங்குகள் போன்றவர்கள் எனக் கூறுகின்றார்.

வாசிப்பானது எமது அறிவைப் பெருக்கும்; ஆற்றலை வளர்க்கும்; கல்வியிலே மேன்மை அடையச் செய்யும்; கிணற்றுத் தவளையாக இல்லாமல் எல்லாவற்றையும் அறிந்த மேதாவிகளாக எம்மை ஆக்கும்; நாம் பட்டம் பெறவும், பதவி வகிப்பதற்கும் உறுதுணையாகும்; எனவே, வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் என்பது உண்மையாகும்.

"மலை வாழை அல்லவோ கல்வி" என்று கல்வி பற்றிப் பெருமையாகக் கவிபாடிய பாரதிதாசன் அவர்கள் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி 'புத்தகசாலை' எனும் கவிதையிலே மிகவும் அழகாக வர்ணிக்கின்றார். அதாவது மனிதன் அன்புநெறியில் வாழ்வதற்கும், சுயநல எண்ணங்கள் விலகி பரந்த மனப்பான்மையினைப் பெறுவதற்கும் புத்தகவாசிப்பு உறுதுணையாகும் என்கின்றார். "முதலாவது குடியரசு ஆட்சியின் தந்தை' எனப் போற்றப்படும் ஆபிரகாம் லிங்கன் அவர்கள் பல நூல்களை வாசித்து வாசித்து தமது அறிவையும், ஆற்றலையும் வளர்த்துக் கொண்டார். பல பிரபல சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றில் புத்தக வாசிப்பு பெரும் பங்காற்றுகின்றது. ஒருவனுக்கு நல்ல நண்பன் வாய்த்துவிட்டால் 'உடுக்கை இழந்தவன் கைபோல செயற்பட்டு நண்பனைக் காப்பான். அதுபோல நல்ல நூல்கள் எமது உள்ளத்திலிருந்து இருளை

நீக்கும்; எமது அறிவுப் பசிக்கு நல்லுணவாக விளங்கி நிறைவை அளிக்கும்;

பல துறைசார்ந்த நூல்களும் காணப்படுகின்றன. இவற்றை வாசிப்பதற்கான ஒழுங்கினை நாம் வரையறை செய்ய வேண்டும். நீண்டதூரப் பயணமொன்றை மேற்கொள்ளும்போது அதனை புத்தக வாசிப்பிலேயே கழிக்கலாம். இதனால் அப்பயணநேரம் அவப்பொழுதாக அமையாமல் தவப்பொழுதாகவும் அமையும்.

திருக்குறள், பகவத்கீதை போன்ற சக்தி வாய்ந்த நூல்கள் உள்ளன. இவை எம்மை நாட்டிற்கு நற்பிரசையாக மிளிரச் செய்யும். நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்.

## அம்மா

புரண்டு படுத்தால் இறந்து விடுவோமோ என்று
கருவில் இருந்த நமக்காக தூக்கத்தை
கூட துளைத்து விட்டு இரவில் விழித்திருந்த
சூரியன் என் அம்மா.....

தாயின் அருமை நீ வளரும்போது தெரியாது
உன் பிள்ளையை நீ வளர்க்கும்போது தான் தெரியும்
ஒரு தாய்க்காக எதையும் இழக்கலாம். ஆனால்
எதற்காகவும் தாயை இழக்காதே !

விக்கல் எடுத்ததும் மகன்தான் நினைக்கிறான்
என எண்ணி மகிழ்கிறாள் எங்கிருந்தாலும்
உலகில் மகனின் வளர்ச்சியைக் கண்டு
பொறாமைப்படாத ஒரே ஜீவன் அம்மா

'ஹலோ' சொன்னதும் "என்னடி உடம்பு சரியில்லையா"
என்று கேட்கும் அம்மாவிடம் தோற்கின்றனர்
உலகில் உள்ள அனைத்து மருத்துவர்களும்

வார்த்தைகள் இல்லாமல் பேசினேன்
கண்கள் இல்லாமல் ரசித்தேன்
கவலைகள் இல்லாமல் வாழ்ந்தேன்....
என் தாயின் கருவறையில் மட்டும்

அம்மாவை சந்தோசப்படுத்த பணம், நகை வேணுமான்னு
கேட்க தேவையில்லை சாப்பிடும்போது இன்னும்
கொஞ்சம் சாப்பாடு தாருங்கள் என்றால் போதும்...

ப.கபிலன்
கணிதப்பிரிவு (2020)

# அமேசன் பற்றி அரிய செய்திகள்

உ.கோபிகா
தரம் - 11$^{D}$

அமேசன் மழைக்காடு என்பது தென்அமெரிக்காவின் அமேசான் ஆற்றுப் படுக்கையில் அமைந்துள்ள ஒரு பெரிய மழைக்காடு. அமேசானியா அல்லது அமேசான் என்று அழைக்கப்படும் அமேசன் ம்மழைக்காட்டின் பரப்பளவு "ஒரு மில்லியன் கிலோமீற்றர்" ஆகும்.

இக்காடு ஒன்பது நாடுகளில் பரவியுள்ளது. அந்நாடுகள் "பிரேசில், கொலம்பியா, பெரு, வெனிசுலா, ஈக்வெடார், கலானா, பௌவியா, சுரிநாம், பிரெஞ்சு கயான ஆகியனவாகும்.

இதில் பிரேசில் நாட்டில் ஏறத்தாழ 60% மழைக்காட்டினால் உள்ளடக்கிறது. உலகின் மொத்த $O_2$ தயாரிப்பில் 20% அமேசன் மழைக்காட்டில் உள்ள மரங்களின் மூலமாகதான் வெளிவருகின்றது.

உலகில் உள்ள மழைக்காடுகளில் அரைவாசிக்கு மேல் அமேசன் மழைக்காடுகள் ஆகும். அமேசானிய வண்ணத்துப்பூச்சிகள் ஆமைகளின் கண்ணீரை குடிக்கும் பழக்கமுடையவை.

பிரேசிலில் அமேசன் நதிக்கு கீழே ஒரு நதி 4km தூரம் ஓடுகின்றது. இது நூறு மடங்கு அகலமானது என கூறப்படுகின்றது.

கடந்த 2008ம் ஆண்டு நோர்வே ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை அமேசான் மழைக்காட்டின் பாதுகாப்புக்காக கொடுத்தது. உலகின் மற்ற நதிகளை விட ஐந்து மடங்கு அதிகளவான நீரை வெளியேற்றுகின்றது அமேசன்நதி.

"பெரு" எனும் நாட்டில் இருக்கும் இக்விடோஸ் எனும் நகரமே உலகிலே மிகப் பெரிய நகரம் ஆகும். இந்நகரை சாலைகளினால் தொடர்புகொள்வது இயலாதகாரியம். இது அடர்ந்த அமேசன் மழை காட்டினுள் உள்ளது. இங்கு நான்கு லட்சம் பேர் வாழ்ந்து வருகின்றனர்.

அமேசன் நதிக்கு இடையே ஒரு பாலம் கூட இல்லை. உலகில் வாழும் உயிரிய வகைகள் பத்தில் ஒரு பங்கு அமேசான் மழைக்காட்டில் வாழ்வதாக கண்டறியப்பட்டுள்ளது.

2.5 மில்லியன் பூச்சியினங்கள், 10,000 இற்கும் அதிகமான தாவர வகைகள், ஏறத்தாழ 2000 இற்கும் மேற்பட்ட பறவைகள் மற்றும் பாலூட்டிகள் போன்றன அமேசான் மழைக்காடுகளை தாயகமாகக் கொண்டவை.

உலகில் உள்ள அனைத்து பறவைகளில் ஐந்தில் ஒரு பங்கு (1/5) அமேசன் மழைக்காடுகளில் வசிக்கின்றன.



விசேட கல்வி அலகு மாணவர்கள்



விவாதிகள் கழகம்

# தொடர்பாடல் தொடர்பான அறிஞர்களின் கருத்துக்கள்

M.வனிதா
கலை (2021)

## Denis Mequail டெனிஸ் மக்குவல்

பொதுத் தன்மையை அதிகரிக்க கூடிய பொதுமைக்கான அவசிய தேவைப்பாடுகளை வழங்கக் கூடிய செயன்முறை தொடர்பாடல் ஆகும்.

## W.S. Cardon

தொடர்பாடல் என்பது தனித்திருக்கும் நபர்களிடையே முன்னும் பின்னுமாக பரிமாற்றப்படும் வெளித்தெரிய வராத செய்திகள் குறித்ததல்ல. மாறாக ஒரு பண்பாட்டின் அனைத்து அங்கத்தவர்களாலும் ஒரு இசைவான கோலங்கள் கொண்ட பொதுக் கட்டமைப்பில் உருவாகும் தன்னெழுச்சியான பங்காற்றுச் செயன்முறை ஆகும்.

## Ashley Montoque and Flood Mason

குறியீடுகளின் மோதுகையால் உருவாவதும் அதனால் பல்கிப் பெருகும் சின்னாங்களை கொண்டு இருப்பதுமே மானுட தொடர்பாடல் ஆகும். ஆனால் இது செய்தியை விடவும் தகவலை விடவும் தூண்டுதலை விடவும் மேலானது. இது ஆழமான தேவையை ஒரு வகையில் சமூகம் சந்தித்து கொள்ள கூடிய தளமாகவும் சமூகத்தின் இலக்குகளாகவும் தொடர்பாடல் விளங்குகின்றது. அடிப்படையில் சுருக்கமாக கூறுவதாயின் மானுட தொடர்பிற்கு இது அத்தியாவசியமாகின்றது.

## Schramm ஷ்ரம்

சமூகங்களை உருவாக்க இயலவும் ஏனைய சமூகங்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்தி பிரித்து நிற்கவுமான கருவி தொடர்பாடல் ஆகும் என்கிறார்.

## Rogers

உள்ளார்ந்த இலக்குடன் பெறுநர், சொல் வாக்குப்படுத்தும் வகையில் ஒரு மூலத்திடமிருந்து சிந்தனைகள் தகவல்கள் உளப்பாங்குகள் ஆகியவற்றை ஊடுகடத்தும் ஒரு செயன்முறையே தொடர்பாடல் ஆகும்.

## Kar கார்

அடுத்தவர்களின் நடத்தைகளில் செல்வாக்கு செலுத்தும் நோக்குடன் திட்டமிட்டு அல்லது திட்டமிடப்படாமல் மேற்கொள்ளப்படும் பொறி முறைகள் யாவும் தொடர்பாடல் ஆகும்.

## E.Bryan Carne

தகவல்களை விநியோகித்தலுடனும் பரிமாறிக் கொள்வதுடனும் இணைந்துள்ள நடவடிக்கை

#### ஹெரோல் டீ லாஸ்வெல்

எவரேனும் ஒருவர் ஏதேனும் ஒன்றைப் பற்றி குறிப்பிட்டதொரு செல்வழியில் குறிப்பிட்ட ஒருவருக்கு ஏதேனும் வினா ஒன்றை நோக்கி முன்வைக்கின்ற விடயம் தொடர்பாடல் ஆகும்.

## ஹெரோல் டீ லாஸ்வெல் Burleson and Steiner

குறியீடுகள், வார்த்தைகள், படங்கள், வரையுருக்கள் வரை படங்களை பயன்படுத்தி தகவல்கள் சிந்தனைகள் உணர்வுகள் திறன்கள் ஆகியவற்றை ஊடுகடத்துதல்

## American Heritage Dictionary

கருத்துருவாக்கங்கள் செய்திகள் அல்லது தகவல்களை பரிமாறுதல்

**வில்பர் ஷ்ராம்**

குறிப்பிட்ட தகவலை அனுப்புநரும் பெறுநரும் ஒரே மனநிலையில் பெற்றுக் கொள்வதை தொடர்பாடல் என குறிப்பிடுகின்றார்.

**ஷெனன் மற்றும் வீவர்**

ஒருவரின் அறிவு இன்னொருவரின் அறிவை மாற்றியமைக்கும் அல்லது பாதிக்கின்ற வலுவை தொடர்பாடல் என்கின்றார்.

**மார்டின் பின் ஆன்டர்சன்**

சூழலுக்கு ஏற்ப எப்பொழுதும் மாறிக் கொண்டே இருக்கும் பிறரைப் புரிந்து கொள்ளும் செயன்முறை என குறிப்பிடுகின்றார்.

**எச்.இ.கல்வி**

பொதுமையாக்கல் என்பது நேர்பொருள் என்றும் பெறுநருடைய மனதில் அனுப்புநரின் கருத்து படிமத்தை உருவாக்குதல் தொடர்பு என்கின்றார்.

**லீகன்**

இருவரோ இருவருக்கு மேற்பட்டவரோ ஒரு செய்தியில் பொதுமைக் கருத்தை பகிர்ந்து கொள்ளும் முறையில் எண்ணங்களையோ உணர்வுகளையோ பரிமாறிக் கொள்ளும் தன்மையை தொடர்பாடல் செயன்முறை என வரையறை செய்கின்றார்.

**புருக்கர்**

கருத்தினை காவிச் செல்லும் செயலையோ அல்லது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு குறிப்பிட்ட செய்தியை காவுகின்ற செயற்பாடு தொடர்பாடல் என்கிறார்.

**பர்லோ**

அனுப்புதல், செய்தி, ஊடகம், பெறுநர் ஆகிய நான்கு அம்சங்கள் உள்ளடக்கிய ஒரு இயக்க உணர்வு தொடர்பாடல் என்கிறார்.

**பிராங்கு ஈ.எச்சு.டான்சு**

குறிப்பிட்ட சூழலில் செய்தி அனுப்புநருக்கும் பெறுனருக்கும் இடையே நிகழும் செய்திப் பரிமாற்ற செயல் முறையே எனப்படும்.

# மழை வருமோ?

சூரியனை அணைத்து, புதைத்து விட்ட கருமேகங்கள்
அதன் இருளையும் மீறி, திமிறி திமிறி
கசியும் செங்கதிர்கள்
வளைந்து நின்று வண்ணங்களை, காட்டும் வானவில்
துளி துளியாய் நீர் துளிகள்
முகத்தை தடவிச்செல்ல
காற்று, மரம் செடிகளின் தலையை ஆட்ட
அவசரமாய் கூடு தேடும் பறவைக்கூட்டம்
மழை வருமுன் மனதுக்குள் வரும் கிளுகிளுப்பு
அழகைப் படைத்து இயற்கை பெயரிட்டு கண்களில் விருந்தைப் படைத்தான்.

இ.தனுஜா
வர்த்தகப்பிரிவு
**A/L (2020)**

# மனித விருப்பங்களை மாற்றி அமைக்கும் விளம்பரம்

V.அஸ்வினி
தரம் – 10D

வணிகத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக அமைவது இலாபம் உழைத்தலாகும். மேலும் வணிகத்தின் நிலைப்புத்தன்மையானது நுகர்வோர் / வாடிக்கையாளர் (Consumer/ Customer) மூலமே உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே வணிகமானது தனது உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கும், விற்பனைகளைப் பெருக்கிக் கொள்வதற்கும், நுகர்வோரைத் தம் வணிகத்தின் பால் ஈர்ப்பதற்கும் ஓர் உபாய வழியாக விளம்பரப்படுத்தலை மேற்கொள்கிறது.

மனிதன் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதவை மனித தேவைகள் எனப்படுகின்றன. உணவு, உடை, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து என்பன இதிலடங்கும். இத்தேவைகளை நிறைவு செய்வது ஒவ்வொரு மனிதருக்கும் வேறுபட்ட வழிமுறைகளாக அமைகிறது. இவை விருப்பங்கள் எனப்படும். குறிப்பாக, உணவு எனும் மனிதத் தேவையை எடுத்துக் கொண்டால் அத்தேவையை மனிதர்கள் பல்வேறு வழிமுறைகளில் நிறைவு செய்து கொள்கின்றனர். பிட்டு, இடியப்பம், தோசை முதலிய பல உணவு வகைகளை அவர்கள் விருப்பங்களாக தெரிவு செய்து கொள்கின்றனர்.

தற்போது வணிகத்தில் நிலவும் போட்டித் தன்மை காரணமாக ஒவ்வொரு வணிகமும் நுகர்வோரைத் தம்பால் கவர்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்கின்றன. இவை விளம்பரப்படுத்தல் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய வகையான உற்பத்திப் பொருட்களை அறிமுகம் செய்தல், புதிய/ நவீன தொழினுட்பத்தின் கீழ் பொருட்களை வடிவமைத்தல், பரிணாம வளர்ச்சியைக் கொண்ட மேம்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்களை அறிமுகம் செய்தல் போன்ற பல நடவடிக்கைகளின் கீழ் மனித விருப்பங்கள் காலத்துக்குக் காலம் மாற்றி அமைக்கப்படுகின்றன.

வணிகத்தின் புறச்சூழலில் ஒன்றான பூகோள மயமாக்கற் சூழலின் மூலம் வெளிநாட்டு மூலதனங்கள் உட்பாய்ச்சப் படுவதன் மூலம் வணிகத்துக்குப் பல்வேறு தொழினுட்ப உத்திகள், பொருளாதாரம் வளம் என்பன கிடைக்கப் பெறுகின்றன. இவை புதிய உற்பத்திப் பொருட்களை வடிவமைப்பதற்கு ஊக்குவிக்கும் காரணிகளாக அமைகிறது எனலாம்.

பொருட்கள், சேவைகளின் தரம், மேம்பாடு என்பனவே நுகர்வோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குப் பிரதான காரணியாகும். எனவே அவ் உற்பத்திப் பொருட்களை அறிமுகம் செய்வதற்கு விளம்பரம் இன்றி அமையாதது ஆகும்.

விளம்பரப்படுத்தல் தற்காலத்தில் ஒரு தனித்துறையாக வளர்ச்சி அடைந்துள்ளது. விளம்பரம் கவர்ச்சிகரமாக, நுகர்வோரின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக, இலகுவான மொழி நடையில் அமையப் பெற்றிருத்தல் அவசியமாகும். குறிப்பாக உணவுக் கைத் தொழிலை எடுத்துக் கொண்டால் அங்கே வணிகங்களுக்கு இடையே பல போட்டித் தன்மைகள் காணப்படுகின்றன. இதனால் அவ்வணிகங்கள் காலத்துக்கு காலம் புதிய உணவு வகைகளை (Food Varieties) அறிமுகம் செய்கின்றன. இந்த மனிதனின்

உணவுக்கு உரிய விருப்பமானது காலத்துக்கு காலம் மாற்றி அமைக்கப்படுகிறது.

எனினும், விளம்பரப்படுத்தலின் மூலம் சில வணிகங்கள் நுகர்வோரைக் கவர்வதற்காகப் போலியான விடயங்களை வெளியிடுகின்றன. எனவே விளம்பரப்படுத்தல் பற்றிய விழிப்புணர்வு எம்மிடம் இருத்தல் அவசியம். விளம்பரமானது எந்தளவிற்கு உண்மையான விடயங்களைக் கொண்டிருக்கிறது என்பது பற்றி ஆராய்வது நுகர்வோரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

தற்காலத்தில் பல்வேறு கைத்தொழில் துறைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும். உற்பத்திப் பொருட்கள் சந்தைக்குக் கொண்டு வரப்படுகின்றன. எனவே, நாம் அவ் உற்பத்திப் பொருட்களின் தரம், பயன்பாடு, செழுமை, தொழினுட்பம் என்பன பற்றி ஆராய்தல் அவசியம்.

## பாரதியாரின் பொன்மொழிகளில் ஒன்று

உயர்ந்த சாதி
என்று உறவாடாதே
தாழ்ந்த சாதி
என்று தள்ளி
வைக்காதே......

சாதி பார்த்தால்
சாக்கடையாவாய்
சாதிக்கப் பார்த்தால்
சரித்திரனாவாய்

மூச்சுக் காற்றும்
சாதி பார்த்தால்
மூச்சடங்கி
மாய்ந்திடுவோம்

மதம் கண்டு
மதிக்காது
மனம் கண்டு
மதித்தால்
மனித சாதி
மாண்டிடாது
மண்ணுலகில்.....

சி.தர்சிகா
தரம் – 9D

# A Happy Day in My life

**M.Venuya**

My First day in school was a happy day in my life. I got up early morning and went to see what my mother was doing I saw her preparing milk rice and cakes my brother was very busy. He was laying the table for the morning meal.

I was very excited I brushed my teeth and my mother washed me she gave me a new uniform. Then my mother fed me with milk. Rice my mother put my school bag water. bottles and two sheases of betel in to the car. I worshiped my mother and father and got in to the car my brother ran near the car and gave me a kiss.

Father took me to scholl in his new car we reached Sri Thirunavukkarasu Vidyasalai in two minutes there were many. Children with their perents I too joined them. Then the principal miss A.Arumugam called us one by one When my name was call I went with. My Father I offered her a sheat of betel she wished me good luck and she sent me to the new class.

My class teacher was Mrs. Sugantha she was very kind to me with a sweet smile she took me to the class and gave me a saet in the front row some children were crying but I did not cry our teacher taught us a new song later. She took us to the play ground we played during the interval at aboyt 11 O'clock my mother came to take me At 11.30 our school was over so I went with. My mother very happily It was the happiest day in my life.

# Change

One smile,
Cand start a friendship
one word,
Can end a fight
One look,
can save a relationship
one person
Can change your life.

**P.Lavan**
**Technology**

# கல்விச் செல்வம்

V.மிதுனா
தரம் - 8$^{D}$

செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். கல்விச்செல்வம், பொருட் செல்வம் ஆகிய இரண்டும் இவ்வுலக வாழ்வின் இன்றியமையாத செல்வங்களாகும். இரு வகைச் செல்வங்களையும் எடைபோட்டுப் பார்த்தால், கல்வியே சிறந்த செல்வமாக இருப்பதை அறியலாம். ஏன் எனில் கல்விச் செல்வம் நிலையானது. காலத்தால் அழியாதது. கள்வரால் கொள்ளையடிக்க முடியாது. அக்கினியால் எரிக்க முடியாது. கொடுக்கக் கொடுக்கக் குறையாதது.

கல்விச் செல்வம் பேதையை ஞானியாக்கும் மூடனை முதல்வனாக்கும், ஏழையை இயல்வேனாக்கும் அறியாமையைப் போக்கி அடிமை உணர்வை நீக்கும். ஆனால் பொருட் செல்வம் வெள்ளத்தால் அள்ளிக் கொண்டுபோகும். திருடரால் கொள்ளை போகும் ஞானியைப் பேதையாக்கும் அரசனையும் ஆண்டியாக்கும். ஆள்பவனைத் தாழ்வில் தள்ளும் இதனால் தான் கல்வியில்லாதவன் கண்ணில்லாதவன் எனக் கூறினார். படிப்பறிவு இல்லை என்றால் பகுத்தறிவு இல்லை என்றனர்.

கல்வியானது மனித இனத்திற்கு மாண்பு தரும் மருந்து போன்றது. சகலரையும் சான்றோராக்கும் சிரஞ்சீவி போன்றது. ஒவ்வொருவரையும் உணர வைக்கும் ஆள வைக்கும் ஆற்றல் கொண்டது. எனவே தான்

கண்ணுடைய ரென்பர் கற்றோர், முகத்திரண்டு

புண்ணுடையோர் கல்லாதவர்

என்றார் திருவள்ளுவர் - எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்றார் ஔவையார். எவ்வளவு தேடி வைத்திருந்தாலும் பொருட் செல்வம் எளிதில் அழிந்துவிடும் அப்படித்தான் மூடி வைத்தாலும் இலகுவில் ஒழிந்து போகும். நிரந்தரமாய் அது நிலைத்ததாக வரலாறு இல்லை எனப் பலர் கூறியுள்ளனர்.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்

மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்குத்

தன் தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்

சென்ற இடமெல்லாம் சிறப்பு

என்று ஔவையார் கூறியுள்ளார்.

# சினிமா என்னும் மாய உலகில் இன்றைய மாணவர்கள்

மு. பவதாரணி
கலை (2020)

"இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்" என்று மாணவர்களை எமது மூதாதையர்கள் வாழ்த்திய காலம் ஒன்று உள்ளது. ஆனால் நாளைய உலகை ஆள வேண்டிய தலைவர்கள் இன்று சினிமா என்ற மாய உலகில் மூழ்கி தறிகெட்டு நெறியற்று நிற்கும் நிலையை காணக்கூடியதாக உள்ளது.

மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது இலக்கியம். அது காலங்காலமாக மக்களின் நாகரிகம், பண்பாடு, விழுமியங்கள் என்பவற்றைப் போற்றி அதன் வழியில் மக்களை வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதாகும். இவ் இலக்கிய வழி வந்ததே சினிமா எனும் மாயப்பேய். அது இன்று பட்டி தொட்டி தோறும் தனது ஆதிக்கத்தைச் செலுத்துவதை நாம் கண்முன்னே காணக் கூடியதாகவுள்ளது. இன்றைய மாணவர்களும் சினிமா எனும் மாயப்பேய் பிடித்து சீரழிந்து விட்டார்கள்.

சினிமாவானது எமது சமூகத்திற்கு நற்கருத்துக்களை வழங்கி எம் சமூகத்தை வழிப்படுத்த உதவுகிறது. இருப்பினும் சினிமாவில் கருத்துக்களைக் கூறுவதற்காக கைக்கொள்ளப் படும் பாடல்கள், நடத்தைகள், கவர்ச்சிகள், நடையுடை பாவனை என்பன சற்று மிகைப் படுத்திக் காட்டப்படுவதனால் மாணவர்களும் எமது இளம் சமுதாயத்தினரும் அவற்றிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

படத்தைத் தயாரிப்பவர்கள் சற்று சமூகத்தைப் பற்றிச் சிந்தித்து படம் தயாரிப்பவர்களாக இல்லை. சமூகத்திற்கு நற்போதனைகளைக் கூறி வளம்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உள்ளனர். தற்பொழுது சினிமா போட்டித் தன்மை கூடியதாகவும், அதிக வருவாயைப் பெறவேண்டும் என்பதையும் நோக்காக கொண்டே காணப்படுகின்றது. ஒரு சில தயாரிப்பாளர்கள் சமூகத்திற்குப் பயன்படத்தக்க வகையில் படத்தை தயாரிக்கின்றனர். இருப்பினும் அது எம்மவர் மத்தியில் அதிக வரவேற்பைப் பெறுவதில்லை. ஏனெனில் இன்றைய இளைஞர்கள் கவர்ச்சிகள், சண்டை, நடையுடை பாவனையின் மிகைப் படுத்தல் பண்பு என்பவற்றையே எதிர்பார்க் கின்றனர்.

எந்தவொரு சினிமாவையும் எடுத்து நோக்கின் கதாநாயகனும் கதாநாயகியும் பல பேர் சூழ வருவார்கள். இன்றைய மாணவர் களும் இதனைத் தாமும் பின்பற்றினால் என்ன? என்று எண்ணுகின்றனர். இதனால் கண்ணெனப் போற்றப்பட வேண்டிய நம் கலாசாரம் புதைகுழிக்குள் புதைக்கப் படுகின்றது. இதனால் நம் சமுதாயம் சீர் கெட்டுவருகின்றது.

இந் நவீன யுகத்தில் தொலைக்காட்சி இல்லாத வீடுகளே இல்லை. இதனால் கல்வி கற்கும் மாணவர்களும் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே காலத்தை கழிக்கின்றனர். இதனால் அவர்கள் தொலைக்காட்சி பார்த்த பின் படிக்க முற்படும்போது பார்த்த திரைப்படமே மனதினில் தோன்றும். இதனால் அவர்களால் படிக்க முடிவதில்லை. வீட்டில் உள்ள பெரியவர்கள் "படி, படி" என்று கூறினாலும் "இதைப் பார்த்து விட்டு படிக்கிறேன்" என்று பெரியவர்களை ஏமாற்றுவதாக எண்ணித் தாமே தம் தலையில் மண்ணைப் போடுகின்

றனர். சினிமா ஒரு கற்பனை, அதனை நிஜ வாழ்வில் பின்பற்ற முடியாது என்பதைச் சிந்திக்காது அதனை பின்பற்றுகின்ற வராக திகழ்கின்றனர். இந்நிலை தொடரு மானால் நாளைய கல்வியின் நிலை என்ன? என்பதைச் சிந்தியுங்கள்.

இன்றைய சினிமா மோகமானது மாணவரின் கல்வி, கலாசாரம், பண்பாடு போன்ற அனைத்திலும் ஊடுருவி நிற்க அதிலிருந்து அவர்களைப் பிரிக்க முடியாத அவலநிலை தொடர்கிறது. சினிமாவானது இன்று வன்முறைக் கலாசாரம் உருவாவதற்கும் இன்று வழி வகுக்கின்றது. ஏனெனில் வீதிகள் தோறும் அடிதடிகள், சண்டைக் குழுக்களாக வில்லத்தனம் செய்தல், திருட்டுக்கள், குடிபோதை யில் உலா வருதல் போன்ற பல சினிமா நிகழ்வுகளைப் பின்பற்றும் காட்சிகள் மாணவர் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்றது. இது மாணவர்கள் கல்வி கற்கும் நேரத்தைக் குறைத்து விடுகிறது. கல்வி அறிவற்ற சமுதாயம் ஒன்று உருவாகப் போவதையே இது எடுத்துக் காட்டுகிறது. எனவே மாணவர்களை நல்நெறிப் படுத்தும் பொறுப்பு பெற்றோரிடமா? அல்லது ஆசிரியரிடமா? அல்லது சமூகத்திடமா?

எது எவ்வாறாக இருப்பினும் மாணவர் களின் நலன்களில் அக்கறை கொண்டு அவர்களை நல்வழிப்படுத்தும்வரை நாம் சமூக பண்பாட்டுச் சீரழிவுகளுக்கு முகம் கொடுத்தே ஆகவேண்டும். எனவே இச் சீரழிவைச் சீர்செய்ய நாம் ஒன்று பட்டு செயற்படவேண்டியது அவசியமாகும்.

# ஏழைச் சேயின் தாய்

ஏழ்மையிலும் எளிமையாய்
வாழும் தாய்
கஷ்டத்திலும் கட்டுப்பாடாய்
வாழும் தாய்
கஷ்டமே வாழ்க்கையானதாய்
கஷ்டப்பட்டு வாழும் தாய்
தந்தையை இழந்து சேய்க்காய்
வாழும் தாய்
சேய்க்கு அவளே எல்லாமானதாய்
இவளே எந்தன் ஏழைத் தாய்

செ.திவியா
வர்த்தகப்பிரிவு 2020

# மாற்றுத் திறனாளிகள் மீது ஒரு பார்வை

ச.கோபிகா
வர்த்தகப்பிரிவு (2020)

இறைவன் பலரை எவ்வித அங்கவீனமும் இன்றிப் படைக்கின்றான். சிலரை அங்கவீனத்தோடு படைக்கின்றான். அவ்வாறு எவ்வித அங்கவீனமும் இன்றி பிறக்கின்றவர்கள் இயற்கையாக அல்லது செயற்கையாக நிகழ்கின்ற ஆபத்துக்களுக்குள்ளாகி அதனால் அங்கவீனம் உடையவர்களாக மாறுகின்றார்கள்.

அவ்வாறு இருப்பினும் அவர்களிடத்தில் மாற்றுத்திறன்கள், ஆற்றல்கள், ஆளுமைகள் மறைந்து காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படுகின்ற ஆற்றல்கள், திறன்கள், அடையாளம் காணப்பட்டு அவை வலுப்படுத்தப் படுகின்ற போது அத்தகைய மாற்றுத்திறனாளிகள் சாதனையாளர்களாகவும், வெற்றியாளர்களாகவும் ஆளுமையுள்ள வர்களாகவும் சமூக நீரோட்டத்தில் இணைந்து கொள்வார்கள்.

மாறாக, சமூகத்தின் மத்தியில் வாழும் மாற்றுத்திறனாளிகள் சமூகத்தினாலும் சூழலினாலும் புறக்கணிக்கப்படுகின்றபோது அவர்களின் உரிமைகள் மதிக்கப்படாத போது அத்தகைய மாற்றுத் திறனாளிகள் அவர்களுக்குள் உறைந்து கிடக்கும் ஆளுமைகளை வெளிப்படுத்தமுடியாது. அவர்களது அடைவுகளினை அடைந்து கொள்ளாது ஒதுங்கி ஓரமாகி வாழும் நிலைக்கு தள்ளப்பட்டு விடுவார்கள்.

இவ்வாறு வலுவிழந்த அல்லது விஷேட தேவையுடையோரான மாற்றுத் திறனாளிகளின் நலன்கள் தொடர்பில் மக்களின் கவனத்தைச் செலுத்தவும் அவர்கள் குறித்த மனிதாபிமானத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவும் அவர்களையும் சாதாரணவர்களில் ஒருவராக நோக்கவும் அவர்களுக்கான உதவிகளையும் உரிய சந்தர்ப்பங்களையும் வழங்கவும் அவர்களுடைய உரிமைகளினைப் பேணவும் பாதுகாப்பதையும் அவர்களை வலுவூட்டுவதையும் நோக்காக கொண்டு சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் என 1992ம் ஆண்டு முதல் டிசம்பர் 3ம் திகதி கொண்டாடப் படுகிறது.

சமகால உலகில் ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் தொகையினர் மாற்றுத்திறனாளி நபர்களாக தான் உள்ளனர். உலகின் சனத்தொகை எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பகுதியினர் மாற்றுத்திறனாளிகள் ஆவர் என உலக ஸ்தாபனத்தின் தகவல் ஒன்று சுட்டிக் காட்டப்படுகின்றது. 2001ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் சனத்தொகை விகிதத்தில் 6.1. வீதமும் 2013ம் ஆண்டில் 10 வீதமும் 2041 ஆம் ஆண்டில் 24.8 வீதமாகவும் மாற்றுத்திறனாளிகள் காணப்படுவார் என சுகாதார அமைச்சின் தகவலில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான மாற்றுத்திறனாளிகள் சமூகத்தின் மத்தியிலிருந்து ஓரமாக்கப்படாது அவர்கள் மனிதாபிமானத்துடன் அணுகப் படுவதும் அவர்களின் உரிமைகள் மதிக்கப் படுவதும் பாதுகாக்கப்படுவதும் மிக அவசியமான ஒன்றாகும். சுற்றுப்புறச்சூழலும் நம் ஒவ்வொருவருடைய நல்ல எண்ணங்களும் தான் ஒவ்வொரு மாற்றுத்திறனாளியின் இயலாமையை ஊக்கப்படுத்தும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எமது அரசாங்கமும் சர்வதேச நிறுவனங்களும் தொழில் வாய்ப்பு போன்ற தேசிய வளர்ச்சிக்கான திட்டங்களினை மேற்கொள்ளும் போது மாற்றுத்திறனாளிகளும் சம அளவில் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

சமூகத்தில் ஒரு பெரு அங்கமாக இருக்கும் மாற்றுத்தினாளிகள் அவர்களுக்கான

அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மாற்றுத்திறனாளிகள் அணுகக் கூடிய வசதி கொண்ட கட்டடங்களும், மலசலகூடங்களும் இதற்கு எடுத்துக்காட்டாகும் அண்மையில் இடம்பெற்ற எனக்கு தெரிந்த விடயமாக "நாட்டுக்காக ஒன்றிணைவோம்" எனும் ஜனாதிபதி செயலணி வேலைத் திட்டத்தின் கீழ் தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தினால் குறித்து ஒதுக்கப்பட்ட நிதியின் அடிப்படையில் கட்டடங்களிற்கு விசேட தேவையுடையவர்களின் நலனை அடிப்படையாக கொண்டு நடை பாதைப்படி அமைத்தல் திட்டம் 30.08.2019ல் ஆரம்பிக்கப்பட்டது. (யா/யூனியன் கல்லூரியில்)

நம்மில் எத்தனை மாற்றுத் திறனாளிகள் இருக்கின்றார்கள்? அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்? அவர்களுக்கு இனி வாழ்வு எப்படி செல்லப்போகிறது? என்கின்ற கேள்விகள் எல்லாம் விடை தெரியாத கேள்விகளா? அல்லது விடை வேண்டாம் என விடப்பட்ட கேள்விகளா? என அறியப்பட வேண்டும். அவர்கள் ஒரு பேசு பொருளாக மாற்றப்படவேண்டும்.

சாமான்ய மக்களுக்குத்தான்
சாதிப்பதற்கு இரு கரம் வேண்டும்.....
சாதிக்கப்பிறந்த இவர்களுக்கு
ஒரு கரம் கூட தேவையில்லை .....
உடலில் மட்டும் தான்
ஊனம் இவர்களுக்கு மனதில் இல்லை.....

# வாழ்க்கைக்கு!

ஒவ்வொரு
மனிதனும் இறப்பது
உண்மைதான்
ஆனால், அவனோடு
அவன் தொடங்கிய
காரியங்களும்
அவனது வெற்றியும்
பெருமையும்
இறப்பது இல்லை

நீ முயற்சி செய்யும்போது
வீண் முயற்சி என்கிறவர்கள்
வெற்றியின் பின்னர்
விடாமுயற்சி என்கிறார்கள்

பிறருக்குத் தேவைப்படும்போது
நல்லவர்களாகத் தெரியும்
நாம் தேவை தீர்ந்தவுடன்
கெட்டவர் ஆகிவிடுகின்றோம்

உன்மேல் அன்பு
செலுத்தகிறவர்களை நேசி
என்மீது கோபம் கொண்டவர்
அதைவிட அதிகமாக நேசி

வாழ்வில் கஷ்டம் வரும்போது
கண்ணை மூடிவிடாதே!
வாழ்வில் மகிழ்ச்சி வரும்போது
கண்ணை திறந்தும் விடாதே!
அது உன் வாழ்க்கையை
திறந்தும் மூடியும் விடும்.

சி.டினோசன்
கலைப்பிரிவு 2021

# Types of Pollution

**V. Tharani**
**Grade – 11[D]**

Pollution is a harmful effect to the environment. It Means the disturbance to the peaceful and proper nature is the pollution.

Men disturbs the nature to make his life better. It causes pollution. There are 3 kinds of pollution.

1. Land pollution
2. Water pollution
3. Air Pollution

People pollute the above aspects of nature in so many ways. People use too much for fetilizer and chemicals in agriculture. It causes land pollution. It causes diseases.

The chemicals used in agriculture reach the water ways. When it rains fisherman use dy namities in fishing. Cargo ship or oil container ship to make the sea water get polluted. It kills the fish and other water creatures.

Smoke and fumes from vehicels and factories and noise make the air dirty. It causes diseases to living beings.

So it is our duty to safeguard our environment to be healthy and happy. we can do many things to protecting the environment. We can follow traditional methods in agriculture using compost maure, using bullock cards to plough the fields and using natural pesticides. We can ask the factories not to release industrial waste into water ways.

We must plant many more trees to get fresh parity the air and get so much of oxygen. However, everyone must consider the ways of protecting the environment.


# Global Warning

**S.Subasthika**
**Gr. 11D**

Global warming is a steady process of continuous rise in the level of earth temperature. Global warming has become one of the biggest problems faced by the world now. It is believed that increasing level or Carbon dioxide gas and other green house gases on the earth are the main reasons of heating the almasphere of earth.If it is not noticed and solved immediately by the efforts of all countries world wide, it would boom its effects and create many problems to the mankind in the earth.

Global warming is the main and only reason of rising sea level, flooding, changes in weather patterns, storms, cyclone, epidemic diseases, lack of food, death, etc. The only solution to solve the issue of global warming is the individual level social awareness. People must be aware of its meaning, cause, bad effects and other things about global warming to get it eradicated from world wide and make the possibilities of life on earth forever as usual.

People should stop producing carbon dioxide by just stopping their bad habits such the excessive use of oil, coal and gas, inhibit cutting plants (as they are main source to absorb canbondioxide and produce oxygen). Minimize the use of electricity etc. Just small charges in every one's life all over the world, we can be able to stop the huge negative changes in the atmosphere by lessening the effects of global warming and even stop it a day.



# Importance of Water

S.Narththanan
Gr. 8D

Water as a natural resource water is used to many process. Such as : Needed for respiration of organisms, to bath, to drink, Cleaning, cooking, Agriculture, Produce electricity, water games etc. So, we are keep the water.

The water as a solvent because to dissolved medicine in a water, use colour water for decorting purpose, to produce vaccines and saline for purpose of health, To dissolved salt and flavors to make food safely, To make drinks by dissolving sugar, colorings and flavors in water, To remove dirts on clothes and aquatic animals use oxygen that is dissolved in water to breath etc.

Some time, the water as a coolnet, Because, to keep body temperature, water to avoid over heating of machanisms in factories.

Some time, the water as medium of life because, Dissolve oxygen use by fish for their respiration, to help digestion of food etc.

It the kidneys art damaged, the process of excretion doesn't happen the way they should. Some example for kidney disease and the reasons are given below. Kidney stones may occur, due to following reasons. Nor drinking enough water, taking salty diets regulary. To avoid these bad effects. We must always drink clean boiled water.

" An apple a day keeps doctor away !"

# உலகம் போற்றும் பெருந்தன்மையான விஞ்ஞானி

தே.பிரசாத்
கலைப்பிரிவு (2021)

நிறைகுடம் போன்ற நிறைந்த அறிவும் நிறைவான மனமுமுடைய விஞ்ஞானி ஒருவர் தம்மால் செய்ய முடியாத சாதனையொன்றைச் செய்து முடித்த, தம்மை விட இளையவரான விஞ்ஞானி ஒருவரை வீடு தேடிச் சென்று பாராட்டிய பெருந்தன்மைக் குணத்துக்கு விஞ்ஞான வரலாற்றில் சான்றுகள் உள்ளன.

லூயி பாஸ்டியர் என்ற விஞ்ஞானி டார்டாரிக் அமிலம் பற்றிய பல உண்மைகளை கண்டறிந்து வெளியிட்டார். இதேவேளை உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சு விஞ்ஞானியான பையட் என்பவர் அதை பார்டாரிக் அமிலம் பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னே ஆராய்ந்து வெற்றி பெறாமல் இருந்தார். லூயி பாஸ்டரின் வெற்றியும் அவர் கண்டுபிடித்த உண்மைகளும் அவரை வியப்பிலாழ்த்தின.

நிறைகுடமான அவர் தன்னால் முடியாததை இன்னொரு இளைஞன் செய்து விட்டானே என்று பொறாமைப்படாமல் மகிழ்ச்சி கொண்டார். லூயி பாஸ்டியரை தாமே நேரில் சென்று சந்தித்து கட்டித் தழுவி தன் வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்தார். "என்னால் கண்டுபிடிக்க முடியாதிருந்த அறிவியல் உண்மைகளை நீங்கள் கண்டு பிடித்திருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது. உங்களுடைய இந்த வெற்றி விஞ்ஞான உலகுக்கும் மனித குலத்துக்கும் கிடைத்த பெரிய வெற்றியாகும்" எனப் பாராட்டினார்.

அந்த அமுது போன்ற விஞ்ஞானியான பையட் என்ற புகழ்பெற்ற விஞ்ஞானி தன்னை நேரில் வந்து பாராட்டியதால் உள்ளம் உருகிப்போன லூயிபாஸ்டியர் "தங்களைப் போன்ற பேரறிஞர்கள் காட்டிய பாதையில்தான் இளைஞர்களாக அல்லது மாணவராக நாங்கள் செல்கிறோம் எப்போதும் தங்கள் வழி காட்டுதலும் வாழ்த்துக்களும் எங்களுக்கு தேவை என்றார்.

நேற்று நடந்தவற்றை உங்களால்
மாற்ற முடியாது..
நாளை நடப்பதைத் தடுக்க
முடியாது..
இன்றைய பொழுதில் இக்கணத்தில்
வாழுங்கள்..
அதுதான் எல்லா துன்பங்களுக்கும்
ஒரே தீர்வு..!
- புத்தர்

# சுற்றாடல் முன்னோடிக் கழகங்கள்







# மனிதனாயிரு

ஜெ.லதுஜா
தரம் - 11[D]

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார் உண்மைதான் மனிதப்பிறவி என்பது பிறப்புக்களில் சிறந்த தென்றும் ஈடு இணையற்ற தென்றும் கூறுவர் பாரதியார். ஓரிடத்தில் பக்தி, சங்கீதம், ஆராய்ச்சி என்பன மனிதர்களுக்கு எனக் கூறுகிறார். மேலும் நல்லவை தீயவை எது என்பதை அறிந்து செயல் ஆற்றக்கூடிய உயர்ந்த பகுத் தறிவு மனிதருக்கே உரியது அவை யாவற்றி லுமிருந்து மனிதப் பிறவியும் அதன் உயர்ந்த மனிதப் பண்புகளும் எந்தளவுக்கு சிறப்பு வாய்ந்தவை என்பது நன்கு விளங்குகிறது.

இது இவ்வாறு இருந்தாலும் இன்றைய நிலையில் மனிதர்கள் என்றதும் ஏனைய ஐந்தறிவு படைத்த உயிர்கள் கூட அஞ்சி நடுங்கும் அளவிற்கு மனித உள்ளங்களில் ஆவேசமும் கொடூரத்தன்மையும் வெளிப் படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. வேடுவ யுகத்திலும் மிருகங்களை வேட்டையாடி கொன்று உண்டனர். இன்று விஞ்ஞானம் வளர்ந்து விட்ட நிலையில் அவற்றை தவிர்த்து விட்ட நிலையில் அவர்களின் உள்ளங்களில் அதே அரக்க குணமும் ஆவேசமும் சிறிதும் குறையாது புதிய பிரமாண வளர்ச்சி பெற்றுள்ளது. உலகில் எந்த இடத்தை எடுத்துக்கொண்டாலும் ஒருவருக்கொருவர் போட்டி பொறாமை எனும் குணங்களோடு கொலைகளும் கொள்ளைகளையும் மேற் கொண்டு பசுமை நிறைந்த பூமியை யுத்தக் கடலாக மாற்றி வருகின்றனர். இம் மனிதர் களிடம் செல்வமும் சிறப்பும் எவ்வளவுதான் இருந்தாலும் ஆடம்பர வாழ்க்கை வந்தாலும் கூட அதைக்கொண்டு திருப்தியடைவதாக இல்லை. இன்னமும் எவற்றையோ இழந்தவர் போல் பேராசையாலும் மன அமைதி அற்றும் அலைந்து திரிவதைக் காணக்கூடியதாக வுள்ளது.

இவை யாவற்றுக்கும் காரணம் மனிதர்களிடையே இயல்பாகவே குடிகொண்டு விட்ட பேராசையும், சுயநலமும் இரக்கமற்ற சிந்தனைகளுமே காரணம் எவ்வளவுதான் வளங்கள் நிறைந்தாலும் அவற்றால் மகிழ்வடையும் தன்மை அல்லாதது இன்னமும் வேண்டும் என்ற தன்மை அவர்களின் மனதில் இருப்பதுதான் எவர் எப்படி வாழ்ந்தால் எமக்கு என்ன நாம் மகிழ்வாய் வாழ்வோம் என்ற தன்மை அவர்களின் மனதில் நிலைகொண்டு விட்டது. "உன்னைப் போல் பிறரையும் நேசி என்கிறது கிறிஸ்தவ மதம் "அன்பே சிவம்" என்கிறது இந்து மதம். "உயிர்க்கொலை தவிர் என்கிறது" பௌத்தமதம். இவ்வாறு எத்தனை மதங்கள் எவ்வளவோ சிந்தனைகளை நம் மத்தியில் கூறியுள்ளபோதிலும் மனிதனென்றால் இப்படித்தான் வாழவேண்டும் என ஒரு கொள்கையை வகுத்துள்ள போதிலும் மனிதர்களாகிய நாம் அக்கொள்கையை தூக்கி வீசிவிட்டு நமக்கு என இருண்ட யுகத்தை வகுத்து வாழ்வதால்தான் பிறப்பில் சிறந்து காணப்படும் மனிதப்பிறப்பு இன்று அசுரவடிவமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

இன்றைய சமூகத்திலுள்ள இளைஞர் களுடைய தவறான செயல்கள் வளர்த்தெடுக்கப் படுகின்றன. இவை யாவற்றிலுமிருந்து நாம் விடுபடவேண்டுமாயின் பெரியோர்களும் வழிகாட்டிகளும், மதமும் வாழ்க்கை முறையை மாற்றியமைத்து ஆன்மீக சிந்தனைகளிலும் நல்ல செயல்களிலும் ஈடுபடுத்த வேண்டும். சிறுசிறு தண்டனைகளை வழங்குவதை தவிர்த்து பொறுமை இழந்து கடுமையான சொற்களால் தண்டிப்பதையும் நிறுத்த

வேண்டும். வெறுமனே இன்றைய சமூகத்தை குற்றம் சாட்டுவதை விடுத்து பெரியோர்களாகிய நாம் அனைவரும் தங்கள் மனதிலே ஓர் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். நாம் விரும்பியோ விரும்பாமலோ அவரவர் தமது சமயக் கொள்கைகளை முறையாகப் பின்பற்றச் செய்யவேண்டும். சகல உயிருள்ள உயிரற்ற பொருட்களையும் இறைபடைப்பாக எண்ணிப் போற்ற வேண்டும். இவ்வாறாக பெரியோர்கள் அனைவர் மனதிலும் நல்லதோர் சிந்தனையை வளர்த்து செயற்படுவாராயின் நாளை மலர்கின்ற பொழுது யாருக்கும் தீங்கு எண்ணாத உள்ளங்களாக மலரும். ஆகவே மனிதனே நீ மனிதனாய் இருந்துவிடு.

## தன்னம்பிக்கை கொள் பெண்ணே

கசந்து போன வாழ்க்கையில்
பாலைவனம் ஆன உன்மனதை
சோலைவனமாக மாறுவதற்கு
கையில் நீ எடுக்க வேண்டியது
தன்னம்பிக்கை மட்டுமே

தன்னம்பிக்கை கொண்டு என்றும்
தளராத முயற்சி எனும் வழி நடந்தால்
உன் முன் இருக்கும் வெற்றி இலக்கு
உன்னை நோக்கி வந்திடும் உறுதி

நடந்து பாதையில் கல்லும் முள்ளும்
காயம் செய்ததை எண்ணி மயங்கி
நடக்கும் நடையில் தொய்வும் கொண்டு
நனவைக் கனவாய் மாற்றி விடாதே

கண்டங்கள் பல கண்டது எப்படி?,
கால்குடம் நிலவில் பதிந்தது எப்படி?
மாண்டு மடியினும் மனிதன் துணிவால்
மனதில் கொண்ட தன்னம்பிக்கையால்

உன்னுள் இருக்கும் ஆற்றல் உணர்ந்த
உலகம் பயனுற வெளியில் கொணர்ந்து
என்றும் நிலைக்கும் செயல்கள் செய்து
மலைபோலும் செல்வாய் நிமிர்ந்து

பா.சிவாஜினி
தரம் - $10^{D}$

# முயற்சி (அறிவியல் பார்வை)

A.கனிஷ்ரா
கலை 2020

உலகில் வாழ்ந்த பெரியோர் முயற்சியே வெற்றிக்கு அடி கோலுவது எனத் தம் அனுபவத்தால் கூறியுள்ளனர். பல ஆராய்ச்சி யாளர்களும் விஞ்ஞானிகளும் வீரர்களும் ஆரம்பத்தில் தோல்விக்கு முகம் கொடுத்த போதும் அயராத முயற்சியினால் வெற்றிபெற்ற சந்தர்ப்பங்களும் ஏராளம் உண்டு.

கடின உழைப்பின்றி எதனையும் சாதிக்க முடியாது. தோமஸ் அல்வா எடிசன் எனும் விஞ்ஞானி ஒரு நாளில் 2 மணி நேரம் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். ஆய்வு கூட மேசையில் விஞ்ஞான நூல்களையே தலை யணையாகப் பயன்படுத்தி நித்திரை செய்தார். மறைந்த பாரத பிரதமர் பண்டிதர் ஜவ'ர்லால் நேரு ஒரு நாளில் 11 மணி நேரமும் கடினமாக உழைத்தால் அவர்களுக்கு விடுமுறைகளே இல்லை என்பர். உலகம் போற்றும் உத்தம காந்தி நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆக உழைத்தவர் அவ்வுழைப்பின் பயன்தான் பாரத நாட்டின் சுதந்திரம்.

மாவீரன் நெப்போலியன் தோல்வி உற்றமையினால் வேதனைப்பட்டு ஆழ்ந்து துயருற்றிருந்தான். எனினும் மீட்சியே இல்லை என்ற ஏக்கத்தில் இருந்த வேளை விடா முயற்சி யுடன் சிலந்தி நன்கு வலை பின்னியதைப் பார்த்து ஊக்கம் கொண்டார். சாதாரண சிலந்தி பூச்சிக்கு இத்தனை அயராத முயற்சியா? வெற்றியும் கண்டுவிட்டதே என்ற ஆச்சரியத்துடன் மீண்டும் போரிட ஆயத்தமானான் சரித்திரத்தில் இடம் பெற்றான் இச்சமயம் முயற்சிக்கு எடுத்துக் காட்டாகும்.

இயற்கை எமக்கு எத்தனை விந்தை களை எமக்குக் காட்டுகின்றன. ஒரே சீராக இயங்கும் நவகோள்களும் முயற்சியுடன் இயங்குகின்றன. இன்று விடிந்தால் நிச்சயம் இருளும் அதில் எந்த தடங்கலும் இல்லை. இதேபோல மனிதனும் தொடங்கி ஆர்வத்துடன் பிற்போடாது நிறைவேற்றினால் வெற்றி நிச்சயம்.

தெரு வெளிச்சத்தில் படித்து, தோற்றம் நலிந்தவர்கள் நாட்டின் தலைவர்களாக ஏற்றம் பெற்றார்கள். அவர்கள் போதாமையை நினைத்தும் பின்வாங்கவில்லை இருப்பதை இறுகி பிடித்துக் கொண்டே மனஉறுதியோடு முன்நோக்கி நடந்தார்கள். அதிர்ஸ்டம் இல்லை என்று அலட்டிக் கொள்ளாமல் முன்னேறு வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொண்டு முயற்சியில் உயர்ச்சியடைந்தார்கள்.

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்த உழவன் சோம்பேறியாய் இருந்தால் மக்கள் பட்டினியால் வாடவேண்டும். இதனைச் சான்றோர் உழுதுண்டு வாழ்வோரே வாழ்வர் என்றார். ஏனையோர் அவன் பின் செல்பவர்பின் சென்றாலும் தத்தமது தொழில்களை முயற்சி விடாமுயற்சி என்பவற்றுடன் செய்யின் உயர்ச்சி பெறலாம். மேலும் வள்ளுவர் வறுமையில் வாழுதல் இயலாது வறுமை இன்றி வாழமுயற்சி தேவை என வலியுறுத்தினார். பாரதியாரும் சோம்பல் மிகக் கெடுதி பாப்பா என வலியுறுத்தி சிறுவயது தொட்டே முயற்சியுடன் சுறுசுறுப்புடன் இயங்கினால் நிச்சயம் எமது காரியங்கள் யாவும் சிறக்கும் என்றார்.

மகிழ்வான வாழ்வை ஆரம்பிப்பதற்கும் தொடர்ந்து அந்நிலையைத் தக்கவைப்பதற்கும் மனஉறுதியும் தொடர்முயற்சியும் அவசியம் என்பதை உணர்ந்து செயற்படுங்கள் இம் முயற்சிகளின் பயனாக அமைவதே வாழ்வின் வெற்றியாகும்.

ஒவ்வொரு நாளையும் மகிழ்வின் நாளாக, ஒவ்வொரு மணித்துளியையும் மகிழ்வின் மணித்துளியாக ஒவ்வொரு நிமிடத்தையும் மகிழ்வின் நிமிடமாக வாழ்வின் நேர் அலைகளைப் படரவிட்டு, முயற்சி வெள்ளத்தில் மூழ்கி இன்பம் காணுங்கள்.

"விடாமுயற்சியினால் வாழ்வில்
எல்லாவற்றையும் சாதிக்கமுடியும்"

# பாடசாலைக் காலத்தை பயனுறுதி வாய்ந்த மகிழ்வான அனுபவமாக்குவதற்கு மாணவர்கள் கையாளக்கூடிய வழிமுறைகள்

கி.தசாங்கி
விஞ்ஞானபிரிவு (2020)

பாடசாலை என்பது மாணவர்கள் தம்மை முழுமையான விருத்தியை நோக்கி வளர்த்துக் கொள்வதற்கான இடமாக அமைகின்றது. உடல் விருத்தி, உளவிருத்தி, சமூக விருத்தி, ஆன்மீக விருத்தியாகிய அனைத்து நிலைகளிலும் மேம்படுத்தும் இடமாக விளங்குகின்றது. வயது, பால், அந்தஸ்து, சமூகப்பின்னணி போன்ற பலவகையான வேறுபாடுகளுடன் மாணவர்கள், ஆசிரியர்கள், ஏனைய ஊழியர்கள் ஆகியோரை ஒருங்கே கொண்ட இடமாக பாடசாலை விளங்குகின்ற போதும் அது சீராகச் செயற்பட அதன் ஒழுங்குவிதிகள் உதவுகின்றன. இதனால் பாடசாலையில் ஒழுங்குவிதிகளை மதிக்கும் மனப்பாங்கினை மாணவர்கள் பெற்றுக்கொள்ளுதல் அவசியமாகும். ஒழுங்கு இருக்கும் இடத்தில் தாமாகவே அழகு வந்து சேர்ந்து விடும்.

பாடசாலையில் தனியாக அன்றி சமூகமாக இணைந்து செயற்பட வேண்டி உள்ளதால் தனிநபர் வேறுபாட்டிற்கேற்ப முரண்பாடுகள், கருத்து வேற்றுமைகள், தவறான விளக்கங்கள், மற்றும் சில பிரச்சினைகள் எழ வாய்ப்பு இருக்கின்றது. இது பாடசாலைக்கு மட்டுமன்றி சமூகமாக இணைந்து செயற்படும் அனைத்துத் துறைகளுக்கும் பொருந்தும். இவ்வாறு பிரச்சினைகள் அல்லது முரண்பாடுகள் ஏற்படும்போது தமக்கு நம்பிக்கையானவர் மற்றும் இரகசியங்களைப் பேணத்தக்க ஆசிரியர் அல்லது வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர் அல்லது நம்பிக்கையான சகபாடி மாணவர்கள் ஆகிய ஒருவருடனோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடனோ தமது பிரச்சினைகளைக் கலந்துரையாடும் போது பிரச்சினையின் தாக்க அழுத்தம் குறைவதோடு சில வேளைகளில் பிரச்சினைக்கான தீர்வும் எட்டப்பட்டு விடலாம்.

மாணவர்களுக்கான ஒழுங்கு விதிகளுக்கு அப்பால் பொதுவான மனித ஒழுக்க விழுமியங்களை கற்கும் இடமாகவும் பாடசாலை விளங்குகின்றது. ஆசிரியரை மதித்தல், பெரியோரை மதித்தல், சகபாடிகளை மதித்தல், உதவுதல் இரங்குதல், இணைந்து செயற்படல், பொறுமை, விட்டுக்கொடுத்தல் போன்ற விழுமியப் பண்புகளை மாணவர்கள் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். இதனால் தனித்துவமான பிரச்சினைகளும் அவர்களுக்கு ஏற்படக் கூடும். இவ்வாறு சொந்தப் பிரச்சினைகள் ஏற்படும்போது தமது சொந்தப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் திறன்களை வளர்த்துக் கொள்வது அவர்கள் அப்பிரச்சினைகளிலிருந்து விடுபட உதவுகின்றது.

பாடத்துறை மட்டுமன்றி இணைப்பாடவிதானத்துறையிலும் ஈடுபடுதல் மூலம் முழுமையான ஆளுமை பெற்ற மாணவராக தம்மை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு பாடசாலைகளில் இருக்கின்றது. தத்தம் ஆற்றல், விருப்புக்கேற்ற இணைப்பாடவிதானத் துறைகளில் ஈடுபடுதல் பயனுறுதிமிக்க எதிர்காலத்துக்கு வழிசேர்க்கும்.

தமது செயல்களைத் தாமே ஆராய்ந்து தம்மில் மாற்றப்பட வேண்டிய விடயங்களை உணர்ந்து செயற்படுதல் தமது இலக்கினை ஆராய்ந்து நிர்ணயம் செய்தல், நாட் குறிப்பேடு எழுதுதல் (சம்பவப் பதிவேடு) தவறுகளைத் தவிர்க்கும் பிரதிக்ஞையைத் தாமே மேற் கொள்ளல், தாமே தமக்குரிய ஒழுக்கக் கோவை யைத் தயாரித்தல் போன்ற வழிமுறைகளால் பாடசாலைக் காலத்தை பயனுறுதியுள்ள அனுபவமாக மாணவர்கள் ஆக்கிக் கொள்ளலாம்.

# மழையே நீ வாராயோ...!

மழையே நீ வாராயோ
மாதங்கள் பலவாகியும்
மண்ணில் இறங்கத் தாமதமேனோ
பாரினிலே நீருமில்லை
பசுமை தர யாருமில்லை

பாரினிலே பசுமை குன்றி
பல்லுயிரும் சாகுதம்மா
நீர் நிலைகளில் நீர்வற்றி
நிலமெல்லாம் வெடிக்குதம்மா
மண் சுருங்கி வெடிக்குதென்று
மண்மகளோ அழுகின்றாள்

உழவன் விதைத்த பயிர்கள்
உன் வரவின்றி வாடுதம்மா
உழவுத் தொழில் புரிவோரும்
உணவு தர மறுத்திடுவார்
நிலத்திலே துளைகளிட்டு
நிலத்தடி நீரும் எடுத்திட்டா
நிலமை மிக மோசமம்மா

நீ இங்கு வாராயோ
கூட்டம் கூட்டமாய்
கொடும்பாவி கட்டி இழுக்கின்றனர்
குரல்கேட்டு நீ வாராயோ
உனக்காகக் காத்திருக்கும்
உறவுகளைப் பாராயோ
மழையே நீ வாராயோ....!

ச.டிலானி
தரம் - 10D

# கலைத்துறையில் என் இலட்சியப்பாதை

உலகமே தொழில்நுட்பத்தின் காலடியில்
மண்டியிட்டு கொண்டிருந்த காலத்தில்.....
இரண்டாயிரத்து ஓராம் ஆண்டில்
சிறு துளியாய் இவ் தொழில்நுட்ப உலகினிலே
என் பெற்றோரின் செல்லப்பிள்ளையாய் பிறந்தேன்

கண்ணுக்கு கண்ணாக என்னைக் காத்து
பாலூட்டி சீராட்டி எனை கல்வி
எனும் கடலில் நீச்சல் கற்க
அனுப்பினார் என் பெற்றோர்

எந்தவித இலட்சியமும் கனவும் இன்றி
தரம் ஒன்றிலே என் கல்விப் பயணத்தை
தொடங்கினேன். ஓடி ஆடிய குழந்தை பருவம்
காலத்தின் ஓட்டத்தால் விரைந்தது தரம் 05 வரை

என் இரண்டாம் நிலைக்கல்வியை என் யூனியன் தாயில்
பல கனவுகளுடன் தொடங்கினேன்.
புதிய பல அனுபவங்களை சந்தித்து முட்டிமோதிக் கொண்டிருக்கையிலே
தரம் 10 தனிலே என் இலட்சியப்பாதையின்
வழியாக தெரிந்தேன் கலைத்துறையை. காரணம் என்
தந்தைமீதும் ஊடகத்துறை ஆசான் மீதும் நான் கொண்ட ஈர்ப்பு

சாதாரண தரத்தை முடித்து பெரிய ஓர் போரின்
ஆயுதமாக உயர்தரத்தில் தெரிந்தேன் கலைத்துறை
தீர்மானம் என்பது விரைந்தெடுத்தல்ல விவேகமானது
அதற்கிணங்க என் உயர்தரத்தில் கலைத்துறையை தொடர்ந்து
இன்றுடன் இரண்டு வருடங்கள்

பல கனவுகளையும் எதிர்பார்ப்புக்களையும் தாங்கிய
காத்திருப்பு என் உயர்தரம் பரீட்சைக்காக என் இலட்சியத்தையும்
என் தந்தை, ஆசானின் நம்பிக்கையும் தாங்கி இலட்சியப்பாதையின்
இடமான இடத்தை நோக்கி செல்கிறேன்.
யூனியன் அன்னையின் ஆசீர்வாதத்துடன் ....

வி.யதுசா
கலை 2020

# சாரணர் அணிகள்







மாகாண மட்ட ஹொக்கி போட்டியில்
மூன்றாம் இடத்தினைப் பெற்ற 20 வயது அணி



மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டியில்
வெண்கலப்பதக்கம் பெற்ற மாணவர்கள்

# பொது அறிவு

ச.சஜித்
தரம் – 9D

1. இந்தியாவிற்கு வெளியே இருக்கும் பெரிய கோயிலான ஸ்ரீ சுவாமி நாராயணன் கோவில் எங்குள்ளது?
   லண்டன்
2. லண்டனின் மிக முக்கியமான விமானத்தளம் யாது?
   ஹீத்ரு
3. க.பிலவஸ்துவில் அவதரித்த சமயப்பெரியார் யார்?
   கௌதபுத்தர்
4. ஆபிரிக்காவின் காந்தி என்று அழைக்கப்படுவர் யார்?
   குவாம் நிக்ருமா
5. எவரெஸ்டில் ஏறிய முதலாவது குருடர் யார்?
   எரிக் வெய்கன்மேயர்
6. ஜோன் வில்லீஸ் பூத் என்பவனால் புகழ்பூத்த மனிதர் யார்?
   அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கம்
7. தமிழீழத் தேசியக் கவிஞர் யார்?
   புதுவை இரத்தினதுரை
8. இலங்கையில் உலக பாரம்பரியம் எனக் கருதப்படும் இயற்கை இடம் எது?
   சிங்கராஜவனம்
9. ரயில் எஞ்சினை நீராவி மூலம் ஓடத்தயாரித்த விஞ்ஞானி யார்?
   ஜோர்ஜ் ஸ்டீவன்ஸன்
10. இலங்கையில் முருகைக்கற்பாறைப் பூங்காவுக்குப் புகழ்பெற்ற இடம் எது?
    ஹக்கடுவை
11. முதன்முதலில் இலங்கையில் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட இலங்கையர் யார்?
    சிறில் லெனாட் விக்கிரமசிங்க
12. தொலைத்தொடர்பில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது எது?
    மின்சாரத்தின் கண்டுபிடிப்பு
13. கம்பியூட்டரின் தந்தை யார்?
    பாபேஜ்
14. கிறிஸ்தவர்கள் வாழும் பெரியநாடு எது?
    ஐக்கிய அமெரிக்கா
15. பசுமைப்புரட்சி எங்கு ஆரம்பமானது?
    மெக்சிக்கோ
16. உரோம யுத்தக் கடவுளின் பெயரால் வழங்கும் கோள் எது?
    செவ்வாய்
17. ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற முதலாவது இலங்கைப் பெண்மணி யார்?
    சுசந்திகா ஜயசிங்க
18. உலகின் மிகப் பழமையான கட்டமைப்பு யாது?
    எகிப்திய பிரமிட்

# அண்டத்தின் அவிழ்க்க முடியாத முடிச்சு கருந்துளைகள்

# Black Holes

ரவீந்திரன் கிருசன்
விஞ்ஞானபிரிவு 2020

இவ் உலகிலே ஆயிரம் மர்மங்கள் இருக்கின்ற போதிலும் உலகத்தைத் தாண்டி உலகத்திற்கு வெளியே இருக்கும் மர்மங்களில் மனிதனுக்கு ஆர்வம் அதிகமாக உள்ளது. அந்தரத்தில் மிதந்து கொண்டிருக்கும் கோள்கள், கோடிக் கணக்கான நட்சத்திரங்கள், வேற்றுக் கிரக வாசிகள் எனப் பிரபஞ்சம் என்றாலே மர்மம் தான். இவை அனைத்தையும் தாண்டி அளவிட முடியாத புதிராக கருந்துளைகள் காணப் படுகின்றன.

கருந்துளைகள் (Black holes) கறுப்புத்துவாரம், கருங்குழி, மற்றும் ஒட்டை எனப்படுவது விண்வெளியில் காணப்படும் மிக மிக அதிகமான ஈர்ப்புசக்தி கொண்ட துளை யாகும். இது தனது அருகே உள்ள ஈர்ப்பு சக்தி குறைந்த பொருட்கள் அனைத்தையும் தன்னுள்ளே உள்ளீர்த்து விடும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக ஒளி அலைகள் மற்றும் மின்காந்த அலை களைக் கூட தன்னுள்ளே ஈர்க்கும் அளவிற்கு கருந்துளைகளின் ஈர்ப்பு சக்தி வலுவானதாக உள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனாலே கருந்துளைகள் கறுப்பானவையாகத் தோன்று கின்றது. உண்மையில் இவை கறுப்பானவை அல்ல.

கருந்துளைகள் என்பன இறந்த நட்சத்திரங்கள் எனக் கூறப்படுகின்றன. ஒரு நட்சத்திரமானது முற்றுமுழுதாக எரிந்து முடிந்தநிலையில் அது தன்னிடத்தில் இருந்த சக்திகள் அனைத்தும் வெளிவிடப்பட்டு சக்தியற்றுப் போனநிலையில் அண்டவெளியில் தன்னைச் சூழவுள்ள அனைத்தையும் தன்னுள்ளே ஈர்க்கத் தொடங்குகின்றது. இதற்கு கனவளவோ மேற்பரப்போ கிடையாது. ஆனால் இது பிரமாண்டத்திணிவு காரணமாக முடிவிலி அடர்த்தியைக் கொண்டுள்ளது.

ஒளியைக் கூட தப்பவிடாத அளவிற்கு வலுவான ஈர்ப்பு சக்தி கொண்ட பொருள் பற்றிய எண்ணக்கரு 1783 இல் பிரித்தானியா வானியலாளரான John Michell என்பவரால் வெளியிடப்பட்டது. 1795 இல் பிரெஞ்சு பௌதிகவியலாளரான Pierre – Simon Laplace என்பவராலும் இன்று புரிந்து கொள்ளப் பட்டவாறான கருத்துக்கள் பற்றிய விளக்கம் 1916ம் ஆண்டில் அல்பேர்ட் ஐன்ஸ்ரீன் முன்மொழிந்த பொதுச் சார்பு கோட்பாட்டிலிருந்து வெளியிடப்பட்டது.

Black holes என்று சொல்லப் படுகின்ற இந்த கருந்துளைகள் நட்சத்திரங் களையோ, கிரகங்களையோ உறிஞ்சுவதற்காக அண்டவெளியில் பயணப்படக்கூடியவை அல்ல. பூமி இந்த Black holes இல் ஈர்க்கப்பட வாய்ப்பு இல்லை. ஏனென்றால் நம்முடைய சூரியக் குடும்பத்துக்கு அருகாமையில் எந்தவொரு கருந்துளைகளும் இல்லை என்று கண்டறியப் பட்டுள்ளது.

கடந்த 40 வருடங்களாக கருந்துளை கள் பற்றிய சர்ச்சைக்கு புதிய விளக்கமளித்து புகழ்பெற்றவர் 20ம் நூற்றாண்டின் மிகச் சிறந்த விஞ்ஞானியான Stephen haw King ஆவார். இதுவரை Black holes இன் அதித ஈர்ப்பு சக்தியால் கவரப்படும் பொருட்கள் எங்கு செல்கின்றன என்பது யாராலும் அறியப்பட வில்லை. ஆனால் இதற்கு விடையளித்த Stephen hawking கருந்துளையை கடக்க

நேரிடும் பொருளானது சிதைந்து போகாது நமது பிரபஞ்சத்திற்கு சமனான இன்னொரு பிரபஞ்சத்தை அது சென்றடையும் என்று கூறியுள்ளார். அதாவது கருந்துளைகள் நம்முடைய பிரபஞ்சத்திலிருந்து இன்னுமொரு பிரபஞ்சத்திற்கான வாசல்களாக செயற் படுகின்றன என்பதே அவரின் கருத்தாகும். மேலும் அந்தத்துளைகள் வேகமாக சுழல்வ தால் மீண்டும் பழைய இடத்திற்கு திரும்ப வாய்ப்பில்லை என்று கூறுகின்றார். இவ்வாறாக விண்வெளியின் மர்மாங்களை துடைத்தெறிய பல Stephen hawking தேவைப்படுகின்றார்கள்.

## அக்கா

வாழ்வில்
வசந்தம் தந்த
நினைவுகளிலெல்லாம்
இவள்தான் - என்
கதாநாயகி

வாழ்வில்
மலர்ந்து துடிக்கும்
நிலைகளிலெல்லாம்
இவள்தான் - என்
உற்றதோழி

முயன்று
புதிதாய் வைக்கும்
அடிகளிலெல்லாம்
இவள்தான் - என்
முதல் ஆசான்

மனதாய்
சோர்ந்து போகும்
நிமிடங்களிலெல்லாம்
இவள்தான் - என்
இரண்டாம் தாய்

பாரில்
வாழ்வுள்ள வரை
எனக்குள் உயிராய்
நிலைக்கும் இவள்
கடவுளின் மூலப்பிரதி

கா.டிலக்சனா
தரம் 9[D]

# யூனியன் அம்மாவிற்கு

இ.ஹார்த்தியாயினி
வர்த்தகப்பிரிவு (2020)

யூனியன் அம்மாவிற்கு,

2012ம் ஆண்டு என் அம்மாவோடு கரம்பிடித்துஉங்கள் வாயிலுக்கு வந்தடைந்தேன். வந்த என்னை அன்போடும் அரவணைப்போடும் இத்தனை வருடங்கள் மடியில் வைத்து தாலாட்டிய உமக்கு இது நாள்வரை ஒரு நன்றி கூட தெரிவிக்கவில்லை என்பதை நினைத்து விழி நீர் சொரிகின்றேன். 200 ஆண்டுகள் பழமைவாய்ந்து எத்தனையோ பிள்ளைகளை அறிஞர்களாகவும், கலைஞர்களாகவும் கல்விமான்களாகவும் உருவாக்கிய உங்கள் மடியில் தவழ்ந்ததை நினைத்து பெருமையடைகின்றேன்.

நான் வெறுமனே கல்வியோடு நின்று விடக்கூடாது என்று விளையாட்டு, நடனம், பேச்சு என எத்தனையோ திறமை களை எனக்குள் இனங்கண்டு அத்தனை திறன்களையும் வளர்த்து என்னை வெற்றி யடைச் செய்தவள் என் அன்னை நீ. அது மட்டுமா என் வெற்றிகளை கண்டு உளம் குளிர்ந்தவளும் நீயே. அறிவுப் பசிக்கு கல்வி யையும், சிறந்த ஆசான்களையும், வாழ்க்கைக்கு உதவும் நல்ல நண்பர்களையும் வழங்கி எதிர்கால வாழ்க்கைக்கு என்னை பதப்படுத்திய என் யூனியன் தாய்.

மிடுக்கான கட்டடங்களும் பரந்த விளையாட்டு மைதானமும், கம்பீரமான கிளை பரப்பி நிற்கும் மரங்களும், நாலா புறமும் உள்ள சுவர்களும் அவ்வளவு ஏன்? அங்கிருக்க கூடிய சிறு புல் பூண்டு கூட என் புண்ணியம் செய்ததோ தெரியவில்லை காலத்திற்கும் அன்னையின் கரம்பிடித்து நிற்கப் போகின்றது. ஆனால் பாவிகள் எங்களிற்கு மட்டும் உன் மடி எட்டு வருடங்கள் மாத்திரமே.

எட்டு வருடங்களும் எங்களிற் சாதாரணமானவை அல்ல. எத்தனை விளையாட்டு போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள், நவராத்திரி பூசை, கிறிஸ்மஸ் தினம், ஆசிரியர்களின் பிரியாவிடை என எத்தனை நிகழ்வுகளை எம் கண்முன்னே நிறுத்தி மகிழ்வித்திருக்கின்றாய் அம்மா. யூனியன் தாயின் மடியில் தவழ்ந்த அனைத்து குழந்தைகளுக்கும் இந் எட்டு வருடம் என்பது ஏழேழு ஜென்ம புண்ணியத்தின் பலனாகும்.

என் தாய் சற்று வயதுபோனவள். சற்று அல்ல 200 வருடங்கள். ஆகவே அதிகம் வயதுபோனவள். ஆனால் அழகானவள், மிகவும் அன்பானவள், வயது போனதால் என் அம்மா உன்னுடல் நலிவடைந்து போகக் கூடுமா? இல்லை ஒரு போதும் இல்லை உன் விரல் பிடித்து, முந்தானை தலைப்பை பிடித்து எம் பிஞ்சுக்கால்களால் மண்ணில் விரல் பதித்த நாம் உன்னை ஒருபொழுதும் நலிவடைய விடுவோமா? என்றால் இல்லை.

இவ்வளவும் கூறிய நான் உன்னிடம் இன்னுமோர் விடயத்தையும் கூறக் கடமைப் பட்டுள்ளேன். தினமும் பாடசாலையா? இந்த மாதத்தில் எத்தனை போயா? எப்பொழுது 1.30 ஆகும்? என்று எத்தனையோ நாட்கள் சினந்து உன் வாயில் அடைந்திருக்கின்றேன். அது மட்டுமா அதிகாலையில் எழும்புவது? இதில் இரட்டை பின்னல் வேறு, அரசாங்கத்திற்கு வேறு வேலை இல்லை இத்தனை புத்தகங்களை அச்சிட்டுள்ளது. ஆனால் சுமப்பது நாமல்லவா?. ஏன் செருப்பு அணியக்கூடாது சப்பாத்து என்றால் விரல்களை கொலை செய்கின்றது என எத்தனையோ நாட்கள் புலம்பி இருக்கின்றேன்.

ஆனால் இன்று இவை அனைத்தும் எனக்கும் இன்னும் ஓரிரு மாதங்களிற்கு மட்டுமே என்பதை நினைக்கும் போது விழி ஓரம் ஏதோ ஈரம். காலை உன்னிடம் வந்ததும் காதோரம் கேட்கும் தேவாரம். பின்னர் அணிவகுத்து செல்லும் காலை பிரார்த்தனை. அது நிறைவடைந்ததும் முதலாம் பாடம் கணக்கீடு விழுந்துகட்டி ஓடிவந்து நிற்க ஆசிரியர் எங்கே வீட்டுவேலை கொப்பி? என்றதும் இன்னும் சிறிது நேரம் காலைப்பிரார்த்தனை நீண்டிருக்க கூடாதோ? என்ற ஏக்கம். ஐந்து வீட்டுவேலை கொப்பியை வைக்க மீதி ஐந்தும் ஆசிரியரிடம் மன்னிப்பு கேட்க என அந்த பாடம் முடிந்துவிடும்.

அடுத்து வணிகம் வகுப்பாசிரியரின் பாடம் பல கேள்விகளுடன் அந்த பாடம் முடிய இடைவேளை தரும் சுகமும் சுகம்தான். பின்னர் பொருளியல், ஆங்கிலம், நூலகம் என ஒரு பாடம் கூட இடைவேளை இல்லையா என ஏங்கி ஏங்கி கல்வி கற்ற நாட்களும், ஆண் பெண் என்ற வேறுபாடின்றி மேற்கொண்ட அரட்டைகளும் வயிறு நோகச் சிரிப்பும் யாராவது திட்டும்போது கூட தலையை குனிந்து ஆளையாள் பார்த்து சிரித்த நொடிகளும் பரீட்சை என்றதும் வரும் போட்டியும், புள்ளி வந்ததன் பின்னர் வரும் சாந்த சொரூப நிலையும், அதிபரை கண்டால் அமைதியும் காரணமின்றி பிடித்த சண்டைகளும், வெட்கமின்றி மீண்டும் பேசிய நொடிகளும், சிரமதானத்தில் ஏற்பட்ட சினமும் என எங்கள் நவரசங்களிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் வந்தவிட்டது தாயே.

அன்னையின் கருவறையின் அருமை பிறந்த பின்னர்தான் தெரியவரும் அதே போன்றுதான் யூனியன் அன்னை. உனது அருமையும் விடைபெறும் நேரத்தை நெருங்க நெருங்க தான் புரிகிறது. தரம் - 06 கதிரைகளுக்கும், மேசைகளுக்கும் ஆசைப்படுகின்றது என் மனம். எத்தனை உயரங்கள் சென்றாலும் என் அன்னை உன்னை மறவேன் நீ தந்த நினைவுகளை மறவேன் என்று கூறி என் கடிதத்தை நிறைவு செய்கின்றேன்.

இப்படிக்கு
உன் அன்பு மகள்



# புவிநடுக்க அலைகள்

யோ.டனுசியா
**2020 A/L Maths**

புவி ஆனது மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டது. அவை புவியோடு, இடையோடு, கோளவகம் என்பன ஆகும். புவியோடானது கண்ட ஓடு, சமுத்திர ஓடு என்ற இரண்டு பிரிவுகளைக் கொண்டது. கண்ட ஓடு இரண்டு படைகளைக் கொண்டது. சீயல் படை, சீமாப்படை.

சீயல்படை ஆனது சிலிக்காவையும், அலுமினியத்தையும் கொண்டது. சீமாப்படை சிலிக்காவையும், மக்னீசியத்தையும் கொண்டது. கண்ட ஓட்டையும் சமுத்திர ஓட்டையும் பிரிக்கும் கோடு கொன்ராற் இடைவெளி எனவும் புவியோட்டையும் இடையோட்டையும் பிரிக்கும் கோடு மேகோபிறாவிச் இடைவெளி எனவும் அழைக்கப்படும்.

புவி ஆனது கண்ட ஓட்டிற்கு அடிப் பகுதியில் புவித்தகட்டு எல்லைகளைக் கொண்டது. இத்தகடுகள் அசையக்கூடிய நிலையில் காணப்படுகின்றது. இவை ஒருங்குதல், விலகுதல், அமிழுதல் போன்ற செயற்பாடுகளைக் கொண்டவை.

புவித்தகடுகள் ஒன்றை ஒன்று நோக்கி அசைதல் ஒருங்குதல் எனப்படும்.

புவித்தகடுகள் ஒன்றை ஒன்று விலத்தி அசைதல் விலகுதல் எனப்படும்.

புவித்தகடுகள் ஒன்றின் மீது ஒன்றாக அசைதல் அமிழுதல் எனப்படும்.

புவித்தகடுகள் ஒன்னை ஒன்று நோக்கி அசைவதால் மடிப்பு அலைகள் உருவாகக்பட்டு புவிநடுக்க அலைகள் உருவாகின்றன. தகட்ட சைவுகளின் நகர்வு காரணமாக தரையானது நகர்வுக்கு உட்பட்டு தரைக்கு மேல் உள்ள அனைத்து உயிருள்ள உயிரற்ற பொருட்களும் சிதைவடைகின்றன. புவி நடுக்கத்தின் போது S அலைகள், P அலைகள் என்பன உருவாக்கப் படுகின்றன. S அலைகள் குறுக்கலைகளாக இருப்பதுடன் P. அலைகள் நெட்டாங்கு அலைகளாகும். S அலைகள் புவியின் திரவப் பகுதிகளிற்கு ஊடாகச் செல்லாது. ஆனால் P அலைகள் புவியின் அனைத்துப் பகுதிகளி னூடாகவும் செல்லும். இதனால்தான் புவி நடுக்கம் ஏற்படும்போது P அலைகளை வைத்தே விலங்குகள் புவிநடுக்கத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்பைக் கணித்து பாதுகாப்பான இடத்திற்கு ஆரம்பத்திலேயே தப்பிச் செல்கின்றன. ஏனெனின் S அலைகளை விட P அலைகள் வேகம் கூடியவை. எனவே அவை விரைவாகப் புவியை வந்தடைவது விலங்குகளின் உடலால் அவ் அதிர்வுகளை உணர முடிகிறது. எனவே அவை தப்பித்துக் கொள்கிறன.

S அலைகள் மையப்பகுதியினூடு செல்லாத காரணத்தினால் புவியின் அசணிப் பகுதிகுழம்புநிலை/திரவப்பகுதியில்கொண்டுள்ளது.

S அலைகள் புவியின் சில பகுதிகளில் திரவம் / குழம்பு காரணமாக நின்று விடுகிறன. இவையே வெந்நீரூற்றுக்கள் என அழைக்கப் படுகிறன.

உ+ம் கிண்ணியா வெந்நீரூற்று

புவி நடுக்கத்தை அளவிடும் அலகு ரிச்டர் அளவீடு ஆகும். புவிநடுக்கத்தினால் பல்வேறு உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதுடன் பௌதீக வளங்கள் மற்றும் உடைமைகள் பாதிக்கப்படுகிறன.

புவிநடுக்கம் ஏற்படுவதற்கு மானிடக் காரணிகளும் பங்கு கொள்கிறன. அவையாவன,

1. பாரிய மண் அகழ்வு

2. பாரிய கட்டடங்கள் அமைத்தல்

3. சுரங்கம் வெட்டுதல் போன்ற காரணங்களை யும் குறிப்பிடலாம்.

எனவே நாம் புவி நடுக்கம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு மேற்கூறிய காரணிகள் பங்கு பெறுவதைத் தடுத்தல் வேண்டும். புவி நடுக்கத்தை வரைபு மூலம் கணித்துக் கொள்ளமுடியும். எனவே புவி நடுக்கம் ஏற்படுவதைத் தடுக்க மானிடராகிய நாம் பங்குதாரராய் இருப்போம்.

# விடியல் வருமா?

உப்பிட்ட மாந்தர் தமை
சொப்பனத்திலும் மறக்காமல்
வாழ்ந்தனர் நம்மவர்கள் இன்றோ
வீழ்கின்றனர் எம்மவர்கள்

விழிதனைக்குருடாக்கி விரைகின்ற
பயணத்தால் விலையில்லா உயிர் மாழுது
வழியெங்கு தெரியாமல் வாழ்வது புரியாமல்
வருங்காலமும் இருளாகுது

முடிவொன்று இல்லாமல் வீற்றிடும்
குரோதத்தால் காலமும் வீணாகிப்போகுது
மொழியென்று இனமொன்று மோதி
மோசங்கள் தான் எஞ்சுது

படிகின்ற பகையாலே மனிதநேயம்
பலதூரம் பண்பற்றுச் செல்கிறது
குழிதோண்டி எமக்கு நாமே
குதூகலம் கொள்ளலாமோ?

இழிகுலப் பண்புகளின் மிகுதியில்
இருள்தானே நீடிக்கும்
இனிவரும் நாளிலாவது திடம்கொண்டு
இரங்காயோ விடியலே!

இ.கஜிபா
கலைப்பிரிவு
A/L (2020)

# தெரிந்த மனிதர்கள் தெரியாத தகவல்கள்

தே.இளங்குமரன்
தரம் - 10D

**சேக்ஸ்பியர்**

இவர் தனது 18 வயதிலேயே திருமணம் முடித்தார். 8 வயது வித்தியாசத்தில் ஆனி ேதன் என்னும் 26 வயதுப் பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

**சார்லஸ் டிக்கன்ஸ்**

சார்லஸ் டிக்கன்ஸ் தான் எழுதிய நூல்களை மக்கள் மத்தியில் நூலின் பெருமை அறிய நடித்துக் காட்டுவார்.

**கார்ஸ் மார்க்ஸ்**

தன் மகள் பிறந்தபொழுது அவளுக்கு பால் வாங்கித்தர பணமில்லாமல் வறுமையில் வாடியவர். அதே மகள் இறந்த பொழுது அவளை நல்லடக்கம் செய்ய மார்க்ஸிடம் பணம் இல்லை அவளுக்கு சவப்பெட்டி வாங்கக்கூட மிகவும் கஷ்ரப்பட்டார். தன்னிடம் இருந்த "கோட்" இனை விற்றுத்தான் சவப்பெட்டி வாங்கினாராம்.

**டிப்காகிரட்டீஸ்**

மருத்துவத்தின் தந்தை எனப்படும் இவர் மருத்துவம் குறித்து அக்காலத்தில் 70 நூல்களை எழுதினார்

**கலிலியோ கலிலி**

இவரது காலத்தில் காலத்தைக் காட்டும் கடிகாரங்கள் நடைமுறைக்கு வரவில்லை கலிலியோ தம்முடைய ஆராய்ச்சிகளின் போது கால அளவை நிர்ணயிக்க தனது கைகளின் நாடித்துடிப்பை அளவு கோலாக கொண்டார்.

**லியார்டோ டாவின்சி**

தனது இடது கையில் காகிதத்தில் வலமிருந்து இடமாக எழுதினார். அவரது ஆராய்ச்சி நூல்களை முகம் பார்க்கும் கண்ணாடியின் உதவியால் மட்டுமே படித்து பார்க்கமுடியும்.

**சி.ஆ.பெ. விஸ்வநாதன்**

இவர் எந்தவொரு பாடசாலையிலும் கல்வி கற்காமல் இரண்டு பல்கலைக்கழகங்களில் டாக்டர் பட்டம் பெற்றார்.

**ஜோன் கெனடி**

தான் இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு பிற்பாடு அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் மூன்று நாள் அமர்ந்திருந்தார்.

**பெர்மரண்ட் ரஸல்**

வாழ்க்கையில் இவர் 4 திருமணம் செய்து கொண்டார். தனது 4வது திருமணம் 80வயதில் நடைபெற்றது.

**ஆபிரகாம்லிங்கன்**

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது தனது சப்பாத்தை தானே துடைத்துக்கொள்வார்.

**'ஹிட்லர்**

சர்வாதிகாரியான இவர் ஒரு ஓவியர். அவர் இளைஞனாக இருந்தபோது வியன்னா ஓவியக் கல்லூரியில் சேர விரும்பினார். ஆனால் இடம் கிடைக்கவில்லை. அவர் தனது முயற்சியால் ஓவியம் வரையக் கற்றுக்கொண்டவர். 1911 முதல் 1914 வரைந்த வாட்டர் கலர் ஓவியங்கள் 80000 டொலருக்கு விலை போனது.

**இடியஅமீன்**

உகாண்டாவை ஆண்ட சர்வாதிகாரியான இடியஅமீன் ஆபிரிக்க நாடுகளின் தலைவர் கூட்டத்துக்கு ஒருமுறை பல்லாக்கில் சென்றார். அவரை சுமந்த 4 பேரும் ஐரோப்பிய வெள்ளையர்கள் கறுப்பினத்தவரை வெள்ளையர்கள் அடிமையாக நடத்தியதற்கு வெள்ளையருக்கான பதலடி என்றார்.


# விமானத்தின் இயக்கம் பற்றிய பௌதீக விளக்கம்

யோ.டனுசிகா
கணிதப் பிரிவு (2020)

நாம் நாளாந்தம் ஆகாயத்தில் விமானங்கள் பயணிப்பதை அவதானிக்கிறோம் மற்றும் ஒலிகள் மூலம் உணர்கிறோம். ஆனால் விமானம் பறப்பதற்குரிய பௌதீக விளக்கம் என்னவென்றால்,

விமானத்தினால் தரையில் தாக்கும் நிறையை தரையினால் விமானத்திற்குக் கொடுக்கப்படும் மறுதாக்கம் அதிகம் என்பதால் விளையுள் விசை மேல் நோக்கித் தொழிற்படுவதால் விமானம் மேல் நோக்கிப் பறக்கிறது. விமானம் ஆகாயத்தில் பறக்கும் முன்னர் தரையின் மீது உந்துகிறது. அவ்வாறு உந்தும் போது தரையினால் மறுதாக்கம் அதிகளவில் விமானத்திற்கு வழங்கப்படுகிறது. இதனால் விமானம் மேல் நோக்கி பறக்கிறது. மேலும் விமானம் பயணித்துக் கொண்டிருக்கும் போது திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது விளையுள் விசை தொழிற்படுவதால் விளையுள் விசையின் திசையின் திரும்பும்.

விமானங்களின் இறக்கைகளில் மின்விசிறிகள் பொருத்தப்பட்டிருப்பதால் அவற்றை இயங்கச் செய்யும்போது வளிமண்டலத்தில் உள்ள வளியைத் தள்ளுகின்றன. இதனால் காற்றைக் கிழித்துக் கொண்டு விமானங்கள் பயணிக்கின்றன. மேலும் விமானங்களில் பயணிக்கும் போது சில வேளைகளில் விமானம் திடீரென பதிந்து பயணிக்கும் அதற்குக் காரணம் வளியில் உள்ள வெற்றிடம் ஆகும். வளிமண்டலத்தில் சில பகுதிகள் வளி நிரப்பப்படாது இருக்கின்றன. இவ்வாறான இடங்களில் பயணிக்கும் போதுதான் விமானம் திடீரென கீழறங்குவது போன்று இருக்கும். இதுவே விமான இயக்கத்தின் பௌதீக விளக்கம் ஆகும்.



# இதயத்தில் இடங்கொடுங்கள்

சி.லோட்டஸ்
தரம் - $10^C$

இரண்டு விடயங்கள் இதயத்திற்கு கூடாது. "மலை மேலே ஓடுவது, மனிதர்களை தரங்குறைப்பது" இப்படிக் கூறுகிறது ஓர் அறிவியல் பழமொழி. நீங்கள் மகிழ்வுடன் வாழவேண்டும் எனின் பிறரில் குறை காணுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பிறர் முரண்பட்டு நிற்கும் பொழுது பெரிதுபடுத்தாதீர்கள். பிறர் உள்ளங்களை வெல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து செயற்படும் பொழுது சாதுரியமாகப் பின்வாங்கி விடுங்கள்.

பிறர் உங்கள் மேல் இல்லாதது பொல்லாதது சொல்லி திட்டும் பொழுது அவர்களை மட்டும் திட்டவேண்டும் என்ற மனப்பான்மையை விட்டுவிடுங்கள். பிறரில் எப்பொழுதும் நல்லெண்ணம் வைத்துச் செயற்படுங்கள். பிறரை ஏற்றுவிப்பதில் தோற்றுப் போகாதீர்கள். பிறருக்கு உங்கள் இதயத்தில் அன்போடு இடங்கொடுங்கள்.

1913 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசினை பெற்று கௌரவிக்கப்பட்ட இரவீந்திரநாத்தாகூர் கீதாஞ்சலி நூலில் கூறுகிறார்.

"நான் பெருமையடையலாம் என்று கடவுளிடம் பலத்தைக் கேட்டேன். ஆனால் நான் கீழ்ப்படியத்தாழ்மையை கற்கும்படி பலவீனமாக்கப்பட்டேன்". நான் பெரிய காரியங்களைச் செய்ய கடவுளிடம் சுகத்தை கேட்டேன். நான் நல்லவைகளைச் செய்ய கடவுளிடம் சுகத்தை கேட்டேன். நான் நல்லவைகளை செய்ய அசௌகரியத்தை தந்தார். நான் சந்தோசமாக இருக்க செல்வத்தை வேண்டினேன். நான் அறிவொளியாக இருக்க வறுமையை தந்தார். நான் மனிதருடைய புகழைப் பெறுவதற்காக கடவுளிடம் சக்தியை கேட்டேன். ஆனால் கடவுளின் தேவையை உணர எனக்கு பலவீனத்தை தந்தார். நான் வாழ்க்கையில் எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு வாழ்க்கையை தந்தார்.

நான் கேட்ட எதுவும் எனக்கு கிடைக்கவில்லை. ஆனால் நான் நம்பியதெல்லாம் கிடைத்தது. முற்றிலும் எனக்காக நான் பேசாத வேண்டுதல்கள் எல்லாம் கேட்கப்பட்டுள்ளன.

பாரபட்சமின்றிப் பலரும்
மகிழ்வுறும் இல்லமே இதயமாகும்

# மனிதனை உருவாக்குவதில் விளையாட்டின் பங்கு

மெ.சங்கவி
தரம் - 11C

இன்றுள்ள கல்வித் திட்டத்தில் விளை யாட்டுக்கள் தனிச்சிறப்புடைய அங்கமாக விளங்குகின்றன. ஏட்டுக்கல்வி, செயன்முறைக் கல்வி என்பவற்றிற்கு எத்துணைச் சிறப் புண்டோ. அத்துணைச் சிறப்பு விளையாட்டுக் களுக்கும் உண்டு என்று கல்வித்திட்டம் வலியுறுத்துகிறது. அன்றியும் கல்விச்சாலை களிலே மாணாக்கர் மனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ள துறையும் அதுவேயாகும். ஓடி விளையாடுவதில் நாட்டம் கொள்ளாத குழந்தைகளிடஞ் சில குறைபாடுகள் உள்ளன என்பது உளவியல் நூல் வல்லார் கண்ட முடிபாகும். கல்விச்சாலையிலே விளையாட்டு நோக்கமே மற்றெல்லா நோக்கங்களையும் விட மனமகிழ்ச்சியுஞ் சுறுசுறுப்பும் வாய்ந்ததோர் இன்பப்பொழுதாகக் காட்சியளிக்கிறது. எனவேதான் மனமகிழ்வோடு தன்னிச்சை கொண்டு வெகு இலகுவாகச் செய்யபடுவது விளையாட்டென்றும் பரிபாண விருப்பமின்றி ஓரளவு சிரமத்தோடு செய்யபடுமானால் அது வேலையாகிறது.

விளையாட்டென்று கூறும்போது அதற்குரிய சில சிறப்புப் பண்புகளை நாம் அவதானித்தல் வேண்டும். மனமலர்ச்சியோடு இலகுவாகச் செய்யப்படுவது மாத்திரமன்றி அது உடலுறுப்புக்கு உளமளிப்பதாகவும் அமைதல் வேண்டும். குழு முறையிலோ தனிமுறையிலோ போட்டியுணர்வு நிலவுதல் வேண்டும். அத்தன்மைகள் நிறைந்து விதிகளினாலே நெறிமுறையாக அமைக்கப்பட்ட விளையாட்டுக் கள் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றன. கிளித்தட்டு மறித்தல், கெந்தியடித்தல், கிட்டி யறித்தல், சடுகுடு முதலிய சுதேச விளையாட்டுக் கள் நம் நாட்டில் பெருமையுடன் விளையாடப் படுகின்றன. கிரிக்கட் பந்தாட்டம், உதை பந்தாட்டம், மென்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரபந்தாட்டம் முதலியன பலவகைப் பந்தாட்டங்க ளெல்லாம் மேலைத்தேச விளையாட்டுக்கள் எனப்பட்டு மக்கள் மனத்தைப் பெரிதுங் கவர்ந்துள்ளன. இவ்விளையாட்டுக்கள் யாவும் திறம்பட அமைக்கப்பட்ட இருவேறு குழுக்கள், ஒன்றையொன்றெதிர்த்து வெல்ல முயலும் போதே பெரிதுஞ் சிறப்படைகின்றன. இம்முயற்சி விளையாட்டுப்போட்டி எனப்படும்.

போட்டி விளையாட்டுக்களில், ஒரு குழு தன் எதிர்க்குழுவை எதிர்ப்பதற்குக் காட்டும் வேகமும், திறமையும், ஈட்டும் வெற்றியும் மாத்திரமன்றி எதிர்க்குழு எதிர்ப்பைத் தாங்கும் போராடும் பண்பும் கணிக்கப்படுகின்றன. போட்டியிடும் போது ஒவ்வொரு குழுவுக்கும் வெற்றியே குறிக்கோள். அக்குறிக்கோளை அடைவதற்குத் தப்புவழிகளைப் பின்பற்றுதலும், மாற்றுக் குழுவினை எதிர்த்துப் பொறாமைப்பட்டுக் கோபங்கொள்ளுதலும் இழுக்காகும். இவ்வித சீரான போட்டி விளையாட்டுக்கள் ஒவ்வொரு நாட்டிலும் பலவகை அமைப்பு முறைகளுக்கேற்ப விளையாடப்படுகின்றன. அன்றியும் ஒரு நாடு இன்னொரு நாட்டை எதிர்த்துப் போட்டியிடுதலும் உண்டு. உலக நாடுகளுக்கிடையே இந்தியா, மேற்கிந்திய தீவுகள், பாகிஸ்தான், இலங்கை என்பவற்றிற்கிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளும் உலகப் பிரசித்தமானவை. பதினாறு ஆண்டுகளுக்கு முன்னே கிரேக்க நாட்டிலே வீரர்களிடையே தோன்றி வளர்ந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி உலக நாடுகளால் போற்றப்பட்டு, காலத்துக்குக் காலம் பலபல நகரங்களில் நடைபெற்று வருகிறது.

இவ்விளையாட்டுப் போட்டிகளிலே உலகநாடுகள் தாபிக்கும் சாதனைகள் அகில உலக சாதனைகளாகி அந்நாடுகளுக்கு அழியாப் புகழைக் கொடுக்கின்றன. விளையாட்டுப் போட்டிகளிலே பங்குகொள்ளும் வீரர்கள் ஓடியாடி விளையாடுவதனால் அவர்களின் இரத்தம் தூய்மை பெற்று இரத்தோட்டமும் சுறுசுறுப்படைகிறது. அதனால் செம்மையான சீரானசக்தி சித்திக்கிறது. உடலெங்குமுள்ள தசைநார்கள் தொழிற்பட்டு வலுவடைகின்றன. நிமிர்ந்த முதுகும் அகன்ற மார்பும், திண்ணிய தோள்களும், வளவளப்பான பிற அங்கு அமைப்பும் வாய்க்கப்பெற்று கட்டுறுதியும் வனப்பும் நிறைந்த தேகத்தோடு நோயற்ற வாழ்வு வாழமுடிகிறது. இவையனைத்தும் விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டு வீரர்களுக்கு உடல் சம்பந்தமாக அளிக்கும் உயரிய பரிசுகள்.

வெற்றியைக் கண்டு மனம் மிகக் களித்து ஆரவாரித்தலும் தோல்வியைக் கண்டு துக்கத்தால் சோம்புதலும் மனத்தின் சமநிலையற்ற தன்மையையே காட்டும். வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதித்து இரண்டிலும் சிரித்து மகிழ்பவனே உண்மை யான வீரன். இவ்வீர பண்பே வாழ்க்கையின் சகிப்புத் தன்மையாய் "இடுக்கண் வருங்கால் நகும்" பண்பாய் விளங்குகின்றது. எனவே உள்ளத்தைத் திருத்தி நற்பண்புகளை விதைத்து வளர்க்கும் நல்லொருவனாகவும் விளையாட்டுப் போட்டி விளங்குகிறது.

வாழ்க்கை மலர்ச்சோலையன்று மேடு பள்ளம் நிரம்பிய மலைவழி என்று சான்றோர் கூறுவர். வாழ்க்கையின் ஒவ்வொரு துறையி லும் தினந்தினம் பல பல போட்டிகளும் இன்னல்களும் எதிர்ப்படுகின்றன. அவற்றையும் விளையாட்டுக்கள் போலக் கருதி வெல்ல முயல்தல் வேண்டும். இவற்றை வெல்ல முடியாது. தோற்றாலுங்கூட மனம் தளராது மனமலர்ச்சியோடு மேலும் முயலுதல் வேண்டும். குழந்தைகள் விளையாடும் போது எதிர்பாராத விதமாக ஒருவரை ஒருவர் தாக்கிச் சண்டையிடுவர். அடுத்தகணம் சமாதான மடைந்து சேர்ந்து விளையாடுவார். அவர்க ளிடையே சண்டையுண்டு ஆனால் கோப மில்லை. இதுவே குழந்தைப் பண்பு இக் குழந்தை மனநிலையை வளர்த்து வாழ்க்கையை வளம்படுத்துவது விளையாட்டுப் போட்டியே. இச்சீரிய பண்பு வாழ்க்கையின் கைகூடி விட்டால் வாழ்வு சுவர்க்கமாகிவிடும்.

# யூனியன் தந்த வாய்ப்பு

N.கிஷோக்
கணிதபிரிவு 2020

கடும்போர்ச் சூழல் கால மத்தியில் எனது பெற்றோர்கள் இடம்பெயர்ந்து மாவை மண்ணைவிட்டு கொழும்பில் குடியேறினர். அங்குதான் நானும் பிறந்தேன். கொழும்பு பிரபல்யமான பாடசாலை ஒன்றிலே கல்வி கற்றுக்கொண்டிருந்து 2015ம் ஆண்டு மீண்டும் மாவை மண் என் பெற்றோரை அழைத்தது. அதன்போது யாழில் எனக்கு கல்வி கற்பதற்கு எனது பெற்றோர்கள் பல தெரிவுப் பாடசாலைகளை கூறியிருந்தனர். நான் யூனியன் கல்லூரியில் எனது கல்விப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முடிவெடுத்தேன் . காரணம் எனது தந்தை மற்றும் தந்தையின் சகோதரன் ஆகியோர் இப்பாடசாலையில் கல்வி கற்றிருந்தார்கள். எனது தந்தையினால் இங்கு படிப்பதற்கு முடியவில்லை. காரணம் அன்று இருந்த சூழ்நிலை. தந்தையின் சகோதரன் இங்கு க.பொ.த. உயர்தரம் வரை கற்று பரீட்சைக்கு தோற்றினார். போர்ச்சூழல் காரணமாக அவரால் பரீட்சையை முழுமையாக நிறைவேற்றமுடியவில்லை. அவர்கள் ஆரம்பித்ததை நான் இக்கல்லூரியில் நிறைவேற்றவேண்டும் என்ற குறிக்கோளுடன் இப்பாடசாலையை தெரிவு செய்தேன். வுந்து குறுகிய காலத்தில் என்னால் முடிந்ததை செய்து அனைத்து ஆசிரியர்களதும் ஆசீர்வாதத்தையும் பாராட்டையும் பெற்றேன். க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினை பெற்றிருக்கிறேன் என்றால் யூனியன் தாய் எனக்கு அளித்த வரம். சிறந்த பெறுபேற்றினை பெற பல ஆசிரியர்களது ஊக்குவிப்பு எனக்கு கிடைத்தது. இதனை நான் எனது முன்னாள் பாடசாலையில் கற்றிருந்திருப்பேனே ஆனால் என்னால் இந்நிலைக்கு வந்திருக்க முடியுமா என்பது கேள்விக்குறிதான். இப்பாடசாலை ஆசிரியர்கள் எம் வகுப்பிற்கு வந்து கூறுவார்கள். 2017 O/L Batch மாணவர்கள் சராசரியாக நல்ல சிறந்த பெறுபேறை பெற்றிருக்கின்றோம் என்று அதில் நானும் ஒருவனாக இருப்பதில் பெருமிதம் அடைகிறேன். யூனியன் தாய் எனக்கு பல பாடங்களை கற்றுத்தந்திருக்கிறது. தலைமைத்துவ பண்பை கற்றுத்தந்திருக்கிறது. நான் க.பொ.த. சாதாரணதர பரீட்சை நிறைவேற்றி க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் பயணம் செய்து கொண்டிருக்கிறேன். ஒரு ஆண்டு மாணவத் தலைவராக பதவி ஏற்று சின்னத்தை வாங்கி வந்து கொண்டிருக்கும் வேளையில் என்னை பார்த்து பழைய மாணவர் ஒருவர் கேட்டார். நீ வந்து சிலவருடம் தான் ஆகிறது. மாணவர் தலைவர் பதவி தரம் 06 இல் இருந்து கல்வி கற்பவருக்குத்தான் கிடைக்கும் ஆனால் உனக்கு கிடைத்திருக்கினறது என்று கூறி வாழ்த்து தெரிவித்திருந்தார் அப்போதுதான் நான் உணர்ந்தேன். யூனியன் தாய் எனக்கு தந்த வாய்ப்புக்களை நான் சரியாக பயன்படுத்தியிருப்பதால் தான் எனக்கு மீண்டும் இவ்வாய்பை வழங்கியுள்ளது என்று. க.பொ.த. உயர்தரத்தில் இப்போது கணித பிரிவில் படித்துக்கொண்டிருக்கிறேன். அனைத்து மாணவர்களைப் போல நானும் யாழ்ப்பாணம் சென்று பிரத்தியேக வகுப்பில் கலந்து கொண்டேன். அங்கு கிட்டத்தட்ட 1000 பேருக்கு மேல் கல்வி கற்கின்றனர். நான் 1 மாதம் அங்கு சென்றேன். ஆனால் என்னால் எதையும் புரிந்து கொள்ளமுடியவில்லை. நான் என் சக நண்பர்களிடம் கேட்டேபோது அவர்கள் கூறினார்கள். எல்லாரும் போகிறார்கள் நாமும் போகிறோம் என்று. அதன்போது தான் எனக்கு புரிந்தது அனைவரும் மற்றவர்களை பார்த்து செயற்படுகின்றனர் என்று அப்போது தான் எனக்கு ஒரு கூற்று ஞாபகம் வந்தது. உலகப் புகழ் பெற்ற ஒரு நடிகர் கூறியிருந்தார்.

"அவர்களைப் போல் வாழனும் இவர்களைப் போல் வாழனும் என்று நினைக்காதீர்கள்

நீங்கள் நீங்களாகவே இருங்கள்." என்று

அதன்பிறகு நான் யாழ்ப்பாணம் வகுப்புக்கு செல்வதை நிறுத்திவிட்டேன். நான் என்னால் இயன்றளவுக்கு நானாக இருந்து படித்துப் பார்த்தேன். அதிலும் பெரிதாக புள்ளிகள் பெறவில்லை. இப்போதுதான் அதாவது 1ம் வருட கல்வியை முடித்து 2ம் வருட கல்வியில் காலடி எடுத்து வைத்த நாளிலிருந்து பாடசாலை ஆசிரியரிடம் பிரத்தியேக வகுப்புக்கு சென்று கொண்டிருக்கிறேன். மீண்டும் யூனியன் தாய்தான் எனக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறது. அதுமட்டுமல்லாது உதவிமாணவர் தலைவராகவும் வைத்து அழகு பார்க்கிறது. இப்பதவி கிடைக்க முன்பு நான் இதனை ஏற்கவில்லை இதற்கு எனது ஆசிரியர் இருவர் கூறியிருந்தனர். இது பாடசாலையில் கிடைக்கும் வாய்ப்பு இதனை தவறவிடக்கூடாது என்று அதன்பின்பு மனமுவந்து யூனியன் தாய் எனக்கு தந்த வாய்ப்பை விட்டுக்கொடுக்காமல் அதனையும் ஏற்றுக்கொண்டேன்.

இவ்வாறு எனது வெற்றிக்கு முக்கிய காரணகர்த்தாக்களாக எனது தந்தையும், தாயும், தந்தையின் மூத்த சகோதரனும், பாடசாலை ஆசிரியர்களும் அதிபரும் தான் காரணம். இப்போது என் மனநிலைக்கு தெரியும் என்னால் இப்பாடசாலைக்கு என்ன பெறுபேறு பெற்றுக்கொடுப்பேன் என்று. என்னால் இயன்றளவு யூனியன் தாய் தந்த வாய்ப்பை பயன்படுத்தி யூனியன் தாய்க்கு என்றும் நன்றி மறவேனோக இருப்பேன் என்றும் பாடசாலையை பெருமைப்படுத்துவேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

# வேண்டவே வேண்டாம்

உதவாத உள்ளம் வேண்டாம்
மன்னிக்காத மனம் வேண்டாம்
பணிவில்லா பண்பு வேண்டாம்
நன்றியில்லாத நட்பு வேண்டாம்
பொய்யான உள்ளம் வேண்டாம்
பகையான வாழ்க்கை வேண்டாம்
வேசமுடைய பாசம் வேண்டாம்
வறுமையான வாழ்வு வேண்டாம்
அடக்கமில்லாத அமைதி வேண்டாம்
தாய்மொழியை இழிவாக்க வேண்டாம்
மொழிப்பற்றை இழக்க வேண்டாம்
சமாதானமில்லா நாடு வேண்டாம்
ஓரினம் என்பதை மறக்க வேண்டாம்
இனத்திலே பேதம் வேண்டாம்
தீயவை வேண்டவே வேண்டாம்

செ.பிரவீனா
தரம் - 9D

# கற்க கசடற

ஜெ.குயானி
தரம் - $10^B$

மனிதன் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை பெற்றுக்கொள்ளும் அறிவு சார்ந்த அனைத்து விடயங்களும் அவனுக்குக் கல்விப் பொருளாகின்றன. கல்வி என்பது தனித்துப் பாடநூலில் இருந்தது போதனை மூலம் பெறுவதல்ல. நமது வாழ்க்கைக் காலத்தில் நாம் பெறும். பல்வேறு வயையான அனுபவமும் சிறந்த கல்விப் பொருளாகின்றன. நாம் எவ்வளவு நூல்களை கற்றோம் என்பது முக்கியமானதல்ல. எத்தனையறிவு தரும் விடயத்தைக் கேட்டும், பார்த்தும் இருக்கின்றோம் என்பதோடு பெரியவர்களின் வாழ்க்கைச் சுவட்டில் இருந்து எத்தனை, விடயத்தை ஆராய்ந்து எடுத்துள் ளோம் என்பதுதான் முக்கியம். அனுபவதே சிறந்த கல்வி என ஜோன்டுஜி வெளிப்படுத்தி யுள்ளார். நன்கு கற்ற, ஆனால் சிறிதளவேனும் பண்பாடற்ற ஒருவரிடம் கற்பதை விட சிறிது கற்ற, ஆனால் பண்பாடு நிறைந்த ஒருவரிடம் கற்பது சிறந்தது.

நாம் பிறந்தது தொடக்கம் இன்றுவரை எத்தனை நீதிகள், அறமொழி, சிந்தனைக் கருத்துக்களைப் படித்துள்ளோம். அவைகளில் ஆயிரமாயிரம் பொருள்கள் பதிந்துள்ளன. நாம் படித்தவற்றைகை கைக்கொள்கின்றோமா என்பது கேள்விக் குறியாகும். கற்கும்போது ஐயந்திரிபுற எவ்வாறு கற்க வேண்டுமோ அதுபோல நாம் கற்பதன்படி வாழ்வதும் முக்கியமாகும். தேவையற்ற விடயத்தை மனப்பாடம் பண்ணி ஆசிரியரிடம் ஒப்புவிப்பது கல்வியல்ல சந்தேகம் எனின் உடனுக்குடன் கேட்டுத் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

பாடசாலைகள் பல நோக்கத்தைக் கொண்டு செயற்படுகின்றன. கல்வி செயற்பாடே முதன்மையானதாக இருப்பினும் சமுதாயத்தின் பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதில் ஆர்வம் காட்டுகின்றன. சமுதாயத்தின் பண்பாட்டு அம்சம் பலதை இன்றைய கலைத்திட்டம் உள்ளடக்கிய போதும் அதைக் கடைப்பிடிக்கும் மாணவர் சமூகத்தில் உருவாகி உள்ளனரா? என்பதும் சந்தேகமானது. இவ்விடயத்தை மாணவர் கற்கும் போதுதான் அதன் மூலம் பயன் கிடைக்கும். இத்தகைய உயர் பண்பை விட எத்தனை காலம் வாழ்வில் கடைப்பிடிக்கின்றோமோ அவ்வளவு காலம் நம் வாழ்வைச் செம்மைப்படுத்த முடியும்.

கல்வியானது புதிய கருத்து செயல் முறை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு தூண்டுதல் அளிக்கிறது. தொழில் புரிந்து வாழ்க்கை நடாத்த பயிற்சி அளிக்கிறது. ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் கழிக்க உதவுகிறது. அறிவுப் பெருக்கத்திறகும் செய்திறன்களது வளர்ச்சிக்கும் உதவுவதோடு ஆன்மீக உணர்வுக்கும் வழிவகுக்கிறது. சமுதாயத்திலுள்ள பல குறைபாடுகள் கல்வியால் களைப்படும் விரும்பத்தக்க பல செயற்பாட்டை வளர்க்கப் பொருத்தமான கல்வியைக் கற்றால் வாழ்வில் உயர்வு கிடைக்கும். சமுதாய மாற்றத்திற்கு கல்வி, சக்தி படைத்த சாதனமாகும். நாளைய சமுதாயமும் எதிர்பார்க்கும் அறிவையும், திறனையும் இன்றைய மாணவரிடம் வளர்க்கும் வகையில் கல்விப்பொருள் அமைதல் அவசியம்.

பாடசாலைக் காலம் மாணவர்களுக்கு முக்கியமானது. இக்காலப்பகுதியில் எம்மால் பெறமுடியாத விடயங்கள் எமது வாழ்வில் வேறு எப்போதும் பெறமுடியாது. பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை உண்மையில் மாணவர்களுக்கு வழங்கப்படும்

தண்டனை உண்மையில் வகுப்பறை ஒழுங்கு, முகாமைக்கு உடனடித் தீர்வாக அமையும். எனினும் நிரந்தரமாகவே சரியான முறையில் அவர்களை ஒழுங்கமைக்கும் எனக்கூற முடியாது. ஒவ்வொருவரும் தம் தவறை உணர்ந்து சரியாக நடந்தால் இத்தகைய தண்டனை தேவையற்றுப் போய்விடும். இதனால் தவறான விடயத்தை முடியுமானவரை தவிர்த்து உண்மையை உணர்ந்து நடக்கும் வகையில் எம்மை வழிநடத்தும் கல்வியே உண்மையான கல்வியாகும்.

ஆகவே கல்வி என்பது எமது உட்கிடக்கையின் தீய கூறுகளை எல்லாம் களைந்து விடுகிறது. அத்தகைய கல்வியானது தனித்து நூல்களினூடாக மட்டும் பெற்றுக் கொள்வதல்ல. அனுபவமே சிறந்த கல்விப் பொருளாகின்றது எனும் வகையில் பல்வேறு பெரியவரின் வாழ்க்கைச் சுவட்டில் உள்ள விடயத்தைப் பெறுவதோடு அதன்படி நடந்து சிறந்த நாட்டை கட்டியெழுப்பும் நல்ல பிரஜையாவோம்.

# இலட்சியத்திற்காய்

முயற்சிகள் பல செய்வோம்
இலட்சியம் உண்டு நமக்கு
நிலை நாட்டாவிடின்
பயன் ஏது நமக்கு இல்லை

எறும்புகள் வாழ்வதற்கென அமைந்த புற்றின் மேல்
மழை நீர் பட்டு கரைகின்ற வேளையில்
எறும்புகள் சேர்ந்த புற்றை களையாது காக்கும் வேளை
முயன்று தோற்றுப் போயின

ஆனாலும்
தோல்வி கண்டு தளராது
மழை நின்றவுடன் விளைந்தன எறும்புகள்
தமது புற்றினை மீண்டும் அமைத்து வெற்றி கண்டன
வாழ்விட பற்று புற்றுருவாக்கத்திற்கு உந்துதலாயிற்று
எனவே

தோல்வி கண்டு துவளாதே
தளராத துணிவோடு எழுவோம் நாம்
வெற்றி நிச்சயம்
நம்பிக்கையைத் துணை கொண்டால்

வி.அபிசா
தரம் – 09D

# உலகம் போற்றும் விபுலானந்தர்

ச.டிலானி
தரம் $10^D$

இந்து மகா சமுத்திரத்தின் எழில் முத்தென திகழ்வது ஈழமணித்திருநாடு. வெண் மணலால் விரிந்து கிடக்கும் பூமியிலே தென்னையும் கமுகும் செழிக்க ஒரு புறம் கடலலை வீசும் மறுபுறம் நெல் வயல் படுத்திருக் கும் இடமாக மட்டக்களப்பு காணப்படுகிறது. இதனால் தான் இவ்விடத்தை "மீன்பாடும் தேன்நாடு" என கவிஞர்கள் வர்ணிக்கின்றனர்.

இக்கிராமத்தில் வாழ்ந்த சாமித்தம்பி கண்ணம்மை ஆகியோரின் இல்லற வாழ்வின் நல்லறப் பேறாய் 1892ம் ஆண்டு பங்குனிமாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக் குழந்தைக்கு மயில் வாகனன் எனப் பெயரிட்டனர்.

கண்ணெனத் தகும் எண்ணெழுத்தை கற்பிக்க விரும்பிய பெற்றோர் மயில் வாகனனை நல்லரத்திம் ஆசிரியரிடம் அனுப்பி வைத்தார். சிறு வயதிலே கல்வி நாட்டங் கொண்டு தமிழ், சமஸ்கிருதம் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றார். தனது ஐந்தாவது வயதில் கல்வியை ஆரம்பித்த மயில்வாகனன் தனது பத்தாவது வயதில் கல்முனை மெதடிஸ்த பாடசாலையில் சேர்க்கப்பட்டார். பெரியோரை மதிப்பவராகவும் பெற்றோர் சொற்கேட்பவராகவும் விளங்கினார். கத்தோலிக்க திருச்சபை மெதடிஸ்த சபைகள் நடாத்திய பாடசாலையில் கல்வி கற்றலுக்கான பாதிரிமார்களது சேவை மனப்பாங்குகளைப் புரிந்து கொண்டார். ஆசிரியரை மதிப்பராகவும் கட்டொழுங்குக்கு கீழ்படிபவராகவும் உண்மை பேசுபவராகவும் விளங்கினார்.

சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே என்னும் சங்கத்தமிழ் வாக்குப்படி தன் மகனை சான்றோனாக்க விரும்பிய சாமித்தம்பி மயில்வாகனனை மட்டக்களப்பில் உள்ள சென் மைக்கல் ஆங்கில உயல்தரப் பள்ளியில் சேர்த்தார். அங்கு பல நூல்களைக் கற்று விஞ்ஞான பீடத்தில் அதிக நாட்டம் கொண்டான்.

தனது ஒழுக்கத்தினாலும் நுண்ணறிவி னாலும் ஆசிரியர்களை வெகுவாகக் கவர்ந்தார். தனது கணித நுட்ப அறிவினால் ஆசிரியர்களையே வியப்படையச் செய்த மயில்வாகனன் தனது 16வது வயதில் கேம்பிறிச் சீனியர் பரீட்சையில் முதலாவது வரிசையில் வெற்றி பெற்றார். கலாசாலை விடுமுறை காலத்தில் நல்லரத்தின் ஆசிரியரிடம் கன்னல் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் வடமொழி நூல்களையும் ஐயம் திரிபறக் கற்பதில் மகிழ்வடைந்தார்.

1911ம் ஆண்டு கொழும்பு சென்று ஆசிரியர் பயிற்சி கழகத்தில் சேர்ந்து பயின்று 1912ம் ஆண்டு ஆசிரியருக்கான பட்டம் பெற்றார். மட்டக்களப்பில் இரண்டு ஆண்டுகள் ஆசிரியப்பணி புரிந்த பின்னர் 1915ம் ஆண்டு மீண்டும் கொழும்பு சென்று அரசினர் பொறியியல் கல்லூரியில் பயின்று 1916ம் ஆண்டு டிப்ளோமா பட்டம் பெற்றார். மதுரைச் சங்கம் நடாத்திய தேர்வில் தோற்றி பண்டிதர் பட்டம் பெற்றார். இலங்கையிலே பண்டிதர் பட்டத்தை முதன்முதலில் பெற்ற பெருமை விபுலானந்தரையே சாரும். பின் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் அதிபராக கடமையாற்றினார். சஞ்சிகை பலவற்றிற்கும் ஆசிரியராக இருந்தார். சுவாமி சிவானந்தரால் 1924ம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் என்ற பெயர் வழங்கப்பட்டது. விபுலானந்தர் தமிழுக்கும் சமயத்திற்கும் அளப்பெரிய சேவை ஆற்றினார். அவர் 1947ம் ஆண்டு யூலைமாதம் 19ம் நாள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இவரது பாடல்களுள் ஒன்றாக "வெள்ளை நிற மல்லிகையோ...." எனத் தொடங்கும் பாடல் காணப்படுகின்றது.

வாழ்க விபுலானந்தர்
வாழ்க அவர் திருநாமம்

# எழுதுகோல் தன்வரலாறு கூறுதல்

கோ.கம்சிக்கா
தரம் – 11B

இந்த உலகத்தில் உயிர்விடும்போது எனக்கு இந்த எண்ணம் வருமானால் ஒழுக்கத்தில் உறுதியாக இருந்து ஒரு நெறியில் நின்று வாழ்க்கையில் வெற்றி பெற்றேன் என்று மகிழ்வோடு உயிர் விடுவேன்

எத்துணை பொருள் பொதிந்த வாக்கியம் இந்த ஆழமான சிந்தனையின் சொந்தக்காரர் முனைவர் மு.வரதராசனார். எண்ணங்கள் தான அவருடையவை எழுத்துக்கள் ஒவ்வொன்றும் என்னுடையவை. ஆம் அவரது அன்பு மாணவர்களால் அவருக்கு அளிக்கப்பட்ட விலைமதிப்பில்லாப் பரிசுநான். என் பெயர் பாக்கர். அந்தப் பேனாக்கடையில் என்னைப் போன்று வேறு பல வடிவங்களிலும் பலர் இருந்தனர் என்னவென்று தெரியவில்லை. அன்று கடைக்கு வந்த ஐந்து மாணவர்களும் ஒரு மித்த மனத்தோடு என்னைத்தான் தேர்ந்தெடுத்தார்கள். அன்று நான் மகிழ்ச்சியில் திளைத்திருந்தேன் .

எனது மகிழ்ச்சியில் அதிக நேரம் நீடிக்கவேயில்லை. இன்பத்திற்கு பின் தொடர்ந்தொருதுன்பம் வரும் என்பார்களே. அதுபோல வாங்கியவுடனே எனது உடல் மீது மு.வ. என்று பச்சை குத்தினர். அப்பொழுது என்னுடலில் ஏற்பட்ட வலிக்கு அளவேயில்லை. கண்ணீர் விட்டு அழுதும் பயனில்லை ஏதோவொரு சிறிய பேளையில் போட்டு அடைத்து அழகிய வண்ணத்தாள்களால் பேளையை மறைத்தார்கள். மூச்சுவிட கூடமுடியாது சிரமப்பட்டேன்.

மனவேதனையில் ஏதோவொரு சிறைக்குள் அடைப்பட்ட கைதியை விடுதலை செய்வது போல அந்தப் பேழையைத் திறந்தார் ஒருவர். அகன்ற நெற்றி, ஒளி பொருந்திய கண்கள், பொலிவான சாந்தமானமுகம்! மொத்தத்தில் அறிவொளிவீசும் முகம்! என்னை எடுத்து ஒரு காகிதத்தின் மீது மு.வ. என்று எழுதிப்பார்த்துத் தனது சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டார். அப்பொழுது தான் விளங்கியது இவருக்குதான் அந்த மாணவர்கள் என்னை பரிசாக தந்தார்கள் என்று நண்பர்களை பிரிந்து வந்த சோகத்தில் சில நாட்கள் கழிந்தன கல்லூரி விடுமுறை என்பதால் கொடைக்கானல் எனும் ஊரிற்கு என்னையும் அழைத்துச் சென்றார். சுற்றுலா என்றால் குடும்பத்தோடு செல்வார்கள். ஆனால் இவரோ தனியாகத்தான் சென்றார். அங்கே அமைதி தவழும் ஓரறையில் அமர்ந்து “கரித்துண்டு” என்று எழுதினார். ஒரு வாரம் கழிந்த பின்னர்தான் அவர் ஓர் அற்புத சீரிய சிந்தனைகளை நான் எழுத்துருவில் படைத்துக்கொண்டு இருந்தேன். என்ன நுட்பமான சிந்தனை. தமிழ் உலகிற்கு அறிவு புகட்ட வேண்டிக் ‘கரித்துண்டில்’ கருத்தறித் திருக்கும் கருத்துக்குள் தமிழர்கள் கற்று அதன்படி நிற்கவேண்டியவை.

இப்படியாக ஒவ்வொரு விடுமுறைக்கும் ஏதோஒரு நாவல், சிறுகதை, கழக இலக்கியம், பயணக்கட்டுரை, இலக்கியம் என்று எழுதிக் கொண்டே இருந்தார். அவர் தம் நற்சிந்தனைக்கு எழுத்துரு கொடுக்கும் பெருமையில் அவர் கைபோகும் வேகத்திற்கு நானும் ஒத்துழைத்தேன். இவற்றை விட எல்லாம் மிகுந்த பெருமை, தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருக்குறளுக்கு அவர் எழுதிய தெளிவுரையே ஆகும்.

சொல்லிய வண்ணம் செயல் புரிந்த தக்காரான அன்னவர் இன்று இல்லை என்ற ஏக்கம் எனக்கிருந்தாலும் அவருக்கு பணி செய்து கிடப்பதே என் கடமையாக கொண்டு இருந்ததை

எண்ணி எண்ணிப் பூரிப்படைகின்றேன். இன்று முதல் எனக்கு ஓய்வு! அவர் தம் மகனார் மோகன் அவர்கள் தன் தந்தையின் நினைவாக என்னைத் தனது அலுமாரியில் பத்திரப்படுத்தி வைத்துள்ளார். சிந்தனையாளர் மறையலாம் அவர் தம் எண்ணத்தில் உருவான கைவண்ணம் அழிவதில்லை.

நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும் இப்படை தோற்கின் எப்படை வெல்லும்.

# தேடல்

வாழ்வின் தேடல் என்பது இல்லையென்றால்
வாழ்க்கை கிணற்றுத் தவளை போல் ஆகும்
தினம் தினம் தேடிக் கற்றிட — அதனால்
தித்திக்கும் தெளிந்த அறிவினைப் பெற்றிடு

புத்தகப்பூச்சி போல் நீ வாழாது
பூமியைச் சுற்றி தேடல் கொள்வாய்
அனுதினம் தேடிக் கற்றிடுவாய்
அழகிய உலகினை நீ படைத்திடுவாய்

பல்வேறு நூல்கள்ஆங்காங்கே
பல தரப்பினருக்காய் காத்திருக்கின்றன
தேடிக் கற்பதை ஏன் மறந்தாய் - அவை
தேவையற்றது என நீ நினைத்தாயா?

கற்றது கைமண் அளவென்றால் - நீ
கல்லாதது உலகளவா?
கற்றது சிறுதுளி என்றால் - நீ
கல்லாதது சமுத்திரமா?

கவிஞனின் தேடல் கவிதைகள் தரும்
வீணையில் விரல்களின் தேடல் இசையினைத் தரும்
உளிகளின் தேடல் சிலைகளைத் தந்தால்
மாணவா உனது தேடல் அறிவினைத் தரும்

மழைத்துளிகளின் தேடல் மண்ணை அடைந்தால்
மாணவா உனது தேடல் விண்ணை அடைந்துவிடும்
தினம்தினம் தேடு நீ எதனை விரும்புகின்றாயோ
அதனையும் அடைந்திடும் வரையும் தேடு.....

தி.சபீனா
வர்த்தகப்பிரிவு
A/L (2020)

# அமேசனுக்காய்...!

நவயுக காலமதில்
வலிமை கொண்ட வல்லாதிக்க தேசம்
தோற்றுவிட்டது. இயற்கை சீற்றம் கண்டு.....
மழையது இல்லையெனில்
செயற்கை தனை கைக்கொண்டு
பொழிய வைக்கும் உத்திகளை
கையாண்டு பெய்விப்பதற்கும்
ஆதாரம் தேவை...

அமேசன் தனை காப்பதற்கு முயற்சிதனை
செய்யாது பிரார்த்தனைகள் செய்து என்ன பயன்...?

கண்டம் விட்டுக் கண்டம் தாண்டி
உயிர்கள் பல காவு கொள்ளும்
நவீன தொழிநுட்பம் கண்ட விஞ்ஞானம்
அமேசன் தனைக் காப்பதற்கு
தடுமாறுவது வேதனைதான்.....

காடு வாழ் உயிர்களைக் காப்பதற்கு
வானமகளே உன் கருணைக் கண் தனை திறந்து
வாய்விட்டு அழுதுவிடு
ஏதுமறியா உயிரினங்கள் உயிர்
பிழைத்து வாழட்டும்....

சினமதனை ஏற்பதற்கு
வலிமையற்ற உன் சேய்கள்தனை
ஒருகணம் எண்ணிப்பார்.
வனமாதா உன் கோபக் கனலதனை
விழுங்கி விடு குழந்தைகள் தாம்
இனிதே மகிழட்டும்........

அற்புதமாய் உன்
இரகசியத்தை உன்னுடனே
அழித்துவிட்டால்
உயிர்மாய்ப்பாய் முடிந்துவிடும் உன்
சினமதனை விழுங்கி விடு
குழந்தைகள் தாம் வாழட்டும்.

சி.டினோசன்
கலைப்பிரிவு 2021

# எம் தமிழ் சாவதோ...!

உ.கலைச்செல்வி
கலைப்பிரிவு 2020

ஈழத்தின் தமிழ் இலக்கிய அறுவடைகள் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது. இதனால் ஈழத்திற்கே உரித்தான தமிழ் மணம் மிக மோசமாக கலப்படமடைந்து வருகின்றது.

இதற்கு பிரதான காரணம் இளம் சமுதாயத்தினர் மத்தியில் ஏற்பட்டுவரும் மொழிப்பற்றின்மையே ஆகும். தமிழ்க் கலாசாரத் திலிருந்துதான் அவர்களின் விலகல் தன்மை என்பனவும் காரணங்களாகின்றன. இக்காரணி களின் தாக்கங்களின் வெளிப் பாடாகவே பாடசாலை பல்கலைக்கழகங்கள் மத்தியில் தமிழ் வளர்ச்சிக்கான இலக்கிய செயற்பாடுகள் இன்று வெகுவாக அருகிவிட்டன.

வருடத்தில் ஒருமுறை தமிழுக்கு விழா எடுத்து அதன் ஒரு அடையாளச் சின்னமாக சஞ்சிகையொன்றையும் வெளியிட்டுவிட்டால் தமது கடமை முடிந்து விடுகின்றதொன்று தமிழ்ப்பாடசாலைகளும் பல்கலைக் கழகங் களும் திருப்திப்பட்டுக்கொள்கின்றன.

சில தசாப்த காலங்களிற்கு முன்னர் படைப்பாளிகளின் படைப்புக்களை அச்சுவாகன மேற்றி நூலுருவில் வெளிக் கொணர்வதற்கு எத்தனையோ சிரமங்கள், பாரிய செலவீனங்கள் இருந்தபோதும் ஈழத்தில் பல சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. குறிப்பாக தமிழின் மேல் மாணவர்களுக்கு இருந்த ஆர்வத்தின் வெளிப்பாடாக சில பாடசாலைகளில் பல சஞ்சிகைகள் மாதம் தவறாமல் வெளி வந்தன. வசதியற்ற பாடசாலைகளில் வகுப்பு ரீதியாக மாணவர்கள் பல கையெழுத்து சஞ்சிகைகளை வெளியிட்டார்கள்.

இன்று தொழிநுட்பம் சிறப்பான வளர்ச்சி கண்டு ஒரு நூலாக்கத்திற்குத் தேவையான செலவீனங்கள் பன்மடங்கு குறைந்துள்ள நிலையிலும் அன்றைய நாட்களுடன் ஒப்பிடுகையில் தமிழ் ஆக்கவெளியீடுகள் அருகிவிட்டன. பல தேசியப் பாடசாலைகளில் ஆண்டுக்கு ஒரு மலர் வெளயீட்டைக் கூட தமிழில் வெளியிடுவதற்கு மாணவர்களின் ஆர்வமும் பங்களிப்பும் இருப்பதில்லை.

தமிழ் வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டிய தமிழ்ப் பிரதேசப் பல்கலைக்கழகங்கள் கூட தமது பொறுப்பை உதாசீனம் செய்து வருகின்றமை வேதனைக் குரியது. பாரதிவிழா, ஔவையார் விழா என்று பல விழாக்களை தமிழுக்காக ஒழுங்கு செய்துவந்த பாடசாலைகள் வருடத்தில் ஒரு தமிழ்த்தின விழாவைக் கொண்டாடுவதற்கே திணறிப் போகின்றன.

கடந்த தசாப்த காலங்களில் கல்விச் சாலைகள், சங்கங்களினூடாக முறையாக பயிற்றப்பட்ட அன்றைய மாணவர்களால்தான் இன்றும் கூட ஈழத்தில் தமிழ் மூச்சுவிட முடிகிறது. எதிர்காலத்தில் தமிழின் செழுமை குன்றிவிடாமல் அதனை வளர்த்தெடுக்கக் கடமைப்பட்ட இன்றைய மாணவர்களும் அதே தமது மாணவப் பருவத்தில் தமிழோடு இணைத்து செயற்பட பழகிக் கொண்டால்தான் நாளைய தமது கடமையை சிறப்பாக முன்னெடுக்கமுடியும். இதற்காக பாடசாலைகள், பல்கலைகழகங்களை இவர்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

தமிழ்ச்சங்கத்தினரால் தமிழின் வளத்தைப் பெருக்குவதற்கு நடாத்தப்பட்டு வரும் பண்டிதர் பரீட்சைகளை உச்சவகையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் இவை அனைத்திலுமிருந்து விலகிவாழும் போக்கே தமிழ் மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது. இதற்கு தமிழ்க்

கலாசாரத்திலிருந்து மாணவர்கள் வழுவிச் சென்று மேல் நாட்டு நாகரிகத்தை மோகித்துக் கொள்ளும் போக்கு பாரிய ஒரு மறைக் காரணியாக விளங்குகின்றது.

தமிழ் மக்கள் பல்வேறு சமூக கலாசாரங்களினூடாக இடம்பெயர் வாழ்வுக்குட் பட்டுள்ளமை இந்தப் போக்கை மேலும் ஊக்குவிக்கின்றது. இதனால் ஆண்டாண்டு காலமாக கட்டிக்காக்கப்பட்டு வந்த தமிழின் விழுமியங்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன.

எனவே தமிழ் மக்கள் குறிப்பாக மாணவர்கள் தமது தாய்மொழி குறித்துச் சிந்தித்து செயற்பட வேண்டிய தருணம் இது அவர்களின் கைகளில்தான் தமிழின் செழுமை தங்கியுள்ளது. அப்போதுதான் அண்மையில் தமிழ் நாட்டில் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்ட பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறிய "உலகை மறந்த தமிழோ தமிழை மறந்த உலகோ இருக்கமுடியாது" என்ற உண்மை வாக்கியத் திற்கு என்றுமே உயிர்கொடுக்கமுடியும்.

# நாம் தடம் மாறிவிட்டோம்

நவநாகரீக உலகினிலே மனிதன் - உடல்
மட்டுமே மாறவில்லை மனிதனோ முழுதாய் மாறிவிட்டான்
எத்தனையோ மாற்றங்கள் என்னவென்று
சொல்லியே தீர வேண்டும் வேறு வழி இல்லை

தொலைபேசி திரையினிலே பலர்
முகம் பார்த்து பேசும் நவநாகரீகம்
நேராகப் பார்க்கையிலே தெரியாமல் செல்கிறது.
இல்லாது போனதே உரையாடல் முறைகளே

முழு நீளச் சட்டைகளும் காற்சட்டைகளாகி
வளர்ந்து விட்ட நவநாகரீகம் - இங்கு
கையிழந்த நிலைகளிலே பல மேற்சட்டைகளும்
அவயங்களை ஆடைகளும் இழந்து விட்டதோ!

உணவுக்காய் நேரம் ஒதுக்கி உறவாடி
உணவுண்ட காலமெல்லாம் - இந்த
விரைவுணவு வந்த நேரம் - எம்
உறவுகளையே முற்றாய் ஒதுக்கி விட்டதே!

நவநாகரீகப் போக்கினிலே நமக்குள்ளே - இன்னும்
எத்தனை எத்தனையோ மாற்றங்கள்
மாற்றங்கள் ஒன்றே மாறவில்லை இன்னும்
நாமோ நம் தடம் மாறி விட்டோம்.

ஜே.பிரித்திகா
A/L (2020) Arts.

# இலக்கியமும் அக்கால மக்களின் வாழ்க்கை முறையும்

ச.வேணுமிதா
கலைப்பிரிவு 2020

மக்களுடைய வாழ்க்கையைப் பாடு பொருளாகக் கொண்டதே "இலக்கியம்" எனப் பொருள்படும். இவ் இலக்கியங்கள் குறித்த கால மக்களினுடைய வாழ்க்கையைக் காட்டுவ தனாலேயே இலக்கியத்தைக் "காலத்தின் கண்ணாடி" எனப் பெயர் சூட்டிக்கொள்வர். அந்த வகையில் மக்களின் வாழ்க்கையைக் காட்டும் வகையிலான இலக்கியங்கள் ஈழத்திலும், தமிழகத்திலும் தோன்றி இருக்க காணலாம். ஈழத்து இலக்கியங்களை, ஆரியச் சக்கர வரத்திகள் ஆட்சிக்கு முற்பட்ட காலம், ஆரியச சக்கரவர்த்திகள் காலம், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம், தற்காலம் போன்ற கால வரண்முறைக்கு உட்படுத்தி நோக்கலாம். இதனைப் போலவே தமிழ் நாட்டு இலக்கியங் களையும் சங்ககாலம், சங்கமருவியகாலம், பல்லவர்காலம், சோழர் காலம், நாயக்கர்காலம், ஆங்கிலேயர் காலம், தற்காலம் என நோக்குவர். இவ்வாறாக ஈழத்திலும், தமிழகத்திலும் தோன்றிய இலக்கியங்களையும் அவ் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறையை எவ்வாறு எடுத்தியம்புகின்றன என்பதனையும் பின்வரு மாறு நோக்கலாம்.

ஈழத்து தமிழ் இலக்கியமானது ஈழத்துப் பூதன் தேவனாரோடு ஆரம்பமாகிறது. எனக் கூறுவர். இவரை தொடர்ந்து இருண்மை போக்கு நிலவ அதன்பின்னர் கி.பி.1310 இல் தோன்றிய சரசோதி மாலையே ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் கிடைத்த முதலாவது தமிழ் இலக்கியமாகக் கொள்ளப்படுகிறது. இது ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலேயே தோற்றம் பெற்றது. சரசோதி மாலை சோதிடம் சார்பான நூலாக காணப்படுவதால் அக்கால மக்களுக்கு சோதிடம் சார்பான தகவல்கள் தேவைப்பட்டமையாலேயே இவ்விலக்கியம் தோன்றியது எனலாம். சோதிடம் சார்பாக சரசோதி மாலை மட்டுமல்லாது செகராசசேகர மாலை எனும் இலக்கியமும் தோன்றியுள்ளது. பரராசசேகரம், செகராசசேகரம் போன்ற மக்களுக்கு பயன்படக்கூடியதான வைத்தியம் சார்பான இலக்கியங்களும் எழுந்துள்ளன. பொதுமக்கள், மன்னர்கள், ஆலயங்கள் போன்றனவற்றின் வரலாறுகளைக் கூறுவ தனாக வையாபாடல், கைலாயமாலை, கோணேசர் கல்வெட்டு போன்ற இலக்கியங்க ளும் எழுந்துள்ளன.

போர்த்துக்கேயர் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயம் சார்புடையவர்களாக காணப்பட்டமையால் வேறு சமய இலக்கியங்கள் முக்கியத்துவம் வழங்காது ஞானப்பள்ளு, அர்ச்சயாகப்பர் அம்மானை, ஞானானந்த புராணம் போன்ற கிறிஸ்தவ இலக்கியங் களையே ஆக்கினர். இதிலிருந்து போர்த்துக் கேயர் காலத்தில் வாழ்ந்த மக்கள் கிறிஸ்தவ சமயத்தை சேரவேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது வெளிப்படுகிறது. இதற்கு எடுத்துக் காட்டாக அர்ச்சயாகப்பர் அம்மானையை ஆக்கியவரான பேதுறு புலவர் சைவ சமயத்தில் இருந்து கிறிஸ்தவ சமயம் சார்ந்திருக்கிறார் எனக் கூறப்படுவதை எடுத்துக் கொள்ளலாம். ஒல்லாந்தர் கால இலக்கியங் களும் மக்கள் வாழ்க்கை முறை யினை கூறுவனவாக அமையப் பெற்றுள்ளன. அந்தவகையில் விரதங்களுக்குத் தடை ஏற்படுத்தப்பட்ட பின்னணியில் விரதங்களின் சிறப்புக்களை கூறி மக்களிடத்தே சமயத்தை வளர்ப்பதற்காக சிவராத்திரிபுராணம், ஏகாதசி புராணம் முதலான விரத மகிமை சார்புடைய இலக்கியங்கள் எழுந்தன.

தமிழக இலக்கியங்களிலே சங்க காலத் தில் நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு போன்ற அகத்

திணை சார்பான இலக்கியங்கள் எழுந்தன. இவை அக்கால மக்களின் காதல் முறைகள் பற்றி விளக்கின. பயிற்றுப் பத்து, புறநானூறு போன்ற புறத்திணை சார்பான இலக்கியங்கள் எழுந்தன இவை அக்கால மக்களின் வீர ஒழுக்கம் தொடர்பானவையாகக் காணப்பட்டன. புறத்திணை சார்பான இலக்கியங்களுள் ஒன்றான திருமுருகாற்றுப்படை அருளை நாடி முருகனிடத்து பக்தனை வழிப்படுத்துவதாக காணப்படுகிறது. இதிலிருந்து சங்ககால மக்கள் முருகப் பெருமானை வழிபட்டமையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

சங்கமருவிய காலத்தில் மன்னராட்சி பலவீனமடைய வடக்கிலிருந்து வந்த களப்பிரர் ஆட்சியைத் தமதாக்கிக் கொண்டனர். இதனையடுத்து வேற்று அரசாட்சியில் மக்கள் வாழ வழிதெரியாது இருண்மையில் மூழ்கினர். இந்த சூழ்நிலையில் இருந்து மக்களை விடுவிப்பதற்காகவே சங்கமருவிய காலத்தில் மக்களுக்காகவே அறநூல்கள் ஆக்கப்பட்டன. இதிலிருந்து இலக்கியத்துக்கும் மக்களின் வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்பை விளங்கிக் கொள்ளமுடிகிறது. இவ்வாறு எழுந்த அறநூல்களுள் திருக்குறள், திரிகடுகம், நாலடியார் நான்மணிக்கடிகை முதலான சிலவற்றை உதாரணம் காட்டிக் கொள்ளலாம்.

பல்லவர் காலத்தில் மன்னர்கள் சைவ, வைணவ சமயங்களை விட்டு சமண, பௌத்த சமயங்களை தழுவியதால் மக்களும் சமண, பௌத்த. சமயங்களை தழுவினர். இதனால் மக்களை மீண்டும் உரிய சமயங்களை தழுவச் செய்து அவர்களை நன்நெறிப்படுத்துவதற்காக நாயன்மார் நால்வர் திருமுறைகளையும் திருமூலர் திருமந்திரத்தையும் சேரமான் பெருமாள் நாயனார் பொன்வண்ணத்தந்தாதி, திருக்கைலாய ஞான உலா போன்றவற்றையும் ஆக்கினர். திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணழ்வார், திருமங்கை யாழ்வார், ஆண்டாள், இலசேகர ஆழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் என்போர் வைணவப் பாசுரங்களையும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே நாயன்மார்கள், ஆழ்வார்கள் என்போர் மக்களை நல்வழிப் படுத்த இலக்கியங்களை ஆக்கி இருப்பதானது இலக்கியத்திற்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பினையே காட்டுகிறது.

சீவகசிந்தாமணி, வளையாபதி, உதயணகுமார காவியம், பெரியபுராணம், கந்தபுராணம், கம்பராமாயணம் போன்ற காவியங்கள் சோழர் காலத்திலே எழுந்தன. இதிலே கம்பராமாயணத்தில் இராமன், சீதை, தசரதன், கோசலை, இலக்குமணன், பரதன் போன்ற பல நற்குணமுடைய பாத்திரர்கள் காணப்படுவதால் இது மக்களினுடைய நடைமுறை வாழ்க்கைக்கு பெரிதும் உதவியாக இருப்பது நோக்கற்பாலது.

நாயக்கர் காலத்திலே முக்கூற்பள்ளு, திருக்குள்ளால குறவஞ்சி, இராமநாட கீர்த்தனைகள், நொண்டி நாடகம், சித்தர் பாடல்கள் போன்ற பொது மக்கள் சார்பான இலக்கியங்கள் தோன்றின. இவை பாமர மக்களைக் காவியத் தலைவனாகக் கொண்டு எழுந்துள்ளன. இவ் பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள் பாமர மக்கள் எளிமையாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் எளிமைத் தன்மையாகவும் பிரதேச வழக்கு மொழியாக வும் அமைந்துள்ளன. இவ்வாறு நாயக்கர் மக்களுக்காக எழுதப்பட்ட இலக்கியங்களில் இருந்து மக்கள் இலக்கியங்களில் எவ்வாறு முதன்மைப்படுத்தப்பட்டனர் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட விடயங்களில் இருந்த ஈழத்திலும் தமிழகத்திலும் காணப்பட்ட இலக்கியங்களும் அக்கால மக்களின் வாழ்க்கை முறைக்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு அமைந்திருந்தன என்பது தெளிவாகிறது. எனவே நம் நாட்டு மற்றும் பிறநாட்டு இலக்கியங் களையும் கற்று அதனூடாக அறிவையும் நல்ல சிந்தனையையும் வளர்ப்போம்.

# Let's Plant Trees and Protect our Environment

**T.Sinthjan**
**Gr.9D**

Enviromental pollution is a serious problem that threatens the world now. Enviromental scientists are working around the clock trying to find ways and means of saving the environment from deteriorating further to dangerous levels. Reports about international conferences and meetion of experts on environmental protection make people more concerned about it.

Global warming has become a threat to all mankind. It is now one of the prime concern of our Civilized world. People of the world are not aware that they are the chief contributors in the rapid increase of tempetature in the environment. We ought to be aware of the cause and effect of global warming the ever increasing population of the world. Houses employment, transport, food schools, land elc have made it necessary for massive development projects in every area. This inturn has led to clearance of large expansion of land for these projects. Deforestation has led to many serous problems. Industrial wastes and release of harmful gases and smoke into the atmosphere have caused environmental pollution worse.

The world is already experiencing them in the spate of frequent natural disasters like, Cyclones, floods, earth quakes, drought and global warming. Trees and other plants help in reducing heat in out surrounding. Trees are important for building houses and making furniture. Plastic wares are not an alternative for them. Plastic ware can not be replaced things made of wood.

Tress help remove harmful chemicals form the soil and reduce the Green house gases as it absorbs carbon dioxide and gives Oxygen. The trees hold large quantities of water during rainy days to prevent floods and soil erosion. In addition trees determine the much needed seasonal rainfall for cultivation.

Trees are the natural habitat of birds, animals and other specias the world will be a dry Place without the trees and other plant lives. The animals and the plants are the valuable gifts of nature. It is left to us to make the best use of these natural resourses in a sustainable way for the suriaval and prosperity of the future generation.

Trees are also a reliable source of food wood and paper products. They are renewable, biodegradable and recyclable. People have the responsibility of large scale reforestation.

We must plant trees instead of cutting down them because trees are so essential to life. It is the responsibility of ever one to contribute to the scheme of planting new trees and save the world from destruction by protecting the environment.

# Environment Pollution

**T.Githusha**
**Gr 9D**


One environment is very important to all of us to live in. Therefore, our environment should be protected. Now a days, environment pollution is a big problem in the world.

we must not only protect the every year global warming is increased by one degree Celsius averagely. If it continues, many contries in the world, would be destroyed by the ocean water.

A huge hole was made in ozone, as our companies released $Co_2$, $So_2$ and other gases. If the ozone hole is enlarged Ultra and violer rays must reach the earth directly. As the ultra violet rays reach the earth directly cancer disease will be created and the water bodies will lose their water. In the polar regions, if the snows melt quickly, polar bears will be destroyed very quickly.

Eventhough our goventment has taken necessary actions to reduce the environment pollution, The people don't have much awareness about it. We should get rain saved water every year. The developed countries put their garbage in the Indian and pacific Oceans. As they put their garbage in the Oceans, most of the sea dogs and other species of fish. They also destroy the coral reefs and water plants. The world companies which don't have any waste management systems, put their wastes in the oceans. Therefore, Oceans water and other animals are destroyed by them.

So, we must take necessary actions to cure our environment for future generations.



# கல்லூரி நிகழ்வுகளில் சில...









## அதிபர் இலண்டனில்
## பழைய மாணவர்களுடனான சந்திப்பு...












# சூழல் மாசடைதல்

சு.திரித்திகா
தரம் 9 D

நாம் வாழும் இப்பிரபஞ்சமானது ஞாயிற்றுத் தொகுதியில் அமைந்துள்ள மிகவும் அருமையான கோள்களில் ஒன்றாகும். அந்தக் கோள்களில் நாம் வாழ்வது புவியில் ஆகும். சூழல் என்பது விலங்குகள், தாவரங்கள் மற்றும் மனிதர்கள் என்பனவற்றை உள்ளடக்கியது ஆகும். இச்சூழல் தொகுதியில் சுத்தமான வளி, சுத்தமான நீர், சுத்தமான இடம், தூய்மையான உணவுகள் என்பன கிடைக்கப்பெறுகின்றன. இதனை அறியா மக்கள் இச்சூழற்தொகுதியை மாசுபடுத்துகின்றனர்.

சூழல் மாசடைவுக்கு "தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை கொண்டு தூய்மையான ஆற்றில் இடுகின்றமையில் அந்நீரைப் பருகும் மக்கள், குழந்தைகளிற்கு பல்வேறுபட்ட நோய்கள் ஏற்படுகின்றன. பொலித்தீன் மற்றும் அவற்றை உள்ளடக்கிய குப்பை கூழங்களை தெரு ஓரங்களில் கொட்டி எரிப்பதன் மூலம் தீமையான வாயுக்கள் நாம் சுவாசிக்கும் ஒட்சிசன் வாயுவில் கலக்கின்றது. இதனால் சுவாசம் தொடர்பான புற்று நோய்கள், சுவாசிப்பது தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொதுநீர் வழங்கும் இடத்தின் அருகே விலங்குகளின் மலம் மற்றும் சிறுநீர் கழிப்பதனால் அவற்றிலுள்ள நுண்ணாங்கிகள் நீரினுடன் கலந்து தூய்மையற்ற நீராக மாற்றமடைகின்றது." இவை எல்லாம் மாசடையக் காரணமாகிறது.

சூழல் மாசடைவதைக் குறைப்பதற்கு, "தொழிற்சாலைக் கழிவுகளை சேகரித்து பின் அதனை மண்ணினுள் கிடங்கு கிண்டி இட்டு புதைப்பதால் மக்களிற்கு மிகவும் நன்மை கிடைக்கும். அவர்களிற்கு ஏற்படும் நோய்களும் குறைவடையும். பொலித்தீன் மற்றும் அதனை உள்ளடக்கிய வேறு சில கழிவுகளை சேகரித்து மூட்டைகட்டி ஓரிடத்தில் வைத்திருந்து விட்டு குப்பைகள் சேகரிக்கும் வண்டி தெருவின் ஓரங்களில் வந்து நிற்கின்றபொழுது அந்த மூட்டையை எடுத்துச் சென்று அவர்களிடம் ஒப்படைக்கலாம். இவ்வாறு தொடர்ந்து செயற்படுவதன் மூலம் சிறிய சிறிய நோய்கள் குறைக்கப்பட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். இதேபோன்று பொதுநீர் வழங்கும் இடத்தினைச் சுற்றி வேலி அடைத்து அந்த இடத்தினை சுத்தம் செய்யும்போது புற்களை வெட்டி பயன்தரக்கூடிய மரங்களை நாட்டுவதன் மூலம் நாம் நன்மை பெற்றுக்கொள்ளலாம்."

சூழலினால் எமக்கு, "நாம் சுவாசிப்பதற்காக தூயவளி எமக்கு கிடைக்கின்றது. இந்த வளி மூலம் தான் நாம் இன்று இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சூழற்தொகுதியில் நாம் வாழத் தேவையான முக்கியமான ஒன்றாக உணவு பங்காற்றுகின்றது. ஏனெனில், சூழல் மாசடையாது இருக்கின்றமையால் எமக்கு நல்ல நல்ல உணவுகள் கிடைக்கின்றன. இவ்வாறு மகிழ்வுடன் வாழ சூழல் எமக்கு பல உதவிகள் செய்கின்றது. அந்நேரத்தில் தான் மழை பெறுகின்றோம். சூழலில் மரங்கள் இருந்தால் தூய நீரும் நாம் வாழிடமாக தேர்ந்தெடுக்க நிழல் தரும் இடமும் எமக்குக் கிடைக்கும். இவ்வாறான சூழல் எமக்கு கிடைத்தமைக்கு நாம் இறைவனை பிரார்த்தனை செய்யவேண்டும்." இவ்வாறான நன்மைகள் எமக்கு சூழல் பெற்றுத்தருகின்றது.

எனவே, இவ்வாறான செயல்களை நாம் மக்களிற்கு எடுத்துரைத்தால் சூழல் அவர்களிற்கு கிடைத்த கொடை என புரிந்து கொள்ளுவார்கள். பொதுக் கூட்டங்களில் எல்லாம் சூழலினால் எமக்கு கிடைக்கும்

நன்மை பற்றிக் கூறுவதனால் அனைவருக்கும் இவ்வாறான செயல்களும் அவர்களிற்கு கிடைத்த நன்மைகள் பற்றி அறிய முடியும். சூழற் தொகுதியானது மக்களிற்கு ஒரு விழிப்பு ணர்வை ஏற்படுத்த வேண்டும். இதை மக்கள் அனைவரும் தெரிந்து கொண்டால்தான் அவர்களால் சூழலை மாசுபடுத்தாமல் சூழலை பாதுகாக்க முடியும். எனவே, சிறு வயதிலுள்ள வர் முதல் பெரியவர் வரை சூழலை பாதுகாத்து நன்மையப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## யூனியன் தாயின் மடியில்...

தெல்லியூரில் சொலுவீற்றிருந்து
அறிவுச்சுடர் பரப்பிடும்
அன்னையவள் பாதம்
இன்றல்ல என்றென்றும்
பணிவேன் புகழ் சேர்ப்பேன்

மீண்டும் ஒருமுறை வாழ்ந்துவிட
துடிக்கிது மனம் மாணவனாய்
இன்றெலாம் தனிமையை உணர்கிறேன்
முன்பெலாம் பாடசாலை நாட்களில்
தனிமையே தெரியாது
அந்தநாட்களை மீட்டுப் பார்க்க
துடிக்குது என் நெஞ்சம்

எந்தன் கல்லூரியே உனக்கு
என் ஆயுள் முழுவதும் நன்றி
எவ்வளவு இனிமையான காலம்
இந்தக்காலங்கள் மாறலாம்
நேரங்கள் கழியலாம் என் இனிய
பாடசாலை நாட்கள் என்றுமே அழியாது

பள்ளியின் முதல்நாள்
எனது இறுதிநாள் வரை மறையாது
பள்ளியின் முதல் நட்பு
என்றுமே அழியாது
வாழ்வில் இன்பம் என்பது
பள்ளியில் மட்டுமே....
என்மனதில் சித்தரிக்கப்பட்ட
அழியா ஓவியம் - யூனியன் கல்லூரி

ப.கபிலன்
கணிதபிரிவு (2020)

# பாடம் புகட்டும் பழமொழிகள்

ச.துவசிகா
தரம் - 10^A

பழமொழிகள் நீதியைக் கூறி வாழ்க்கையை நேர்மைப்படுத்தும் கருத்துக் களைக் கொண்டவை. இவற்றைப் பயன்படுத் தாதவர்கள் எவருமிலர் எனலாம். நமது நாளாந்த வாழ்க்கையில் பழமொழிகளைப் பயன்படுத்து வதை அறிவோம். எளிமையான வாசகங் களைக் கொண்ட பழமொழிகள் நமக்குப் பல பாடங்களைக் கற்றுத்தருகின்றன. நம்முன் னோர் நமக்களித்த அருஞ்செல்வமாக அவை மிளிர்கின்றன. இவற்றைப் பேணிப் பாதுகாப்ப தும் அவற்றின் கருத்துணர்ந்து வாழ்வதும் நமது தலையாய கடமையாகும். பழையமொழி பழமொழி, பழகிப்போன மொழி பழமொழி. பழக்கத்திற்கு வந்துவிட்ட மொழி பழமொழி. பழமையாகச் சொல்லப்பட்டதனாலும் காலத்தை வென்று என்றைக்கும் ஏற்கக் கூடியதாக உள்ளது பழமொழி என்றெல்லாம் இதற்குப் பொருள் கூறுவர்.

உலகில் பல்வெறு மொழிகள், இனங்கள், மதங்கள், கலாசாரங்கள் உள்ளன. ஒவ்வொரு மொழியிலும் மக்களுக்கு நீதி போதிக்கும். பழமொழிகள் உள்ளன. ஆயினும் அவையனைத்தும் புகட்டும் கருத்துக்கள் பெரும்பாலும் ஒரே தன்மையுடையவையாகவே விளங்குகின்றன. நாடும் மொழியும் வேறுபட்டா லும் பழமொழி கற்பிக்கும் பாடம் மட்டும் ஒன்றாகத்தானிருக்கும் என்பர். பழமொழி என்பது தோற்றத்தால் பழையது. ஆனாலும் பயன்கருதிப் பார்க்கும்போது புதியதுதான். சிந்திக்கத் தூண்டும் வகையில் பயன்கருதிப் பார்க்கும்போது புதியதுதான். சிந்திக்கத் தூண்டும் வகையில் குறுகிய வாக்கிய அமைப் பில் ஆழமான விடயங்களைப் பழமொழிகள் சொல்லுகின்றன. நமது முன்னோர் அனுபவ சாலிகள். அவர்கள் தாங்கள் கண்ட யதார்த்த பூர்வமான உண்மைகளை நறுக்குத் தெறித்தாற்போல் வெளியிடும் போது அழகான சிறிய வாக்கிய அமைப்பில் அவை அமைந்து விடுகின்றன.

நமது அன்னைத் தமிழில் ஆயிரமா யிரம் பழமொழிகள் உள்ளன. அவை மக்களால் நாளாந்தம் பயன்படுத்துவதைக் கண்ணாரக் காண்கின்றோம். படிப்பறிவற்றவன் கூடத் தான் பேசுமபோது நீதி, நேர்மை, நியாயத்தை வலியுறுத்தும் பழமொழிகளைப் பயன்படுத்து வதைக் காணலாம். நமது வாழ்வோடும் பண்பாட்டோடும் பழமொழிகள் எப்படி இணைந்து கலந்துள்ளன என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

பழமொழிகள் வாழ்க்கை உண்மை களைக் காலம் காலமாக மக்களுக்கு உணர்த்தி வருகின்றன. பழமொழிகள் அனைத்தும் இலக்கண சுத்தமாக இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதில் எண்ணங்களே பிரதானமாக அமைகின்றன. மொழியில் சிறந்த பாண்டித்தியம் இல்லாதவனும் அனுபவ வாயிலாக அருமையான உண்மைகளைச் சொல்லிவிட முடியும். எனவே கொச்சையான மொழியில் கூட அனுபவபூர்வமான, அபூர்வ உண்மைகளைக் கூறும்போது அவைகூட பழமொழிகளாகி விடலாம்.

பழமொழிகளை எவரும் திட்டமிட்டுப் படைப்பதில்லை. நாடோடிப் பாடல்கள் மாதிரி இவையும் உணர்ச்சி வெளிப்பாடாக மக்கள் நாவினின்றும் தோன்றியவையாகும். பழமொழி களுக்கு எவரும் இலக்கணம் வகுத்து வரை யறையிட்டுச் சொல்லமுடியாது. அவற்றில்

பொதிந்துள்ள கருத்துக்களும் சொல்லப்பட்டுள்ள முறையுமே அவற்றிற்கான இலக்கணமாகும். பழமொழிகளின் பயன்பாடு அளவிடற்கரியது. அவை நமது வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படுவன எனலாம். பழமொழிகளை வைத்து வாழ்க்கைக்குத் தேவையான எத்தனையோ விடயங்களை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

வேறு எவற்றிலும் பார்க்கப் பழமொழி களில் அனுபவம் பெரிதும் பேசப்படுகிறது. இதனால் அவை வாழ்க்கைக்கு அவசியம் தேவைப்படுவன என்று துணிந்து கூறலாம்.

எந்தப் பழமொழியையும் மேலெழுந்த வாரியாகப் பார்ப்போமானால் ஏதோ ஓர் அர்த்தம் தோன்றும். அந்த அர்த்தம் மட்டுமே அப்பழமொழியின் முழுமையான கருத்தாகி விட முடியாது. மேன்மேலும் சிந்திக்கச் சிந்திக்கப் பல்வேறு உண்மைகள் அதிலிருந்து கிளை விட்டுச் செல்வதைக் காணமுடியும்.

சுருங்கக்கூறின் பழமொழி என்பது ஒரு விதை போன்றது. அதை நம் மனிதில் ஆழமாக ஊன்றிச் சிந்தனை என்னும் நீருற்றி வளர்ப்போமாயின் அது வாழ்க்கைக்குகந்த பயன்தரும் பல மலர்களையும் கனிகளையும் நல்கும். அத்தகு பெருமைமிக்க பழமொழி களைப் பேணி பாதுகாப்பதும் படித்தின்புறுவதும் நமது தலையாய கடமையாகும். எடுத்துக் காட்டாக பழமொழிகளையும் அவற்றின் கருத்துக்களையும் நோக்குவோம்.

"பழுத்த ஓலையைப் பார்த்துக் குருத்தோலை சிரித்ததாம்" என்ற பழமொழி மிகப்பெரிய வாழ்க்கை உண்மையை நமக்குப் புலப்படுத்துகிறது. வாழ்க்கை உண்மைத் தன்மையை சிந்திக்கத் தூண்டுகிறது. "அடி உதவுகிற மாதிரி அண்ணன் தம்பி உதவ மாட்டார்" என்பதும் ஒரு பழமொழி. இந்தப் பழமொழிக்கு ஒருவரை அடித்து உதைத்தால் மிகுந்த பயனடையலாம். மற்றப்படி ஒருவனின் அண்ணன் தம்பிகளின் சிபாரிசு கூட அவனுக்குப் பெரிய பயன்தந்துவிடாது. வன் முறையால் காரியம் சாதிக்கமுடியும் என்ற கருத்து நடைமுறையில் இருந்து வருகிறது. இது தவறான கருத்தாக இக்கால அறிஞர்கள் கருதுகிறார்கள்.

உண்மையில் குகன் ஆழ்ந்த கருத்தினை ஒரு கணம் நாம் சந்திக்க வேண்டும். இறைவனின் திருவடித்துணை இருந்தால், அதாவது திருவருள் இருந்ததால் மாபெரும் பயன்களைப் பெறலாம். மற்றப்படி மனிதர்கள் அவர்கள் அண்ணன் தம்பியாகவே இருந்தாலும் அவர்கள் எத்தகைய பேருதவி புரிந்தாலும் இறைவனின் திருவடித் துணையால் பெறும் பயனுக்கு நிகராகாது. இதுவே இப்பழமொழி கற்றுத்தரும் பாடமாகும்.

இவைபோன்ற ஆயிரமாயிரம் பழ மொழிகள் நமது தமிழ் மொழியில் உள்ளன. ஆவற்றை மேலெழுந்தவாரியாக நோக்காமல் ஆழ்ந்து சிந்திக்காமல் அரிய தத்துவங்கள் பலவற்றையும் நாம் அறிந்திடமுடியும். நமது முன்னோர்கள் யதார்த்த பூர்வமாக அனுபவத் திற் கண்ட அரிய உண்மைகளைப் பழமொழி களாக நமக்குத் தந்துள்ளனர். அவற்றைப் பொருளுணர்ந்து நாம் கற்றிட்டால் நம் வாழ்வும் சிறக்கும். நன்மைகளும் பெருகும்.

"பாடம் புகட்டிடும் பழமொழிகள் கற்றிடுவோம்"

# கூட்டுறவு பெரியார் வி.வீரசிங்கம்

ஜெ.ஜெகனி
தரம் – $10^A$

உலகில் வாழ்ந்த மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் முரண்பட்ட வாழ்க்கை நெறிகளையும், குணாம்சங்களையும் கடைப் பிடித்தவர்களாகவே வாழ்ந்தனர். கோடிக் கணக்கான மக்கள் தமது சுயநலங்களையும், குடும்பநலன்களையும் பேணிக்காக்கும் நோக்கத்துடன் வாழ்ந்து மறைந்தனர். இவர்கள் தமது எல்லை கடந்த பேராற்றல்களையும், பேரறிவையும் மனித சமுதாயத்தின் மேம் பாட்டுக்குப் பயன்படுத்த தவறியமையால் உலக மக்கள் அனைவரும் இவர்களை நினைவுகூரத் தவறிவிட்டனர். இவர்களை இவர்களின் குடும்ப உறுப்பினர்களின் உறவினர்களும் மட்டுமே இன்று நினைவு கூர்ந்து போற்றிப் புகழ்கின்ற னர். இதுவே இன்று உலகிலுள்ள யதார்த்த மான நியதி நிலையாக விளங்குகின்றது. இந்த உலக நியதிக்கு முற்றிலும் விதிவிலக்காக சில பேரறிஞர்களும், பெரியார்களும் மட்டுமே தனது முதிர்ந்த அறிவையும், எல்லை கடந்த பேராற்ற லையும் மனித சமுதாய மேம்பாட்டுக்காகப் பூரணமாக அர்ப்பணித்து பல மட்டற்ற தியாகங்களைப் புரிந்து மனித சமுதாயத்தை வளம்படுத்தியுள்ளார்.

ஆபிரகாம்லிங்கன், மகாத்மாகாந்தி, றொபேட் ஓவன், சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர், அன்னை திரேசா, அம்மை யார் போன்ற பல பேரறிஞர்கள் மட்டுமே எல்லை கடந்த தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களை யும் புரிந்து மனித சமுதாயத்தின் ஈடேற்றத்திற் காக அரும்பெரும் பணிகளை நல்கினர். இப்பேரறிஞர் களை உலக மக்கள் இன்று தந்தையென்றும், அன்னையென்றும், உலக மூலகர்த்தா என்றும் உலக முன்னோடி களென்றும் வாயாரப் புகழ்ந்து ஆண்டுதோறும் அவர்களின் திருநாமங்களையும் அருள்பாரிய சேவைகளையும் மறக்காமல் நினைவு கூர்ந்து வருகின்றனர்.

உலக மக்களின் ஈடேற்றத்திற்காக அயராது உழைத்த மாபெரும் தியாகிகள் வகுத்துள்ள தியாக வழியை அடியொற்றித் தனது சுகபோகங்களையும், குடும்ப நலன்களையும் முற்றாக மறந்து தனது இறுதி மூச்சுவரை பிறர் நலனுக்காகவும் கூட்டுறவு நலனுக்காகவும் தன்னை முழுமையாகவும் அர்ப்பணித்து எல்லை கடந்து தியாகங்களையும் புரிந்து மக்களின் இதயக் கமலத்தில் களங்கமற்ற நிலையான இடத்தை பெற்றுக் கொண்ட ஒருவரே கூட்டுறவு தந்தை பெரியார் அமரர் வி.வீரசிங்கம் ஆவார். பெரியாரின் பூதவுடல் மறைந்தாலும் அவரின் புகழுடல் பதிந்து சாகாவரம் பெற்றுள்ளது. கூட்டுறவுத் தந்தை பெரியார் வி.வீரசிங்கம் அவர்கள் வீரமும் தியாகமும் நிறைந்த யாழ் மண்ணின் தவப்புதல்வராகவும் மாபெரும் கூட்டுறவு பொக்கிசமாகவும் விளங்குகின்றார். பெரியார் கல்வி வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் கூட்டுறவு வளர்ச்சிக்கும் நல்கிய அரும்பெரும் பணிகளை வார்த்தையால் வர்ணிக்கமுடியாது. நாமனைவரும் பெரியாரின் உயர்ந்த கூட்டுறவு கொள்கைக்கும், மனித நேயக் கொள்கை களுக்கும் பெருமதிப்பெடுத்து, அவற்றை எமது புனிதமான தியான மண்ணில் கொழுந்து விட்டுப் பிரகாசிக்கச் செய்தும், அவரின் உயர்ந்த தியாகங்களிற்கும் அர்ப்பணிப்புகளிற்கும், களங்கமேற்படாமல் பாதுகாப்பதே பெரியார்க்கு நாம் செய்யக்கூடிய மாபெரும் நன்றிக் கடனாகும். இவற்றை நாமனைவரும் வெற்றிகரமாகவும் பூரணமாகவும் நிறைவு செய்ய அயராது உழைப்போமாக.

பெரியார் வி.வீரசிங்கம் ஐயாவிற்கு நன்றி தெரிவிக்க கூட்டுறவாளர்களும், கல்வி

மான்களும் எல்லை கடந்த பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இலங்கை கூட்டுறவாளர்கள் இன, மத, பிரதேச வேறுபாடுகளை முற்றாக மறந்து கூட்டுறவு விழுமியங்களுக்குப் பெருமதிப்பு கொடுத்து அகில இலங்கை கூட்டுறவு சம்மேளனத் தில் முதலாவது தலைவராகவும், வடபகுதி ஐக்கிய மேற்பார் சைவசபையின் முதலாவது தலைவராகப் பெரியாரைத் தெரிவு செய்து 1964 ஆம் ஆண்டு வரை சுமார் 26 வருடங்களாக பெரியார் சிவபதமடைந்தவரை அதன் ஆயுட் காலத்தலைவராக ஏகமனதாக ஏற்றுக் கொண்டும், பெரியாருக்கு "இலங்கை கூட்டுற வியக்கத்தின் தந்தை" என்ற மாபெரும் கிரீடத்தை சூட்டியும், பெரியாருக்கு நாட்டில் பல இடங்களில் சிலைகளை நிறுவியும், கூட்டுறவு நிறுவனங்களின் அலுவலகங்களிலும், பாட சாலைகளின் அலுவலகங்களிலும் அன்னாரின் நிழல் படங்களைத் தொங்க விட்டும், யாழ்ப்பாணத்தில் பெரியாரின் நினைவுச் சின்னமாக பிரமாண்டமான வீரசிங்கம் மண்டபத்தை கட்டியெழுப்பியும், மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் "நிர்வாகச் செயலகம்" என்ற பெரிய மண்டபத்தை கட்டி அதற்கு "வீரசிங்கம் ஞாபகார்த்த மண்டபம்" என்ற பெயர் சூட்டியும், வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் அன்னாரை 1952 ஆம் ஆண்டு தமது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்தும் இலங்கை அரசாங்கம் இலங்கை கூட்டுறவு இயக்கத்தினை பற்றி ஆய்வு செய்ய தேசிய ரீதியாக 1953 ஆம் ஆண்டு 1954ம் ஆண்டு நியமித்த இரு விசாரணைக் குழுக்களின் தலைவராக நியமித்தும், கூட்டுறவு தொடர்பாக பத்திரிகை களையும், சஞ்சிகைகளையும், நூல்களையும் "பெரியாரின் சமர்ப்பணமாக" வெளியிட்டும் ஆண்டுதோறும் பெரியாரின் நினைவுத் தினத்தை சிறப்பாகக் கொண்டாடியும், பெரியாரின் தன்னலமற்ற உயர்ந்த மனித நேயச் சேவை களை நினைவு கூர்ந்து வருகின்றனர். இன்று நாம் பெரியாரின் தியாகம் நிறைந்த வாழ்க்கை வரலாற்றையும், அவரின் புனிதமான சேவைகளையும் ஒரு சிறு நூலாக வடிவமைத்து வெளியிட்டும், பெரியாரின் ஞாபகமாக ஒரு முத்திரையை வெளியிட்டும் அவரின் சேவைகளை நினைவு கூர்கின்றோம். கூட்டுறவு உலகமும், கல்வி உலகமும் உள்ளவரை பெரியார் வி. வீரசிங்கமும் நாடும் சீரும், சிறப்புடனும் வாழும், நாமனைவரும் என்றும் பெரியார் வி.வீரசிங்கம் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம்.

கூட்டுறவு சேவைகளையும், சமூக தேவைகளையும் தனது ஆயுட்காலம் வரை தனது பெரும் பணியாகக் கொண்டு செயற்பட்ட பெரியாரின் கொள்கைகளையும், சேவைகளை யும் நாமனைவரும் நன்கு அறிந்து கொள்வதற் காகவும், அனைவரையும் பெரியாரின் தியாகம் நிறைந்த "கூட்டுறவுத் தியாக வழியில்" நெறிப்படுத்துவதற்காகவும் அவரின் தியாக வரலாற்றை ஒரு சிறு நூல் வடிவில் வடிவமைத்து, வெளியிட முயல்வோம் இந்நூலை வடிவமைத்து வெளியிடுவதற்கு வேறுபல விசேடமான முக்கிய காரணங்கள் உண்டு. அவற்றின் சிலவற்றுக்கள் பின்வரு மாறு கடந்த இரண்டு நூற்றாண்டுகால உலக வரலாற்றை நாம் சுருக்கமாக உற்று நோக்கும் போது, உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் இரத்தம் சிந்தும் பயங்கரவாதப் புரட்சிகளும், கலகங்களும் உள்நாட்டு யுத்தங்களும், உலக மகாயுத்தங்களும், முதலாலித்துவ வன்செயல்க ளும் சமூக விரோத அச்சுறுத்தல்களும் ஏற்பட்டு கோடிக்கணக்கான மக்கள் இரத்தக் கண்ணீரை வடித்து நாடற்றவராகி அதிகளவிலான பசியாலும், பிணியாலும் தாங்கமுடியாத தொற்று நோய்க ளாலும் வாடி, வதங்கி உலகெங்கும் அலைந்து திரிந்த பயங்கரவாத கால கட்டங்களிலெல்லாம் கூட்டுறவு கொள்கைகளே அவர்களுக்கு கைலாகு கொடுத்து, அன்புடன் அவர்களை வரவேற்றுப், புனிதமான, வளமான, மறுவாழ்வையும், பெற்றுக்கொடுத்து

பொருளாதார, சமூக, கல்வி, கலாச்சார மறுமலர்ச்சியையும் பெற்றுக்கொடுத்தது ஆதலால் பெரியார் வி.வீரசிங்கம் வடிவமைத்து கொடுத்துள்ள கூட்டுறவு விழுமியங்களும், கூட்டுறவு இயக்கமும், சின்னாபின்னமாக்கப் பட்டு இருக்கும் எமது நாட்டை பூரணமான நாடாக வடிவமைக்க பெரிதும் உதவிபுரியும் ஆதலால் தான் நாம் பெரியாரின் கொள்கைளை அனைவருக்கும் பரப்புவதற்காக இச்சிறு நூலினை வெளியிடுகின் றோம். சமூகத்தையும் மக்களையும் பாதுகாப் பதற்கு பெரியார் போதித்த தெய்வ பக்தி, ஒழுக்கம், கல்வி, சமூகத்தொண்டு, கூட்டுறவுத் தொண்டு என்ற ஐந்து காவல் தெய்வங்களும் எமக்கு உதவி புரிய முடியுமென்பதால் அவரின் கொள்கைகளை சிறுநூல் வடிவில் வெளியட முயன்றோம்.

### பெரியாரின் பிறப்பும் கல்வியும்

இந்துமா சமுத்திரத்தில் முத்தென திகழும் இலங்கைத் தீவின் வடபால் அமைந்தள்ள யாழ்ப்பாணத் திருநாட்டில் நீர், நிலவளத்துடன் சிறந்து விளங்கும் மானிப் பாயிலுள்ள நவாலியென்ற திருக்கிராமத்திலும் கல்வியும், அறிவிலும் நற்பணிகளிலும் சிறந்து விளங்கிய திரு.திருமதி விஸ்வலிங்கம் அன்னம்மா தம்பதியினருக்கு தவப்புதல்வராக 1892ம் ஆண்டு ஆடிமாதம் ஏழாம் திகதி பெரியார் வி.வீரசிங்கம் அவர்கள் அவதரித்தார். இவர் சிறு பராயத்திலிருந்தே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். தனது ஆரம்பக் கல்வியையும். இலண்டன் மற்றிக்குலேவின் வரையிலான கல்வியையும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்றார். இப்பாடசாலையில் கல்வி கற்ற காலங்களில் விளையாட்டுப் போட்டி களிலும், பேச்சுப் போட்டிகளிலும் சிறப்பாக பங்குபற்றி பரிசில்களை பெற்று அனைவரதும் பாராட்டுக் களையும், வாழ்த்துக்களையும் பலமுறை பெற்றுக்கொண்டார். இவற்றுடன் பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடைந்தமைக்காக பாடசாலை நிர்வாகத்தினதும், ஆசிரியர் களினதும் பரிசில் களையும், பாராட்டுக்களையும் பலமுறை பெற்றுக் கொண்டார். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மாணவர் மன்றத்தில் தலைவராகவும், மாணவத் தலைவராகவும் இவர் கடமை புரிந்து பாடசாலை வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக் கும், ஒழுக்கம் நிறைந்த மாணவர் வாழ்விற்காக வும் அரும்பெரும் முயற்சிகளினை மேற்கொண்ட னர். இவர் மாணவர் தலைவராகக் கடமை புரிந்த காலப்பகுதியில் ஆசிரியர் கூட்டங்கள் நடைபெறும் பொழுதும், ஆசிரியர்கள் விடுமுறையில் செல்லும் காலங்களில் கீழ்வகுப்பு மாணவர்களுக்குப் பாடவகுப்புக்களைச் சிறப்பாக நடத்தி அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். இவற்றுக்காக பெரியார் பாடசாலை நிர்வாகத்தினரதும், அதிபர், ஆசிரியர்களினதும் பாராட்டுக்களைப் பலமுறை பெற்றுக்கொண்டார். "வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்", "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்ற முதுமொழிகளுக்கு அமைய வாழ்ந்தார் பெரியார் தனது சிறுவயதிலேயே தொடக்கம் பாடசாலை வாழ்க்கையில் சிறப்புற்று விளங்கியமையும் பாடசாலையின் வாழ்க்கையில் சிறப்புற்று விளங்கியமையும், பாடசாலையில் கடைப்பிடித்த நற்பண்புகளும், அவரின் சிறந்த மாணவ வாழ்வும் அவர் பிற்காலத்தில் புரியப்போகும் கல்வி சாதனைகளுக்கும், சமூக சாதனை களுக்கும், கூட்டுறவு சாதனைகளுக்கும் அத்திவாரமாக அமைந்தன.

### பெரியாரின் கல்வி சாதனை

பெரியார் தனது பத்தொன்பதாவது வயதில் 1911ம் ஆண்டு இலண்டன் மற்றிக்கு லேஷன் பரீட்சையில் சிறப்பாக சித்தியடைந்து, அனைவரினதும் பாராட்டுக் களையும், வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டார். யாழ் மாவட்டத்திலிருந்து முதன் முதலாக லண்டன்

மற்றிக்குலேவின் பரீட்சையில் தமிழ்ப் பாஷையுடன் சிறப்பாக சித்தியடைந்த மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முதலாவது மாணவர் இவரென்பது இங்கு பெரு மகிழ்ச்சியுடன் குறிப்பிடப்படுகிறது. பெரியார் மற்றிக்குலேவின் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்ததும், பாடசாலை நிர்வாகம் அவரின் பாடசாலைப் பண்பும், ஒழுக்கமும் நிறைந்த வாழ்வையும், மற்றிக்குலேஷன் சித்தியடைவையும் அவதானித்து அவரை அவர் கல்வி கற்க மானிப்பாய் இந்துக் கல்லூரியின் உதவி ஆசிரியராக நியமித்து கௌரவப்படுத்தினர். 1911 ஆம் ஆண்டிலிருந்து பெரியாரின் ஆசிரியர் பணி வெற்றிகரமாக ஆரம்பித்தன. முதன்முதலாக உதவி ஆசிரியராக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நியமிக்கப்பட்டார். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் இவர்தான். பெரியவர் தனது ஆசிரியர் சேவைக் காலத்தில் ஆரம்ப பகுதியில் அரசாங்க ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்று "அரசினர் ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்" பெற்றுக்கொண்டார்.

# எமது யூனியன் கல்லூரி

நம் யாழ்ப்பாணத்திற்கு ஓர் பந்தமாய்
நம் தெல்லிப்பளைக்கு ஓர் சொந்தமாய்
ஆழ்கடலில் தோன்றிய ஓர் அதிசயமாய்
1816ல் ஆரம்பமானது ஓர் அதிசயமாய்
எத்தனை அதிபர்களின் கால்தடங்கள்
எத்தனை ஆசிரியர்களின் வியர்வைத் துளிகள்
இவை எல்லாம் மறக்குமா – நம் கல்லூரி
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்

பல்லாயிரக்கணக்கான மாணவர்களை
கற்பித்து நம் கல்லூரி இப்போது
இவர்களெல்லாம் பல துறைகளில் கலைஞர்களாக
நம் நாட்டில் ....

பல பட்டதாரிகளையும் பல அறிஞர்களையும்
கற்பித்த கல்லூரி காலங்கள் சென்றாலும்
அழியாது பல நெஞ்சங்களின் நினைவுகளில்
இன்று கூட...

எத்தனை காலமும் காத்திருக்கும் என்றும்
திறந்த வாசலுடன் இனிவரும் மாணவர்களையும்
ஏணியில் ஏற்றி சிறந்த வழிகாட்ட
எம் யூனியன் கல்லூரி

S. டிசாந்
வர்த்தகப் பிரிவு 2020

# நிரந்தர வேலை

கல்லூரி காலங்களில் படிப்பதுதான் கஷ்டம்
கஷ்டப்பட்டு படித்தால்தான் வேலை என்றது சமூகம்
வீட்டு கஷ்டத்தைப் பார்த்தால் படிப்பது ஒன்றும் கஷ்டமில்லை
வேலை வேண்டும் கஷ்டம் போக்க
கஷ்டம் போக்க கஷ்டப்பட்டேன்.
படித்து முடித்தாயிற்று பட்டங்கள் பெற்றாயிற்று
கஷ்டங்கங்களோ இன்னும் தீர்ந்த பாடில்லை
வேலையும் இன்னும் கிடைத்தபாடில்லை
விடாமுயற்சி வெற்றி தரும் என்று
விடாதமுயற்சியுடன் விக்கிரமாதித்தனாய் நானும்
ஏட்டு சுரக்காய் கறிக்கு உதவாது – அதுபோல்
ஏட்டு கல்வி தொழிலுக்கு உதவாது
அறிந்து கொண்டேன் என் பட்டறிவில் இன்று
வேலை என்ற அருங்கனியை
தேடி தேடி கால்களோ தேய்ந்து விட்டன.
விண்ணப்பப்படிவங்கள்
எழுதி எழுதி கைகள் ஓய்ந்து விட்டன
இவற்றை
நினைத்து நினைத்து மனமோ உருகி விட்டது
இனியும் முடியாது
கூச்சலிட்டது ஒரு குரல் உள்ளிருந்து
அதற்குமேலாய் ஒரு குரல்
முடியும் உன்னால் என்றபடி
ஒவ்வொரு நாட்களும் கழிந்தது என்பொழுதுகள்
தினசரி நாளிதழ்களுடன்
ஆ! அங்கே ஒரு விளம்பரம்
அரிய வேலை வாய்ப்பு
அதை கண்டதும் கண்களில் கண்ணீர் - இதுவரை
என் கண்கள் கண்ட கண்ணீரிலிருந்து
இது வேறுபட்டது - இது ஆனந்த கண்ணீர்
என் கண்களுக்கு புதியது....
விளம்பரத்தில் ஓடிய கண்கள்
திடுக்குற்று திரும்பின
விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டிய
E-mail Address என்றிருந்தது
வீட்டில் ஈ-தான் இருக்கிறது.

Mail Address இல்லையே
இதுவும் தோல்வியில்....
மறுநாள் முன்னொருநாள்.....
அனுப்பிய விண்ணப்பத்திற்கு பதிலாக
வந்தது வேலையொன்று இருந்தும்
நிரந்தரமாக மகிழ இடமில்லை
ஏனெனில் தற்காலிக நியமனமாய் போனது
வேலைக்கு போனேன் இரு திங்கள்
வழி பிறந்துவிட்டதா என எண்ணி எண்ணி
வழமைபோல் அலுவலகத்தில் போய்சேர
மேசையில் ஓர் கடிதம் பரபரப்புடன்
ஆர்வமாய் வாசித்த நான்
உறைந்து போனேன் மகிழ்ச்சியின்
எல்லை சொர்க்கத்தின் அழகு
என் கண் கண்களிற்கு முன்
கண்கள் கரைந்த கைகள் மயிர் கூச்சிட்டது
கால்கள் தடுமாறின
காரணம் அறிவீர்களா?.
என் வேலை! என் வேலை நிரந்தரமாய் ஆம்
பெற்றுவிட்டேன் நிரந்தர நியமனம்
என்னைவிட என் இதயம்
அதீத மகிழ்ச்சியில்
எனக்கு பணி கிடைத்ததை நினைத்து
அது மகிழ்ந்து
தன் பணியை நிறுத்திவிட்டது நிரந்தரமாக .....
லப்....டப்....லப்.....

V.தனுசா
தரம் - 11

# பாடசாலையில் நூலகங்கள்

கா.டிலக்சனா
தரம் – 9D

மனித வாழ்க்கையில் நூலகங்களின் முக்கியத்துவம் என்றும் பேசக்கூடிய ஒன்றாக கருதப்படுகிறது. "லிபர்" என்ற இலத்தீன் மொழிச் சொல்லுக்கு "நூல் தொகுதி" என பொருள்படும். இது காலப்போக்கில் மாற்றமடைந்து சீன மொழியில் "ஒழித்து வைத்திருக்கும் இடம்" என பயன்படுத்தப்பட்டது. இச்சொல் ஆங்கிலத்தில் "Library" என உச்சரிக்கப்பட்டு உலகம் பூராகவும் பேசப்பட்டு வருகிறது.

"இன்றைய உலகில் ஒரு மனிதன் காலத்தோடு ஒன்றியவனாக இருக்கவேண்டும் என்றால் அவன் நாளாந்தம் குறைந்தது நான்கு புதினப் பத்திரிகைகளையும் வாராந்தம் இரண்டு வார சஞ்சிகைகளையும் மாதாந்தம் ஒரு மாத வெளியீட்டையும் வாசிக்கவேண்டும்." என்று இலங்கையின் புகழ் மிக்க விஞ்ஞானி டாக்டர் ஆதர் சி.கிளார்க் கூறினார். மறைந்த இந்திய பிரதமர் நேரு அவர்கள் "உலக அறிவை பெற்றுக்கொள்ளக்கூடிய திறவுகோல்" எனவும் கல்வியில் நூலக சேவையும் பிரிக்கமுடியாத சகோதரர்கள்" போன்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கல்விச் செயற்பாடுகளில் நூலகம் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. தமது கல்வியின் நோக்கத்தை நிறைவு செய்து கொள்ள நிறையவே வாய்ப்புக்கள் உண்டு. அதனால் தான் பாடசாலை நூலகங்களை மேம்படுத்தும் பொருட்டு உலகம் முழுவதும் ஆண்டு தோறும் ஒக்டோபர் மாதத்தின் நான்காவது திங்கட்கிழமை அன்று உலக பாடசாலை நூலக நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. பாடசாலை நூலகத்தின் முக்கியத் துவத்தை தெளிவடையச் செய்வதற்காக தேசிய பாடசாலை நூலக வாரமும் கொண்டாடப்பட்டு வருகிறது.

பாடசாலை நூலகங்களே பாடசாலை கல்வியின் நடு நிலையங்களாகவும் சிறந்த கற்கை மையங்கள் ஆகவும் திகழ்கின்றன. இதன் மூலமே பாடத்திட்டத்தில் வளப்படுத்தப் பட்டு அறிவும் விரிவாக்கப்பட்டு வருகிறது. பழைய கல்வி முறையான கற்றல் கற்பித்தல் முறை மாறி தேடிக்கற்றல் கல்வி முறை வந்துள்ளமை இந்த புதிய கால சீர்திருத்தத்தின் அளப்பரிய பங்காக காணப்படுகிறது. அதாவது தேடிக் கற்றலுக்கு ஏற்ற வாய்க்காலாகவும் பாடசாலை நூலகங்கள் மாற்றம் பெற்றுள்ளன. ஒவ்வொரு மாணவரும் ஆசிரியமுறை மற்றவர்களிலோ தங்கி இராது தமக்கு தேவையானதை தாமே தேடிக் கற்பதற்கு நூலகங்கள் துணை புரிகின்றன.

தற்காலத்தில் சிறுவர்களின் வாசிப்பு திறனை மேற்கொள்வதற்கு பல நாடுகள் கவனம் செலுத்துகின்றன. இந்த வகையில் நூல் அடிப்படையிலான வேலை திட்டங்கள் மூலம் வாசிப்பு திறனை வளர்த்தெடுக்க முடியும் என புதிய ஒரு முறையினை உலகம் கண்டு கொண்டுள்ளது. இதன் சிறப்பான முயற்சியாக சிறுவர்களை கவரும் மிகத் தெளிவான படங்கள், சிறுகதைகள் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளன. மேலும் பாடசாலை நூலகங்களில் 'சேர்ந்து வாசித்தல்' என்ற புதிய கற்பித்தல் முறையும் வகுப்பறை கற்பித்தலில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

ஏனெனில் வாசித்தல், எழுதுதல், கேட்டல், பேசுதல் ஆகிய நான்கும் அடிப்படை திறன்களிலும் மாணவர்கள் மேலோங்கி நிற்க காரணகர்த்தாவாக திகழ்வது நூலகங்களே என்பது பல நாட்டு ஆய்வின் முடிவாகும். அதுமட்டும் அன்றி வாசிப்பு திறனை

மேம்படுத்துவதன் மூலம் பலவித பாடத் தேவைகளையும் மாணவர்கள் நிறைவு செய்து கொள்ளும் ஒரு சேவைக் களமாகவும் இந்நூல்கள் திகழ்கின்றன.

வகுப்பறையிலும், விளையாட்டுக் களிலும் மட்டும் மாணவர்களின் கவனத்தை திசை திருப்புவதை நோக்காக கொள்ளாது பாடசாலை நூலகங்களிலும் ஆற அமர்ந்து நூல்கள், சஞ்சிகைகளை மாணவர்கள் புரட்டிப் படிக்க அதிபர்கள், ஆசிரியர்கள் வழிசமைக்க வேண்டும். அத்துடன் நூல்களை வாசிப்பதோடு மட்டும் அல்லாது அவற்றை ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் பராமரிக்கும் பழக்கத்தையும் மனப்பாங்கையும் மாணவர்களிடையே உண்டு பண்ணவேண்டும். இதற்கான மனப் பக்குவத்தை உருவாக்கும் மற்றும் நூல்களை மதித்து நடக்கும் பண்புகளை சிறு பராயத்தில் இருந்தே வளர்க்கும் நோக்குடன் உலக பாடசாலை நூலக நாள் விளங்குகிறது. இந்த அறிவு பூர்வமான வார்த்தை ஆக்க பூர்வமாக அனுஷ்டிப்பதே நூலகத்தின் தேவை ஆகும். பாடசாலை நூலக வளர்ச்சியும், வீழ்ச்சியும் அப்பாடசாலை நூலக ஆசிரிய நூலகர்கள் இன்றைய பாடசாலை நூலக பெரு வளர்ச்சி அலகின் கல்விப்பணிப் பாளர்கள் ஆசிரிய நூலகர்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்பை வரையறுத்து உள்ளனர்.

இவர்களிடம் நூலக அறிவு, அதனை கையாளுதல், புதிய தொழில்நுட்பக் கற்கை, அறிவியல் பாடசாலை கலைத்திட்டம் போன்ற வற்றின் பரந்த அறிவு காணப்பட வேண்டும். பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் பாடத்திற்கு தேவையான தேடித்தருதல் இவ்வாறான பணிகளை ஆசிரிய நூலகங்கள் ஆற்ற வேண்டும். எனவே இப்பாரிய பொறுப்பை ஆசிரிய நூலகர்கள் சிந்தித்து செயற்படும்போது அறிவுப் பொக்கிசங்களான நூலகருடன் மாணவர்களை சிறுபராயம் முதல் கொண்டே உறவாட செய்யும் மனப்பாங்கை வளர்த்து விடுவதன் மூலம் அறிவு பூர்வமான, நாகரீகமுடைய சந்ததியினரை உருவாக்குவ தோடு அதிகமாக எதிர்கொண்டு வரும் உளப்பிரச்சனையற்ற ஆரோக்கியமான சமூகத்தையும் வளர்த்தெடுக்க முடியும் என்பதில் ஐயப்படத் தேவையில்லை.



# கவலையைப் கலைப்பது எப்படி?

போ.தர்மினா
தரம் $10^{C}$

"நீங்கள் சாப்பிடும் எந்த உணவும் உங்களுக்கு குடற்புண்ணைக் கொண்டு வருவதில்லை. மாறாக உங்களை உண்ணும் கவலைதான் குடற்புண்ணைக் கொண்டு வருகின்றது" என்பதை மொழிர்ந்தார் ஒரு பிரபல மருத்துவர்.

நடக்காததை நடக்கும் என்றும் அங்கலாய்ப்படைவதும் நடந்ததை இவ்வாறு நடந்துவிட்டதே என்று வருந்துவதும் ஒருவகை கவலையாகும். சமநிலை இல்லாத விடத்து கவலை இலகுவில் குடிகொள்ளும் இருதய நோய் இரத்த அழுத்தம், ஆஸ்மா, கடுங்கோபம், குடற்புண் போன்ற நோய்களுக்கான ஆரம்பநிலை கவலையாகும்.

ஒரு பையன் தனக்கு செருப்பு இல்லையே என்று அழுதுகொண்டிருந்தான். அப்பொழுது காலில்லாதவன் நொண்டி நொண்டி ஒரு கோலின் உதவியுடன் பத்திரிகை விற்றுக்கொண்டு, மகிழ்ச்சியுடன் வந்து கொண்டிருந்தான். பையன் தனது கவலை அற்பத்தனமானது என்று சிந்தனையை மாற்றிக்கொண்டு பேப்பர் பாக் செய்யும் முயற்சியை ஆரம்பித்து தனக்கென்று ஒரு சோடி செருப்பை வாங்கி, மகிழ்வோடு வாழப் பழகினான்.

நேற்று என்பது நடந்துவிட்ட ஒன்று, நாளை என்பது வரவிருக்கும் ஒன்று, இரண்டிற்கும்மேல் நமக்கு கட்டுப்பாடு இல்லை. இன்று என்பதே நம் கையில், இதைவிட்டு நேற்றைய நாளில் மூழ்கியிருப்பதோ அன்றேல் நாளைய நாளைப் பற்றி ஏக்கத்தோடிருப்பதோ அவசியமற்றது. அன்றன்றைக்குள்ள தொல்லை அன்றன்றைக்கே போது மென்றிருப்போம்.

நம்முடைய சக்திக்கு அப்பாற் பட்ட துன்பம்
நமக்கு வராது என்ற நம்பிக்கை வளரட்டும்!



# வரலாறு கூறும் மகாவம்சமும் அதன் குறைபாடுகளும்

ஆ.கபிலாயன்
கலை 2021

இலங்கை வரலாறு பற்றி கூறுகின்ற வரலாற்று ஆவணங்கள் பல. அவற்றுள் இலங்கை வரலாற்றை தெளிவாகவும், விரிவாகவும் அறிந்து கொள்ள தோற்றம் கண்ட பாளி மொழியாலன இலக்கியம் மகாவம்சமாகும். கி.பி. 5ம் கி.பி 6ம் நூற்றாண்டிற்கு இடைப் பகுதியில் தாதுசேன மன்னனின் அவைப் புலவராகவும் மகா விகாரையின் "திக்செந்த பிரிவெனாவை" சேர்ந்த மகாநாமதேர ரால் எழுதப்பட்ட மகாகாவியம் ஆகும்.

விஜயன் தொடக்கம் மகாசேன மன்னன் வரையான 1000 ஆண்டுகால வரலாற்றை 37 அத்தியாயங்களில் குறிப்பிடும் இவ்நூல் மகாவிகாரையை புகழ்ந்து கூறுவதால் "மகாவிகாரை புராணம்" எனவும், தேரவித பௌத்தத்தை மிகுதியாக கூறுவதால் "தேரவாத பௌத்த காவியம்" எனவும் துட்டகைமுனு மன்னனை பற்றி புகழ்வதால் "துட்டகாமினி காவியம்" எனவும் சிறப்பிக்கப்படுகிறது.

1-5 வரையான அத்தியாயம் புத்த ருடைய பிறப்பு முதலான விடயங்களையும், 6 – 11 வரையான அத்தியாயம் விஜயன் வருகை முதல் தேவநம்பிய தீசன் வரையிலான வரலாற்று செய்திகளையும், 12 – 21 வரையான அத்தியாயம் பௌத்த மதத்தினுடைய வருகை யையும், 22 – 32 வரையான அத்தியாயம் துட்டகைமுனுவிற்கு பின்னரான சத்தாதிஸ்ஸ, வட்டகாமினி, வசபன் போன்ற மன்னர்களது வரலாற்றையும் 37வது அத்தியாயம் மகாசேன மன்னனுடைய வரலாற்றையும் மிக விரிவாக எடுத்துரைக்கிறது.

கி.மு. 6ம் நூற்றாண்டு முதல் கி.பி 4ம் நூற்றாண்டு வரையான, ஏறத்தாழ 1000 ஆண்டு கால வரலாற்றை கூறுகின்ற போதிலும் மகாவம்சம் வரலாற்றாசிரியர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத வரலாற்று நூலாகவே காணப்படுகிறது. "பேராசிரியர் மெண்டிஸ்", "பேராசிரியர் ஹைகர்" போன்றோர் இந்நூல் ஓர் பக்கச்சார்பான நூல் என குறிப்பிடுகின்ற போதும் பேராசிரியர் பரணவிதான, பேராசியர் குணதிலக போன்றோர் இந்நூல் ஒழுங்கான வரலாற்று தகவல்களை கூறும் நூல் என்கின்றனர். எது எவ்வாறு இருப்பினும் இந்நூலை ஆராயும் போது இது பலகுறைபாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

அவ்வகையில் இந்நூல் புனையப்பட்ட கதைகளையும், கட்டுக்கதைகளையும் கூறி தனது வரலாற்றை கூறிச்செல்கிறது. "சிங்கத்திற்கும், சுப்பாதேவிக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பால் "சிங்கபாகு", "சிங்கசீவிலி" எனும் இரட்டையர் பிறந்ததாகவும் பின் அவர்கள் வளர்ந்து திருமணம் செய்து கொண்டதால் "விஜயன்", "சுமித்த" ஆகியோர் அவர்களுக்குப் பிறந்ததாக மகாவம்சம் கூறுகிறது. இது நடைமுறையில் சாத்தியமற்ற விடயங்களாகும். அதுமட்டும் இன்றி சிங்ககத்தின் வழி வந்த தாலே சிங்களவர் என்ற பெயர் பெற்றனர் என்கிறார் மகாநாத தேரர். எனினும் சிங்களம் என்ற சொல் சிம்ஹல என்ற சொல்லில் இருந்து தோற்றம் பெற்றதாக அண்மைக்கால ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

இதேபோன்று கிறிஸ்துக்கு முற்பட்ட காலத்தில் சில்கபுரத்தில் விஜயன் மேற்கொண்ட அநீதிகளால் அவனும் 700 தோழர்களும் நாடுகடத்தப்பட்டனர் என்ற மகாவம்சம் செய்தி உண்மைக்கு புறம்பானதாகும். ஏன் எனில் இந்நிகழ்வு தொடர்பாக மகாவம்சம் தவிர இந்திய மூலாதார ஆதாரங்கள் ஏதுவும் குறிப்பிட வில்லை.


அதுமட்டும் இன்றி மகாநாமதேரர் ஓர் இனத்தை முதன்மைப்படுத்தியே வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையை 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்த தமிழ் மன்னன் எல்லாளனை பற்றி வெறும் 09 செய்யுள்களில் மாத்திரமும் ஏனைய சிங்கள மன்னர்களை பற்றி விரிவாகவும் குறிப்பிட்டுள்ளார். அங்கே எல்லாள மன்னனுடைய வரலாறு ஓர் தமிழன் என்பதால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. அது மட்டும் இன்றி எல்லாள மன்னனை மகாநாமதேரர் ஓர் தென்னிந்திய சோழ இளவரசளாகவே சித்தரிக்கிறார். எனினும் அண்மைக்கால ஆய்வுகள் எல்லாளன் பூநகரி என்ற பிரதேசத்தை தலைநகராகக் கொண்டு சிற்றரசாக ஆட்சி புரிந்து பேரரசாக எழுச்சி பெற்ற மன்னன் என்பதை நிருபிக்கிறது.

இதனைவிட மகாநாம தேரர் தனது சுய விருப்பு, வெறுப்புகளை உள்ளடக்கியே எழுதி உள்ளார். குறிப்பாக தேரவாதத்தையும், மகாவிகாரையையும் ஆதரவு அளித்து செயற்பட்ட துட்டகைமுனு, தேவநம்பியதீசன், குட்டகண்ணதீசன் போன்ற மன்னர்கள் பற்றி 37வது அத்தியாயத்தில் மட்டும் கூறியுள்ளார். இதன் மூலம் மகாநாம தேரரின் மனநிலையானது புலப்படுகிறது.

அநுராதபுரத்தை மையப்படுத்தி வரலாற்றை கூறும் இவர் அக்காலத்தில் இலங்கையின் ஏனைய பாகங்களில் எத்தகைய ஆட்சிமுறை நிலவி இருந்தது என்பதை கூறத்தவறிவிட்டார். அதுமட்டும் இன்றி 1000 ஆண்டு கால வரலாற்றை தொடர்ச்சியாக கூற தகவல்களை திரட்டியது எப்படி என்பதையும் கூறத் தவறியுள்ளார்.

அதுமட்டும் இன்றி மகாநாமதேரர் மகாவம்சத்தை எழுதத் தொடங்கும் போது அதாவது முகவுரையில் "இந்நூல் தமிழர்களிடம் இருந்து பௌத்தத்தை காக்கவும் தமிழர்களை விட நமக்குதான் இந்நாட்டில் அதிக அதிகாரம் உண்டு என்பதை நிரூபிக்க வேண்டும்" என்பதன் மூலம் தேரரின் இனமுக்கியத்துவம் புலப்படுகிறது.

ஆக மேற்கூறப்பட்ட விடயங்களை தொடுத்து நோக்கும்போது இலங்கையின் வரலாற்றை மகாவம்சம் தொடர்ச்சியான முறையில் கூறிச்சென்றாலும் ஓர் இனத்தை / ஓர் மதத்தை முதன்மைப்படுத்தியும் தனது விருப்பு, வெறுப்புகளை உள்ளடக்கியும் வரலாற்றை கூறிச்செல்வதால் மகாவம்சம் ஓர் வரலாற்று நூல் என்ற தகுதியை இழந்து நிற்கிறது.



# Our Food and Healthy life


**T. Sangeeththan**
**Gr 10D**

Food is important part in our life, we should eat Nutritious food. As we eat, we must take vegetables and leaves, If we eat leaves, Iron will be got by us. The man who eats fruits and leaves mostly, lives for a longtime Obesity is a huge problem in the world.

If our body weight increases, we could be affected by many diseases such as, pressure, colestrol and diabeties. Now a days our children like to eat fast food items so they increase the fat in their bodies. Most of the people are affected by many diseases items, So they increase the fat in their bodies. We don't have time to do practices in our play grounds. So carbohydrate food items and fat must be avoided by us.

But energy must be given by carbohydrates and fats, Not only we should eat fruits and vegetables, but also drink enough water. Our fore fathers had lived for a long times because they ate nutritious food items.

Even though we wat many food items, we can't get nutritious food items. Everybody must either eat fruits or leaves mostly, we must eat our food like a richman in the morning, and take our food like a beggar at night.



# உடற்கல்வி

மு.அபிதாரணி
தரம் - 10

நமது மனநலத்துக்கும் அறிவு வளத்திற்கும், உடல் நலமே அடிப்படையாகும். இதனால்தான் மகாகவி பாரதியாரும் "உடலினை உறுதி செய்" என்று கூறினார். உடல் வளமே ஒருவனது பல்துறை வளர்ச்சிக் கும் அடிப்படையாக உள்ளது எனப் பன்னெடுங் காலமாக வலியுறுத்தப் படுகிறது.

"சுவர் இருந்தாற்தான் சித்திரம் வரையலாம்" என்பது பழமொழி உடல் ஆரோக்கியமாக இருந்தாற்தான் எத்தகைய பணிகளையும் மேற்கொள்ளமுடியும். நாம் பள்ளிப் பருவத்தில் ஏட்டுக்கல்வியோடு உடற்கல்வியும் பயில வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதற்கு இதுவே காரணமாகும். உடற்கல்வி பெறாது ஏட்டுக்கல்வியில் நாம் எவ்வளவு அடைவுகளை பெற்றாலும் நாம் முழுமையான கல்வியைப் பெற்றவர்களாக ஆகமுடியாது. உடற்கல்வியானது உடல் வளத்தை மட்டும் மேம்படுத்துவதல்ல. இதன்மூலம் நம் உளவளத்தையும் கற்று அவற்றை கடைப்பிடிக்கும். பயிற்சியினையும் பெறுகின்றோம்.

உடற்கல்வியினைப் பெறுவதன் மூலம் பிரிவு, சுயகட்டுப்பாடு, ஊக்கம், இணக்கம் போன்ற அரிய பண்புகளை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு கிட்டுகிறது. விளையாட்டுக் கள் இவற்றுக்கு வித்திடுகின்றன. நடுவுநிலை தவறாது செயற்படும் பண்பு வளர்கிறது விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் போது சக உறுப்பினர்களோடு இணக்கமாகப் பழகவும் இணைந்து செயற்படவும் வாய்ப்பைப் பெறுகின்றோம். தனது ஆற்றலை வெளிக் காட்டவும் திறனை வளர்த்துக் கொள்ளவும் உடல் வளத்தை உயர்ந்தபட்ச அளவிற்கு உயர்த்திக் கொள்ளவும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையிற் செலவிடவும் உடற்கல்வி உறுதுணையாக அமைகின்றது. வாழ்வில் ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு வெற்றி கொள்ளும் ஆற்றலை வளர்க்கிறது. தோல்வி யைக் கண்டு துவண்டுவிடாமல் வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கும் உளப் பண்பை வளர்த்திட உதவுகிறது.

விளையாட்டு உடற்கல்வியின் முக்கிய அம்சமாகும். விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டு வெற்றிவாகை சூடுவோரை மக்கள் பெரிதும் பாராட்டுவர். வெற்றி வீரர்கள் எனப் புகழ் மாலை சூட்டுவர். விளையாட்டுக்களில் ஈடுபடுவோர்களை விளையாட்டு வீரர்கள் என்றே அழைப்பர். அத்தகைய வீரர்கள் சாதனைகளை நிலைநாட்டும்போது அவர்க ளுடைய பெயர் மக்கள் மனதில் பதிந்து விடுகிறது.

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா...." என்று

மகாகவி பாரதியார் குழந்தைப்பருவம் முதல் விளையாட வாரீர் என அறைகூவல் விடுப்பதை நாம் கருத்திற் கொள்ளவேண்டும்.

உடற்கல்வியின் முழுப்பயனையும் பெரிய விளையாட்டு மைதானத்தைப் பெற்றிருப்பதாலோ எல்லா விளையாட்டுக்களி லும் பங்குபெறச் செய்வதாலோ பெற்று விடமுடியாது. தமது திறமைக் கேற்ற விளையாட்டுக்களைத் தேர்ந்தெடுத்து. உடற்கல்வி ஆசிரியர்களின் ஆலோசனை களைப் பெற்று நாம் விளையாடவேண்டும்.

விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடவும், கற்கவேண்டிய நேரத்தில் கற்கவும் நாம் பழகிக்கொள்ளவேண்டும். நாம் மனம் போன போக்கில் ஓடியும், ஆடியும் தாண்டியும், குதித்தும், உருண்டும், புரண்டும் நாற்பது நிமிடங்களையும் கழித்து வகுப்பறைக் குத் திரும்பினால் உடற்கல்வி பெற்று விட்டோம் என்பது கருத்தல்ல. நேரத்தைப் போக்கிவிட்டுத் திரும்பினோம் என்றே கூறவேண்டும். எனவே உடலுக்கும் உள்ளத்திற்கும் பயன்தரும் விளையாட்டுக்களைத் தேர்ந்தெடுத்து நமது ஆற்றலுக்கேற்ப பயிற்சி பெறவேண்டும். அவரவரது திறமைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டும். போட்டி களில் கலந்துகொண்டு வெற்றிகளை ஈட்ட வேண்டும். சாதனைகளை நிலைநாட்ட வேண்டும். விளையாட்டுத்துறையில் என் எதிர் வீரசிங்கம், டங்கன் வைற், சுசந்திகாஜயசிங்க, தமயந்தி தர்சா, முரளிதரன், சனத் ஜயசூரிய போன்ற வீர வீராங்கனைகள் நமது நாட்டிற்குப் புகழ்தேடித் தந்துள்ளார்கள். அத்தகையோரின் வரிசையில் இடம்பெற வேண்டும் என்ற ஆர்வத்துடன் நாமும் முயற்சிக்க வேண்டும்.

உடற்கல்வி பெற்று விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குச் சான்றிதழ்களும், பரிசில்களும் காத்திருக்கின் றன. உயர்கல்வி பெறுவதற்கு விசேட வாய்ப்பிருக்கிறது. எனவே உடற்கல்விக்குச் செலவிடும் நேரம் கல்வியில் ஏற்படும் இழப்பு எனக்கருதக்கூடாது. விளையாட்டுத்துறையில் உலகளவில் உயரும் வாய்ப்பும் இருக்கிறது. உலகளவில் இன்று விளையாட்டு வீரர்கள் பெறும் பெயரும் புகழும் வேறு எவராலும் பெற முடியாத அளவிற்கு இருக்கிறது. அவர்கள் ஈட்டும் வருமானமும், எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு உள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு வளமான காலமிது. எதிர்காலம் இன்னும் சிறப்பாக இருக்கும் என்பது உறுதி. எனவே உடற்பயிற்சியை உயிராகக் கொண்டு முயன்றிட வேண்டும். நாமும் விளையாட்டு வீரர்களாகத் திகழ்ந்து பெயரும் புகழும் சேர்த்திட வேண்டும். ஓட்டம், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், குண்டுபோடுதல் ஈட்டி எறிதல் போன்ற தனித்திறன் போட்டிகளில் பங்குபெற வேண்டும். கூடைப்பந்து, கரப்பந்து, கிரிக்கெட், கால்பந்து போன்ற குழு விளையாட்டுக்களில் பயிற்சி பெறவேண்டும்.

கராத்தே, மல்யுத்தம் போன்ற விளை யாட்டுக்களிலும் ஈடுபடமுடியும். இவை எல்லாவற்றிற்கும் உடற்பலமும் உளநலனும் மிக மிக அவசியமாகும். இதனை நன்குணர்ந்து நாம் செயற்படவேண்டும். உடற்கல்வியினை நன்கு கற்று உலக சாதனைகளை நிலை நாட்டிட முயல்வோமாக!.

# இந்துசமயத்தின் சிறப்பம்சங்கள்

T.திவியா
2020 Arts

உலகத்திலே தோன்றிய பழமைமிக்க சமயங்களுள் இந்துசமயம் ஒன்றாகும். கிறிஸ்தவத்திற்கு முற்பட்ட காலத்தை சார்ந்தது என்றும் சிந்துவெளியில் கிடைக்கும் தொல் பொருள் சான்றாதாரங்கள் இந்துசமயத்தின் தொன்மையை விளக்கபோதுமானவை என அறிஞர் கூறுவர். இந்து சமயம் என்பது பரந்த நோக்குடையது. அதனால் சனாதன தர்மம் என அழைக்கப்படுகிறது. கிறிஸ்தவத்திற்கு முற்பட்ட காலம் தொட்டே நின்று நிலைப்பதோடு பல கோடானகோடி மக்களோடு வாழ்வியல் நெறிப்படுத்தலுக்கும் ஆன்மீக நாட்டத்திற்கும் ஆன்மீக ஈடேற்றத்திற்கும் வழிகாட்டியாக அமைகிறது.

இந்து சமயமானது காலத்தால் முற்பட்ட இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் ஆகிய வேதகால இலக்கியங்களை பொது நூலாகவும் கொண்டதுடன் அவை ஒவ்வொன்றும் சங்கிதை, பிராமணம், ஆரணியம், உபநிடதம் ஆகிய இலக்கிய வடிவங்களை கொண்டு அமைக்கப் பட்ட இந்து சமய சிறப்புக்களில் ஒன்றாக கருதப் படுகிறது. இவற்றுள் இந்துசமயத் துவத்திற்கும் இந்தியத்தத்துவங்களுக்கும் முன்னோடியாக உபநிடதம் அமைந்திருப்பது சிறப்பாகும். எல்லைப்படுத்தமுடியாத இறைவனை தம் மனதில் எல்லைப்படுத்தி அவ்விறைவன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் வகையில் பல சிறப்புப்பட்ட கலைபொக்கிசங்களின் பூட்டாக அமையும் கோயில்களை அமைத்துக்கொண்ட ஒரே ஒரு சமயம் இந்துசமயம் ஆகும். இத்தகைய இந்து கட்டடக்கலை, நகரம், வேசேரம், திராவிடம் என பகுத்து அவற்றின் அடிப்படையில் அழகிய மாடங்களையும் கோபுரங்களையும், சுற்றாளைகளையும் அமைத்து இறைவனை எழுந்தருளச் செய்துள்ளனர். அழகிய கோயில்களில் இறைவனை வீற்றிருக்க செய்தல். அவ்விறைவனை எவ்வகையில் வழி படச் செய்தல் என்பதை எல்லாம் ஒழுங்குபடுத்தி அதற்கு ஆகமம் என பெயர் இட்டு அறநெறி பிறளாது சமயநெறிமுறை பேணி மகோற்வசங் களை நடத்தி வருவது இந்து சமயத்தின் சிறப்பம்சத்தை எடுத்துக்காட்டப் படுகிறது. கண்களால் காணமுடியாத கடவுளை அகக் கண்களால் கண்டு அவ்விறைவனோடு உறவு கொண்டு பதிகங்களாகவும் பாசுரங்களாக வும் பாடி இறைவனது இருப்பை நிறுவிய சமயம் இந்துசமயம் ஆகும். இறைவன் எங்கும் உள்ளவன். எல்லாம் வல்லவன், எல்லாம் அறிபவன் என்பதனால் அவ்விறைவனது திருமேனியை மெய்யடியார்கள் மனமுருகிப் பாடி பதிகங்களிலே பதிவு செய்து வைத்திருக்கும் அங்க அடியாளமுகைளுக்கேற்ப பரிமா இலட்சணங்களை வகுத்து உருவாக்கப்பட்ட கலை வார்ப்பு கலையாகும்.

சைவம், சாக்தம், வைணவம், காணா பத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் அறுவகை சமயங்களையும் சைவ சித்தாந்தம், வேதாந்தம் எனும் இரு பொருள் தத்துவங்களை யும் தன்னகத்தை கொண்டாக இந்துசமயம் விளங்குகின்றது. மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து ஆன்மா விடுதலை பெறவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தை மானிடர் உள்ளத்தில் விதைப்பதே இந்துசமயம் என்று உயர்ந்த பண்பாகும். உலக சகோதரத்தை வலியுறுத்தி மனித மேம்பாட்டை மையமாக கொண்டு அமைந்துள்ளது.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
"வான்முகில் வழாது பெய்க"

இந்து சமயத்தின் அவர் அவர் விரும்பும் வடிவத்தின் பெயரிலும் தெய்வத்தை

வழிபடுவதற்கு சுதந்திரம் உண்டு. மனித உயிர்களில் மட்டுமன்றி எல்லா உயிர்களிலும் ஆன்மா குடிகொண்டு இருக்கிறது என்ற ஆன்மீக ஒருமைப்பாடு இந்து சமயத்தின் சிறப்பாகும். இதனால் ஏனைய உயிரினங்கள் கூட இறைவனை வழிபட்டு முத்தி நிலை பெற்ற தனித்துவம் உடையது.

உதாரணம், யானையும் சிலந்தியும் இறைவனை வழிபட்டு முத்திப்பேறு பெற்றன. இத்தலம் பஞ்சபூதங்களில் அப்பு இட்டலமாக போற்றப்பெற்று திருவாணகான் என அழைக்கப் படுகிறது.

எல்லோரையும் கடவுளினுடைய குழந்தைகளாகக் கொண்டு சகோதர பாசத்தோடு நாம் பிறருக்காக வாழவேண்டும். தமக்கான பிரார்த்தனையிலும் பார்க்க பிறருக்கான பிரார்த்தனையை இந்துசமயம் விளங்குகின்றது. அது மட்டுமல்லாது தாய், தந்தை, குரு, விருந்தினர்கள், அடியார்கள் ஆகியோரை இந்து சமயத்திற்கு உரித்தான உயர்நிலையாகும்.

அறம்,பொருள், இன்பம், வீடு என்ற அடிப்படையில் மனிதன் பல சுகங்களை அடைய வழிகாட்டுகின்றது. இதனையே புருடார்த்தம் (புருமன் + அர்த்தம்) என அழைக்கப்படுகிறது. கடவுள் தொலைவில் இருப்பவர் அல்ல. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உறைந்துள்ள னர் எனும் நம்பிக்கையை வலியுறுத்துகிறது. இதனால் தான் மனிதன் மனுஷன் என அமைந்து (மனோ ஈக்ஷசன்) என அமைத்து கொள்ளும். அதாவது மனிதன் என்பவன் உள்ளத்தில் இறைவனை வைத்திருப்பவன் ஆவான். சனாதன தர்மமாக விளங்குவதால் "மண்ணில் நல்ல வண்ணம் வாழ..." பதிவு செய்த இலக்கியங்கள் இன்று பிறருக்கான பிரார்த்தனைகள், விருந்தோம்பல் என்பனவை எல்லாம் சமயமாக வாழ்வாதாரமாக தர்மமாக இந்து சமயத்தில் இணைக்கப் பட்டுள்ளன. உலக விடுதலைக்கான வேண்டுதல்கள் நாளாந்தம் ஆலயங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கந்த புராணத்தின் வாழ்த்துச் செய்தி "வான்முகில் வழாது பெய்க" எனும் பாடல் எத்தனையோ இந்துசமயம் தன்னகத்தே கொண்ட பொக்கிசமாக கொண்டுள்ளது. குறிப் பாக "குறை விலாதுயிர்கள் வாழ்க....." வழிகாட்டி சைவ நீதிக்கருத்துக்கள் தனித்துவமாகும்.

பயன்கருதாத விடயங்களுக்கு இந்துசமயம் "கடமையை செய் பயனை எதிர்பாராது" என்றும் "என் பணி செய்து கிடப்பதே என்றும் உயர்விடயங்களினூடாக இந்து சமயத்தின் சிறப்புக்களை எடுத்துக் காட்டப்படுகிறது.

# Advantages and disadvantages of using internet

**K.Pirinthah**

**Gr - 11$^{C}$**

Internet is very useful if everyone will use it good purpose for acquiring information. Using internet has become very easy. People get everything from internet and online banking etc. Everything can be gained using internet anywhere at anytime. This is the major advantage of usin internet and also using internet education can be taught at rural areas where there are no teachers available. The first and the foremost advantages of the internet is that it has brough an area of knowledge. where accessing knowledge has become vey easy. Any topic, any issue from anything to every thing is available to all at all times. internet has shortened the distances. Emails, video calls and social media are just few examples of advantages of internet. Internet has given rise to new sector of businesses which has arisen because of the internet. Alibaba, filpkart, Amazon are the few examples of businesses are the result of benefits of internet. The internet has led to a revolution. The world history can be now looked into two – era-one before the internet and one after the internet. Every coin has two side and same as internet too as there are some disadvanctages of internet also for who use if bad purpose. Hacking, Shipping, Fishing, intruding, Cyber – Crime is taking place just becausr of internet. Even college students who use it for bad purpose. Security is the main aspect in internet if people are doing transaction of lakhs and if some one hacks its account then it can be a disadvantage of internet. So if the thing is available for two purposes then we should always look for the positive. One thing using is internet has more advantaged then disadvantages first of all internet provides access to a lot of information. Some of them are very useful inyour job other helps inyour hobby. Searching the net with google you can find everything you want. You can also do shopping using internet of course if has nosense to buying a roll but if you need something inaccessible. You will be able to buy it in internet shop you need only to select what you want. Fill in someforms and click ok. In a few days you will get what you have ordered directly to your home. Withour going any where you can pay with your credit card, pay postman when you get the packahe, or transter money from your bank account. Now a days almost every bigger bank offers. Transferming money with internet. It is more faster then going to the bank and filling blankets.

Transferring money in traditional way takes about a day. Using internet you can do this in few seconds even in Saturday and Sunday evenings. What's more internet banks give. You insurance against unauthorized transaction some people think be that their money can easily stolen by hackers. it isn't true, because the easieast way to steal your

money from internet bank is breaking to your house and stealing your card of codes. internet banks have very good protections which make them practically unbreakable.

Next advantage of internet is email internet mails get in a few seconds in their destinations. It is very important when you want to send something for example to Australia of course you can send not only texts. You can email whatever you want, movies, photos, songs, computer programs etc. Costs are very important advantage of emails. People who spend too much time sitting in the front of computer can easily gets ill. Rediation emitted by computers, screen is harmful to eyes (because they needn't go anywhere they can do everything using internet) are getting weaker. They have noreal friends and when internet is down they are getting furious.

Internet has some opponents but more and more people treats internet like telephone or radio, They use it for fun and work, and I think at present living without internet would be quite difficult.

## School Days !

Growing up in this day and age,
With free expression all the rage
Our young ones learn when starting School
That reading's fun and maths is
Cool while writing's not the least bit
Ioring It really is so much like drawing
For every child it is essential
To realize their full porential
And teachers always do their best
To stimulate their interest
When years of School days end at last
with all examination passed,
Will the children remininee.
And say, "Our School days we will miss"
And as the final day arrives,
"They were the best days of our lives"

**S. Tharsika**
**Gr. 9D**

# ஈழத்து அழ.வள்ளியப்பா கவிஞர் மு.செல்லையா

மோ.மிதுஷன்
தரம் 7D

அல்வாயூர்க் கவிஞர் அமரர் மு.செல்லையா அவர்கள் ஒரு சிறந்த குழந்தைக் கவிஞர். தமிழகத்தின் குழந்தைக் கவிஞர் திரு.அழ.வள்ளியப்பா அவர்களுக்கு நிகராக ஈழத்திலும் திரு.செல்லையா அவர்கள் பல அழகிய குழந்தைக் கவிதைகளை எழுதியுள் ளார். அவர் எழுதிய குழந்தைக் கவிதைகளுள் "வளர்பிறை" என்றும் குழந்தைக் கவிதை மிகவும் பிரபல்யமானது.

வானத்திலே பூரணச்சந்திரனை ஒரு தினம் கண்டு மகிழ்ந்த குழந்தை ஒன்று சில தினங்களின் பின்பு வளர்பிறையையும் அதனைச் சூழ்ந்து ஆயிரக்கணக்கான நட்சத் திரங்களையும் காண்கிறது. அக்குழந்தைக்கு சில சந்தேகங்கள் எழுகின்றன. அச்சந்தேகங் களை நீக்கும் பொருட்டு தன் தாயிடம் சில கேள்விகளை கேட்கின்றது. அக்கேள்விகளை அடிப்படையாகக் கொண்டதே கவிஞர். மு.செல்லையா அவர்களின் "வளர்பிறை" என்ற இந்தக் குழந்தைப் பாடல்
இதோ அந்தப்பாடல்

வளர்பிறை

அம்மா வெளியே வா அம்மா
அழகாய் மேலே பாரம்மா
சும்மா இருந்த சந்திரனை
துண்டாய் வெட்டிய தாரம்மா?

வட்டத்தோசை சுட்டதுபோல்
வானில் இருந்த சந்திரனை
துட்டச் சிறுவன் வெட்டி விட்டான்
மற்றப் பாதியை எங்கெறிந்தான்?

கிட்ட மினுங்கும் கட்டியெல்லாம்
வெட்டிய மிச்சத் துண்டுகளோ?

எவ்வளவு அழகான ஒரு குழந்தைப்பாடல் பாருங்கள். உண்மையிலேயே குழந்தைக் கவிதைகளைப் பாடும்போது வயது முதிர்ந்த கவிஞர்கள் கூட குழந்தைகளாகவே மாற்றிடு விடுகிறார்கள். இக்கவிதையானது எனக்கும் பிடித்த குழந்தைக் கவிதைகளிலே முதன்மை யானது.

இந்த அழகிய குழந்தைக் கவிதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால் எப்படி இருக்கும் என்று சில நாட்களாக யோசித்தேன். இறுதியில் எனது சிற்றறிவுக்கு எட்டியவரை ஒருவாறு மொழி பெயர்த்துவிட்டேன். தவறுகள் இருந்தால் இச்சிறியவனை மன்னியுங்கள் இதோ எனது ஆங்கில மொழிபெயர்ப்பு.

**The waxing Moon**

Mom…. mom….
Please, Come….. come….. come out
Look up to the pretty night sky.
Who has cut the innocent full moon
into parts?

The full moon was like a clear – cut
Round pancake in the night sky yesterday.
But who is that stupid fellow
Who has cut it into two halves today?
Tell me Mom ….. tell me…. tell me the truth.

Where did that fool throw awary
the other half?
Are the ting dots twinking around the moon
The remaining cut pieces
of the pretty silvet full moon?

# புதிய பாதை

விழிகள் மூடாது என் விளிம்புகள் தாண்டாது
முற்றுப்புள்ளி ஒன்றில் இருந்து
எழுந்து நடக்கப் போகின்றேன்
வரவுகள் எனக்கில்லை பகலிலும் எனக்கு ஓய்வில்லை
என் பயிற்சிகள் தொடர்ந்திடுமே

கனவுகள் எனக்குள்
ஆயிரம் கோடிகள் - அத்தனையும்
கைகளிலே
கதவுகளைத் திறந்து
காலடி எடுத்து வைக்கின்றேன்
காற்றின் மாசுக்களை — என்
கைகளால் தடுத்திடுவேன்
எடுத்த காலடிகள் இனி
ஓயப்போவதுமில்லை — என்
உச்சம் காணும்வரை நான்
உறங்கப் போவதுமில்லை இலக்கிய உலகுக்கு
என இன்பம் சொல்லிடுவேன்
இலக்கியப் பெண்களுக்கு
இலக்கணம் ஆகிடுவேன்
கொழு கொம்புகள் ஏதுமின்றி
கொடியாகிப் படர்ந்திடுவேன்
தோல்விகள் இனி ஏதுமில்லை
தோற்பதற்கும் நான் தயாரில்லை

வெற்றிக் கொடி நான்
தேடி வீரியமாய் நடக்கின்றேன்
முயன்று முயன்று என்றும்
முன்னிற்கப் போகின்றேன்
என் அடையாளம்
என்னாலே பறக்கட்டும்
அடையாளம் கொண்டு நாள்
ஆண்டிடப் போகின்றேன்
பெண் என்ற இனத்துக்கே
இனி பெருமை நான் தானே

K. ஜசிந்தினி
கலைப்பிரிவு 2020

# தமிழ்த்தின போட்டியில் நான் பெற்ற அனுபவம்

பு. ரதீபா
கலைப்பிரிவு 2020

யூனியன் சிறப்பு மலர் 2019 இற்காக யூனியன் தாயின் புதல்வியாய் தேசிய மட்ட வெற்றியாளராய் என்னுடையது என்பதை விட எங்கள் குழுவினருடைய இறுதி வரையான அனுபவத்தை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்வதில் யூனியன் மங்கையாய் தேசிய மட்டத்தில் பங்குபற்றிய அணித்தலைவியாகவும் பெருமை கொள்கிறேன். எங்களின் இறுதிவரை யான அனுபவத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பாக இச்சிறப்புமலர் இருப்பதில் பெரு உவகையாக இருக்கிறது.

தமிழறிவு வினாவிடை போட்டி என்று பொறுப்பாசிரியர் முதலில் கூறியபோது நாங்கள் ஒவ்வொருவருடைய முகத்தைப் பார்த்து விழித்தது முதல் இறுதிவரை போட்டியில் அடைந்த வெற்றி முதலான அனுபவத்தையே உங்களுடன் பகிர்ந்த கொள்கிறேன். தமிழ்த்தின போட்டிகள் கோட்டமட்ட ரீதியில் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டதும் எங்களின் தமிழ் ஆசிரியர் போட்டிக்கானவர்களை தெரிவு செய்ய ஆரம்பித்த தருணம் தமிழறிவு வினாவிடை திறந்த போட்டிப் பிரிவிற்காய் நாங்கள் ஐவர் தெரிவு செய்யப்பட்டோம். அதில் நால்வர் மங்கையராய் ஜொலித்திடவே ஒரேயொரு ஆடவனாய் அதிலும் அனுபவம் மிக்க ஆடவனாய் (கடந்த வருட போட்டியில் பங்கு பற்றிய அனுபவம் உண்டென்பதால்) மொத்த மாய் ஐவர் அடங்கிய அணி தெரிவு செய்யப் பட்டது.

போட்டிக்கான சரியான தெளிவு இல்லை. அனுபவம் ஏதும் இல்லை. இருப்பினும் பொறுப்பாசிரியர் எம் மீது கொண்ட அந்த நம்பிக்கை ஏதாவது செய்து காட்டவேண்டும் என்ற ஆவலை எமக்குள்ளே தோற்றுவித்தது என்பதே உண்மை. ஆசிரியரால் எங்களுக்கு வழங்கப்பட்ட தமிழறிவு வினாவிடை தொகுப்பு நூல்களும் வழிகாட்டலும் எமக்குள் இருந்த சிறு துணிவும் மிகக் குறுகிய காலத்துக்குள் முடிந்தவரை மனனம் செய்து முடித்து இயன்ற வரை போட்டிக்கு தயாராக முடிந்து இருந்தது.

கோட்டமட்ட போட்டிகள் ஆரம்பித்து ஏனோ மனனம் செய்த கேள்விக்கு விடை யளித்தும், மனனம் செய்யாத தெரியாத வினாக்களை விலக்களித்தும் போட்டி ஒவ்வொரு சுற்றாய் நகர்ந்து கொண்டிருந்தது. உண்மை என்னவெனில் போட்டி போட்ட எல்லா பாட சாலை அணிகளும் அனுபவமற்ற அணிகளாக இருந்தமை போட்டியை சவாலானதாகவும் சுவாரஸ்சியமாகவும் மாற்றி இருந்தது. எல்லா அணிகளின் சவால்மிகு போட்டிகளையும் துவம்சம் செய்த உண்மை இறுதி போட்டிக்குள் உள்நுழைத்தோம். இறுதிப்போட்டிக்கு முன்ப தாக இடம்பெற்ற எல்லா சுற்றுக்களிலும் அதிகூடிய வித்தியாசத்தில் வெற்றியீட்டிய நம்பிக்கை எமக்குள்ளே இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய நம்பிக்கை எமக்குள்ளே இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் உத்வேகத்தை தூண்டியது. நாம் கொண்ட உத்வேகம் இறுதி சுற்றில் எம்மை வெற்றி கொள்ள வைத்து வலயமட்ட போட்டிக்கு எம்மை அழைத்துச் சென்றது. வாழ்வில் எம் தலைமைக்கு கிடைத்த முதல் வெற்றி எம் அணிக்கு கிடைத்த வெற்றி இன்னும் ஜெயித்து முன்னேற வேண்டும் என எம்மை தூண்டியது.

கோட்டமட்ட போட்டியில் வெறும் ஆசிரியரின் நம்பிக்கை வார்த்தையுடன் சென்ற நாம் அப்போது வலயமட்ட போட்டிக்காய் நம்பிக்கையுடன் தனியொரு அனுபவத்துடனும்

உள் நுழைந்தோம். ஆசிரியரின் விடைத் தொகுப்புக்களும் மேலதிகமாக நாம் எல்லோரும் நாமாக தேடி கற்க ஆரம்பித்தோம். அப்போது தான் நாம் எவ்வளவு இன்னும் கற்க இருக்கிறது என்பதனையே புரிந்துகொள்ள முடிந்தது. கற்றது வெறும் கைமண்ணளவு என்பது ஏதோ உண்மைதான். ஐந்து அணிகள் நம்மோடு சேர்ந்தது என்பதை ஒரு பொருட்டாகவே நினைக்காத அளவிற்கு நமக்குள்ளே ஒரு நம்பிக்கை இருப்பினும் இன்னொரு புறம் ஐந்து அணிகளும் முதலிடம் பெற்று வந்த அணிகள் என நினைக்கும் போது பயமும் இருக்கத்தான் செய்தது. ஏனெனில் இது புது அனுபவமாய் எமக்குள்ளே இருந்தது. எனினும் நம்பிக்கையை தளரவிடாது முயற்சியுடன் கூட்டாக ஒன்றுபட்டு மற்றைய நான்கு அணிகளையும் புறந்தள்ளி வலயமட்டத்தில் முதலிடம் பிடித்து மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டது. மிகப்பெரிய அனுபவமாய் எமக்குத் தெரிந்தது. காரணம், இதுவரை எம்மில் யாருமே மாகாணமட்ட போட்டிகளில் பங்குபற்றிய அனுபவம் இல்லாதவர் என்பதே ஆகும். தொடர்ந்தும் அணித்தலைமைப் பொறுப்புடன் கூடவே தேசிய போட்டியிலே வெற்றி பெறும் ஆசையுடன் மாகாண மட்ட போட்டியிலே பங்குபற்ற தயாராகினோம். எம் தனிப்பட்ட ஒவ்வொருவரதும் முயற்சி. ஆசை எல்லாம் கூட அதுவாகவே இருந்தது. தேசிய மட்டத்தில் எம்முடைய புகழ் மட்டும் அல்லாது பொறுப்பாசிரியர், பாடசாலையின் பெயரும் புகழும் மேலோங்க எங்களாலும் முடிந்த அந்த வெற்றியை பெற்றுத்தரவேண்டும் என்ற பெரும் முயற்சியோடு தமிழறிவு அதிகம் பெற்று மாகாணபோட்டியில் பங்குபற்றினோம். எம்மோடு போட்டியிட்ட பதினொரு அணிகளையும் அதிககூடிய புள்ளி வித்தியாசத்தில் வெற்றி கொண்டு தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகிய தருணம் மறக்கமுடியாத அனுபவம் ஒன்றே அனைவரதும் பாராட்டை பெற்ற அணியாக தமிழறிவு வினாவிடை போட்டிக்கான வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அணியாக செல்வதை இட்டு பெருமகிழ்ச்சி ஒரு புறம் இருக்க. முதல் தடவையாக தேசிய போட்டிக்காக கொழும்பு செல்வது அதிலும் கல்வி அமைச்சின் அலுவலகம் என்பதில் பெருமையாகவும் கர்வமாகவும் உணர்ந்தோம்.

கொழும்புப் பயணம் என்பதில் எல்லோருக்கும் தெரிந்ததே. ஞாயிற்றுக்கிழமை போட்டிக்காய் முதல்நாள் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஒரு புறம் இருக்க. புகையிரத பயணம், இதர புத்தகங்கள் என அன்றைய நாள் ஓடிவிட அடுத்தநாள் இறுதிக்கணங்களை எதிர்பார்த்தபடி தூங்காத விழிகளுடன் இராப்பொழுது கழிந்தது. போட்டிக்காக கொழும்பு வந்துவிட்டோம் என்பது ஒருபுறம் இருந்தாலும் எம்மை இத்தனை தூரம் வழிகாட்டி இதுவரை கூட்டி வந்த பொறுப்பாசிரியர் எம்முடன் கொழும்புவர முடியாது போகவே சற்று உத்வேகம் குறைந்தே காணப்பட்டோம். எனினும் ஞாயிற்றுக்கிழமை காலை அவரின் நம்பிக்கை வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவருக்காக எம்மை பாடசாலைக்காக ஒரு தேசிய வெற்றியை பெற்றே ஆகவேண்டும் என்பதே பறைசாற்றி நின்றது.

எனினும் எம் கூடவே பயணம் செய்த கல்லூரி முதல்வர், ஆசிரியை மற்றும் வாழ்வக ஆசிரியர் ஆகியோரிடம் உற்சாக வார்த்தைகள் எம்மை உத்வேகப்படுத்தின. எம்முடன் போட்டியிட எட்டு அணிகளுடன் போட்டி நடைபெறும் இடத்திற்கு நுழைந்த தருணம் முதல்போட்டி விதிமுறை பற்றிய ஆலோசனை பின் போட்டியில் சுற்றுக்கள் ஆரம்பமாகின. பெரிதும் எதிர்பார்த்து இருந்தது போலவே வெற்றிக்கனி சமைத்தவாறே விரைவாக முன்னேறி சென்றோம். பலத்த விறுவிறுப்பாய் ஆரவாரத்துடன் சென்ற போட்டி இறுதியின் சமனிலையில் முடிவுறுத்தப்பட்ட நிலையில் வெற்றிபெறும் அணியை கட்டாயம் தெரிவு செய்யவேண்டும் என்ற காரணத்தால்

ஒவ்வொரு அணிக்கும் தலா பத்து வினாக்கள் எம்மை வீழ்த்துவதற்கென்றே எடுக்கப்பட்ட வினாக்கள் மட்டுமன்றி பாரபட்சம் கொண்ட வினாக்கள் என்பதையும் புரிந்து கொண்ட தருணம் அது.

கனவை தகர்த்தெறிந்த தருணம் வாழ்வில் வெற்றி மட்டுமே நிரந்தரம் இல்லை. தோல்வியையும் ஏமாற்றத்தையும் சந்திக்கும் மனப்பாங்கு எமக்குள் வரவேண்டும் என்ற மிகப் பெரு வாழ்க்கை பாடத்தை ஏற்படுத்தியது. தோல்வியை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை எனினும் என்ன செய்வது அதனை ஏற்று தேசியப்போட்டியில் இரண்டாமிடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்து யாழ்ப்பாணம் திரும்பினோம்.

பாடசாலை வாழ்வை இனிவரும் காலங்களில் மீட்டுப்பார்க்கும் போதெல்லாம் இது ஒரு மனவருத்தம் மிக்க வாழ்க்கையின் பெரிய அனுபவம் ஆக காணப்படும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை

# மகிழ்ச்சி

மனிதன் வாழ்வில் அடைய விரும்புவது
மட்டில்லா மகிழ்ச்சி — அந்த
மகிழ்ச்சிக்காய் அவனும் அனுதினம் எடுக்கிறான்
விட்டுவிடா முயற்சி

முயற்சி இல்லையேல் எவராலும் இயலாது
எட்டிவிட உயர்ச்சி — எதிலும்
உயர்ச்சி இருந்தால் மட்டும் வாழ்வில்
கிட்டிவிடும் மகிழ்ச்சி

பணத்தாலும் பொருளாலும் பகட்டான உடையாலும்
பெறுவதல்ல மகிழ்ச்சி — மலர்
மணத்தாலும் உன ரசந் தனத்தாலும் ஜவ்வாதம்
தருவதல்ல மகிழ்ச்சி

தனத்தாலும் உயரா சனத்தாலும் ஊழலும்
தருமல்ல மகிழ்ச்சி — நல்ல
குணத்தாலும் குறைகாணா
மனத்தாலும் என்றுமே வரும் நல்ல மகிழ்ச்சி

பொல்லாதவன் என்று பிறர் கூறுகையிலே
கிடக்கின்றதோ இகழ்ச்சி — கல்வி
கல்லாதவன் என்று இழித்துரைக்கையிலே
கிடப்பதுவோ தாழ்ச்சி — அறிவு
இல்லாதவன் என்று நகைத்திடும் - போதிலே
கிடைத்திடுமோ மகிழ்ச்சி — அறி
வில் ஆதவன் என்றே வாழ்த்திடும் போதிலே
கிடப்பதுவே மகிழ்ச்சி

பறப்பதை பாயந்து பிடிப்பதற்கு நீ
துடிப்பது வீண் முயற்சி
இறப்பதை மனிதன் தடுப்பதற்கின்னும்
எய்தவில்லை வளர்ச்சி
இருப்பதை விடுத்து உழைப்பை நம்பிடில்
என்றுமே உயர்ச்சி — நீ
இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ்வதே
இணையில்லா மகிழ்ச்சி

எல்லாமே விதியென இருக்காது செய்திடு
செயல்களிலே புரட்சி — நீ
எதுவந்த போதும் எதிர்கொள்ள வாழ்வில்
ஏற்படும் மறுமலர்ச்சி

பொல்லா மனிதரைப் புரிந்திட தினம் கொடு
மனதுக்கு நற்பயிற்சி - இவை
இல்லாது வாழ்ந்திட எண்ணி எப்போதும்
கிடைக்காது மகிழ்ச்சி

பா.சாங்கவி
தரம் - 9D

# Internet

**N.Ranushiya**
**Arts 2020**

## Introdution

Internet is theComputer – based global information system. The internet is composed of many interconnected computer networks. Each network may link tens, hundreds or even thousands of computers enabling the to share information with one another and to share computational resources such as powerful super computer and derabases of information. The internet has made it possible for people all over the world to communicate with one another effectively and inexpensively. Unlike traditional broad casting media, Such as radio and television, the internet, make information available to others, or sell products with a minimum over head cost.

The internet has brought new ipporunities to government business, and education. Government use the internet for internal communication, distribution of information, and automated tax processing. In addition to offering goods and services online to customers, business people use the internet for communicating through electronic mail (E-mail), for news and re- search information, shopping, paying bills, and online banking educational institutions use the internet for research and to deliver courses and course material to students.

Use of the internet has grown termendousy since its inception of the internets. Success arises from its flesibility. Instead of restriction component net works to a particular manufacture of particular type, internet technology allows inter connection of any kind of computer network. No networks is too large or too small, to fast or too slow to be inter connected. Thus, the internet includes in expensive netwocks that can only connect a few computers within a single room as well as expensive networks that can span a continent and connect thousands of computers.

Internet service providers (ISPS) Provide internet access to customers usually for a monthly fee. A Customer who subscribes to an ISP's Service uses the ISP'S network to access the internet becausr ISPs others their services to the general public, the networks they operate are known as public access networks. In the united states, as in many countries, ISP's are private companies in countries where telephone service is a government regulated monopoly, the government often controls ISP's

An Organization that has many computers usually owns an operater for private network, called an intranet, which connects all the computers within the organization. To provide internet servie the organization connects its intranet to the internet unlike public access networks, intranets are restricted to provide security only authorisd computer at the organization can connect to the

intranet and the global Internet the inside the organization to exchange information but keep the information confidential and protected from out siders.

The internet has doubled in size 9 to 14 months since it began in the late 1970. In 1981 only 213 Computer were connected to the internet by 2000 the number had grown to more than 100 million. The current number of people who use the internet can only be estimated. One survey found that there were 61 million internet users world wide at the end of 1996, 18 million at the end of 1998 and 407 million by the end of 2000. Some analys is said that the numbers of uses was expected to double again by the end of 2002.

**Uses of the Internet.**

Before the internet was created the U.S military had developed and deplayed communication networks including a networks known as Arpainet. ises of the networks were restricted tp military personal and the researchers who developed the technology. Many people regard the ARPANET as the precuros or of the Internet from the 1970S until the late 1980s the internet was a U.S government funded communication and research tool restricted almost exclusively to academic and military uses. It was administered by the national, Science foundation (NSF) at universities. Only a handful or research had access. In the 1980s the NSF developed an acceptable use policy that relaxed restrictions and allowed faculty at universitier to use the internet for research and scholary activities. However the NSF policy prohibited all commercial uses of the Internet under this policy advertising did not appear on the internet and people could not charge for accrss to internet content or sell prodects or servicer on the internet.

By 1995 however the NSF ceased its administration of the internet. The internet was private and commercial usr wss permitted this move concided with the growth in popularity of the world wide web (www) which replaced file transfer ad the application used for most internet traffic the difference between the internet and the web is similarr to the distinction between a highway system and package delivery. Services that use the highways to move cargo from one city to another the internet is the highway system over which web traffic and trffic from other application move. The web consists of programs running on many computer that allow a user to find and display multimedia documents. Many analys is attribute the explosion in use and popularity of the internet to the visual nature of web documents. By the end of 2000 web traffic dominated the internet more that 80 percent of all traffic on the the internet come from the web.

Compainies, individuals, and institutions use the internet in many ways companies use the internet for electronic commerce, also called. e-commerce including advertising, Selleing, buying, distributing products and providing customer service, In addion companies use the internet for business to – business transaction, such as exchanging financial information and accessing complex data

bases. Busineses and institutions use the internet for voice and vedio conferencing and other forms of communication that enable people to telecommute. The use of electronic mail (e-mail) speeds communication between companies, among co-workers and among other in dividulas media and enterainment companies use the internet for online news and weather servicer and to broad cast audio and video, including live radio and television programmes online chat allows people to carry on discussions using written text. Instant messaging enables people to exchange text message in teal time. Scientists and scholors use the internet to communicate with collegues, perfom research,distribute lecture notes and course material to standents, and publish papers and articles, Individuals use the internet for communication, entertainment, finding information and buying and selling goods and services.

# Mobile Phone

- Mobile phone is the tiniest and simplest communicative device to get across messages around the world as well as being helpful to communicate within the locality.
- As people have found it easy to carry where ever they go and talk to anyone at any time from any place this simplest device has become more popular the other devices.
- With the advent of mobile phone communication become more reliable, as one who talks to another person is able to find the caller's details.
- Besides being the reliable deice, a caller can get many benefits by using a mobile phone. In the past a caller couldn't find another caller's details but now modern mobile phones tell us who called when we were absent throw missed calls.
- Mobile phones act as good savers hundreds of numbers can be saved as well as other forms of information such as photos, videos and studio can be saved.

**N.Ramatheepan**
**2020 commerce**

# பயன்தரு பனைமரம் பாழ்பட்டு போகிறதே!

ஆணிவேர் ஊன்றி ஆயிரம் மரங்கள் இருந்தாலம்
நாருருவேர் கொண்டு நாவூறும் பயன்தந்த மரம்
யாழ் கண்ட பெரும் அடையாளம் - இன்று
பாழ் பட்டுப் போகிறதே இறைவா!

காய் கொண்டு கால காலமாய் கருவென
நெடுத்து நின்ற நம் கற்பக தருக்கள் - ஏதொ
நோய் கொண்டு தலையிழந்து உயிரற்று
ஆசையாத உடலாக வெறும் மரம் கொண்டு

பனை ஓலை வெட்டி விரித்து அடுக்கி
காயப்போட்டு வேலி அடைத்த காலமெல்லாம்
இனிவரும் சந்ததி காணுமோ! — அறியார்
அவர் இனி அப்படியொரு வேலியை

மண்படையிட்டு பனம் விதைகள் அதனில் இட்டு
மண்மூடி காத்திருந்து காலம் வரும் போது
கிண்டிக் கிழங்கெடுத்து பல தடைவ புசித்திருந்தோம் - இனி
வரும் சந்ததி அதை காணுமோ! இனியேனும் தேடுமோ!

பனை மரத்தோடு ஒன்றித்த சந்ததி இல்லாமல் போகுதே
இனிவரும் காலம் பனை மரங்களும் இல்லாமல் போகுதே
எதிர்காலம் சொல்லும் காணவும் முடியாமல்
கற்பகத் தருக்கள் முழுதாய் அழிந்து போகுதே.

நம் மண் பார்த்து நம் வனம் காத்த கரும்பனைகளை
நாமும் அறியாது பாதுகாத்தே - இனிவரும்
சந்ததி தலை நிமிர்ந்து நடந்திடவே இனியாவது
ஏதேனும் வழி....வாரீர்!!

பு.ரதீபா
13(2020)A/L
கலைப்பிரிவு

# மனங்கவர்ந்த அதிபர்

**S.Questala**
**(2020) Commerce**

எங்கள் அதிபர் 2016ம் ஆண்டு எமது பாடசாலையில் தடம் பதித்த நாளில் இருந்து எமது பாடசாலை ஒவ்வொரு வளர்ச்சிப்படிகளை சந்தித்து வருகின்றது. இவர் நான் சந்தித்த அதிபர்களில் மனங்கவர்ந்த அதிபராவார். ஒரு நாள் எங்களிற்கு ஒரு பாடம் நடைபெறவில்லை சத்தமிட்டுக்கொண்ட நாம் திடீரென்று அமைதியானோம். காரணம் எமது அதிபர் வந்து கொண்டிருந்தார். என்ன பாடம் என்று கேட்டுக்கொண்டு எமது வகுப்பறைக்குள் நுழைந்தார். அமைதியின் சொரூபமாய் எமது வகுப்பறை இருந்தது. வகுப்பறைப் பதிவேடுகளைப் பார்த்த பின்னர் ஒவ்வொருவரிடமும் கேள்விகளையும் எழுப்பினார். ஆனால் எங்களில் சிலர் விடையளிக்கத்தவறிவிட்டனர். இருந்தும் புன்னகித்த வண்ணமே எம்மிடம் கேட்ட கேள்விக்கான பதிலையும் கூறி நன்றாக படிக்க வேண்டும் என்றும் பாராட்டிச்சென்றார்.

இப்பாடசாலையில் எமக்கு பல வசதிவாய்ப்புக்களை உருவாக்கி தந்தவர் எமது அதிபர் ஆவார். அவரைப்பார்த்து பயந்த, பிரமித்த நாட்களும் உண்டு. சுறுசுறுப்பும் கம்பீரமும் கொண்ட ஒரு மனிதர் ஆவார். தண்டனை கொடுக்க வேண்டிய இடத்தில் தண்டனை கொடுத்தும் பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டியும் தனது கடமைகளைச் சிறப்பாக செய்த ஒருவர் ஆவார். இவர் பாடசாலையின் தலைவராக, பேச்சாளராக, தகவல்களை வழங்குபவராக, வளஒதுக்கீட்டாளராகவும் செயற்படுகின்றார். இவர் உண்மையிலேயே ஒரு முகாமையாளராகச் செயற்படுகின்றார். ஒவ்வொரு மாணவர்களிற்கும் இவர் என்னுடைய அதிபர் என்று ஒரு அதிபர் காணப்படுகின்றார். அவ்வாறே நான் என்னுடைய அதிபர் என்று கூறிக்கொள்வது திரு.தில்லையம்பலம் வரதன் Sir அவர்களே. என்னுடைய மனம் கவர்ந்த அதிபரும் அவரே. இவ்வாறு பணிபுரிந்த அதிபரிற்கு வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகுக.



# தாழ்வு மனப்பான்மை யாருக்கு?

சா. பிறின்சியா
வர்த்தகப்பிரிவு

தாழ்வு மனப்பான்மை மனிதனிடத்தே தோன்றும் ஒரு இயல்பான மனப்பாங்காகும். இம்மனப்பாங்கு தோன்றுவதற்கு மதிப்பீடும் ஒரு காரணம். வேற்றுமை தோன்ற மூலகாரணமாகின்ற மதிப்பீடானது தன்னம்பிக்கையே. வளர்க்க வைப்பதனாலும் பலவீனத்திற்கு உரமூட்டுவதனாலும் மனித நடத்தைகளில் மாற்றம் ஏற்பட்டு தன்னை அறியாது தாழ்வான செயல்களை ஆற்றவதற்குத்தூண்டுகின்றது. இதனால் முயற்சிகளும் சிந்தனைகளும் திசைதிருப்பி தாழ்ந்த போக்குகளிற்கு இடமளிக்கின்றது. சிலரை உயர்த்தியும் சிலரை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றது. அதாவது மதிப்பீட்டால் உயர்ந்தவர்களும் நிலையிழந்து தாழ்ந்தவர்களும் இருந்து கொண்டே இருக்கின்றார்கள்.

தன்னைச்சிறந்தவர் போற்றுதற்குரியவர் மிகப்பெரியவர் என நினைப்பது மற்றவர் தன்னை அவ்வாறு பெருமைப்படுத்த வேண்டும் என விரும்புவது என்பன தற்பெருமைகள். இவ்வாறு இருப்பவர்கள் பெருமை கிடைக்காதவிடத்து விரக்தியடைந்து தாழ்வு மனப்பான்மைக்கு அடிமைப்பட்டு செய்யத்தகாதவற்றை செய்கின்றனர். **பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகின்றார்** "சுகம் - துக்கம், இன்பம் - துன்பம், அழகு- அவலட்சணம், செல்வம்- வறுமை, புகழ்ச்சி - இகழ்ச்சி, மானம் - தன்மானம், நட்பு – பகைமை என எத்தகைய செயல்களும் வாழ்வோடு நிகழ்கின்றன. இதனால் விருப்பு வெறுப்புக்கள் தோன்றுகின்றன. இச்செயற்பாடுகளில் சமநிலையை ஏற்படுத்தி இயல்புகளிற்கு ஏற்ப எங்களை மாற்றி எந்தவொரு பாகுபாடான நிலையையும் தாங்கி கொள்ளும் போது முயற்சிகள் வெற்றியடைகின்றன.தாழ்வான போக்குகள் அகற்றப்படுகின்றன."

மற்றவர்களின் மதிப்பீடுகளில் நாம் வாழ்ந்து போகின்றோமோ அல்லது நம்மை நாமே குறைத்து மதிப்பிடுகின்றோமோ? என பலவித தூண்டுதல்களும் பலவீனங்களும் நம்மை தாக்குகின்றன இவற்றுக்கு உந்து சக்தியான வேற்றுமையால் தோன்றும் இடர்கள் இனங்கண்டு சமரத்தை காணுதல் வெற்றியாகும். எல்லாத் தீய செயலும் மனிதர்களிடத்தே தோன்றுவதற்கு காரணம் தாழ்வு மனப்பான்மையே ஆகும். எல்லாப் பொருட்களின் மீதும் சூரிய வெளிச்சம் சமனாகின்றது. அவ்வெளிச்சத்தை பயன்படுத்திக்கொள்ளுதல் அந்தந்தப் பொருட்களின் இயல்பைப் பொறுத்தது ஆகும். அவ்வாறே வேற்றுமைகளால் மனிதனுள்ளே புகும் மதிப்பீடு இயல்புகளை பொறுத்து சமனாக வாழ்தல் வேண்டும்.

வேற்றுமை காண்பது அறியாமையின் விளைவாகும். தாழ்வு மனப்பான்மையை அகற்ற வேண்டுவதெல்லாம் பயிற்சியும் எச்சரிக்கையுமாகும். நிலத்திலே துள்ளி வீழ்ந்து வருகின்ற மீனானது அருகிலே நீர் இருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளாவிட்டால் நாம் படும் துன்பத்திற்கும் துயரத்திற்கும் அளவேயில்லாமற் போய்விடும். வேற்றுமையிலே ஒற்றுமையை கண்டு தாழ்வு மனப்பான்மையில் இருந்து விலகி சமரசத்தால் உயர் வாழ்வை பெறுவோம்.

# நினைவுகள்

சின்னச் சின்ன சிறுவர்களாய்
துள்ளித் துள்ளி பள்ளி வந்து
கல்வி பயின்றோம் அன்று நாம்
கலையின் வளர்ப்பிடமாய்
ஒழுக்கத்தின் இருப்பிடமாய்
அறிவின் சிறப்பிடமாய்
எம் பள்ளி முற்றத்திலே

இனப் பிரச்சனையாம் - எங்கள்
இன்பத்திற்கு வந்தது இன்னல்
புள்ளிக்கூட்டில் துள்ளித் திரிந்த
பறவைகள் நாம்
பறந்து போனோம் பல திசைகளில்
பதுங்கு குழிகளில் பல நாட்கள்
பதுங்கினோம் பயத்தால்
தினம் தினம் கதறி அழுது
கண்ணில் நீர் வற்றிய காலம் அது

தறப்பாள் கொட்டிலிலே
அரைவயிறு பசிபோக்க
அடிபட்டு அழித்துக்கொண்டோம்.
நம்மை நாமே
பசிபோக்கப் பழஞ்சோறு
போதும் என்ற காலம் அது
பெற்றோரை இழந்த பிள்ளைகள்
பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள்
உறவுகளை இழந்த உயிர்கள் என
இழப்பின் உறைவிடமாய் அன்று எம் மண்

ஆயுதங்கள் சாய்ந்தது
இழப்புக்கள் ஓய்ந்தது
பாதுகாப்பாய் வந்தோம் முகாமில்
சிறுசிறு குறைகளுடன்
நிம்மதிப் பெருமூச்சுடன்
அமைதியான வாழ்வு - இன்று
மீண்டும் நம் மண்ணில் அழியாத
நினைவலைகள் தடங்கள்
நெஞ்சில் நிழலாட
சொந்த மண்ணில்
சேர்ந்து வாழ்கின்றோம் - இன்று

காலம் மாறினாலும்
இழப்புக்களை மறக்க மறுக்க முடியாமல்
இன்று எம் கல்விக் கூடத்தில்
கலகலப்பாய் மீண்டும் நாம்
எம் நட்பு பறவைகளுடன்
காணவில்லை சிறு பறவைகளை இன்று
அவர்கள் நினைவுகள் தினம் தினம்
பொங்கிட மௌனமாய் அழுகின்றோம்
புதிய புதிய பலருடன்
புரிந்துணர்வுடன் கற்கின்றோம் இன்று

எமக்காய் நம்மை அர்ப்பணிக்கும்
ஆசானின் சேவை கண்டு
உவகை கொள்கின்றோம் இன்று
மனதில் மங்கா நினைவலைகள்
இருந்த போதும் இன்று
சந்தோசமாய் வாழ்வின்
வண்ணமான பள்ளிக்காலத்தில்
சிட்டாய் பறக்கின்றோம்
சிகரமாய் மிளிரும் - எம் கல்லூரி
அன்னையுடன்....

ச.கௌசிகா
கலைப்பிரிவு
**A/L (2020)**



இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்க போட்டியில் இரண்டாம் சுற்றில் பங்குபற்றிய 13 வயது துடுப்பாட்ட அணி.



இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்க போட்டியில் இரண்டாம் சுற்றில் பங்குபற்றிய 19 வயது துடுப்பாட்ட அணி.



மாகாண மட்ட எறிபந்துப் போட்டியில்
மூன்றாம் இடத்தினைப் பெற்ற 17 வயது அணி



மாகாண மட்ட எறிபந்துப் போட்டியில்
முதலாம் இடத்தினைப் பெற்ற 17 வயது அணி

# Communication then and now

**S.Niranjali**
**A/L (2020) Arts**

Communication means a connection with two or more than two persons. It is a process of transferring from one to another.

Through the Communication we exchange our thoughts, Ideas, opinions and other information from others. Communication helps us to build up our relationship and friendship. We not only improve our knowledge but also learn other languages. We fulfill our needs easily. So it is clear that as humans, we have to communicate with others to fulfill our needs and communication is essential in human life. Because of this man has invented many types of equipments of communication such a newspapers, Megazines, books, radios, televisions, telephones, fax, internet, e-mails, and satelights etc..

In the past, people communicated in many ways such as making colourfull smokes, setting fire, beating drums, playing dramas and sending messages with the help of the pigeons etc. Though they could not get information immediately. But today we get information with out any delay with the help of modern equipments of Communication. So we can say that Communication among past people was very difficult as languages were not also improved among them.

But in this period communication methods have developed a lot thay are very simple. They bring the people very closer to us. We often use mobile phones in this era. It is easy to contact others. Today here is no one without a mobile phone. Every one has got mobile phones. The internet is a network of computers that offers information to people. With the use of the internet we can communicate with the person who is livinging abroad not only hearing his voice but also seeing his face. Students clear their doubts with the help of the internet. The SMS and the MMS are the shortest and easiest ways to exchange messages. In few minutes people can know where their children are and what they are doing there when they are away. The E-mail is also away of sending electronic message or data from one computer to another computer. The satelight is an electronic device that is sent in to space and moves around the earth or another planet for a particular purpose. Using it we can collect information from other planets. We are able to save our lives from dangers and disaster.

At times the use of these equipments creates many probles as well. They lead people to behave badly and make the students to waste their time.

Although there are disadvantages in communication it is developed with the time. Because it changes our life style and develops our lives.

The development of communication helps the world forits development. So it is a continusous process with our inventer's inventions. They have made this period a multimedia era. Anyhow all the communication equipment are't very valuable to us. So, it is our duty to respect and keep them for our future generation too.

# அறிஞர்களின் சிந்திக்க வைக்கும் சிந்தனைகள்

தே.பிரசாத்
A/L (2020) Arts

1. பகைவனின் புன்சிரிப்பை விட நண்பனின் கோபம் பல மடங்கு மேலானது.
   - ஜேம்ஸ் ஹோபெல்
2. நல்ல யோசனை தோன்றும் போது அதை உடனே செய்து முடியுங்கள் வெற்றி உங்கள் பக்கம்.
   - ஸ்டோன்
3. எந்தத்தொழிலிலும் இழிவில்லை தொழில் எதுவும் செய்யாதிருப்பது தான் இழிவு
   - டால்ஸ்பாய்
4. தம் கால்களால் பறவைகள் மனிதனிடம் சிக்கிக்கொள்ளம் தன் நாவால் மனிதன் துன்பத்தில் சிக்கிக்கொள்வான்
   - தோமஸ் புல்லர்
5. எவனிடம் உன் எண்ணங்களை வெளிப்படையாகச சொல்ல முடியுமோ அவனே உன் உண்மையான நண்பன்
   - எமர்சன்
6. அன்னையின் இதயமே குழந்தைகளின் பள்ளிக்கூடம்
   - டீச்சர்
7. தன்னைத் தனியே எவனொருவன் நிற்கத் துணிகிறானோ அவனே உலகில் வலிமை மிக்க மனிதன்
   - மத்தியூஸ்
8. பொறுமை இல்லாதவர்கள் நீதிமான்களாக இருக்க முடியாது
   - மார்க்ஸ்
9. அளவில்லா சாதனைகளைத் தாங்கிச் சாதனைகள் படைக்கின்றவன் தான் மேதை
   - ஹோம்கின்ஸ்
10. உயர்ந்த எண்ணங்களை உடையவர் ஒரு நாளும் துன்பமடையார்
    - காந்தியடிகள்
11. ஒரு மனிதன் பிறக்கும் போது தான் அழுது கொண்டு மற்றவர்களை சிரிக்க வைப்பான் இறக்கும்போது மற்றவரை அழவைத்துச் செல்கிறான்.
    - நீரோ மன்னன்
12. இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால் கண்ணுக்கு தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பைச்செலுத்த இயலும்..
    - அன்னை திரேசா
13. தேசப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று இல்லாதோர் இருந்தால் என்ன? இறந்தால் என்ன? என்று வினவியவர்
    - சி.வை.தாமோதரம் பிள்ளை
14. நாம் ஒருவரை தொலைபேசியிலோ அல்லது நேரிலோ "ஹலோ" என்று விழிக்க காரணமாக இருந்தவர்
    - அலெக்ஸாண்டர் கிரகம்பெல்
15. கிராமத்தில், நகரத்தில், படித்த குடும்பத்தில், படிக்காத குடும்பத்தில் இருந்து வந்தாலும் உங்களால் வெற்றியடைய முடியும். நீயாக இருந்தாலும் உழைப்பால் அறிவால் வெற்றியடைவாய்.
    - அப்துல்கலாம்

# பூகோள வெப்ப அதிகரிப்பும் அதன் விளைவுகளும்

சி.சாகித்தியன்
தரம் 10D

மனித நாகரீக வளர்சியின் பின் சனத்தொகை அதிகரிப்பதுடன் நாடுகளிடையே உற்பத்தியில் போட்டி போட்டு முன்னேற்றம் கண்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் சில வல்லரசு நாடுகள் தமக்கிடையே யான கைத் தொழில் போட்டிகளின் காரணத்தால் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் ஏற்பட்டன. இந்த அறிவியல் வளர்ச்சியும் கைத்தொழில் புரட்சியும் ஒன்ற சேர்ந்து நாடுகளிடையே போட்டிகளை ஏற்படுத்த இந்த போட்டி நிலமைகள் காரணமாக சூழல் சமநிலையிலும் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அந்த வகையில் இன்று உலகளாவிய ரீதியில் இயற்கைக்கு சவாலான விடயமாக இருந்து வருவதும் மனிதர்களும் ஏனைய உயிரினங்களுக்கும் சவாலாக அமையும் ஒரு விடயமாக கருதப்படுவதே பூகோளவெப்பம் அதிகரிப்பு ஆகும்.

ஆரம்ப காலங்களிலே பூகோள வெப்பம் அதிகரிப்பதற்கு இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக இருந்தாலும் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து மனித நடவடிக்கைகளும் பச்சைவீட்டு வாயுக்களுமே காரணமாக அமைவது மிகமுக்கியமான விடயமாகும்.

**பூகோள வெப்ப அதிகரிப்பு என்றால் என்ன?**

20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து பூமியின் நிலம்கடல் என்பவற்றில் இருந்து சற்று மேலானதாகப்படும் வளியின் வெப்பநிலை கூடியிருப்பதுடன் அச்செயற்பாடு தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால் புவி வெப்பமடைதல் ஆகும். 20ம் நூற்றாண்டுகளின் பின்னர் சராசரி மேற்பரப்பு வெப்பநிலை 0.6°c அதிகரித்து வந்து உள்ளமையும் வெப்ப அதிகரிப்பாக கொள்ளப்படுகிறது.

**ஆரம்ப காலங்களில் இருந்து புவி வெப்ப நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள்?**

புவியின் வெப்பநிலை காலத்துக்கு காலம் அதிகரித்து வருவதை நாம் அறிந்திருப்போம்.அந்த வகையில் வரலாற்று காலங்களில் காலநிலை மாற்றம் அடைந்து வந்துள்ளது. 1550 – 1850 காலத்தில் சிறுபனிக்காலம் (Little Ice Age) காரணமாக பூகோள காலநிலை மிககுளிராக காணப்பட்டது. மாரி காலங்கிளல் மிக குளிராகக்காணப்பட்டது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் 0.5°c வெப்பம் அதிகரித்தது. 1910 – 1930 லும் 1970 இன் பின்னரும் வெப்பநிலை விரைவாக அதிகரிப்பினை காட்டுகிறது.

1950 – 1993 காலங்களில் நாளாந்த இரவு நேர சராசரி வெப்பநிலை 0.74°C + 0.18°C ஆல் அதிகரித்து வந்துள்ளதாகவும் அதற்கு எஸ்லினோ தாக்கம் முக்கிய பங்கு வகிப்பதை ipcc கூறுகிறது. 20ம் நூற்றாண்டின் கடைசி 50 ஆண்டுகளில் வைப்பநிலை அதிகரிப்பு வீதம் இரட்டிப்பு ஆகிஉள்ளது. (10 ஆண்டுகள் 0.13°C + 0.03°C என்பதுடன் 10 ஆண்டுகளுக்கு 0.07°C + 0.02°C என குறிப்பிடலாம்) அந்த வகையில் புவியின் நகர் புற வெப்பநிலையானது 1900 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு 0.002°c என்ற வீதத்தில் புவியின் வெப்பநிலை அதிகரித்துள்ளது. செய்மதி ஆய்வுகளின்படி வெப்பநிலை 10 ஆண்டுகளுக்கு 0.12 – 0.22°C வரை கூடியதுடன் 1850 ஆண்டு காலத்துக்க முந்திய காலத்தில் மத்தியகாலமான வெப்பகாலகட்டமாக அல்லது சிறு பனியுகம் ஆகிய உள்ளூர் ஏற்ற தாழ்வுகள் தவிர்த்துவிடத்து ஒப்பீட்டளவில் சராசரி வெப்ப நிலை கூடுதல் மாற்றம் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

அத்துடன் கோர்டாலின் விண்வெளி ஆராய்ச்சிக்காக நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி 1800 ஆண்டுகளின் பிற்பகுதியின் வெப்பநிலை தொடர்பான நம்பிக்கையான பரவலான கருவியல் அளவீடு கிடைக்கப்பெற்றதில் இருந்து 1998ம் ஆண்டு வெபப்நிலை கூடிய ஆண்டாகவும் அடுத்தபடி 2005ம் ஆண்டு 2ம் இடத்தை பிடித்தது.

1979ம் ஆண்டு முதல் நிலத்தின் வெப்பநிலையை விட சமுத்திரவெப்பம் 2 மடங்கு கூடியுள்ளது. நிலத்தை விட கடல் வெப்பம் கூடுதலாக காணப்பட்ட போதிலும் கடல்வெப்ப குழம்பு அதிகமாக காணப்படுவதால் அவற்றில் வெப்பம் நிலத்தை விட குறைவாகவுள்ளது. 1990 – 2100 காலத்தில் 1.4 – 5.8°c ஆக அதிகரிக்கும் என ipcc மதிப்பிடுகிறது.

புவி வெப்பம் அதிகரிப்பதற்கான காரணங்கள் இயற்கை, மனித செயற்பாடுகள் ஆகும். இயற்கை காரணங்களாக எல்லினோ தாக்கங்கள் எரிமலை வெடிப்புக்களின் போது ஏற்பட்ட $Co_2$ வெளியேற்றம் சூரிய புள்ளியில் ஏற்பட்டமாற்றம் துருவ பகுதிகளில் இருந்து வெளிப்படும். CFC வெளியேற்றம். Ipcc ன் கருத்துகளின்படி 1700களின் நடு ஆண்டுகளில் $CO_2$ மெதனிக் அளவு முறையே 365, 1485 ஆக அதிகரித்துள்ளது.

மனித செயற்பாடுகளாக காடழிப்பு $Co_2$, $So_2$, CFC போன்ற பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றம். பயிர் செய்கைக்குப் பயன்படும் கிருமிநாசினி பீடைநாசினி என்பவற்றின் பயன்பாடு. அதிகரிப்பு அணு ஆயுத பரிசோதனை யும், அணு ஆயுத உற்பத்தியும், வாகனந்தனில் வெளிப்படும் கவண்வாயுக்கள். இச்செயற் பாட்டால் ஏற்படும் விளைவுகளாக பனியாறுகள் பின்வாங்குதல், வடதுருவ பகுதியான ஆட்டிக்வட்டம் சுருங்குதல், சீரற்ற காலநிலை மாற்றங்கள், சூறாவளி புயல்கள் மற்றும் அயன சூறாவளி, முருகைகற் பாறை தொடர் பாதிப்படைதல், இயற்கை தாவரங்களின் ஒளி தொகுப்பில் பதிப்பு ஏற்படுத்தும் தரைகீழ்நீர் உவர்த்தன்மை அடைதல், ஈரநிலங்கள் பாலை வனங்களாக மாறும் அயனகாட்டு உயிர் சூழல்களில் தாக்கம் ஏற்படும் கடல்மட்ட அதிகரிப்பால் கழிச்சல்கள், அடையல்கள் வற்றுபெருக்கு அசைவுகளில் பாதிப்பு ஏற்படுதல்.

வெப்ப அதிகரிப்பை கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள். மீள சுழற்சி வலுத்திசை பயன்படுதல் அதனுடன் இணைந்த தொழிநுட்பத்தை பரவலாக்குதல் உயிர் வாயு பயன்பாட்டை விரிவுபடுத்தல். புதிதாக உருவாக்கப்படும் கைத்தொழில் மையங்களை வரையறுத்தல் (G.H.G) வெளியேற்றம் தொடர்பான செயற்பாட்டை கடுமையாக செயற்படுத்தல். வலு சக்தியை வினைத்திறனாக பயன்படுத்துவதில் அதிக அக்கறை காட்டல். திண்ம கழிவுகளை உரியவகையில் முகாமை செய்து சூழலை பாதுகாத்தல்.

மோட்டார் வாகனங்களில் இருந்து வெளியேற்றப்புடும் $Co_2$ அளவைக் கட்டுப் படுத்தல். இந்த நடவடிக்கைகளை செயற்படுத்தி பூமியை பாதுகாப்போம்.

# ஊடகங்களின் இன்றைய நிலை

வி. கயல்விழி
A/L (2020) Arts

ஓர் சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பல வழிமுறைகள் காணப் படுகின்ற போதிலும் அவற்றில் ஊடகத்துறை யானது ஒரு சிறந்த விழிமுறை என்றால் அது மிகையாகாது. ஒரு சமுதாயத்தை ஒரு சிறந்த முறையில் உருவாக்குவதற்கும் மக்களிடையே பல விடயங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்து வதற்கும் பல விடயங்களை மக்களுக்கு அறிவிப்பதற்கும் இந்த ஊடகத்துறையானது ஒரு மகத்தான சேவையைச் செய்கின்றது என்றால் அதில் சந்தேகமில்லை. இன்று நம் நாட்டில் பல விடயங்களை தொட்டுப் பார்ப்பதற்கு கூட ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரம் இல்லை. சுதந்திரம் என்று ஒன்று வெறும் வார்த்தையில் மட்டுமே காணப்படுகின்றது. உண்மையிலேயே இதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊடகவிய லாளர்களை குறை கூறுவதும் தவறானது. ஆனால் சில விடயங்களை விட்டு விட்டு பல விடயங்களை மக்களிடையே தெளிவுபடுத்த லாம். எவ்வளவோ விடயங்களில் விழிப் புணர்வை ஏற்படுத்தலாம். ஓர் சிறந்த சமுதா யத்தைக் கட்டியெழுப்பும் பணி ஊடகத்துறைக்கு உண்டு. இன்று தமிழ் சமுதாயத்தின் நிலை என்ன? தமிழ் சமுதாயம் என்ற ஒன்று அழிந்து கொண்டு வருகின்றது. தமிழர்களின் பண்பாட்டு, கலாச்சார, ஒழுக்கங்கள் போன்றவற்றை விழிப்பணர்வு படுத்தலாம். தமிழர்கள் இன்று பல விடயங்களில் இன்றும் பின் தங்கியே வாழ்கின்றார்கள். இவ்வாறான விடயங்களை அவர்களுக்கு தெளிவுபடுத்தலாம்.

ஊடகங்களில் வானொலி சேவைக்கும், தொலைக்காட்சி சேவைக்கும் பல்லாயிரக்கணக் கான இரசிகர்கள் இருக்கின்றார்கள். சிறந்த நிகழ்சிகளினூடாக தமது சேவைகளை வெளிப் படுத்தலாம். இரசிகர்களை விளையாட்டுப் பொருட்களாக மட்டும் பயன்படுத்தக் கூடாது. ஏன் இன்று இரசிகர்களை ஊடகங்களது பணம் சம்பாதிக்கும்முயற்சிக்கு ஈடுபடுத்துகின்றார்கள். இவ்வாறான பல பணம் சம்பாதிக்கும் நிகழ்ச்சிகளை இன்றைய ஊடகங்கள் செய்கின்றன. பணம் சம்பாதித்தாலும் அந்த இரசிகர்களை நல்வழிப்படுத்துவதற்கு சிறந்த நிகழ்ச்சிகளைச் செய்தால் நல்லது தான். சில தொலைக்காட்சி நிறுவனங்கள் நிகழ்ச்சிகளைச் செய்வதற்குக் கூட திணறுகின்றனர். இதை அன்றாடம் நாம் காண்கின்றோம். சிறந்த முறையில் செய்தியைக் கூட பார்க்க முடியாத நிலை உள்ளது. இதற்கு ஒழுங்கற்ற முகாமைத் துவமும், தேர்ச்சியற்ற நிகழ்ச்சித் தொகுப்பாளர் களும் காரணமாகும். நாம் எந்த நிகழ்ச்சியை வழங்கினாலும் பார்ப்பதற்கு இரசிகர்கள் இருக்கின்றார்கள் என்று நினைக்கின்றார்களோ தெரியவில்லை.

ஆயிரக்கணக்கானவர்கள் ஓர் சிறந்த வழிகாட்டியில்லாமல் தனது பாதையை தவறான வழிகளில் அமைத்துக் கொள்கிறார். அவர் களுக்கு ஊடகம் தான் சிறந்த வழி என்று காட்டினால் அவர்கள் அதை பின்பற்றக் கூடியவர்களாக கட்டாயமாக இருப்பார்கள். இளைஞர்களுக்கான சில சிறந்த நிகழ்ச்சிகளை செய்வதன் மூலம் அவர்களை நல்வழிப் படுத்தலாம். ஊடகத்துறையால் ஒருவனை குறிப்பாக இளைஞனை நல்ல வழியில் உருவாக்கவும் முடியும். அதே நேரத்தில் தீய வழியில் உருவாக்கவும் முடியும். சில ஊடகத்துறையின் தவறான நிகழ்ச்சிகளைப் பார்த்து கெட்ட வழியில் சென்ற இளைஞர்களும் உண்டு. அதே நேரத்தில் சில நல்ல நிகழ்ச்சிகளைப் பார்த்து நல்ல வழியில் சென்ற

இளைஞர்களும் உண்டு. மாணவ சமூக வளர்ச்சி மீது ஊடகத்தின் பங்களிப்பானது பெரும் மாற்றங்களை எதிர் கொண்டு துரிதமாக வளர்ந்து வருகின்றது. இன்று மனிதனுடைய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக ஊடகம் காணப்படுகின்றது. வாழ்க்கைக்குத் தேவையான தகவல்கள் இன்று ஏதோ ஒரு வகையில் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வாழ்க்கையைச் சிறப்பாக வாழ வழிகாட்டும் கல்வி பற்றிய தகவல்களும் அவ்வாறே கடத்தப்படுகின்றது.

இன்றைய இளைஞர்களின் நவீன சவால்களை நோக்குவோமாயின் ஒரு நாட்டின் சக்தியும் உறுதியும் அந்நாட்டின்எழுச்சி மிக்க இளைய தலைமுறையாகும். அநீதிகளுக்கு எதிராய் துடித்தெழும் இரத்தத்தின் மறுபெயர் தான் இளமை. சமூகத்தின் முதுகெலும்புகளாக இளைஞர்களின் பாதுகாப்பும் மேலான்மையுமே சமூகத்தினை காக்கும் அரண்களாகும். இளைஞர்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினை களில் ஒன்று தொடர்புசாதன ஊடகங்களாகும். குறிப்பாக சமூக வலைத்தளங்கள் ஆகும். உலகத்தையே உள்ளங்கைக்குள் சுருட்டி வைக்கும் ஊடகங்களின் அபரிமிதமான வளர்ச்சி சிலபோது ஆக்கத்தை விட அழிவுக்கே துணைபோகும் அவலநிலையை அவ்வப்போது சமூக வலைத்தளங்களில் அவதானிக்க முடியும். மனித மனதிலுள்ள உணர்வுகளைத் தூண்டி அதில் குளிர்காயும் சமகால ஊடக கலாசாரம் இளைஞர்களின் இரத்தத்தில் ஊறிப்போயுள்ளது. மாறாக அறிவையும் அன்பையும் மனிதப் பண்பாடுகளையும் வளர்க்க வேண்டிய ஊடகம் கலாச்சார சீரழிவுக்கு உட்பட்டு தொலைக்காட்சி, சினிமா, வானொலி, வாராந்த, நாளிதழ்கள், இணையம் இவை அனைத்தும் இளைய சமுதாயத்தின்உள்ளத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இளைஞர்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு சவாலாக கருதப்படுவது குறிக்கோள்இல்லாத வாழ்வாகும். தன் பிற்பபின் நோக்கம் வாழ்வின் குறிக்கோள் என்ன என்ற கேள்விக்கு பதில் காணாத இளைஞர்களே பலர் உள்ளனர்.

எனவே அனைத்து விடயங்களிலும் சாதக மற்றும் பாதக விளைவுகள் ஏற்படுவது சகயமாகும். அதில் சமூக வலைத்தளங்களில் சற்று அதிக பாதகங்கள் ஏற்படுகின்றது. இவற்றிலிருந்து விடுபடும் வழிகளை நாமே கண்டறிய வேண்டும். ஓய்வு நேரங்களை பிரயோசனமாக பயன்படுத்திக் கொள்வதோடு சமூக வலைத்தளங்களக்கு நாம் அடிமையாகி விடாமல் சமூக வலைத்தளங்களை நமக்கு அடிமையாக்கி எதிர்கால தலைமுறையினருக்கு இது தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு இக்கால கட்டத்தில் ஊடகங்கள் சீரழிந்து செல்வதை நம் கண்களால் அவதானிக்க முடிகின்றது.

# வாசிப்பின் முக்கியத்துவம்

ர.கணாட்சயன்
தரம் - 9D

வாசிப்பு என்பது ஒரு பிள்ளை கருவறையிலிருக்கும் போதே ஆரம்பிக்கப்பட வேண்டும். அதாவது பிள்ளையுடைய மூளை விருத்தி சிறப்பாக விருத்தி அடையும். வாசிப்பு சிறு பராயத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். இதில் பெற்றோர்கள் அதிகூடிய கவனம் எடுக்க வேண்டும். வாசிப்பு முக்கிய பல் திறன்களைக் கொண்ட ஒரு செய்முறையாகும். அதாவது சிந்தித்தல், ஆராய்தல், காரணம் கண்டறிதல், கற்பனை செய்தல், புரிந்துணர்தல் போன்றவை உள்ளடங்கும்.

வாசிப்பின் நோக்கம்

அறிவுக்காக / அறிவைத் தேடல்

தகவல் தேடல்

பொழுதுபோக்கு / ஓய்வுக்காக

வாசிப்பு என்பது மகிழ்ச்சிகரமானதும் சுவாரகசியமாதுமான ஒரு செயற்பாடாகும். இதனை Read four fun என்றும் Read four pleasure என்றும் பொதுவாகக் கூறுவர். வாசிப்பு ஒரு முக்கியமான ஒரு திறனாகும். இது மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான ஓர் ஆயுதம் என்று கூறலாம். வாசிப்பு என்பது ஒரு எரிச்சலூட்டும் / அலுப்பூட்டும் விடயம் அல்ல என்றும் அதுவே எதிர்கால வெற்றிக்குரிய ஒரு திறவுகோல் என்றும் மாணவர்களை விளங்க வைப்பது ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் கடமையாகும். சுவாரசகமான வாசிப்பில் ஒரு புறம் மகிழ்ச்சியும் இன்னொரு புறம் அறிவு விருத்தியும் ஆகின்றது.

வாசிப்பதற்கு வயதெல்லை கிடையாது. அனைவரும் வாசித்துப் பயன் பெறலாம். சிறு வயதிலிருந்து வாசிப்பதனால் சிறந்த நற்பிரஜையாக உருவாகலாம். வாசிப்பு ஆரம்பத்தில் புத்தகங்கள், பத்திரிகைகள் மூலம் தான் வாசிப்புக் கட்டியெழுப்பப்படுகின்றது. எதிர்காலத்தில் இலத்திரனியல் ஊடகங்களின் தகவல்கள், இணையச் செய்திகள், இலத்திரனியல் ஆய்வறிக்கைகள், கட்டுரை போன்றவற்றை வாசிப்பதற்கு சிறுவயது வாசிப்புப் பழக்கம் தூண்டலாகாமையும்அத்துடன் ஒரு சிறந்த வாசிப்புத்தான் சிறந்த எழுத்தாளனை உருவாக்கும் படைப்பாற்றல் வளர்ச்சியடையும். வாசிப்புத்திறன் குறைவடையும்போது எழுத்தாற்றல் குறைவடையும்.


வாசிப்பின் பயன்கள்

- தகவல்களைப் பெறுதல் வாசிப்போர் வழிமுறையாகும். கல்விசார் திறன்களை வளர்ப்பதோடு வாசிப்பு இன்றியமையாதது. வாசிப்பு மனிதனை பூரணமடையச் செய்கின்றது. அத்துடன் வினைத்திறனை அதிகரிக்கின்றது. சிறந்த உள விருத்திக்கு வாசிப்பு உறுதுணையாகும்.
- சிறந்த கிரகித்தலிற்கும் ஓர் அறிக்கைச் செய்தியை வாசித்து விளங்குவதற்கும், பதிலளிப்பதற்கும் வாசிப்பு உதவுகின்றது. வாசிப்பதனால் அடைவு மட்டம் உயர்த்தப் படும். புதிய கண்டு பிடிப்புக்களையும் அறிந்து கொள்ளவும் வாசிப்பு இன்றியமையாதது.
- மொழித்திறன் விருத்தி, சொல்லாட்சி, சொல்லாற்றல் என்பன விருத்தியடைகின்றன. வாசிப்புத் திறனற்ற பிள்ளைகள் தொழிலையும், வாழ்க்கையினையும் இழக்க வேண்டி ஏற்படும். ஏனையவற்றை எடுத்துக் கூறும் விடயங்களை வாசிப்புப் பழக்கங்களை உடைய ஒருவரால் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

- பொது அறிவு வளர்ச்சியும், ஏனையவர்களின் கலாசாரம், பாரம்பரியம் என்பவற்றை அறியும் வாய்ப்பும் கிடைக்கின்றது. தன்னம்பிக்கை, ஆளுமை விருத்தி, ஞாபக சக்தி அதிகரிப்பு போன்ற திறன்கள் அதிகரிக்கும். மாணவர்கள் எழுத்துப் பிழையின்றி எழுதுவதற்கும் வாசிப்பு உதவுகின்றது. தர்க்க ரீதியான சிந்தனைக்கும், கற்பனைத் திறனுக்கும் வாசிப்பு இன்றியமையாததாகும்.

**சிறுவர்களை வாசிக்கத் தூண்டும் சில தந்திரோபாயங்கள்**

- பெற்றோர்கள், மாணவர்களுக்குப் பொருத்தமான நூல்களை அன்பளிப்புச் செய்தல். அத்துடன் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு புத்தகத்தை வாசிக்கத் தூண்டுதல்.
- பிள்ளைகள் வாசிப்பதற்குரிய புத்தகங்களை வாங்கி வீட்டில் நூலகம் ஒன்றை உருவாக்குதல்.
- குடும்ப உறுப்பினர்கள் வீட்டில் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்டதொரு நேரத்தில் அனைவரும் இணைந்து வாசித்தல்.
- பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தை மாணவரிடத்தில் ஏற்படுத்துதல்.
- பாடசாலை நூலகத்தை மாணவர் பயன்படுத்த வழிப்படுத்தல், அதிகமாக வாசிப்பதில் ஈடுபடும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குதல்.



# அண்ணா

எந்தன் அன்னை மடியினிலே தவழ்ந்து
எனக்கு முன்பே பூமிதனில் உதித்தவனே
எனக்கோர் அண்ணனாக அவதரித்தான் பூமியிலே
சுட்டுவிடும் சூரியன் போல் திகழ வந்தான்

கண்ணீர் துளிகள் என்னில் வடிந்தால்
துடிதுடிக்கும் உள்ளம் அது
அன்பின் அமுதை ஊற்றி அதை
துடைத்து விடும் பாசமல்லோ !

அன்பின் பேரில் கோபப்பட்டு
அன்பை ஊற்றும் அண்ணனிவன்
உன் அன்பை என்றும் மறவா
பாசமுள்ள தங்கை இவள்

எந்தன் குறை நீ தீர்த்து
தாயைப் போல வளர்த்திடுவாய்
எந்தன் பிழைகள் நீ தெரிந்து
தந்தை போல நடந்திடுவாய்

கண்ணின் மணியாய் நீ இருந்து
கஸ்டங்களைத் தீர்ப்பதற்கு
உன்னை எமக்காய் அர்ப்பணித்து
சிறு வயதினிலே எமக்காய் உழைத்தனே

உன்னை எவரும் மதிக்காவிடினும்
உன்தன் பாசம் எமை மதித்திடுமே
உழைப்பில் நேர்மை செய்தே நீளும்
வீண் பழியை நீ சுமந்திடுவாய்

தண்ணீர்க்குள் கப்பல் கரைசேர
தத்தளிக்கிறதோ அதே போல்
எமை கரை சேர்க்க நீயும்
வாழ்க்கையுடன் தத்தளிக்கிறாய்

நல்ல செயல் பல செய்து
உமது வாழ்வை ஒளிமயமாக்கி
எந்த ஓர் துன்பமும் சேரா வண்ணம்
உம்மை நாம் காத்திருப்போம்.

சு.நிரஞ்சலி
**A/L (Arts)**

# உலகிலுள்ள மர்ம மிருகங்கள் சில...

S. ஜென்சிகா
**A/L (2020) Arts**

இந்த உலகில் மிகவும் வித்தியாசமான தோற்றத்துடனும் அசாதாரமான பண்புகளுடனும் வாழக்கூடிய மர்ம மிருகங்களைக் குறித்துப் பார்க்கப் போகிறோம்.

## 1. THORNY DRAGON (தோனி (ட்)ரஹன்)

பல ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்னர் ராகன்கள் (DRAGON) பூமியில் வாழ்ந்ததாக நம்பப்படுகின்றது. இந்த உயிரினம் சூழ்நிலைக்கேற்ப நிறத்தினை மாற்றுவதுடன் எதிரி மிருகங்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக காற்றை உள்ளே அழைத்து சற்று உடலைப் பெரிதாக்கிக் கொள்வது தான் இதனுடைய தனிச் சிறப்பு.

## 2. MANTIS SHRIMP (மான்டிஸ் சிம்)

40 கோடி வருடங்களிற்கு முன் தோன்றியதாகும். இது கண்ணைக் கவரும் 16 வர்ணங்களில் காணப் படுகின்றன. இந்த உயிரினத்தில் காணப்படும் விசேட சிறப்பம்சமாக தன்னுடைய தலைமையில் காணப்படும் இரு கரங்களினால் மற்ற உயிரினங்களை 80km இல் தாக்கம் வேகமான விலங்காகும்.

## 3. BLUE BRAGON (புளு ராகன்)

இவ் உயிரினமானது கடலின் மேல்மட்டத்தில் மிதக்கக்கூடியது. இது உலகில் பேசப்படும் விசித்திரமான உயிரினங்களில் ஒன்றாகும். இவ் உயிரினத்திலுள்ள விசேடத் தன்மை என்னவெனில் இதற்கு இயற்கையாகவே விசத்தன்மை இல்லையென்றாலும் கூட இது உண்ணும் உணவுகளில் உள்ள விசத்தினை உடலில் சேமித்து வைத்து எதிரிகளை மிகவும் மோசமாக தாக்குவதாகும்.

## 4. RED LIPPED BATFISH (ரெட் லிப்ட் பாட்பீஸ்)


இவ்வகை மீன்கள் கடல்களில் மட்டுமே வாழக்கூடியது. இவை விநோதமான தோற்றமுடையதாகும். குறிப்பாக அதனுடைய வாய்ப்பகுதியில் சிவப்பு நிற சாயம் பூசப்பட்டது போல் மிகவும் வித்தியாசமாகக் காணப்படும். மேலும் இவ் மீனுக்கு மற்றைய மீன்களை போல் நீந்தத் தெரியாது. ஆகவே இது இதன் அடிப்பகுதியில் உள்ள துடுப்பினை கால்கள் போல் பயன்படுத்தி கடலில் உள்ள தரையில் நடந்து செல்லும்.

## 5. AXOLOTL (அஸ்லோட்டில்)

இது நான்கு கால்களைக் கொண்ட தாகும். இவ் மீன்கள் தவளையைப் போன்ற நீரிலும், நிலத்திலும் இயற்கையாகவே வாழக்கூடியது. மேலும் இதன் உடலில் உள்ள எந்த பாகம் துண்டிக்கப்படடாலும் சில நாட்களிற்குள் மீண்டும் வளர்ந்து விடும் என்பதுவும் இதன் சிறப்பாகும்.

## 6. FIYING SNAKE (பிளேய்ங் சிநேக்)

ஆசியாவின் தென்பகுதியில் வாழக் கூடிய பாம்புகள் மற்றப் பாம்புகளைப் போல் சாதாரணமாகக் காணப்பட்டாலும் கூட இறக்கைகள் எதுவுமின்றி பல கிலோமீற்றர் வரை பறக்கும் என்பது தான் இதன் தனிச்சிறப்பு. குறிப்பாக இவை உயர் இடத்திலிருந்து கீழே குதிக்கும் போது காற்றின் திசைக்கு ஏற்றவாறு உடலை மாற்றிக் கொள்வ தால் தான் இதனால் எளிமை யாக பறக்க முடிகிறது. மேலும் கீழிருந்து மேல் நோக்கிப் பறக்க முடியாது.



# கல்லூரி ஆசிரியர்களது ஆக்கங்கள் ...

# வெற்றிகரமான பாடசாலை

திரு. கு.கந்தரூபன் B.Ed; N.D.T (Maths)
கணிதபாட ஆசிரியர்

ஒரு பாடசாலையின் வெற்றியானது பல தரப்பட்டோரில் தங்கியுள்ளது. குறிப்பாக பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் என்போரின் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. பாடசாலையானது ஒரு தனி மனிதனின் செயற்பாட்டால் மட்டும் முன்னேற முடியாது. அதாவது பாடசாலையை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என்போரின் கூட்டு முயற்சியால் மட்டுமே முன்னேற்ற முடியும். இதற்கு பாடசாலையானது ஒரு கூட்டுக்குடும்பமாக இருந்து செயற்பட வேண்டும்.

பாடசாலை என்பது கோயில் போன்றது. சீமெந்தும் கல்லும் மட்டும் கொண்ட ஓர் கட்டடம் அல்ல. பாடசாலை என்பது ஓர் கலைக் கூடம். அதில் தெய்வீக அருள், தெய்வீக சக்தி இருத்தல் வேண்டும். அப்படியிருப்பின் சரஸ்வதியின் அருட்கடாச்சம் எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கும்.

பாடசாலையின் வெற்றிக்கு வித்தாக அமைபவர்கள் மாணவர்களாவார். இம்மாணவர்களின் கல்விச் செயற்பாட்டின் மூலமே பாடசாலையின் வெற்றியானது தீர்மானிக்கப்படுகிறது. பாடசாலையின் வெற்றியானது வெறுமனே பௌதீக வளத்தில் மட்டும் தங்கியுள்ளது அல்ல. ஒவ்வொரு மாணவனதும் கடின அயராத உழைப்பின் அறுவடை யாகவே பாடசாலையின் வெற்றி அமைகிறது.

அதாவது பாடசாலையின் கல்வித் தரத்தினைத் தீர்மானிப்பது சித்தி வீதமே ஆகும். குறிப்பிட்ட பாடத்தில் எவ்வளவு மாணவர்கள் குறிப்பிட்ட புள்ளிக்கு மேல் எடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே சித்திவீதம் தீர்மானிக்கப்படுகிறது. இந்தச் சித்திவீதம் ஆனது ஒவ்வொரு வருடமும் மாறாமல் இருக்கும் என்று கூற முடியாது.

இதில் மாணவர்கள் பரீட்சையில் செயற்படும் விதமே அதிக செல்வாக்கு செலுத்துகிறது. அத்துடன் பரீட்சை வினாத்தாளின் கட்டமைப்பும் மிக முக்கிய இடம் வகிக்கிறது.

மாணவர்களின் செயற்பாடு பற்றி மூளை சம்பந்தமான வைத்திய நிபுணர்களின் கருத்துப்படி பல்வேறுபட்ட இயல்புகள் உள்ள நிறமூர்த்தங்களின் சேர்க்கையால், தாயின் வயிற்றில் உருவாகும் கருவின் மூளையில் பல்வேறுபட்ட விதமான நியூரோன்ஸ் நரம்புகள் (Neurone) உருவாகின்றன. இந்த நியூரோன்ஸ்கள் ஒவ்வொரு குழந்தையினது மூளையிலும் வித்தியாசமான நரம்பு மண்டலங்களைக் கொண்டுள்ளன. சில குழந்தைகளிடம் குறிப்பிட்ட சில இயல்புகள் கொண்ட நியூரோன்ஸ் நரம்புக் கலங்கள் பிரகாசமாகவும் தெளிவாகவும் காணப்படும். இக் குழந்தைகள் குறிப்பிட்ட சில இயல்புகளில் பிரகாசமாக திகழ்வார்கள். அதாவது குறிப்பிட்ட பாடத்தில் அல்லது சித்திரம் வரைதல், சங்கீத பாட்டுப்பாடல், நடனம் ஆடல், நாடகம் நடித்தல், விளையாட்டுத்துறையில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளில் நுட்பமான செயற்பாடுகள் கொண்டவர்களாகத் திகழ்வார்கள்.

இவர்களிடம் காணப்படும் விசேட இயல்புகளை இனம் கண்டு அத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபடுத்த வேண்டியது ஆசிரியர்களது கடமை ஆகும். சில மாணவர்களின் மூளையில் சில வகையான இயல்புடைய நியூரோன்ஸ் நரம்பு மண்டலங்கள் பிரகாசம் அற்றவையாக காணப்படலாம். சில மாணவர்களிடத்தில் சில இயல்புகளுடைய நியூரோன் நரம்பு மண்டலங்களின் செறிவை கூட்ட இயலுமானதாக காணப்படும். அதாவது கற்றலில் தொடர்ந்து பயிற்சியை மேற்கொள்வதன் மூலமே இந்த வகையான நியூரோன்ஸ் நரம்புகளைப் பலப்படுத்த முடியும். எவ்வளவு

கூடிய பயிற்சி செய்கிறோமோ, அந்தளவிற்கு மூளையில் உள்ள நியூரோன்ஸ் நரம்பு மண்டலங்கள் செறிவாக்கப்படும். இவ்வகையான இம்மாணவர்களே பரீட்சையில் கூடிய புள்ளிகளை பெற்று சிறந்த பெறுபேறுகளை பாடசாலைக்கு பெற்று தருபவர்களாகவே காணப்படுகிறார்கள். குறிப்பாக பெற்றோர்களின் இயல்புகள், பண்புகள், கல்வியறிவு, கல்விச் சூழல் என்பனவும் குழந்தை உருவாகும் போது கடத்தப்படுகின்றன. அதாவது மாணவர்களின் உடல்வளர்ச்சி, மூளைவளர்ச்சி என்பவற்றில் பெற்றோரின் செல்வாக்கு, பரம்பரை இயல்புகள் அதிகம் செல்வாக்கு செலுத்துகின்றன என்பதனை அறிய முடிகிறது. அதாவது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி அறிவும் அவர்களின் பெற்றோரின் கல்வி அறிவு மட்டத்திலும் ஓரளவு தங்கியுள்ளது என விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளார்கள்.

அடுத்து பாடசாலையின் வெற்றிக்கு மிக முக்கியமானது ஆசீர்வாதமும் ஆகும். அதாவது பாடசாலையில் உள்ள ஒவ்வொருவருடைய ஆசீர்வாதங்களும் மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. பாடசாலையில் குறிப்பிட்ட துறையில், குறிப்பிட்ட பாடப் பரீட்சையில், குறிப்பிட்ட விளையாட்டு நிகழ்வில் வெற்றி பெறவேண்டும் என மனதார வாழ்த்துக்களும் ஆசிகளும் ஒவ்வொருவருடைய ஆசிரியர்களின் உள்ளத்தில் இருந்து வரவேண்டும். அதாவது இதற்குரியவாறு பாடசாலை ஆனது ஓர் சுமூகமான, ஓர் இயல்பான, ஒரு பண்புள்ள பாடசாலையாக திகழவேண்டியது மிக முக்கியமானது. இதற்கு ஒவ்வொருவருடைய மனங்களும் வெற்றி கொள்ளப்படல் வேண்டும். அதிபரால் ஏனைய ஆசிரியர்களது மனங்கள் வெல்லப்படுமேயானால் மட்டுமே இதற்குரிய ஆசீர்வாதம் கிடைக்கப்பெறும் என்பது உண்மை. ஆசிரியர்களின் மனங்கள் வெல்லப்படாத விடத்து எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் ஆசீர்வாதம் என்பது மனதளவில் அற்றுக் காணப்படும் என்பது நிஜம். ஆசிரியர்கள் ஒவ்வொருவருடைய மனம் நிறைந்த வாழ்த்துக் கள் பாடசாலைக்கு கிடைப்பது முக்கியம் ஆகும். பாடசாலையின் ஒவ்வொரு செயற்பாடுகளும் பாடசாலையின் வெற்றிக்கு வித்திடுவதாகவே திகழவேண்டும். "மனம் உண்டானால் இடம் உண்டு" என்பதற்கு ஏற்ப முதலில் ஒவ்வொருவருடைய மனங்களையும் காயப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டியது எல்லோருடைய பொறுப்பும் ஆகும்.

பாடசாலையின் செயற்பாடானது வினைத்திறன், விளைதிறன் உடையதாக காணப்படல் வேண்டும். பாடசாலையின் உள்ளீடுகளின் செயற்பாட்டின் மூலமே அதிகளவான வெளியீடுகளைப் பெறஇயலும் என்பது மிக முக்கியமானது. இதற்கு ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமும் அவசியமானதும் ஆகும். அதாவது ஒவ்வொரு ஆசிரியரும் தங்களுடைய பாடசாலை என்ற மனநினைவுடன் செயற்படவேண்டும். தங்கள் வகுப்பு பிள்ளைகளை தங்கள் வீட்டின் சொந்தப் பிள்ளை போல எண்ணி உரியவாறு கற்பிக்கவேண்டியது இறைவனுக்கு நாம் செய்யும் தொண்டு ஆகும். "கடமையை செய் பலனை எதிர்பார்க்காதே" என்ற கூற்றுக்கு இணங்க செயல்பட வேண்டும். மாணவர்களின் உடல், உள, மனவெழுச்சிகளை அறிந்து உரியவாறு திட்டமிட்டு கற்பித்தால் மாணவர் களின் கற்றலில் சிறிதளவேனும் மாற்றத்தினை ஏற்படுத்த முடியும் என்பது நிஜம். ஒரு பாடம் கடினமான பாடம் என்ற எண்ணத்தை முதலில் மாற்ற வேண்டியவர் ஆசிரியர் ஆவார். அதாவது மாணவர்களிடத்தில் அன்பாக ஆதரவாகக் கதைத்து இன்முகத்துடன், செயற்பாட்டு ரீதியாக உரிய விளக்கத்துடன் அடிப்படை எண்ணக் கருக்களை வளர்ப்பதன் மூலம் கற்றலில் ஆர்வத்தினை ஏற்படுத்தலாம். மற்றும் அதிகளவு பயிற்சி செய்வதன் மூலம் வெற்றி பெறலாம் என்ற மனவலிமையை மாணவர்களிடத்தில் ஏற்படுத்தல் வேண்டும். "முடியும்" என்ற நிலையை மாணவர்களின் உள்ளத்திலேயே பதிய வைத்தல் வேண்டும். குறிப்பாக பாடப்புத்தகத்தின் பாட அலகுகளை நிறைவு செய்தல் நோக்கமாக இருத்தல் கூடாது. கற்கும் பாட அலகில் பூரண விளக்கத்தினை பெற்று கொடுத்தல் ஆசிரியரது முக்கிய கடமை ஆகும்.

வகுப்பறை செயற்பாட்டில் வகுப்பின் கவின்நிலை மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. அதாவது வகுப்பறையின் தளபாட ஒழுங்க மைப்பு, கரும்பலகையின் அமைப்பு எழுது கருவிகள், துடைப்பான் வசதி, வெளிச்சம் என்பன முக்கிய விடயங்கள் ஆகும். அத்துடன் வகுப்பறையானது மூடிய வகுப்பறையாக இருக்குமாயின் சிறந்தது ஏனெனில் புறச்சூழலில் இருந்து வரும் சத்தங்கள், ஏனைய வகுப்பறையில் இருந்து வரும் சத்தங்கள் இடையூறாக அமையாது.

ஒவ்வொரு பாடசாலையிலும் ஆசிரியர்கள், ஆசிரியர்களாக மதிக்கப்படல் மிக முக்கியமான விடயம். ஆசிரியர்களின் மனங்கள் புண்படுமாயின் பாடசாலையின் வகுப்புகளின் கற்றல் கற்பித்தல் சூழ்நிலை சுமூகமாக காணப்படாது. இதனால் பல்வேறு தரப்பட்டோர் பாதிக்கப்படுவர். அதாவது உரியவாறு கற்பித்தல் செயற்பாடு நடைபெறாது. உரியவாறு பாட அலகுகள் நிறைவு பெறாது. மாணவர்கள் உரியவாறு கற்றலின் பயனைப் பெற இயலாமல் காணப்படுவர். இதனால் பாடசாலையின் மாணவர்கள் குறிப்பிட்ட பாடப்பரப்பில் குறைந்த புள்ளிகளை பெறுகின்றனர். இதனால் உரிய பாடத்திற்கான சித்தி வீதமானது குறைந்து காணப்படுகிறது. இச்செயற்பாடானது "பாடசாலையின் வெற்றிக்கு மிக இடையூறாக அமைகிறது" என்பது நிஜம்.

அடுத்து பாடசாலையின் வெற்றிக்கு பெற்றோரின் செயற்பாடு (பங்கு) அதி முக்கியமானதும் அவசியமானதும் ஆகும். அதாவது பிள்ளைகள் 6 மணி நேரம் மட்டுமே அதிபர், ஆசிரியர்களது மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றனர். ஏனைய 18 மணி நேரமும் வீட்டில் பெற்றோரின் அரவணைப்பிலேயே இருக்கின்றனர். அதாவது கூடியளவு நேரம் தமது பெற்றோருடன் இருக்கின்றனர். எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். ஏனெனில் நாட்டில் தற்போது போதை பொருள் பாவனை போன்ற சீர்கேடுகள் நடைபெறுகின்றன. தமது பிள்ளைகள் இதற்கு அடிமையாகாமல் இருக்க கண்காணிக்கப்படல் வேண்டியது பெற்றோருடைய பொறுப்பாகும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் உடல், உள பிரச்சினைகளை வகுப்பாசிரியரிடம் கலந்துரையாடுவது மிக முக்கியமானது ஆகும். அத்துடன் கற்றலில் இடர்படும் விடயங்கள், கற்றலில் இடர்படும் சந்தர்ப்பங்கள் எது என்பது பற்றி ஆசிரியருடன் பெற்றோர்கள் கலந்துரையாடுவது மிக அவசியம். அத்துடன் தமது வீட்டின் பொருளாதார நிலைமை, மற்றும் தமது பிள்ளைகள் இரவில் தினமும் எவ்வாறு கல்வி கற்கின்றார்கள் என்பது பற்றி அவதானித்து தமது பிள்ளைகள் விடும் பிழைகள் பற்றியும் ஆசிரியருடன் கலந்துரையாடல் மிக அவசிய மாகும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் வீட்டில் நண்பர்கள்போல் பாவித்து இனிமையாக உரையாடி ஆதரவாக படிப்பை சொல்லி கொடுத்தல் சிறந்தது. அத்துடன் கற்றலின் விளைவு பற்றி சிறுபராயத்திலேயே பிள்ளைகளிடம் கூறவேண்டும். அதாவது நன்றாகப் படித்தால் என்னவாக வரலாம், எப்படியாக கல்வியில் உயரலாம் என கூற வேண்டியது கட்டாயமானதாகும். தமது பிள்ளைகளை ஏனையோர் முன்னிலையில் குறைவாக மதிப்பிட்டு கதைத்தல் கூடாது. இவ்வாறு செயற்பட்டால் பிள்ளைகளின் மனநிலை பாதிப்படையும் என்பது முக்கிய விடயம். அத்துடன் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்திலும் அதிகூடிய கவனம் செலுத்தல் அவசியமாகும்.

எனவே பாடசாலையின் வெற்றியானது தனியே ஆசிரியர் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. ஒரு குழந்தை கருவில் உருவாகியது தொடக்கம் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அயலவர்கள் எனப் பல தரப்பட்டோரின் கையிலேயே தங்கியுள்ளது. அதாவது வெற்றிகரமான பாடசாலை என்பது மாணவர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரது கூட்டு முயற்சியே ஆகும்.

**"எல்லோருக்கும் மனம் உண்டானால் பாடசாலைக்கு சித்தி வீதம் உண்டு"**

# யாழ்ப்பாணத்தமிழ் பண்பாடு

சி.தனுராஜன் B.A. (Hons) Spl in Arg.
ஆசிரியர்

யாழ்ப்பாணத்துப் பண்பாடானது நீண்ட வரலாற்றைக் கொண்டதாக தனித்துவம் பேணி வந்தாலும் அது பற்றிய விரிவான மட்டுப் படுத்தல்கள் இன்னமும் மேற்கொள்ளப்படாத நிலையில் அண்மைய ஆய்வுகள் 2500 வருடங்களிற்கு குறையாத வரலாறு உண்டு என்பதைப் புலப்படுத்தி வருகின்ற நிலையில் யாழ்ப்பாணத் தமிழ்ப் பண்பாடு பற்றிய கண்ணோட்டத்தில் நோக்கும் போது,

பண்பாடு என்பது நிலப்பரப்புக்கள் அடிப்படையில் இந்தியப் பண்பாடு, இலங்கைப் பண்பாடு என வரையறை செய்யப்பட்டாலும் இவற்றுக்கிடையே பல்வேறு வேறுபாடுகள் இருப்பது உணரப்பட்டது. எனினும் அவ்வாறு அழைக்கும் மரபு இன்றும் தொடர்கிறது. இது யாழ்ப்பாணப் பண்பாடு என பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு வரையறை செய்யும் போது இது பிரதேச வாரியாக நோக்கப்பட்டாலும் அதன் பகுதிகள் பரந்தனவாகும். அத்தோடு பண்பாடும் பன்முகத்தன்மை கொண்டது என்ற வகையில் அவை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் எனக் காணப்பட்டாலும் இவற்றின் பண்பாடு ரீதியில் சில நுண்ணிய வேறுபாடுகளே உண்டு (ம.இரகுநாதன், 2009,2). அவற்றை எடுத்து நோக்கும் போது இங்கு பொருள் சார் பண்பாடுகளான சடங்குகள், நம்பிக்கைகள், அணிகலன்கள், கலைமரபுகள், தொழில்கள், கல்வி மரபுகள், விளையாட்டுக்கள் முதலியவற்றை குறிப்பிடலாம். இவை அனைத்தும் சுதேச மயமான யாழ்ப்பாணத்து தமிழ் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் அமைவுபெற்றுள்ளன.

அந்தவகையில் இப்பிரதேச மக்கள் பண்பாட்டு அமைப்புக்களில் வீடமைப்பு முறைகளில் தனித்துவம் பேணும் தன்மை யுண்டு. இவை வீடும் வளவும் மற்றும் அதிலுள்ள பிற அமைப்புக்கள் உதாரணமாக திண்ணை முதலியவை இன்று தமிழ் பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக உள்ளன. அடுத்து இங்கு ஆடையமைப்பு தனித்துவமானது. இவை ஆரம்பத்தில் சாதிக் கட்டமைப்புக் களிற்கு ஏற்ப காணப்பட்டாலும் அவை பிற்காலத்தில் பொதுவான தமிழ் பண்பாட்டிற்கு உரியனவாகவே பார்க்கப்படுகின்றன. அல்லாத விடத்து இதனைப் பண்பாட்டு அம்சமாக கொள்ள முடியாது. மேலும் உடைகளுடன் அணிகலன் கள் அதாவது ஆபரணங்கள் முதலிய அம்சங் கள் கூட தனித்துவம் பேணும் வகையில் அமைவு பெற்றுள்ளது. இதுபோன்றே அடுத்து பாவனைப் பொருட்கள், பனம் பொருள், இயற்கையான சிறு கைத்தொழில் பண்டங்கள் மற்றும் தொழில்சார் பாவனைப் பொருட்கள் என ஒவ்வொரு பொருட்களும் சுதேச ரீதியான தொழில்நுட்ப வடிவமைப்பைப் பேணுவதோடு அவை தமிழ் பண்பாட்டின் ஒரு ஆதாரமாகவும் பார்க்கப்படுகின்றது.

மேலும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் அடுத்த அம்சமாக மொழி வழக்குகள் காணப்படுகின்றன. இங்கு எழுத்து மொழி ஒரே தன்மையாகக் காணப்படுகின்றது. இவை சுதேசத்துக்கேயுரிய தனித்துவ மொழி வழக்கு கள் ஆகக் காணப்படுகின்றன. மேலும் இங்கே இது சார்ந்த உறவு முறைகளில் பயன்படுத்தப் படும் சொற்பதங்கள் கூட யாழ்ப்பாணத் தமிழருக்கே உரிய தனித்துவம் கொண்டவை யாகக் காணப்படுகின்றன. இவ்வாறே அடுத்த அம்சமாக மரபுவழிச்சீர்மியம் காணப்படுகின் றது. இது ஒரு உளவியல் சார்ந்த அடிமன

அவசங்களைச்செய்வதற்கு செய்வதற்கு கையாளப்படும் ஒரு வகையான உளவியல் மருத்துவம் என இது ஒரு சமூக நம்பிக்கையாக யாழ்ப்பாணத் தமிழர் மத்தியில் பேணப் பட்டுள்ளது.

இதுதவிர பாரம்பரியமான தொழில்கள் மற்றும் அவற்றுக்குப் பயன்படுத்தப்படும் மரபு ரீதியான தொழில்நுட்பம் போன்றன மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்கள் அவற்றின் நடைமுறைகள் போன்றனவும் இதுதவிர யாழ்ப்பாணத்து வாய்மொழி இலக்கியங்கள், நாட்டார் பாடல்கள் போன்றவற்றில் வெளிப் படுத்தப்படும் சுதேச பண்பாட்டு அம்சங்கள் இவை வாழ்வியலின் ஒவ்வொரு அம்சங்களி லும் பின்பற்றப்படுகின்றது. மேலும் இங்கு சமய நம்பிக்கைகள், வழிபாடுகள் இவையும் ஆகம விதிகட்கு உட்பட்டு அதேவேளை யாழ்ப்பாணத் திற்கே உரிய சுதேச தமிழ் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையிலும் இவற்றில் நடைபெறும் சடங்குகள் மற்றும் அலங்காரங் கள், இசை வடிவங்கள் அனைத்துமே தமிழ் பண்பாட்டின் தொன்மையைக் காட்டும் வகையில் வடிவமைப்பு பெறும். மேலும் சடங்குகள், நம்பிக்கைகள் மனித பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள வாழ்வின் ஒவ்வொரு படிநிலைகளையும் காட்டும் வகையில் ஒழுங்கு முறைகள், கட்டுப்பாடுகள், சமய அனுஸ்டானங் களைக் கொண்டமைந்து காணப்படுகின்றன. இவை யாழ்ப்பாணத்திற்கே உரியனவாகும். அடுத்து இங்கு இசை நாடக மரபுகள், கூத்துக்கள் என்பன யாழ்ப்பாணத்திற்கே தனித்துவமான வகையில் காணப்படுகின்றன. காத்தவராயன் கூத்து, சங்கிலியன் கூத்து, அரிச்சந்திர புராணம் போன்றவையோடு இங்கு பாரம்பரிய கலைகள் ஆன மயிலாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், பொய்க்கால் குதிரை முதலியன யாழ்ப்பாணப் பண்பாட்டில் பின்பற்றப்படும் தமிழ்ப் பண்பாட்டு மரபுகள் ஆகும். இவை இன்று அருகிவந்தாலும் அவற்றைப் பேணும் குழுக்கள் மீண்டும் புத்தாக்கம் அழித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கே உரிய தமிழ் பண்பாடானது இந்தியா, இலங்கை என்ற ரீதிக்கு அப்பால் தனித்துவ தோற்றம் வரையறை கொண்டு இன்றும் அவற்றின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை இன்று காலவோட்டத்திற்கு ஏற்ப சில மாறுதல்களை உள்வாங்குவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக ஐரோப்பிய பரம்பலின் பின் அவற்றில் சிறு மாறுதல்கள் ஏற்பட்டாலும் அவை தொடர்ந்தும் பேணப்படுவதனைக் கூட அவதானிக்கலாம். எனவே இச்சுதேச பண்பாட்டு மரபுகள் சில தாக்கங்களிற்கு உட்பட்டாலும் அவற்றின் தன்மை மாறாது பேணப்படுவது குறிப்பிடத் தக்கது.

உசாத்துணைகள்

1. சந்திரகாந்தன்.A.J.V., தமிழ் பண்பாட்டில் கிறீஸ்தவம், யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ மன்ற வெளியீடு, 1993, (பக்கம் 17, 23, 24, 72).
2. ஜெயசீலன்.J.E, யாழ்ப்பாணத் திருச் சபை வரலாறு, வளான் ஆச்சிரம வெளியீடு, 1997,
3. பண்பாட்டில் வழிபாடு,கல்வி திருவழி பாட்டு நடுநிலையம்,தமிழ்நாடு, 1974, (பக்கம் 464, 493).



மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில்
இரண்டாம் இடத்தினைப் பெற்ற 18 வயது அணி



மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில்
முதலாம் இடத்தினைப் பெற்ற 20 வயது அணி



மாகாண மட்ட எறிபந்துப் போட்டியில்
முதலாம் இடத்தினைப் பெற்ற 20 வயது அணி



மாகாண மட்ட எறிபந்துப் போட்டியில்
முதலாம் இடத்தினைப் பெற்ற 20 வயது அணி



தேசிய மட்ட தமிழ் அறிவு வினாவிடை போட்டியில்
இரண்டாம் இடத்தினைப் பெற்ற அணி



தேசிய மட்ட அறிவிப்பாளர் போட்டியில்
இரண்டாம் இடத்தினைப் பெற்ற மாணவி செல்வி. இ.ஹார்த்தியாயினி

# சுகாதாரமும் உடற்கல்வியும் என்ற துறையின் ஊடாக உளவியற்றுறை கட்டியெழுப்பப்படுகிறது

து.ஹரிகரன் Adv.dip. Phy. Edu, Spl.Trd.Phy.Ed
ஆசிரியர்

கல்வியில் உளவியலின் பிரயோகமானது கல்வி உளவியல் எனப்படும். கல்வியியலாளர்களை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களில் மிக முக்கிய கூறாக இது உள்ளது. ஆனால், கல்வியில் எழும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் இது தீர்வு வழங்கப்பட மாட்டது. ஆசிரியர் ஒருவர் வகுப்பறையில் அல்லது ஏதாவது ஒரு இடத்தில் பெற்ற நான் கல்வி உளவியல் அறிவைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இதற்கிணங்க உடற்கல்வி ஆசிரியர்களாகிய நாமும் வகுப்பறையிலோ, விளையாட்டு மைதானத்திலோ, மாணவர்களைப் போட்டி களுக்கு அழைத்துச் செல்லும் சந்தர்ப்பத் திலோ உளவியல் அறிவைப் பயன்படுத்தமுடியும்.

கல்வி உளவியலானது ஆசிரியர்களுக்கு மிகவும் அவசியமானது. மாணவர்களை அறிந்து கொள்ளவும். அவர்களைக் கற்றலுக்குத் தயார்படுத்தவும். ஆசிரியர் - மாணவர், மாணவர் - மாணவர் ஆகியோருக் கிடையிலான சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணிக் கொள்ளவும், ஆசிரியர் கற்பித்தலுக்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகளைத் தேர்வு செய்து பயன்படுத்தவும், மாணவர்களின் மனவெழுச்சிகளைச் சீரமைக்க வும் தனியாள் வேறுபாடுகளை மாணவரிடையே இனங் கண்டு அவர்களுக்கேற்ற வகையில் கற்பித்தலை மேற்கொள்ளவும். தேவையான உதவிகளை வழங்கும், கற்றல் கற்பித்தற் சூழலைச் சிறப்பாக உருவாக்கவும், மாணவர்களைச் சிறந்த முறையில் மதிப்பீடு செய்யவும், மாணவர்களை ஆற்றுப்படுத்தவும் பொருத்தமான வழிகாட்டல் களைச் செய்யவும், கற்றலில் ஊக்கப்படுத்தவும், சிறந்த கற்றல் இடமாற்றத்தை ஏற்படுத்தவும், ஆசிரியர்கள் தாமே தம்மை விளங்கிக் கொள்ளவும், மாணவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காணவும், சமநிலை ஆளுமை விருத்தியை ஏற்படுத்தவும், ஆசிரியர் தமது ஆளுமையை விருத்தி செய்து கொள்ளவும் விசேட தேவையுடைய மாணவர் களை இனங்காண்பதற்கும் ஒரு ஆசிரியருக்குக் கல்வி உளவியல் அறிவானது அவசியமானதாக அமைகின்றது.

கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் ஒருவர் பாடம் சார்ந்த அறிவை மாத்திரம் கொண்டி ருத்தல் போதாது. அவர் தன்னையும் தன் மாணவனையும் அறிந்திருத்தல் வேண்டும். மாணவனின் அறிக்கைசார், உள இயக்கம் சார், எழுச்சிசார் விருத்தி பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியம். மாணவனிடத்தில் ஏற்படும் நடத்தை மாற்றங்களினூடாகவே அவனிடம் ஏற்படும் கற்றல் பற்றி அறியலாம் ஆனால் மாணவனிடம் ஏற்படக் கூடிய நடத்தை இயல்புகள் யாவற்றையும் எமது புலன்களின் ஊடாக நேரடியாக அறிய முடியாது. பிள்ளையில் அவதானிக்கக் கூடிய நடத்தை மாற்றங்களி னூடாக அறிகை விருத்தி பற்றிய அனுமானங் களைப் பெறமுடியும்.

இவ்வகையில் புலனங்கங்களினூடு நேரடியாக அறியப்பட முடியாத அறிகைத் தொழிற்பாடுகள் பற்றிய உளவியலாளர்களின் கருத்துக்களின் மூலம் மாணவருக்கு வேண்டிய வற்றை மேற்கொள்ளமுடியும்.

ஒரு ஆசிரியர், உளவியலின் பிரதான கிளைகளான சமூக உளவியல், பொது உளவியல், குழந்தை உளவியல், விருத்தி உளவியல், பிரயோக உளவியல் போன்றவற்றிற் பெறப்பட்ட கருத்துக்களைக் கல்வி உளவியலில் பிரயோகிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு அனுபவங்களைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக் கையாகப் பயிற்சிகள் அதாவது, உடற்பயிற்சி

வழங்கப்படுகின்றது. அத்துடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகப் பழக்குதல் காணப்படும். பயிற்சியினால் ஏற்படும் விளைவுகள் கற்போனின் இயல்புகளிலும் கற்கும் விடயத்தின் தன்மையிலும் தங்கியுள்ளது. இதற்குத் தீர்வு காணக் கல்வி உளவியல் பற்றிய அறிவு அவசியம்.

கற்கும் பாடத்தை அதனுடன் தொடர்புடைய திறன்களுடன் கற்பிப்பதிலும் பார்க்க அதனுடன் தொடர்பான திறன்களை மட்டும் பெறுவதனால் கற்றல் முழுமையாகாது. செயன்முறையினூடான கற்றல் பயனுள்ளதா என்பதற்குக் கல்வி உளவியல் விடையளிக்கின்றது.

ஒரு பிள்ளையின் அறிகை சார் ஆட்சி, எழுச்சி சார் ஆட்சி, உள சார் ஆட்சி என்பவற்றின் வெளிப்பாடாகிய அறிவு, மனப்பாங்கு, திறன் என்பவற்றின் விருத்தி கல்விச் செயற்பாட்டின் ஒரு பிரதான நோக்கமாகும். இம் மூன்றும் ஒன்றுடனொன்று தொடர்புடையன. இவற்றுள் அறிவு விருத்தி ஆனது ஏனைய இரண்டினதும் விருத்திக்குக் காரணியாகும். இவை பற்றிய சிறந்த விளக்கத்தை ஆசிரியருக்கு வழங்குவது கல்வி உளவியலாகும்.

"தோன்டக்" முன் வைத்த கருத்துக்கள் கற்றல் சார்பாக முக்கியமானவையக உள்ளன. இதில் விளைவு விதி, பயிற்சி விதி, ஆயத்த விதி என்பன பிரதானமானவை. உடற்கல்வி ஆசிரியர்களாகிய எமக்குப் பயிற்சி விதி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இங்கு பயிற்சிகள் முக்கியம் பெறுகின்றன. குறித்த ஒரு விளையாட்டினை மாணவன் மீண்டும் மீண்டும் பயிற்சி செய்வதனால் ஞாபகம் அதிகரிப்பது மட்டுமல்லாமல் பல்வேறு திறன்களையும் பெறக்கூடியதாக உள்ளது.

பாடம் ஒன்றைக் கற்பிக்கும்போது பாடப்பொருள், கற்பித்தல் முறை, பௌதீகச் சூழல் என்பன மாணவனின் உளநிலையுடன் பொருந்தக் கூடியவாறு இருத்தல் வேண்டும். இவையாவும் பொருத்தமான முறையில் விளையாட்டு மைதானத்தில் அமைகின்றன. மாணவன் மைதானத்தில் மகிழ்ச்சியுடன் விளையாட்டுக்களில் ஈடுபடுவான். இதன்மூலம் அவன் இலகுவில் கற்றலையும் மேற்கொள்ள முடிகிறது.

ஒரு மாணவனிடம் கல்வி வளர்ச்சி அடைய வேண்டுமெனின் அவனது உடல் பிறப்பிற்கு முன்னரான பருவத்திலிருந்தே உறுதியாகப் பேணப்படவேண்டும். ஆரம்ப காலத்தில் உறுதியாகப் பேணப்பட்ட உடல், வாழ்நாள் முழுவதும் கல்வி பெற உறுதியாக இருக்கும். இதனால் பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகள், காலை நேர உடற் பயிற்சிகள், கோட்டமட்ட, வலயமட்ட, மாகாண மட்ட, தேசிய ரீதியிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகின்றது. உடற் பயிற்சியானது ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு, உயர்நிலைப் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு மட்டுமன்றிப் பல்கலைக் கழகங்களிலும் மேற் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதனால் அவனது உளவியற் செயற்பாடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன ஒருவரின் உடல் அமைப்பு, உடல் உறுதி என்பன ஒருவருடைய கல்வி விருத்திக்குத் துணையாக அமைகின்றன. உடல் உறுதியானது உளத்திற்கும் உறுதியை வழங்குகின்றது. உடற் சோம்பலைப் போக்குகின்றது. உற்சாகத்தை வழங்குகின்றது. இதன்மூலம் சிறப்பானமுறையில் போட்டிகள், செயற்பாடுகளில் ஈடுபட முடிகின்றது.

உடல் உறுதியானது கல்வி விருத்திக்கு அவசியம் என்றுணர்ந்த கல்வியியலாளர்கள் கலைத்திட்டத்தில் உடற்கல்வித் துறைக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளனர். இதனால் சுகாதாரமும் உடற்கல்வியும் என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தினந்தோறும் காலை 15 நிமிட நேரம் உடற்பயிற்சி (Keeptit) செய்வதனால் கற்றல் மேம்பாடடையும். அத்துடன் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தில் போசாக்கு, மெய்ந்நிலைகள், சுகாதாரப் பழக்கவழக்கங்கள், ஆன்மீக நல்வாழ்வுக்கான

செயற்பாடுகள் போன்ற விடயங்களும் காணப் படுகின்றன. இவையும் கற்றலைத் தூண்டும் காரணிகளாக அமைகின்றன.

விளையாட்டின் முக்கியத்தவத்தை பாரதியார் தமது பாடலிலே பல இடங்களிலே குறிப்பிட்டுள்ளார். "ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்றும் "கூடி விளையாடு பாப்பா" என்றும் "மாலை முழுவதும் விளையாட்டு" என்றும் கூறியுள்ளதைக் காண்கிறோம். இங்கு பாரதியார் பாடல் மூலம் கல்விக்கு உற்சாகமும் உடலுறுதி யும் அவசியம் என்பதை அறியலாம்.

இவ்வாறு உடற்பயிற்சிகள் விளையாட் டுக்கள், ஆன்மீகச் செயற்பாடுகள் போன்றவற் றின் மூலம் ஒரு மாணவனது கற்றுக்கொள்ளும் ஆற்றலை அதிகரிக்க முடியும். அத்துடன் ஆசிரியர் தான் கற்ற கல்வி உளவியல் தொடர் பான அறிவையும் தகுந்த இடத்திற் பிரயோகித்து மாணவன் ஒருவனை உயர்நிலைக்கு இட்டுச் செல்ல முடியும்.

உடல் உறுதியுள்ளவன் தன் வாழ்க் கையில் பிறரில் தங்கி இருக்காது. தன்னில் தானே தங்கிச் செயற்படுவான். தனக்குத் தெரிந்ததை சரியானதைத் தீர்மானித்து மனத்திடத்துடன் செயற்பட முடியும். உடல் உறுதியானது தன்னம்பிக்கையை அளிக்கக் கூடியது. வாழ்க்கைக்கு ஒளி காட்டக்கூடியது ஒரு மாணவன் தன் வயதுக்கேற்ற உணவை அருந்துவதுடன் நாள்தோறும் குளித்து சுத்தமான ஆடை அணிந்து புதுப்பொலிவுடன் நல்ல காற்றைச் சுவாசிப்பதன் மூலமாகவும் நல்ல தேக ஆரோக்கியத்தைப் பெறமுடியும். இதுவும் உள மேம்பாட்டிற்கு முக்கியமான ஒரு கூறாகும்.

கல்வி கற்பதற்கு உடல் நிலைத் தகுதி ஒரு மாணவனுக்கு அவசியமாகின்றது. அத்துடன் உளநிலைத் தகுதியும் அவசியமாகின் றது. உடற்தகுதி எவனுக்கு உறுதியாக அமைகிறதோ அவனுக்கு உளத்தகுதியை அவ்வுடல் கொடுத்துவிடுகிறது. ஒரு மாணவன் கற்பதற்கு இத்தகைய இரண்டும் வலிமையாக அமைகின்றது. உடலும் உள்ளமும் வலிமை யடைந்தால் அவனால் கல்வியை மனத்திடத்து டன் உள்வாங்க முடியும். கல்வி கற்பதற்குரிய உளத்தெளிவை உடல் அளிக்கின்றது. எனவே கல்வி விருத்திக்குக் கட்டமைப்புடைய உடல் அவசியமாகின்றது. தற்காலத்தில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் இவ்வுண்மையை அறிந்து கொள்ளவேண்டும். தமது உடலை உறுதியாக்குவதன் மூலம் மனதை உறுதியாக் கிக் கற்க வேண்டும். அப்போது தான் உடலுறுதி கல்வி விருத்திக்கு வழிகாட்டும்.

வசதிகள், வளங்கள் குறைந்த பின் தங்கிய பாடசாலைகளில் பயிலும் மாணவர் களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டிய கடமை ஆசிரியர்களாகிய ஒவ்வொருவருக்கும் உள்ளது. இத்தகைய மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவது பின்வரும் மூன்று காரணிகளில் தங்கியுள்ளது.

1. ஆசிரியர்களின் அர்ப்பணிப்புள்ள செயற்பாடு
2. பெற்றோரின் ஒத்துழைப்பு
3. மாணவர்களது கற்க வேண்டும் எனும் ஊக்கம்.

இன்றைய கல்வி நிலையானது மாணவர்களையும் ஆசிரியர்களையும் இயந்திர மயப்படுத்திப் பெறுபேறுகளைத் தயாரித்து வெளித்தள்ளுவது போன்று அமைந்துள்ளது. அவர்களைச் சமூக மயப் படுத்தப்படாத ஒரு சூழ்நிலையையே உருவாக்கி யுள்ளது. இந்நிலை முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இதனை விடச் செய்முறை களினூடாகக் கற்றலை நாம் மேற்கொள்ளும் போது மாணவன் தனது ஞாபகத்தினைக் கூட்டும் சந்தர்ப்பம் அவனுக்கு உருவாகின்றது. ஒரு மாணவனினதும் நாட்டினதும் கல்வி அபிவிருத்தியில் ஆரம்பக்கல்வியே அத்திவார மாக அமையவேண்டும்.

கல்வியில் ஒழுக்கம் என்பது மற்ற வருக்கு மதிப்பளித்தல், பணிவு, பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை மதித்துப் பேணுதல் என்பவற்றில் தங்கியுள்ளது. இத்தகைய ஒழுக்க

வரன் முறைகளில் குருவை மதித்தல், கல்வியை மதித்துப் போற்றுதல், பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி அவற்றிலிருந்து விடுபட முடியாத சூழலில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கையில் அவர்களிடமிருந்து அவர்களது சக்திக்கு அப்பாற்பட்ட பெறுபேறு களை எதிர்பார்ப்பது என்பதும் கானல் நீராகவே இருந்துவிடும். பெற்றோரின் அன்பு, அரவ ணைப்பு என்பன இன்மையால் பிள்ளைகளின் அக உணர்வில் ஏற்படும் விரக்தியும், வெறுப்பும் உளத்தாக்கங்களுமே இவற்றுக்குக் காரணமாகும்.

நாம் உலகில் எல்லாவற்றையும் மக்களுக்குக் கற்பிக்கின்றோம். ஆனால் முக்கியமானதைக் கற்பிப்பதில்லை. அதுதான் வாழ்வு. இதைப்பற்றி ஒருவரும் கற்பிப்பதில்லை. ஒவ்வொருவரும் இதைப்பற்றி அறிந்திருக்க வேண்டும். நாம் அனைவரும் மனிதராக இருப்பதன் அர்த்தம் யாரும் உணர்வதில்லை. மனிதனின் மாண்பு பற்றி எவரும் சொல்லித் தருவதில்லை. இவை பற்றி இயல்பாகவே மனிதன் அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது கல்வியில் வாசிக்க, எழுத, கணக்குப் பார்க்க, உச்சரிக்க எழுத்துக் கூட்டுவதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. கல்விப் பணியில் ஈடுபடுபவர்கள் நல்லவர்களாக உணர்வுள்ளவர்களாக, தனித்துவமுள்ளவர் களாக நல்ல ஆளுமையுடைய வர்களாக இருக்க வேண்டும். ஒருவருக்கு ஞானம் இல்லை எனின் அவர் அறிவின்மையைத் தான் கொடுப்பார். ஒருவரிடம் மகிழ்ச்சி இல்லை யெனின் அவரால் மனமுடைவைத் தான் கொடுக்க முடியும். ஒருவரிடம் சுதந்திரம் இல்லையெனின் அவர் மற்றவர்களைக் கூண்டிலே அடைப்பார். நாம் வைத்திருப்பவை களைத்தான் எம்மால் கொடுக்கவோ பகிரவோ முடியும்.

கல்வி என்பது பல தரவுகளை மாணவர்களுக்குத் திணிப்பது அல்ல. மாறாக ஒருவருடைய தனித்துவத்தை அவர் கண்டு கொள்ளவேண்டும். கற்பிப்பவர்கள் இதனைக் கண்டறிந்து பின்னர் பிள்ளைகளுக்கு அவர்களின் தனித்துவத்தைக் காண உதவவேண்டும். Education என்ற ஆங்கிலச் சொல்லானது இலத்தீன் மொழியில் Educare என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் வழிகாட்டுதல் என்பதாகும். எனவே நாம் கற்பிக்கின்றோம் என்பது பொய் மாறாக வழிகாட்டுகின்றோம் என்பது உண்மை. இந்த வழிகாட்டுதல் ஊடாக மாணவர்களின் தனித்துவங்களை அடையாளம் காணவும் அவற்றைப் பாராட்டி வளர்க்கவும் உதவ வேண்டும். இதனால் மாணவர்களின் மகிழ்ச்சியை அதிகரிக்க முடியும். அவர்களது படைப்பாற்றலை வளர்க்க முடியும்.

ஆனால் இன்றைய நிலை வருந்தத்தக்கது. இன்று கல்விக் கூடங்களில் அன்பு வற்றிப்போய் மனிதம் தோற்றுப் போய் உள்ளது. மாணவர்களின் நலனில் அக்கறை கொள்ளாது .நான் செய்வது போலச் செய் நான் சொல்வது போலச் சொல் என்று மாணவரின் ஆற்றலை அழிக்கின்றோம்.

எல்லா மாணவர்களும் ஒரே மாதிரி யாக இருக்கவேண்டும் என்ற மனோ பாவம் மாணவனது தனித்துவத்தை மழுங்கடிக் கின்றது. இவ்வுலகில் பிறக்கும் மனிதர்கள் அனைவரும் தனித்துமுடையவர்கள். ஒவ் வொருவரும் தமக்கே உரிய பண்புகளும் ஆற்றல்களும் திறமைகளும் உடையவர்களாக இருக்கின்றார்கள். ஒவ்வொருவரையும் தமக்கே யுரிய ஆற்றல்களையும் பண்புகளையும் இயல்புகளையும் கண்டுபிடித்து இனங்காண வைத்து அவர்களை வளர்க்க வேண்டும். இந்த உலகம் ஓர் அழகான பூந்தோட்டம். இப்பூந் தோட்டத்தில் ஒரேயொரு மலர் மட்டும்தான் இருப்பதென்றால் அது அழகாக இருக்காது. இப்பூந்தோட்டமாகிய உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தனித்தவமான பூ என்பதை உணர்ந்து நாம் கல்வியை மாணவருக்கு வழங்கவேண்டும்.

# பார்த்தீனியத்தின் படையெடுப்பால் துன்பப்படும் உயிர்கள்

திருமதி மகாலட்சுமி கந்தராஜன்
ஆசிரியர் (பழைய மாணவி)

ஈழத்தின் மீதான அடுத்தடுத்து நடந்து வந்த போர்களின் விளைவாக சுற்றுச்சூழல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு காணப்படுகின்றது. ஆயுதத்தினால் ஏற்படும் போரைவிட அமைதி யான முறையில் ஆக்கிரமிக்கும் போரானது. இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் அதனோடு சேர்ந்து வந்த பார்த்தீனியம் இன்னுமொரு இராணுவமாக ஈழத்தின் இயற்கைச் சூழலை சூறையாடி வருகிறது. இந்தப்பச்சை இராணுவமானது சூழலில் ஆற்றி வரும் ரணங்கள் காலா காலத்துக்கும் ஆற்றமுடியாத பெரும்வலியாகும்.

பார்த்தீனியச் செடிகள் இந்தியாவிலிருந்து ஈழத்தினுள் நுழைந்த போதும் அதன் தாயகம் இந்தியா அல்ல மெக்சிக்கோ வளைகுடாக் கரையை அண்டிய வெப்ப மண்டல அமெரிக்க நாடுகளே. இவற்றின் பூர்வீகமாகும். அமெரிக்கா வில் 1954ல் அபரிமிதமாக கோதுமை விளைந்த போது அதனை கடலில் கொட்டாமல் வறுமை யால் வாடும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பமுடிவு செய்தார்கள். மும்பைத் துறைமுகத்தில் வந்திறங்கிய கோதுமைத் தானியங்களோடுதான் இந்தியாவுக்குள் பார்த்தீனிய விதைகளும் கலந்து வந்திறங்கின. இந்திய இராணுவம் ஈழத்தில் புகுந்தபோது அவர்களது இராணுவ வாகனத்துடனும், உணவுக்காகக் கொண்டு வரப்பட்ட செம்மறி ஆடுகளுடனும், கடுகு விதைகளுடனும் அங்கி ருந்து சேர்ந்து வந்த பார்த்தீனியம் விதைகளே ஈழமண்ணில் பார்த்தீனியச் செடிகளுக்கான முதல் விதைப்பு. காங்கேசன் துறை முதல் திருகோணமலை துறைமுகம் வரை இந்திய இராணுவம் பாசறைகளை அமைத்த இடங்களி லெல்லாம் இயற்கைச் சூழலை தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன. பயிர்ச் செய்கை, நிலங்கள், கைவிடப்பட்ட காணிகள் வீதியோரங்கள் எல்லாமே. புதிது புதிதாக நிலையெடுத்து வருகிறது. பார்த்தீனியம் மூக்குத்திப் பூண்டு, சீதேவியார் செங்கழுநீர், செவ்வந்தி போன்ற தாவரங்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு செடியாகும். ஒன்றரை மீற்றர் உயரத்திற்கு மேலாக வளரக்கூடியது. இலைகள் மிருதுவான மயிர்களால் மூடப்பட்டு ஆழமான சோணைகளாகப் பிளவுபட்டிருக்கும். வெண்ணி றமான பூக்கள் சிறிய மூக்குத்திகள் போல செடி பூராவும் நிறைந்திருக்கும். ஈழத்தில் நுழைந்த அந்நிய இனம் என்பதால் விளங்கிக் கொள்வதற்கு ஏற்ற தமிழ்ப்பெயர் இல்லை. இதனை சும்மா வெறுமனே "களை" என அழைப்பது பொருத்தமில்லை. ஏனெனில் களைகளுக்கெல்லாம் தாதாவாக உள்ள அரக்கக்களை இதுவாகும்.

வேளாண்மையில் பயிரோடு சேர்ந்து வளருகின்ற எந்த ஒரு பூண்டும் உற்பத்தியைப் பாதிக்கின்றபோது கெடுசெடியான பார்த்தீனியத் தின் பயங்கரவாதம் எவ்வளவு அதிகமாக இருக்கும். நெடுநெடுவென வளர்ந்து பயிர்களின் தேவைகளைத் தட்டிப்பறிப்பதோடு மண்ணில் கசிய விடும். நஞ்சுகளின் மூலமும் வளர்ச்சியைக் குறுகத் தறித்து விடுகிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தாவரவியல் துறையில் செய்த ஆய்த ஆய்வின் விளைவாக உழுந்து, பயறு போன்ற தாவரத்தின் அருகில் பார்த்தீனியம் சுவாசம் செய்யும் போது பயிர்களின் வளர்ச்சி வெகுவாகத் தடைப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. அவரையினப் பயிர்களின் வேர்களில் இரைசோபியம் பற்றீரியங்கள் வேர்முடிச்சுக்களில் காணப்

படுகின்றன. இம்முடிச்சுகளை பார்த்தீனிய நஞ்சுகள் பாதிப்படையச் செய்கின்றன எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.

மனிதர்களிலும் குறிப்பாக ஒவ்வாமையினால் அதிகம் பாதிப்படையக் கூடிய தன்மையுடைய நபர்களில் பார்த்தீனியம் சுலபமாக தன் குணத்தைக் காட்டி விடுகிறது. பார்த்தீனியம் உள்ள இடங்களில் காற்றில் மிதக்கும் மகரந்தங்களில் பார்த்தீனியத்தினுடையவைதான் பெரும் பங்கு. இம்மகரந்தங்களும் தம்மீது நச்சினைப் பூசிவைத்துள்ளன. இதனைச் சுவாசிப்பவர்களுக்கு ஆஸ்த்துமா போன்ற சுவாசக் கோளாறுகள் ஏற்படுவதோடு அச்செடியை தொடர்ச்சியாகத் தொட நேரிடுகிறபோது தோலில் அரிப்பு, தடிப்பு அவதிப்படும் அளவுக்கு ஏற்படுகிறது. இதற்கு எவ்வித சிகிச்சையும் பயனிளிக்காது போய் விடுகிறது. இதனால் பாதிப்படையும் மக்கள் பெரும் துன்பப்படுகின்றனர்.

எனவே எமது ஈழத்தில் பலாலி வீதியிலும் பெருமளவு பார்த்தீனியத்தை நான் பார்த்துள்ளேன். எமது பகுதிகளிலும் வீதியோரங்கள் பாவனையற்ற காணிகள், தோட்டநிலங்கள், இந்திய இராணுவம் முகாம் அமைத்த இடங்களுக்கருகில் மற்றும் எமது பாடசாலை வளவிலும் குறைந்தளவு பார்த்தீனியத்தை காணமுடிகிறது. இப்பார்த்தீனியம் அழிக்கப்பட்டு வந்தாலும் அது அழிவடையாது காணப்படுவது பெரும் வருத்தத்திற்குரியது.

இப்பார்த்தீனியத்தை அழிப்பதற்கு சிறந்த முறை கைகளால் வேருடன் பிடுங்கி எரிப்பதே ஆகும். அதனை வெறுங்கைகளால் பிடுங்கமுடியாது கையுறைகளைப் பாவித்தே இவற்றைப் பிடுங்குவது சிறந்தது. இவ்விதைகள் முளைப்பதற்கு சாதகமான சூழ்நிலை இல்லாதவிடத்து உறக்கத்திலிருந்து 20 வருடங்களின் பின்னரும் முளைக்கக்கூடியன. இதற்கு நுளம்பை அழிக்கத் தனியான துறைகள் இயங்கி வருவது போல பார்த்தீனிய ஒழிப்புக்கும் ஒரு பசுமைப் படை அவசியம் தேவை.

எனவே எமது பாடசாலையிலும் அதிபரின் அறிவு பூர்வமான நடவடிக்கையால் எமது பாடசாலைப் "பசுமைப் படை" ஒன்று தோற்றம் பெற்றுள்ளது. இப்படையின் உதவியுடனும் எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் உதவியுடனும் பாடசாலையிலும் சுற்றாடலிலுமுள்ள பார்த்தீனியத்தை அகற்றி செழுமையான நல்ல ஆரோக்கியமான சூழலை ஆக்கவேண்டும். இதுபோல நாடு முழுவதிலுமுள்ள பார்த்தீனியமும் அழிந்து உயிர்களை துன்பமில்லாத வாழ்வு வாழ வழிவிடவேண்டும்." இதற்காக அனைவரும் ஒத்துழைப்போம்.

# பெற்றோர்களின் நெருக்கீடுகளும் பிள்ளைகளின் எதிர்பார்ப்புக்களும்

திரு.சே.யசந்தன்
உள்ளக பயிற்சி ஆசிரியர்

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் ஆவார்கள். அதாவது நாட்டின் சமூகப் பொருளாதாரத்தை எதிர்காலத்தில் கட்டியெழுப்பபோவது இன்றைய சிறுவர்கள் ஆவார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் நாளைய தலைவர்களாக வலம்வர காத்திருக் கும் சிறுவர்களை பல்வேறு நெருக்கீடுகளை கொடுத்து விசேட கவனிப்புடன் தங்கியிருப் போராக மாற்றுவது இன்றைய சமூகத்தவர் களின் ஓர் துன்பியல் செயலாகும்.

பல்வேறு ஆற்றல்கள், திறமைகளுடன் மலரும் இளம் சிறுவர்கள் பெற்றோரின் மாறுபட்ட கவனிப்புக்கள், நோக்கங்களால் விசேட கவனிப்பு உள்ளவர்களாக மாற்றப்படு கின்றனர். பிறக்கும்போதே விசேட தேவை உடையவர்களாக பிறப்பவர்கள் ஒருபுறம் சமூகத்தின் நெருக்கீடுகளால் விசேட தேவை உடையோராக உருவாக்கப்படுவது கவலைக் குரிய விடயமாகும்.


சிறுவர்கள் ஒவ்வொருவரும் தமது எதிர்பார்ப்புக்கள் விருப்பங்களிற்கு ஏற்பவே தமது ஆற்றல்களிற்கு ஏற்பவே செய்ய முயல்வார்கள். ஆனாலும் பெற்றோரின் குறிக்கோள்கள் பிள்ளைகளின் எதிர்பார்ப்புகளிலும் முற்றிலும் வேறுபட்டவையாக காணப்படும் உதாரணமாக ஒரு பிள்ளை ஒன்றின் எதிர்பார்ப்பு ஆசிரியராக வருவது எனில் பெற்றோரின் எதிர்பார்ப்பு அவனை ஓர் வைத்தியராக அல்லது பொறியிய லாளராக வர வைப்பதாக காணப்படும். இங்கு பெற்றோரின் எதிர்பார்ப்புக்கும், பிள்ளையின் எதிர்பார்ப்பிற்கும் இடையே வேறுபாடு காணப் படும். இதன் விளைவாக பிள்ளைகளிற்கு முதலில் பெற்றோரிலும் பின்னர் கல்வி மீதும் வெறுப்பு ஏற்பட்டு உளப்பாதிப்பு ஏற்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை உறவினர்களின் பிள்ளைகளோடும், அயலவர்களின் பிள்ளைக ளோடும் ஒப்பிட்டு பார்க்க விரும்புகின்றார்கள். இதன் விளைவாக அயலவர்களின் பிள்ளைகள் கல்வியில் எதையாவது செய்து காட்ட வேண்டும் என்பதற்காக மிகையான முயற்சிகளையும் நெருக்கீட்டையும் தமது பிள்ளைகளிற்கு கொடுப்பார்கள். இதன்விளைவாக பிள்ளை கல்வியில் இடைநிறுத்தம் செய்யும் ஓர் அபாயம் ஏற்படுகிறது. ஏனைய பிள்ளைகளுடன் தமது பிள்ளைகளை ஒப்பிடுவதானால் எப்போதும் குறை கூறுவதனால் பிள்ளையின் உள்ளத்தில் ஓர் தாழ்வு மனப்பாங்கு ஏற்பட்டு அவன் சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழும் ஓர் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுகின்றான்.

குழந்தை பிறப்பில் இருந்து வளரும் வரை தாயின் அரவணைப்பிலேயே வளர விரும்புகின்றது. இது பிள்ளையின் ஓர் அடிப்படை தேவையும் ஆகும். ஒரு பிள்ளைக்கு அடிப்படை தேவைகள் கிடைக்காத விடத்து அப்பிள்ளை ஓர் நெறிபிறழ்வாக அல்லது விசேட தேவை உடைய பிள்ளையாக மாறுவதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே தாயிடம் முழுமையான அன்பைப் பெறும் பிள்ளை ஆளுமை மிக்க நற்பிரஜையாக வருவான் என்பது திண்ணமே. சமூக விரோத செயல்களில் ஈடுபடும் பிள்ளைகளின் நடவடிக்கைக்கு அடிப்படையாக பெற்றோரே காரணமாக காணப்படுகின்றனர். மற்றும் வேலைக்கு

செல்லும் பெற்றோர்களால் அதிகநேரம் தனிமைப்படுத்தும் பிள்ளகைள் தன்னம்பிக்கை இழந்து எதையும் வெற்றிகரமாக செயல்படுத்த முடியாத ஒதுங்கல் பிள்ளைகளாக மாறுகின்றனர். பிள்ளைகளின் எதிர்பார்ப்பிற்கு மதிப்பளித்து அவர்களை இன்னும் ஊக்கம் அளித்தால் அவர்களின் ஆற்றல்கள் விருத்தி யடைந்து வாழ்வில் வெற்றியடைய முடியும்.

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளின் வாழ்வை சாதனை மிக்கதாகவோ வேதனை மிக்கதாகவோ மாற்றுவது உங்கள் கைகளிலேதான் தங்கி இருக்கின்றது. எனவே தயவுசெய்து உங்கள் விருப்பத்திற்கு முக்கியம் கொடுக்காது பிள்ளையின் விருப்பத்திற்கு முக்கியம் கொடுத்து நாளைய தலைவர்களை உருவாக்குவீர்கள் என நம்புகின்றேன்.



# ஓட்டிசத்தை விளங்கிக் கொள்ளல்

திரு.த.ராஜ்குமார்
ஆசிரியர்

## அறிமுகம்

மதியிறுக்கம் (Autism) அல்லது புற உலகச் சிந்தனைக்குறைபாடு என்பது ஒருவருடைய மக்கள் தொடர்பு திறன், சமுதாய அரங்கில் செயற்பாடுகள், ஆர்வங்கொள்ளும் துறைகள், நடத்தைப் பாங்கு போன்றவை இயல்பிற்கு மாறாக அமைவதற்கு காரணமான மூளை வளர்ச்சி வேறுபாட்டை குறிக்கும். இது நரம்பியல் தொடர்பான அறிவாற்றல் தொடர்பான அபிவிருத்தியில் ஏற்படுகின்ற குறைபாடு ஆகும்.

பொதுவாக இதன் அறுதியிடல் (Diagnosis) பொதுவாக உளவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கென மருத்துவப் பரிசோதனைகளும் உள்ளன. உடல் நிலைப்பரிசோதனையில் இது பொதுவாகத் தெரியவருவதில்லை. அத்தோடு இது ஒரு நோயல்ல. இக்குறைபாடானது வாழ்நாள் முழுதும் காணப்படுவதுடன் இதனை சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியாது. சர்வதேச ரீதியாக 2016இன் கணிப்பின்படி 68 குழந்தைகளில் 1 பிள்ளை ஓட்டிசமாக பிறக்கின்றது என்று ஆய்வு கூறுகின்றது. ஓட்டிசம் பிள்ளைகள் உருவாவதில் பரம்பரை அலகின் தாக்கம் இருப்பதாக கண்டுபிடிப்புகளில் கூறப்படுவதுடன் இது வாழ்நாள் முழுவதும் அபிவிருத்தியில் குறைபாட்டை ஏற்படுத்தவதாகவும் உள்ளது.

## கண்டுபிடிப்பு

1943ம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவர் Dr. லியோகேனர் என்பவர் இக்குறைபாட்டை முதன்முதலில் கண்டுபிடித்தார். இவர் குழந்தைப் பருவ மதியிறுக்க குறைபாடு உடைய 11 குழந்தைகளை ஆய்வு செய்து இவர்களிடம் சில வழமையில்லா நடத்தைகளை கண்டறிந்தார்.

## மதியிறுக்கமுள்ள குழந்தைகளை அடையாளம் காணுதல்

### சமூகத் தொடர்புகள்

நடத்தை தொடர்பாடல் இவர்கள் மேற்படி மூன்று வகையான முறைகளில் இடர்படுவதுடன் புலன் உணர்வுகளின் இடர்பாடுகளும் இணைந்தவாறு நடத்தையானது வேறுபட்டும் காணப்படும்.

இவ்வாறான பிள்ளைகளில் பின்வரும் நடத்தை இயல்புகளை காணலாம்.

1. தன் வயதொத்தவர்களுடன் நட்புணர்வு கொள்வதிலும் சமூகத்திறன்களை வெளிக்காட்டுவதிலும் ஈடுபாடு அற்று காணப்படல்
2. அவர்களது நடத்தை மற்றும் பிறரை எதிர்கொள்ளும் விதத்தில் கேலிக்கு ஆளாகுதல்
3. பிறருடன் பொருந்திச் செல்லாமல் தனித்து இருத்தல்
(உதாரணம்:உணவு, விளையாட்டு)
4. தங்களது நடத்தையானது மற்றவர்களை எவ்விதம் பாதிக்கிறது என அறியாதிருத்தல்
5. அன்றாட வேலைகளில் சமாளிப்பதில் இடர்படல்
6. இவர்கள் தன் போக்கிலேயே செயற்பட வேண்டும் என நினைப்பர். அதனால் சமூகத்திறன் குறைவாக காணப்படும்.
7. அதிகமான சத்தத்தையோ அதிகமான வெளிச்சத்தையோ விரும்பமாட்டார்கள்.

### நிலைகள்

இக்குறைபாடானது குறைந்த நிலைமை முதல் தீவிர நிலை வரை காணப்படுகிறது. இக்குறைபாட்டின் நிலையை கண்டறிய ஸ்பெக்ட்ரம் (Spectrum) என்ற சொல் பயன்படுகிறது.

1. கடுமை நிலை என்பதில் பெரும் பாலான துறைகளில் சராசரி செயற்பாடு இருக்கும்
2. தீவிர நிலை என்பதில் சமூகம் செயற்பாடுகள் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கும்.

**சமுதாயத்துடன் தொடர்பு**

- சமூகத் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை
- கற்பனை உலகில் வாழுதல்
- தனியாக திரும்ப திரும்ப விளையாடுதல்
- தனது உடனடி தேவையை பூர்த்தி செய்ய மட்டும் தொடர்படுதல்
- மனிதர்களை விட பொருட்களிலேயே ஈர்க்கப்படுவர்.
- சக மாணவர்களுடன் விளையாடுவதையோ பார்ப்பதையோ தவிர்ப்பது
- உணர்ச்சிகளை அடையாளம் காண முடியாதவர்களாக உள்ளனர் (கோபம், மகிழ்ச்சி)

**புலனுணர்வு வெளிப்பாடுகள் மற்றும் நடைமுறைகள்**

மதியிறுக்க குறைபாடு உடைய பிள்ளைகள் புலன்சார்ந்த உணர்வுகளை அனுபவிப்பதில் மற்றவர்களிடம் இருந்து இக்குழந்தைகள் வேறுபட்டு இருப்பர். புலன் சார்ந்த தூண்டல்களுக்கு இவர்கள் அளவுக்கு அதிகமாகவோ/ குறைவாகவோ உணர்ச்சிகளை வெளிக்காட்டுவார். சுற்றுப்புறச் சூழலில் உள்ள புலன் சார்ந்த விடயங்கள் இவர்களை கடுமையாகப் பாதிக்கும். ஆனால் அவர்களிற்கு ஒலி, ஒளி, சுவை, மணம், தொடுஉணர்வுகள் சராசரியை விட அதிகமாகவோ குறைவாகவோ செயற்படும். ஆகையால் தான் அவர்களில் பலர் மாற்றமில்லா ஒரே வகையான நடைமுறையை விரும்புகின்றனர்.

**தொடு உணர்வு மண்டலம்**

தொடு உணர்வு மண்டலத்தில் பாதிப்பு இருப்பின் மதியிறுக்கமுடைய குழந்தைகள் பிறர் தொட்டால் விலகி விடுவார்கள். பொருட்கள், உடை,உணர்வு ஆகியவற்றின் தொடு உணர்வை அதிகப்படியாகவே உணர்வார்கள்.

**செவி உணர்வு மண்டலம்**

மதியிறுக்கமுடைய குழந்தைகளுக்குச் செவி உணர் மண்டலத்தில் ஏற்படும் மூளைக்கும் செல்லும் ஒலிகளை மூளையானது சொற்கள், இசை, பொருளுடன் கூடிய ஒலி சூழலுக்கேற்ப பிரித்து அறியாது. எனவே பிள்ளைகள் சராசரியாக கேடு விளைவிக்காத ஒலிகளுக்கு கூட அதிகம் பாதிக்கப்படுதல்.

உதாரணம் நாற்காலி இழுத்தல், ஒலிபெருக்கி அறிவுப்புக்கள், மணியோசை, மின்சாதனங்களின் இரைச்சல்

**விழிசார் மண்டலம்**

கண்கள் மூலம் காணப்படும் வண்ணம், உருவம், அளவு ஆகியவற்றை நரம்பு மண்டலமும் மூளையும் ஒருங்கிணைந்து சூழலுக்கு ஏற்றவாறு பொருத்தி அக்காட்சிக்கு ஏற்ப செயல்பட ஆணையிடுகிறது. மதியிறுக்க குறைபாடு உடையோருக்கு விழிசார் வெளிச்சம், பிரகாசமான விளக்குகள், ஒளி, எதிரொளிப்புக்கள், பளபளப்பான பொருட்களை தவிர்க்க கண்களை மூடுவர்/ சுருக்குவார்கள். சிலர் அவற்றை விரும்பி நாடுவர்.

**கற்பித்தல் நுட்பங்கள்**

- பிள்ளைக்கு சௌகரியத்தை உணரச் செய்தல்
- உற்சாகப்படுத்தல்
- பிள்ளையின் அசைவுகளை கற்று பிள்ளை மீது அதிக அக்கறை காட்டுதல்
- சமூகத்திறன் அபிவிருத்திக்கு உதவுதல்
- கதைப்பதை திணிக்க கூடாது
- இடர்படும் இடங்களில் உதவி செய்தல்
- நாளாந்த செயற்பாடுகளை படங்கள் மூலம் காட்டுதல்
- கற்பதற்கு காலம் வரும் வரை காத்திருத்தல்
- சிறிய கட்டளைகளை வழங்கி செயற்படவழிப்படுத்தல்
- பிள்ளையின் நிலைக்கு இறங்கி செயற்பாட்டை செய்தல்
- உணர்ச்சிகளை முகபாவனையில் காட்டுதல்

# சுற்றாடலை பாதுகாத்தலில் திண்மக் கழிவு முகாமைத்துவம்

திரு.பா.வேல்பரன்
ஆசிரியர்

பூமியில் வாழும் மனிதர்களாகிய நாம் சுற்றாடலை பல்வேறு வழிகளில் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். சூழலை நாம் பாதுகாப்போமாயின் சூழல் எம்மை பல்வேறு வழிகளில் பாதுகாக்கும். இதற்கமைய ஒவ்வொரு தனி மனிதனும் தாம் வாழும் சுற்றாடலை மாசுபடுத்தாது இயன்றளவு தவிர்த்துக் கொள்ள வேண்டியது எமது கடமையாகும்.

சுற்றாடல் மாசுபடுதல் பற்றிய விடயத்தில் திண்மக் கழிவுகளை அகற்றவேண்டிய தேவை பாரிய சவாலாக உள்ளது. இதற்கு காரணம் எமது நாட்டின் நகரசபை, பிரதேசசபை ஆகியனவற்றில் இருந்து திண்மக் கழிவுகளை அகற்றப்படுவதில் பாரிய சவாலாக உள்ளது. ஏனெனில் நாம் சூழலில் விடுவிக்கும் திண்ம கழிவுகளின் அளவு அதிகரித்து செல்வதே முக்கியமான காரணமாகும்.

கழிவகற்றல் முகாமைத்துவத்தின் போது 4R அடிப்படையிலை பயன்படுத்துவதால் சூழலில் தேங்கும் கழிவுகளை பின்வரும் முறைகள் மூலம் குறைக்கமுடியும்.

1. Reuse – மீள்பாவனை - எமது சூழல் உள்ள பொலித்தீன், பிளாத்திக்கு வகைகளை மீள் பயன்பாட்டிற்கு உட்படுத்தல் உதாரணம் தண்ணீர் போத்தல், சோடாப் போத்தல்கள்
2. Reduce – பாவனையை குறைத்தல்- பிரிந்தழியாத நுண்ணுயிர் கொல்லிகள், இரசாயனப் பொருட்களின் பாவனையை குறைத்தல்
3. Replace – மாற்றீடு செய்தல்- சூழலுக்கு பாதகமான சூழல் நேயமற்ற பொருட்களுக்கு பதிலாக சூழல் நேயமான பொருட்களை பயன்படுத்தல்

   உதாரணமாக இரசாயனப் பசளைகளுக்கு பதிலாக சேதனப் பசளைகளைப் பயன் படுத்தல், பிளாஸ்ரிக் குப்பைகளுக்கு பதிலாக கடதாசிப் பைகளை பயன்படுத்தல்
4. Recycle மீள்சுழற்சி - பல்வேறு மூலப்பொருட்களை மீள்சுழற்சி அடையச் செய்வதன் மூலம் பயன்பாட்டுக்குரியதாக மாற்றலாம். ஊதாரணமாக உடைந்த கண்ணாடிகள், பிளாஸ்ரிக்கு வகைகள் உலோகக் கழிவுகள்.

மேலே குறிப்பிட்ட முறையினை எமது சுற்றாடலில் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு இச்செயற்பாட்டை இலகுவாக செயற்படுத்துவதற்கு பின்வரும் நிறமுடைய கழிவுத் தொட்டிகள் வைக்கப்படுகின்றன.

நீலநிற தொட்டி - கடதாசி, உக்கும் கழிவுகள்

பச்சைநிற தொட்டி - கண்ணாடிக் கழிவுகள்

மஞ்சள் நிற தொட்டி - பிளாத்திக்கு பொலித்தீன் கழிவுகள்

சிவப்பு நிற தொட்டி- உலோகக் கழிவுகள்

இத்தொட்டிகளில் எமது மக்கள் கழிவுகளை வளப்படுத்தி சேர்க்கும் போது அவற்றை இலகுவாக சூழலில் இருந்து அகற்றி அதனை கழிவகற்றல் முகாமைத்துவ செயற்பாட்டிற்கு உட்படுத்தமுடியும். எனவே கழிவு முகாமைத்துவ செயற்பாட்டில் பாரிய பொறுப்புடன் செயற்படுத்தும் வகையில் மாநகர, நகர, பிரதேச சபைகள், செயற்பட வேண்டும்.

அவ்வாறு செய்ய தவறும் சந்தர்ப்பத்தில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பொறுப் பான இச்சபைகள் கழிவு முகாமைத்துவச் செயற்பாட்டிற்கு தேவையான அளவு நிதியினை ஒதுக்கி அதற்கான விசேட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது குப்பைமேடுகள் உருவாகுவதை தவிர்க்கமுடியும். இல்லாது விடின் ஒரு மாவட்டத்தில் உள்ள திண்மக் கழிவை மற்ற மாவட்டத்தில் கொட்டவரும்போது பல்வேறு சவால்களை அப்பிரதேசம் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும். இவற்றை கருத்தில் கொண்டு ஒவ்வொரு மாநகர சபைகள் நகரசபைகள், பிரதேச சபைகள் நிதியினை கட்டிடங்களை கட்டி அவற்றை வாடகைக்கு விட்டு அதன்மூலம் பல்வேறு நபர்களும் பணத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கங்களை மட்டும் சிந்திக்காது எமது சூழல் எமக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது எனும் விடயத்தை தூரநோக்காக கொண்டு இக்கழிவகற்றல் செயற்பாட்டிற்கு போதிய நிதியினை ஒதுக்கி அதற்கு வேண்டிய வழங்களை பெற்று அதன்மூலம் இச்செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொள்ளவேண்டியது இச்சபைகளின் தலைவர்களும் அதனுடன் இணைந்த உறுப்பினர்களதும் முக்கிய கடமையாகும். இக்கடமையில் இருந்து தவறும் ஒவ்வொரு நிமிடமும் எமது எதிர்கால சந்ததியினருக்கே பாதிப்புக்களை ஏற்படுத்துகின் றோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

திண்மக் கழிவுகளை அகற்றுவதில் பின்வரும் முகாமைத்துவச் செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

1. 4R முறை
2. எரித்தல் செயற்பாடு (Incineration)
3. சுகாதார நிலநிரப்புகாக (Land Filling)
4. பசளையாக்கல் செயற்பாடு (Composting)
5. தவிர்த்தல் மற்றும் குறைத்தல் (Avoidances and Reduce)
6. மாசாக்குபவர் கிரையம் (Polluter Pays Principles)
7. உற்பத்தியாளர் பொறுப்பினை அதிகரித்தல் (Extended Producer Responsibility)

போன்ற முறைகள் மூலம் சுற்றாடல் அதிகார சபையின் சட்டங்களிற்கு அமைய செயற்படுத்தப்படுவதாயின் எமது சூழல் அழகாகவும் மாசுக்கள் இன்றியும் காணப்படும். எனவே ஒவ்வொரு சபைகளும் கழிவு முகாமைத்துவச் செயற்பாட்டை பொறுப்புடன் நிறைவேற்றாது விடும்போது எமது நாட்டில் குடிநீரில் எண்ணெய்கள் கலந்தமை, புத்தளம், அருவக்காட்டு பிரச்சனை, கொழும்புத் துறைமுகத்தில் குப்பைகள் வந்தமை போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதை தடுப்பதன் மூலம் எமது சூழலை நாம் பாதுகாக்க வேண்டும் எனும் உயர்ந்த சிந்தனை ஒவ்வொரு தனிநபருக்கும் இருக்கவேண்டும். அதனை மறந்து சுயலாபத்திற்காகச் செயற்படுபவர்களை சட்டரீதியான நடவடிக்கைக்கு உட்படுத்தி நாட்டையும் சூழலையும் பாதுகாப்பது நாட்டின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கடமையாகும். தவறும் பட்சத்தில் சூழல் தொடர்பான நிலை எமக்கும் எதிர்கால சந்ததிக்கும் பாரிய சவாலாக அமையப்போவது திண்மக் கழிவுகளை எங்கு அகற்றுவது எனும் பிரச்சினை ஆகும். எனவே தற்போதைய மாணவ சமூகம் இதனை உணர்ந்து சூழலுக்கு நட்புத் தன்மையாக செயற்பட்டு சூழலில் கழிவுகளை, மலை போன்ற குப்பை மேடுகளை உருவாக்காது அவற்றை சிறந்த முறையில் அகற்றி நிலத்தடி நீரினை பாதுகாத்து பல்வேறு தொற்று, தொற்றா நோய்களில் இருந்து பாதுகாப்பை பெற்று வாழ்வதற்கு சூழல் ஆரோக்கியம் எமது சமூக ஆரோக்கியத்தை பேண உதவும்.

# துருவ நட்சத்திரங்கள்

யூனியன் அன்னையின் மடியினில் தவழ்ந்து
யுகயுகமாய் கல்லூரி வீறுநடை போட்டிட
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
கல்விப் பணிபுரிந்த கர்ம வீரர்களே

எங்கோ பிறந்து வளர்ந்து கற்ற நாம்
பணி நிமித்தம் என் காலமதில் ஒன்றாய்க் கூடி,
பாதையில் நின்று 'தடவி' உள் நுளைந்து
பாடசாலையை அடைந்திட்ட அக்காலத்தில்.

நாச்சிமார் கோயிலடியில் பஸ் ஏறி
நாய்படாப் பாடுபட்டு உள்வந்து
நாவினிக்க செந்தமிழை மாணவர்க்களித்து
நாதன் பதம் ஏகிவிட்டார் சிவசாமி ஆசிரியை

கொல்லங்கலட்டியுறை விநாயகர் எமக்களித்த
நற்கணித வித்தகியாய், சிரிப்பாலே செயலாற்றி
மெல்லக் கற்போரையும் ஏற்றம் பெற வைத்துவிட்டு
மேலுலகம் சென்று விட்டார் ஜெயலக்சுமி ஆசிரியை

அளவையூர் தந்த அருந்தவப் புதல்வன்
அன்பும் கண்டிப்பும் கலந்த நேர்மையால்
கசப்பான கணிதத்தை களிப்புடனே கற்பித்து
கடவுளிடம் சென்று விட்டார் தர்மசீலன் ஆசிரியர்

ஏழாலை மண்தந்த எழில்மிகு மங்கை
'ஏ' தரச் சித்திபெற்ற உறுதுணையாகி
விஞ்ஞானம் என்பதே உயிர் மூச்சாய்க் கொண்டு
விண்ணுலகம் ஏகிவிட்டார் சார்வாஜினி ஆசிரியை

அகவை அறுபதை அடையமுன்னரே — நீவிர்
ஆசிரியப் பணியை முடித்துக் கொண்டு
ஆண்டவன் பாதம் அடைந்து விட்டீரே
ஆண்டு பல சென்றாலும் அழியாது உம்பணி

கல்லூரி வளம் பெற ஒளிதந்த தீபங்களே!
கடமைக் காலத்தில் விடைபெற்ற சகோதரரே
சகல துறைகளிலும் ஒளிவீசும் எம் கல்லூரியை
"சரித்திரமாய் நிலைத்திடு" என வாழ்த்திடுவீர்களே!

திருமதி ரு.பகீரதன்
ஆசிரியர்

# ஆசிரியத்துவம்

திருமதி த.விஜயகுமாரன்
ஆசிரியர்

அதிகாலை ஐந்து மணி ஆலயமணி அலாரமாக ஒலிக்க, குழலி கண் விழித்தாள். அம்மா இரவு 12 மணி வரை தொலைக்காட்சி நாடகம் பார்த்ததால் அசந்து தூங்கிக் கொண்டிருந்தார். தாயாரை நித்திரை விட்டு எழுப்பியும் பலன் தராததால் தனது மேசையில் இருந்து பாடங்களைப் படித்தாள். பின் பாடசாலைக்கு ஆயத்தமாகி புத்தகப் பையுடன் செல்லும்போது அம்மா திடுக்கிட்டு எழுந்து வந்தார். "பிள்ளை" இந்தா 50 ரூபாய் தாறன் கன்ரீனில் ஏதாவது வாங்கிச் சாப்பிடு எனக் கொடுத்தார்.

குழலி துவிச்சக்கரவண்டியில் பாடசாலையை அடைந்து காலைப் பிரார்த்தனையின் போது மைதானத்தில் மயங்கி விழுந்து விட்டாள். அவளை மாணவர் ஓய்வு அறையில் ஆசிரியர் பராமரித்து தேநீர் அருந்தச் செய்தார். அதன்பின் ஆசிரியர், "குழலி! இன்று காலை சாப்பிடவில்லையா" என வினவினார். அவள் "அம்மா 50 ரூபா தந்துள்ளார். இடைவேளை யின் போது கன்ரீனில் சாப்பிடுவேன்" என்றாள்.

ஆசிரியர் அம்மாணவியை உணவு உண்ண வைத்து வகுப்பறைக்கு அழைத்துச் சென்று ஏனைய மாணவர்களோடு கலந்துரையாடினார். ஏனைய மாணவர்களை "காலை உணவு சாப்பிட்டு வந்தீர்களா?" என வினவினார். பெரும்பாலானவர்கள் உண்ணவில்லை. எனவே நீங்கள் அனைவரும் உங்கள் அம்மாவிடம் கூறுங்கள். இரவு எட்டு மணிக்குச் சாப்பிட்ட எங்களால் மறுநாள் காலை 10.30 மணி வரை சாப்பிடாமல் இருக்கமுடியாது. மைதானத்தில் மயங்கி விழுவது எமக்கு வெட்கமாக இருக்கிறது. எங்களுக்கு காலை உணவு 6.30 மணிக்கு தர வேண்டும் என அடம்பிடித்து கூறுங்கள் என ஆசிரியர் அறிவுரை வழங்கினார். தினமும் ஆசிரியர் தான் கற்பிற்கும் வகுப்புகளில் கூறி வந்தார். இதனால் பெரும்பாலான மாணவர்கள் காலை உணவு உண்டு பாடசாலை வர ஆரம்பித்தனர்.

சில தினாங்களின் பின் அருகில் உள்ள அம்மன் கோயில் தேர்த்திருவிழா நடைபெற்றது. அங்கு பல மாணவிகள் சுடிதார் லகங்கா போன்ற வடநாட்டு ஆடைகளை அணிந்து தலை விரிகோலமாக வந்து இருந்தார்கள். ஆனால் குழலி தமிழர்களில் சைவர்களின் அடையான முழுநீள பட்டுப் பாவாடை சட்டை அணிந்து தலைமுடி பின்னல் பின்னி பூ வைத்து அழகாக வந்திருந்தாள். கோயிலில் அடிக்கடி ஒலிக்கும் திருடர்கள் பற்றிய அறிவித்தலுடன் இடை இடையே கலாசாரம் பற்றியும் கூறக்கொண்டிருந்தார்கள். நாம் ஆலயத்தினுள் தலைவிரித்துச் செல்வது தவறு எனவும் சிறு பெண்பிள்ளைகள் முழுப்பட்டுப்பாவாடை, தாவணியும், பெரியவர் சேலையும், ஆண்கள் மேற்சட்டை அணியாது வேட்டி அணிவது சிறந்தது. இது எமது மரபு எனவும் கூறிக்கொண்டிருந்தார்கள்.

அடுத்த நாள் வகுப்பில் ஆசிரியர் தேர்த்திருவிழா பற்றிக் கூறி குழலியைப் பாராட்டினார். ஏனைய மாணவர்களுக்குக் கோயிலுக்குச் செல்லும்போது எவ்வாறு செல்லவேண்டும் என நீங்கள் கற்றிருந்த போதும் ஏன் அவ்வாறு ஆடை அணிந்து செல்லவில்லை என வினவினார். அப்போது ஒரு மாணவி கூறினார். இப்போ பட்டுப்பாவாடை சட்டை (Fashion) நாகரிகம் இல்லை என்றாள். ஆசிரியர் எமது கலாசாரம் பண்பாடு பற்றி அறிந்தால் இவ்வாறு கூறமாட்டீர்கள். Fashion இற்கு ஆடை அணிவது மட்டும் அழகு என எண்ணும் அர்த்தமற்ற எமது எண்ணத்தை நாம் தவிர்த்தல் வேண்டும். நாகரிகமாக இருந்தாலும் எமது கலாசாரம் பண்பாட்டைப் பேணும் வகையில் ஆடை அணிவது விரும்பத்தக்கது எனவும் அறிவுரை கூறினார்.

அன்னியர்களின் பண்பாடு கலாசாரங்களை இக்காலச் சமூகம் பெரிதும் விரும்புகின்றது. விரும்பாதவர்களைப் பட்டிக்காடு

என்றும் நாகரிகம் தெரியாதவர்கள் என்றும் ஏளனம் செய்கின்றனர். "காகம் அன்ன நடை நடக்கப் போய் தன்னடையும் மறந்தது" போல் எமது வழக்கத்தையும் விட்டு அன்னியரின் வழக்கத்தையும் முழுமையாக அனுசரிக்க முடியாது திணறும் சந்தர்ப்பங்களைத் தவிர்க்கலாம். அத்துடன் நாம் நாமாகவே ஒரு புதிய பாதையை அமைத்து நடந்தால் எமது இருப்பு அடையாளம் ஒரு போதும் அழியாது பாதுகாக்கலாம் எனவும் கூறினார்.

ஆனால் தற்காலத்தில் தமிழர்களின் கலாசாரம் சம்பந்தமான விழாக்களை நடாத்தும் போது எமது பண்பாடு, கலாசாரத்தை மேம்படுத்தாத வகையில் நடப்பது மனம் வருந்தத்தக்கதாக வுள்ளது. இதன்காரணம் சில சமயங்களில் குறைந்த நேரத்தில் குறைந்த செலவில் சிலரைத் திருப்திப்படுத்துவதற்காகவும் இருக்கலாம். இதனால் எமது முன்னோர்கள் கட்டிக் காத்து வந்த சிறப்பான எமது மரபுகளை யும், வழி முறைகளையும் தொலைத்து விடுவோமோ என அச்சம் கொள்ள வைக்கிறது என்பது உண்மை. இவ்வாறான நிகழ்வுகளால் எமது சிறார்களுக்கு நாம் யார், நாம் எவ்வளவு பெருமைக்குரிய சமூ கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிய முடியாதுள்ளது. உலகில் பல மொழிகள் இருப்பினும் செம்மொழிகளில் ஒன்று எனச் சிறப்பிக்கப்படும் தமிழ் மொழி தமிழர்களின் பெருமைக்குரிய சொத்து.

மாணவர்களே! இந்தப் பருவத்தில் மனம் எப்போதும் துருதுரு என சந்தோசத்தைத் தேடி ஓடும். எதிர்பாலாரின் கவர்ச்சி அதிகமாகப் பிடிக்கும். இப்பருவம் கழிய இவை எல்லாம் கனவா எனச் சிந்திப்பீர்கள். இப்போது பட்டமரம் கூட பூத்துக்குலுங்குவது போலத் தெரியும். எனவே இப்பருவத்தில் எவர் நிதானமாக செயற்படுகிறார்களோ அவர்கள் கற்று முன்னுக்கு வந்து வெற்றி பெறுவார்கள். உங்கள் வளர்ச்சியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் எப்போதும் துணை நின்று வழி காட்டுவார்கள். இப்போது மட்டுமே எதிர்காலத்தில் தேவைப்படும் விடயங்களைக் கற்கமுடியும் எனவும் கூறினார்.

நீங்கள் எதிர்காலத்தில் எந்த தொழில் புரிவதற்கு விரும்புகிறீர்கள் என ஆசிரியர் கேட்டார். ஒவ்வொருவராக எழுந்து வைத்திய ராக, கணக்காளராக, பொறியியலாளராக, விமானியாக எனப் பலவாறு கூறினர். குழலி தான் ஆசிரியராக பணி செய்ய விரும்புவதாகக் கூறினாள். மாணவர்கள் தாம் விரும்பும் தொழிலைச் செய்வதன் காரணத்தைக் கூறினார் கள். குழலிதான் ஆசிரியராக பணிபுரிய விரும்பு வதன் காரணத்தைக் கூறினாள். எனக்கு கற்பித்த சில ஆசிரியர்களைப் பார்த்து அவர் களைப் போல் கற்பிற்பிக்க வேண்டும் எனவும், ஒரு ஆசிரியரால் மட்டுமே ஒரு நல்ல சமுதா யத்தை உருவாக்க முடியும் எனவும் கூறினாள். அத்துடன் நல்ல ஆசிரியராக ஆத்மார்த்தமாக நல்ல மனநிலையோடு பணி செய்து பிஞ்சு மனங்களில் தன்னம்பிக்கையை உருவாக்கி சிந்தனையை வளர்த்து சமூகப் பொறுப்புக்களை ஏற்று வளர்க்கக் கூடிய மாணவர்களை உருவாக்குவது தனது நோக்கம் எனவும் கூறி னாள். அனைத்து மாணவர்களும் கைதட்டி வரவேற்றுப் பாராட்டினர். ஆசிரியர்கள் எல்லோ ரும் வாழ்த்திப் பாராட்டினார்.

மாணவர்களை எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளை உருவாக்குவது ஆசிரியர்களே. தற்காலத்தில் ஒரு குடும்பத்தில் தாய் தந்தையர் இருவரும் பணிக்குச் செல்லும் சூழல் ஏற்பட்டு பெரும்பாலும் குழந்தைகள் 3,4 வயது முதல் ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படுகின்றனர். தனது தாய் தந்தையருடன் இருக்கும் நேரத்தை விட ஆசிரியரிடம் இருக்கும் நேரமே அதிகமாக வுள்ளது. எனவே ஆசிரியரின் சொல், செயல், பழக்கவழக்கம் குழந்தைகளின் மனதில் பதிகின்றது.

பல ஆண்டுகளின் பின் குழலி ஆசிரியராக தான் கற்ற பாடசாலையிலே மகிழ்ச்சியாக பணிபுரிந்து வந்தாள். தன்னைப் போன்று பல மாணவர்களை உருவாக்கும் முயற்சியில் பணிபுரிகின்றாள். மாணவர்கள் நேசிக்கும் ஆசிரியராக காணப்படுகிறாள்.

# Idea of a Happy Life

**Mrs. T. Yogenthiran**
**Teacher**

a. A happy life is the outcome of the good deeds of a man

b. Shelter, food and clothings are the Basic needs of man

c. Affluence alone cannot bring happinesss in life.

d. Religion, Prayer and meditation offer peace of mind.

e. Our motto should be libe and let live.

A happy life is the outcome of the good deeds of a man. It cannot be bought nor can it be sought and it is as simple as 'always be cheerful and your life will be a happy one" A happy life has to be earned. If one were to base one's dreams of a happy life on virtual Principals and act likewise, such a life could easily be bestowed upon one.

Ever since the creation of man, shelter was found to be invaluable. A man without a home, therefore may find life bitter, thus a good home is one of the factors that constitutes a happy life. A man should have a good accupation to enjoy life. Education is another contributory factor in the field of a happy life as it eables a man to distinguish right from wrong and to have a better understanding between him and his fellow man.

Health is equally omportant to a happy life. As Bernard shaw has pointed out it is not the possession of a man, may be money or jewels, that make his life happy without good health life is not worth living. A healthy man, though there are some exceptions, is the man who finds life most happy.

Religion is also a basic factor that helps to create a happy life. It tells him which path to take and which to avoid. It guides him towards a virtuous and a happy life.

A happy life is essential to every human being without it a man feels extremely miserable, his actions trouble him and his thought mislead his finds that every door is closed to him and eventully welcomes an end to his life a solution.

# உயிர்ச்சுவட்டு எரிபொருட்களுக்காக உயிர் எரிபொருட்கள்

திருமதி. ம. கிருபாகரன் B.Sc (Hons) Dip in Edu
உயிரியல் ஆசிரியர்

நாடு எதிர்கொள்கின்ற தற்போதைய பிரதான சுற்றாடல் பிரச்சினை உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் (fossil fuels) பயன்பாடு பற்றியதாகும். உயிர்ச்சுவட்டு எரிபொருட்கள் புதுப்பிக்கப்பட முடியாத வளங்களாக காணப்படு வதுடன் இது சுற்றாட லுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதொன்றாகக் காணப்படுகின்றது. அதாவது இவற்றின் தகனச் செயற்பாடு பூகோள வெப்ப உயர்விற்குக் காரணமாகிறது. எப்படி இருப்பி னும் தற்கால சமூகமானது இன்றும் இவ் எரிபொருட் களிலேயே முற்று முழுதாக தங்கியுள்ளது. எரிபொருளின் பாவனையால் ஏற்படும் சூழல் பிரச்சினைகளாலும் இவற்றின் அதிக நுகர்வைக் குறைப்பதற்குமாக ஆய்வு ரீதியாக சுவட்டு எரிபொருட்களுக்கு மாற்றாக பயன்படுத்தப்படும் புதிய சக்தி மூலமாக விவசாய அடிப்படையிலான எரிபொருட்கள் மற்றும் உயிர் எரிபொருட்கள் காணப்படுகின்றன. உயிரியல் ரீதியாக மீளப் புதுப்பிக்கப்படக் கூடிய மூலப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மிக முக்கியமான எரிபொருட்களாக உயிர் எரி பொருட்கள் காணப்படுகின்றன.

## உயிர் எரிபொருட்கள் அவையே எதிர்வரும் காலங்களின் ஆதாரமா?

ஆம் இன்றைய சமூகம் முற்று முழுதுமான சக்திப் பற்றாக்குறை ஒன்றை எதிர்நோக்கிய சமூகமாகக் காணப்படுகின்றது. எமது அன்றாட வாழ்வில் நாம் சக்தியை வெவ்வேறு வடிவங்களில் பயன்படுத்திய வண்ணம் உள்ளோம். அதில் பிரதானமாக சுவட்டு எரிபொருட்களின் பாவனை உச்ச அளவை எட்டியுள்ளது. இதனால் எதிர்கால சமூகத்திற்குத் தேவையான எரிபொருட்களின் அளவில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்யவே இன்றையவிஞ்ஞானிகள் பல முயற்சிகளை மேற்கொண்ட வண்ணம் உள்ளனர்.

அதில் மிகப் பிரதானமாக உயிரெரி பொருட்களின் உற்பத்தி காணப்படுகின்றது. உயிர் எரிபொருட்கள் வேளாண்மை எரி பொருட்கள் எனவும் அழைக்கப்படும். இவை கைத்தொழில் கழிவுகள், நகரங்களிலிருந்து நாளாந்தம் சேகரிக்கும் கழிவுப்பொருட்கள், விலங்குக் கழிவுகள் மற்றும் மரக்கறிப் பொருட்களிலிருந்து உருவாக்கப்படுகின்றது. வளமான மீள் புதுப்பிக்கக்கூடிய சக்தி வளமாக காணப்படு கின்றது. உயிர்த்திணிவின் ஆதாரம் இது ஆகும். உயிர்த்திணிவு என்பது தாவர, விலங்கு இழையங்களில் சேமிக்கப்படும் சேதனச் சேர்வை ஆகும். தாவரங்கள் ஒளித்தொகுப்பின் மூலம் சூரிய ஒளிச்சக்தியை இரசாயன சக்தியாக மாற்றி தமக்குள் சேமித்து வைத்திருக்கின்றது. இச்சக்தியை ஏனைய விலங்குகள் நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ பெற்றுக் கொள்கிறது. இவ்வாறாக உயிரெரி பொருட்கள் மீள் புதிப்பிக்கக்கூடிய சக்தி வளங்களில் இருந்தே உற்பத்தி செய்யப் படுகிறது. இன்றைய கால உலகில் அதிகரித்து வருகின்ற சனத்தொகைக்கேற்ப சக்தித் தேவையும் அதிகரித்து வருகின்றது. எதிர்கால சமூகத்தினருக்கு வேண்டிய சுவட்டு எரி பொருட்களின் நிலை குறிப்பிட்டதொரு எல்லைக்குள்ளேயே காணப்படுகின்றது. அதாவது இன்றைய உலகில் 2044 ஆம் ஆண்டு வரை பாவிக்கக் கூடிய குறித்த எல்லைக்குட்பட்ட நிலையிலேயே எண்ணெய்த் தாங்கியின் அளவு காணப்படுகின்றது. நாம்

எமது அன்றாட வாழ்க்கையில் பல தேவைக ளுக்காக எண்ணெய்களைப் பயன்படுத்திய வண்ணம் உள்ளோம். உதாரணமாக பெரிய எஞ்சின்களின் இயக்கம், வாகனங்களின் செலுத்துகை, மாபெரும் கைத்தொழில்கள் என்பனவெல்லாம் எண்ணெயைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளாகும். இவ்வாறான செயற்பாடுகளினால் எதிர்கால சமூகம் எண்ணெய்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்க உள்ளது. இவற்றை நிவர்த்தி செய்யவே உயிர்டீசல், எதனோல் போன்ற உயிரெரி பொருட்கள் கைத்தொழில் ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட வண்ணம் உள்ளன. எனவே எதிர்காலத்தில் உயிரெரிபொருட்களின் கட்டாயத் தேவை உணர்த்தப்படுகின்றது. எதிர்கால சமூகத்தின் சக்தித் தேவை உயிரெரிபொருட் களிலேயே தங்கியுள்ளது. மற்றும் தற்போது நிகழும் சுவட்டு எரிபொருட்களின் பாவனை யைக் குறைப்பதற்காகவும், இதனால் ஏற்படும் கூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் உயிரெரிபொருட்களின் உற்பத்தி அதிக அளவில் நடைபெறுகின்றது. இதற்கு உதாரணமாக அமெரிக்காவில் சுவட்டு எரிபாருளான மசகு எண்ணெய்க்குப் பதிலாக உயிர் எரிபொருளான கோளத்தில் இருந்து பெறப்பட்ட எதனோலே பாரியளவில் உற்பத்தி செய்யப்பட்டு பயன் படுத்தப்படுகிறது. இதன் விளைவாக சுவட்டு எரிபொருளினால் சூழல் எதிர்கொள்ளும் மாசடை_தல் ரீதியான பிரச்சினைகள் குறைக்கப் படுவதுடன் மற்றம் அவற்றடன் இணைந்து வாழும் மக்களின் ஆரோக்கியமும் பேணப் படுகிறது. இதுவும் எதிர்காலத்தில் உயிரெரி பொருட்களின் அவசியத்தை வலியுறுத்தி நிற்கிறது.

உலக ரீதியாக பல நன்மையான விளைவுகளை ஏற்படுத்துகின்ற உயிரெரி பொருட்கள் எமது நாடான இலங்கையிலும் பெரு மளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உதாரணமாக எதனோல், உயிர்டீசல், உயிர்த் திணிவு, உயிர் நொதியங்கள் என பலவற்றைக் குறிப்பிடலாம். எதிர்காலத்தில் வரவிருக்கும் சக்தி நெருக்கடியைக் குறைக்கும் முகமாக இவ்வாறான உற்பத்திகள் கைத் தொழில் ரீதியாக உற்பத்தி செய்த வண்ணம் உள்ளன. இவ்வாறான விடயங்களின் மூலம் எதிர் காலத்தில் உயிரெரி பொருட்களின் முக்கியத்துவம் தெளிவாகப் புலனாகின்றது.

### உயிரெரிபொருட்களினால் ஏற்படும் தீமையான விளைவுகள்

உயிரெரிபொருட்களினால் இன்றைய சமூகத்தினருக்கும், எதிர்கால சமூகத்தினருக் கும் எவ்வளவோ நன்மைகள் இருந்த போதிலும் சில தீமையான விளைவுகளும் ஏற்படுகின்றன. உயிரெரிபொருட்களின் உற்பத்திக்கு பெருமளவு பயிர்களும் அவற்றின் விளைச்சல்களும் நேரடியாகத் தேவைப்படுவதால் மனித சமூகத்திற்கும், ஏனைய விலங்குகளிற்கும் கிடைக்கும் உணவின் அளவு குறைக்கப் படுகிறது. இதனால் அனேகமான நாடுகளில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு மக்களின் ஆரோக்கியம் சீர்கெட்டுப் போகும் நிலைமை களும் ஏற்பட்டுள்ளன. மற்றும் பயிர்களிலிருந்து கிடைக்கும் விளை பொருட்கள் மூலம் உயிரெரிபொருட்களின் உற்பத்தி அதிகரிப்பால் உணவு உற்பத்திக்கு அதிகளவு செலவு ஏற்பட உணவின் விலை அதிகரிக்கின்றது. இதனால் பொருளாதார வளம் குன்றிய நாடுகள் தமது அத்தியாவசியத் தேவையான உணவுக்கே வழியில்லாமல் நோய்களால் பீடிக்கப்பட்டு இறக்கின்ற நிலைமைகளும் ஏற்பட்டுள்ளன. மற்றும் உயிரெரிபொருட்களின் உற்பத்திக்கு ஆரம்பச் செலவு அதிகமாக உள்ளதால் பொருளாதார ரீதியில் வளம் குன்றிய நாடுகள் அதனைப் பணம் கொடுத்து வாங்க முடியாதா சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. இவை யாவும் இல் உயிரெரிபொருட்களினால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளாகக் காணப்படுகின்றன.

**உயிரெரிபொருள், உயிர்த்திணிவு கைத் தொழிலும் அவற்றின் நன்மைகளும்**

கடந்த சில தசாப்தங்களில் உயிரெரி பொருட்கள், உயிரித்திணிவுகள் என்பவற்றின் உற்பத்தியில் துரித வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சூழலுக்கு நன்மை தரக்கூடியதும் எதிர்கால சக்திப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கூடியதுமான இவ் உயிரெரிபொருட்களும் உயிர்த்திணிவுகளும் காணப்படுவதால் இவற்றை அதிகமாக உற்பத்தி செய்யும் முகமாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளன. உலக ரீதியாகப் பல கைத்தொழில்கள் நிறுவப்பட்டு இத்தகைய சூழல் நேய எரிபொருட்களை உற்பத்தி செய்த வண்ணம் உள்ளன. இத்தகையை கைத்தொழில்களினால் சுவட்டு எரிபொருட்களின் பாவனை குறைக்கப் பட்டு எதிர்கால சக்திப் பற்றாக்குறையும் தடுக்கப்படுவதற்கான சான்றுகளும் ஏற்பட்டுள்ளன. மீளப் புதுப்பிக்கக் கூடிய சக்தி முதலாகக் காணப்படுகின்றஉயிரெரிபொருட்கள் BETO எனும் கைத்தொழில் நிறுவனம் விருத்தி செய்து வருவதுடன் இவை எதிர்காலத்திற்குத் தேவையான உயிரெரிபொருட்களை Cellulose மற்றும் algae என்பவற்றிலிருந்து உற்பத்தி செய்கிறது. உலகில் பல நாடுகள் இவ் உயிரெரிபொருள் உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன. உதாரணமாக US, Brazil, Germany, China, Indonesia, Canada, Thailand போன்ற நாடுகள் இவ் உற்பத்தியை கைத்தொழில் ரீதியாக மேற்கொண்ட வண்ணம் உள்ளது. உலகிற்கு வேண்டிய 10% ஆன சக்தியை உயிரெரிபொருட்களே வழங்குகின்றன. உலகின் 2/3 பங்கு நாடுகள் இச்சக்தியைப் பயன்படுத்தியே தமது தேவைகளை நிறைவேற் றுகின்றனர் என பல விஞ்ஞான ஆய்வுகள் விளக்கமளிக்கின்றன. உலகிலேயே US தான் அதிகளவு உயிரெரிபொருட்களைப் பயன்படுத்து கின்றது. (940,000 barrels per day) என்ற விதத்தில் இவை பயன்பட்ட வண்ணம் உள்ளன. US இல் 16 billion gallons உயிரெரிபொருட்கள் உற்பத்தி செய்யப்படு கின்றன.

ஆகவே உயிரெரிபொருட்களே நமது எதிர்கால சக்தி நெருக்கடியைக் குறைக்கும் சாதனங்களாக அமைந்துள்ளன. இவ்வாறான பெரிய நாடுகள் மாபெரும் கைத்தொழிலாக இவ் உயிரெரிபொருட்களின் உற்பத்தியை மேற் கொண்ட வண்ணம் உள்ளபோது நாங்கள் எங்களால் இயன்ற எங்களிடம் உள்ள வளங்களைப் பயன்படுத்தி எதிர்காலங்களில் வரவிருக்கும் சக்தி நெருக்கடியைக் குறைப்பதற்குரிய செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். கரும்பு, Palm tree என்பவற்றில் இருந்தும் உயிரெரிபொருட்களை உற்பத்தி செய்ய முடியும். எனவே நாமும் இயற்கையுடன் இணைந்து சூழல் நேயமான மீளப்புதுப்பிக்கக் கூடிய எதிர்கால சக்தி நெருக்கடியைக் குறைக்கக் கூடிய சக்தி வளமாகிய உயிரெரிபொருட்களின் உற்பத்தி திறம்பட மேற்கொள்ள வேண்டும்.

# நிலைபேறான அபிவிருத்திக்கு வணிகங்களின் பங்களிப்பு

திருமதி. சா. சிவநாதன் B.Com,Dip in Edu
ஆசிரியர்

நிலைபேறான அபிவிருத்தி என்பது எதிர்கால பரம்பரையினரின் திறமைகளை நிறைவு செய்வதற்கு இருக்கின்ற உரிமையினைப் புறக்கணிக்காது நிகழ்காலத் தேவைகளை அடைந்து கொள்வதற்கான அபிவிருத்தியாகும்.

நிலைபேறான அபிவிருத்தி மூன்று சமனான பிரதான கோபுரங்களின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்படுகின்றன.

1. பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி
2. சூழல் நிலைபேறான அபிவிருத்தி
3. சமூக நிலைபேறான அபிவிருத்தி

பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி என்பது மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப்பாகும். இந்த அபிவிருத்தி மூலம் வளப்பயன்பாட்டினைக் குறைத்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் மனித நலனை மேம்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சூழல் நிலைபேறான அபிவிருத்தியின் மூலம் இயற்கைச் சூழலை அழிக்காது வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு விளைதிறனான மாற்றங்களை எவ்வாறு செய்வது என்பது தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்காலச் சமூகத்தின் சார்பில் பூகோளச் சூழலைப் பாதுகாப்பதற்கான மானிடச் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

சமூக நிலைபேறான அபிவிருத்தியின் மூலம் மக்களின் தேவைகள் சமமானதாகவும் நியாயமான வகையிலும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். அவ்வாறான மனித தேவைகள் விருப்பங்களை உயர்வான நியமங்களுடன் அடையக்கூடியதாக இருப்பதுடன் ஏனையோர் அவ்வுரிமையினை அமுக்காது அல்லது புறக்கணிக்காது இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் எதிர்காலப் பரம்பரையினரின் தேவைகள் மீறப்படாதவாறு நிகழ்கால மக்களின் தேவைகளை நிறைவு செய்வதனூடாக மனித அபிவிருத்தி ஏற்படுத்தப்படும்.

இத்தகைய நிலைபேறான அபிவிருத்தியினை அடைவதற்கு வணிகங்கள் எத்தகைய பங்களிப்பினை வழங்குகின்றன என ஆராய்ந்து பார்ப்போம். வணிகமொன்று பொருளாதார நிலைபேற்றினை அடைவதற்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்கல், வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தல், புத்துருவாக்கங்களைப் அறிமுகப்படுத்தல், தொழினுட்பத்தை விருத்தி செய்தல், ஊழியர் நலனோம்பு செயற்பாடுகளில் அக்கறை செலுத்துதல், பொருளாதார விருத்திக்கு உரமூட்டுதல், நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் போன்ற கருமங்களை மேற்கொள்கின்றன. இதன் மூலம் பொருளாதாரம் விருத்தியடையும். வளங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படும். நியாயமான முறையில் போட்டி நிலைமை ஏற்படுத்தப்பட்டு சூழலை நேசிக்கக் கூடிய உற்பத்திகள் உருவாக்கப்படும்.

வணிகமானது சூழல் நிலைபேறான தன்மையினை பாதுகாப்பதற்காக தமது செயற்பாடுகளில் விசேட கவனத்தை செலுத்துகின்றது. அதாவது சூழல் நேயப் பொருட்களை கொள்வனவு செய்தல், உற்பத்தி நடவடிக்கைகளின் போது மூலப்பொருட்கள் வலுநீர் போன்ற வளங்களைப் பாதுகாத்து கருமமாற்றுதல், சூழல் சட்டதிட்டங்களுக்கமைய கருமமாற்றுதல்,

சூழலுக்குத் தீங்கு விளை விக்காத வலுச்சக்தி களைப் பயன்படுத்துதல், சூழலை நேசிக்கும் கருமங்களின் போது அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து கரும மாற்றுதல், நீர், காற்று, மண் போன்ற வற்றின் மாசடைதலைக் குறைத்தல் போன்ற நட வடிக்கைகளை மேற் கொள்கின்றன.

சமூக நிலைபேறான அபிவிருத்தியினை அடைவதற்கும் வணிக நிறுவனங்கள் தமது பங்களிப்பினை வழங்குகின்றன. அதாவது மானிட பல்லினத் தன்மைகளுக்கு மதிப்பளித்து கருமமாற்றுதல், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தல், சமத்துவத் தன்மையுடன் கருமமாற்றுதலும், சமமான சந்தர்ப்பங்களை வழங்குதலும், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற அத்தியா வசியத் தேவைகளுக்குப் பங்களிப்புச் செய்தல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் பங்களிப்புச் செய்தல், சட்டத்தையும் சமாதானத் தையும் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் நவீன சமூகத்தின் உற்பத்தி நுகர்வு போன்ற செயற்பாடுகள் காரணமாக நாளாந்தம் கழிவுப் பொருட்கள் சேர்வதால் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நவீன பயன்பாட்டு முறைகளையும் செயற்படுத்தி வருகின்றது.

அவையாவன

மீள்சுழற்சி (Recycle)
மீள்பாவனை (Reuse)
பாவனையைக் குறைத்தல் (Reduce)
மீள் உருவாக்கம் (Replace)
உரமாக்கல் (Rot)

மீள்சுழற்சி (Recycle)

கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி வேறுவகையான பொருளொன்றை உற்பத்தி செய்யக்கூடிய பொருளொன்றாக மாற்றுதல் இடம்பெறும். இங்கு பொருள்களில் காணப்படும் பௌதிக நிலைமையில் மாற்றம் செய்யப்படும். மீள் சுழற்சியினை இரு முறைகளில் வெளிப் பாடுகள் கிடைக்கக் கூடியவாறு மேற்கொள்ள முடியும்.

குறைந்த பெறுமதி கொண்ட மூலப் பொருளொன்றை உயர் பெறுமானமுடைய உற்பத்திப் பொருள் எனும் நிலைக்கு மாற்றுதல் (up cycle)

உயர் பெறுமானம் கொண்ட உற்பத்தி யினைக் குறைந்த பெறுமானம் கொண்ட மூலப்பொருள் என்ற நிலைக்கு மாற்றுதல் (out cycle)

யப்பான் பாவனையிலிருந்து ஒதுக்கப் படுகின்ற வாகனங்களை உடைத்து இரும்பு களாக மாற்றுதல்.

மீள்பாவனை (Reuse)

உற்பத்தி நடவடிக்கையின் போது அல்லது நுகர்வுக்கருமத்தின் போது தொடர்ச்சி யாக மீண்டும் மீண்டும் பாவனைக்கு எடுத்தல் இதன் பொருளாகும். உணவுப் பொதி செய்யும் பொலித்தீன் வரைக்கும் (Lunh Sheets) உணவுப் பெட்டியினைப் (Lunch box) பயன்படுத்துதல்.

பாவனையைக் குறைத்தல் (Reduce)

சூழலில் அகற்றப்படும் கழிவுப் பொருட்களின் அளவினை இழிவுபடுத்துவதே இதன் கருத்தாகும். உற்பத்தி அல்லது நுகர்விற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பொருட் களில் அகற்றப்படும் பொருட்களின் அளவினைக் குறைப்பதன் மூலம் இக்கருமத்தை இலகுபடுத்த லாம். சுத்தமான நீரில் பிளாஸ்ரிக் பொதிகள் இடாதிருத்தல். பொதியிடலுக்கு அழிவடையாத பொலித்தீன்களைப் பயன்படுத்தாதிருத்தல்.

மீள் உருவாக்கம் (Replace)

உற்பத்திக் கருமத்திற்காக பயன்படுத்தப் படுகின்ற இயற்கை வளங்களில் மீள் உருவாக் கம் செய்யக் கூடிய வளங்களை மீண்டும் சூழலினுள் உருவாக்குதல்.

மீன்பிடித்தொழில் ஈடுபடும் வணிக மொன்று மீன் வளர்ப்பை மேற்கொள்ளல்.

பாட்டிலுள்ள மரப்பலகைகளை மூலப் பொருளாகப் பயன்படுத்துகின்ற நிறுவன மொன்ற காடுகளில் மரங்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தல்.

உரமாக்கல் (Rot)

விவசாய பயிர் மீதிகள், அழிவடைந்த தாவரங்கள், விலங்குப் பாகங்கள் போன்ற உக்கலடையக் கூடிய பொருட்களைப் பயன்படுத்தி பசளையினை தயாரிக்கும் செயன்முறையாகும். இவ்வாறு நிலைபேறான அபிவிருத்தியினை உண்மை நிலைக்கு மாற்றுவதற்கு வணிகமொன்று மாத்திரம் செயற்படுவதனூடாக அதனை அடைந்து கொள்ள முடியாது இருப்பதுடன் இதற்காக நுகர்வோர்கள் உட்பட மொத்த எலகப் பொருளாதாரச் சமூகமும் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை பெற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பது யாவரும் அறிந்ததாகும்.

சூழலின் முக்கியத்துவம் தொடர்பாக செவ்விந்தியத் தலைவர் சியட்டெஸ் என்பவரின் கருத்து.

**"சகல மரங்களையும் வெட்டிய பின்னர் சகல நதிகளும் வரண்டு போன பின்னர் இறுதியாகக் காணப்பட்ட மீனையும் பிடித்து உண்ட பின்னர் மனிதன் விளங்கிக் கொண்டபின் பணத்தினை உணவாக உண்ண முடியாது என"**



# இயேசுவின் பணியில் பெண்கள்

திருமதி கிருபாகினி அன்ரனி பெனடிகற்
ஆசிரியர், விசேட பயிற்சி கிறிஸ்தவம்

நம் இலங்கை தேசம் இன்றைக்கு சுமார் 2 கோடியே 20 இலட்சம் மக்களைக் கொண்ட ஒரு ஜனநாயக நாடாக இருக்கிறது. நாட்டின் மக்கள் தொகையில் கத்தோலிக்கர்கள் 6.1% கிறிஸ்தவர்கள் 1.4% மொத்த கிறிஸ்தவர்கள் 7.5% இருக்கிறார்கள்.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் அனேக கிறிஸ்தவ மிஷனெரிமார்கள் நம் நாட்டிற்கு வந்து ஊழியம் செய்ததன் நிமித்தமாக நம் நாட்டின் பல விதங்களில் அனேக முன்னேற்றங்கள் உண்டாயின. அதிலும் பெண்களின் முன்னேற்றத்தில் கிறிஸ்தவ சுவிசேஷம் மிகப் பெரும் பங்கு வகிக்கிறது. சுவிசேஷம் எங்கெல்லாம் அறிவிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் ஆக்கபூர்வமான அனேக மாற்றங்கள் உண்டாகும்.

பண்டைய நாட்களில் நம்முடைய நாட்டில் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்களும் கல்வியறிவு பெற்று அறியாமை நீங்கி வாழ வேண்:டும். என்கிற உன்னதமான ஒரு நோக்கத்தோடு அவர்கள் கல்வியறிவு பெறுவதற்கான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து பெண்களின் உயர்வுக்குக் காரணமாக இருந்தவர்கள்,, கிறிஸ்தவ மிஷனெரிமார்கள்தான்.

அந்த நாட்களில் பல இடங்களில் பெண்கள் அடிமைகளாக இருந்திருக்கிறார்கள். கிறிஸ்தவ மிஷனெரிமார்கள் வந்துதான் அவர்களுடைய மறுவாழ்விற்காகப் போராடி பெண்களுடைய அடிமைத்தனத்தை மாற்றியிருக்கிறார்கள். கிறிஸ்தவ மிஷனெரிமார்கள் தான் பெண்களை சமுதாயத்தில் வாழ்ந்திருக்கச் செய்திருக்கிறார்கள்.

பண்டைய காலங்களில் பெண்களை அதிகமாகப் படிக்க வைக்கமாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட வகுப்பு வரை மட்டும் படித்து முடித்தவுடன் அவர்களை திருமணம் செய்து கொடுத்து விடுவார்கள். அந்த சமயங்களில் பெண் கல்வியை ஊக்குவித்து, அவர்களுக்கென்று தேசத்தில் அனேக இடங்களில் பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும், தொழில் நிறுவனங்களையும் ஆரம்பித்து பெண்கள் சமுதாயத்தில்முன்னேற உதவியது. கிறிஸ்தவ மிஷனெரிமார்கள் தான் என்று சொன்னால் அது மிகையாகாதுமு. இன்றைக்கு சமுதாயத்தில் பெண்கள் பலவித முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள். எல்லாவற்றிற்கும் காரணம் கிறிஸ்தவ மிஷனரிமார்களை கர்த்தர் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தினார்.

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் ஜனங்களுக்கு நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்த நாட்களில் பல பெண்களை சந்தித்தார் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

பெண்கள் குடும்பத்திற்கும், வீட்டிற்கும் ஆசீர்வாதமானவர்கள் குடும்பத்தைக் கட்டிக் காப்பதும் பெண்கள் தான்! அதை இடிப்பதும் பெண்கள் தான்! ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்கிற வார்த்தையை, உலக வழக்கில் மக்கள் பேசுவதை நாம் கேட்டிருக்கலாம்.

"புத்தியுள்ள ஸ்திரி வீட்டைக் கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரியோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள். (நீதிமொழிகள் 14:1) என்பதாக திருமறை சொல்கிறது.

சில பெண்கள், எப்பொழுதும் யாரோடாவது சண்டை போட்டுக் கொண்டே

இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வீடு ஒருபோதும் ஆசீர்வதிக்கப்படவே முடியாது. ஆகவே பெண்களாகிய நம்முடைய வாய்க்குக் காவல் காக்கவேண்டும். பெண்களாகிய நாம் அதிகமாகப் பேசவே கூடாது. யாரிடத்திலும் சண்டை போடவும் கூடாது. மற்றவர்களைப் பரிகாசம் பண்ணுகிறவர்களாகவும் இருக்கக் கூடாது. மற்றவர்களுடைய வாழ்க்கையோடு நம்முடைய வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது.

பெண்களாகிய நாம் இன்றைக்கு எப்படிப்பட்டவர்களக இருக்கிறோம்? நாம் பாவத்திலும் சிற்றின்ப மோகத்திலும் மூழ்கிப் போன நிலமையில் இருக்கிறோமோ? சற்று நம்மை நாமே சிந்தித்துப் பார்ப்போம்.

நீங்கள் என்ன வேலை வேண்டு மானாலும் செய்து கொண்டிருக்கலாம்! உங்கள் கை நிறைய நீங்கள் பணம் சம்பாதிக்கலாம்! ஆனால் மற்றவர்களுக்கு ஏதாவது நன்மை செய்கிறீர்களா? ஏழை எளிய மக்களுக்கு தான தர்மங்களைச் செய்கிறீர்களா? "நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள் (எபிரேயர் 13:16) என்று வேத வசனம் சொல்கிறது. ஆகவே நாம் மற்றவர் களுக்கு நன்மை செய்யவேண்டும். இல்லாத ஏழை ஜனங்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும். தகப்பனில்லாத பிள்ளைகளுக்கு நாம் உதவி செய்யவேண்டும். ஆறுதலற்ற பிள்ளைகளை நாம் ஆறுதல் படுத்த வேண்டும். திக்கற்றவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். சமாதானம் இல்லாமல் இருக்கிற பிள்ளைகளை நாம் சமாதானப்படுத்த வேண்டும். தேவைகளோடு இருக்கிறவர்களின் தேவைகளை நாம் சந்திக்கவேண்டும்.

'நமக்கு இருக்கிறது போதும்' என்று நாம் நினைக்க வேண்டும். "மற்றவர்களுக்குக் கொடுத்தால் நமக்குக் குறைந்து போய்விடுமே" என்கின்ற எண்ணம் ஒரு போதும் நமக்கு இருக்க கூடாது பெண்களாகிய நமக்குள் "மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்கிற ஒரு நல்ல இருதயம் இருக்கவேண்டும்"

நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் "நமக்கு நன்மை செய்யத் திராணி இருக்கும் போது, நாம் அதைச் செய்யாமல் இருக்கக் கூடாது (நீதிமொழிகள் 3:27) ஏதோ நம்மால் செய்ய முடிந்த உதவிகளை நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்யவும் தான தர்மங்கள் செய்யவும் தான் இறைவன் நம்மை இந்த பூமியில் வைத்திருக்கிறார்.

பெண்களாகிய நாம் விழிப்புணர் வுள்ளவர்களாக பரிசுத்தம் காணப்படவேண்டும் உங்கள் வாழ்க்கையை கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்கவேண்டும். அப்பொழுது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

# தமிழ் தேசியத்தின் பண்பாட்டு மாற்றம்

திரு. இ. ரமேஸ்குமார் B.A PGDE, Dip in Coun, M.Ed
ஆசிரியர்

நாம் ஒரு தேசிய இனம் நமது தமிழ் தேசிய இனத்துக்கென தனித்துவமான ஒரு பண்பாடு உண்டு. நாம் இன்று தமிழ் தேசியத்தை யும் இழந்து தமிழ் பண்பாட்டையும் இழக்கும் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்மில் பலர் தேசியம் என்பது தொடர்பாகவோ தமிழ்பண்பாடு தொடர்பாகவோ அறியாதவர் களாக. புரியாதவர்களான உள்ளர். ஒவ்வொரு தமிழனும் தமிழ்தேசியம். தமிழ் பண்பாடு என்பவை தொடர்பாக அறிந்து கொள்வதுடன் அவற்றை பின்பற்ற வேண்டியதும் ஒவ்வொரு வரினதும் பிறப்புரிமையாகும்.

தேசியம் என்பது யாது? தமிழர்கள் தேசியம் என்ற சிந்தனையில் இணைந்து 30 வருடத்துக்கு மேல் போராடியிருக்கின்றோம். இரத்தம்சிந்தி இருக்கிறோம். இலட்சக்கணக்கில் கொள்ளப்பட்டிருக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றோம். எங்களிடம் கட்சி களும் உண்டு. அதன் பெயர்களில் தேசியம் என்ற சொல்லும் உண்டு. ஆனால் தேசியம் என்பதுக்கு பொருத்தமான விடை தரக்கூடிய அரசியல் வாதிகள் அக்கட்சிகளில் உள்ளனரா? பெரும்பாலானவர்களுக்கு இது தொடர்பான புரிதல் இல்லை. சில கட்சித் தலைவர்களுக்கும் தேசியம் தொடர்பான பூரண விளக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. இந் நிலையில் பொதுமக்கள் தேசியம் தொடர்பான உட்கிடக்கை களை உணர்ந்து கொள்வதுக்கு வாய்ப்பில்லை. ஊடகங்களும் தாங்கள் பணியை இவ் விடயத்தில் சிறப்பாக செய்யத் தவறிவிட்டன.

மூன்று தசாப்த கால தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் பின்னரும் அதனைத் தொடர்ந்த ஒரு தசாப்த கால அரசியலுக்குப் பின்பும் தேசியம் என்றால் என்னவென புரிந்து கொள்ளாமல் இருப்பதும் தமிழர்களின் பண் பாட்டை மறந்து செயற்படுவதும் நம் இனத்தின் அறியாமையின் வெளிப்பாடே. தேசியம் என்பது ஒரு மக்கள் திறனின் கூட்டு. ஒரு பெரிய மக்கள் திறன். புவியியல் ரீதியாக எல்லைகள் வரையறுக்கப்பட்ட ஒரு நிலத்துண்டு நாடாகின்றது. ஒரு நாட்டின் எல்லைக்குள் பல தேசங்கள் இருக்க முடியும். ஆனால் எல்லா தேசங்களும் அரசுடையவையாக இருப்பதில்லை. இவ் உலகில் அரசற்ற தேசங்களே அதிகம் நம் தமிழனமும் அவ்வாறான ஒன்றுதான்.

மன்னர் காலத்தில் தமிழர்களுக்கென இருந்த அரசு பிரித்தானியரின் வருகையின் பின் இல்லாமல் போனது. 1980 களில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் ஒரு கருநிலை அரசைத் தோற்றுவித்தது. எனினும் தமிழர்களின் ஒற்றுமையின்மை காரணமாக 2009 இல் அந்தக் கரு நிலை அரசு தோற்கடிக்கப்பட்டது. எனவே ஈழத்தமிழர்கள் அரசுடைய தேசமாக வும் இருந்தார்கள், அரசற்ற தேசமாகவும் இருந்தார்கள்.

ஒரு தேசமான இருப்பதுக்கு அரசு அவசியமில்லை. மக்கள் ஒரு திரளாக வாழ்ந்தாலே ஒரு தேசம் தான். தேசியத்துக்கு அரசு ஒரு முக்கிய நிபந்தனை அல்ல இலங்கைத் தீவில் மிகப்பெரிய நான்கு மக்கள் திரள் உண்டு. சிங்களம், தமிழ், முஸ்லீம், மலையகத்தவர் என்ற நான்கு மக்கள் திரளில் சிங்கள தேசம் தான் அரசைக் கொண்டிருக்கின்றது. எனவே தேசம் என்பது ஒரு பெரிய மக்கள் திரள். தேசியம் என்பது அந்த மக்கள் திரளின் கூட்டுப்பிரக்ஞை. எனவே மக்களை திரளாக்கும் எல்லாமே தேசியத்தன்மை கொண்டவையே. எது வெல்லாம் மக்களைத் திரளாக்குகின்றதோ அது தேசியத்தன்மை மிக்கது. இதனால் நாமும் தேசியம் உடையவராகின்றோம்.

தமிழ் தேசியத்தை உடைய நாம் தமிழ் தேசியத்தை பாதுகாப்பதுடன் தமிழ் பண்பாட்டை

யும் பாதுகாப்பவராக அதன் வழி செயற்படு பவர்களாக வாழப் பழகிக்கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடமையும் பொறுப்பு மாகும். மாறாக இன்று தமிழ் பண்பாடு மருவி சீர்குலைந்துள்ளது. இந் நிலையில் தமிழ் தேசியத்தில் பண்பாட்டு மாற்றம் ஒன்று அவசியமாகும்.

தமிழர் சமுதாயத்தில் தற்போது சிறுவர்கள் பெரியவர்களை, ஆசிரியர்களை, பெற்றோர்களை கனம் செய்யும் மனப்பாங்கு குறைவடைந்து வருகின்றது. சிறுவர் உரிமை கள் என்ற விடயம் பெரிதுபடுத்தப்படுவதால் மூத்தோரை கனம் செய்தல் மலினப்படுத்தப் பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் பேணப்படல் வேண்டும் எனினும் அதன் பெயரால் சிறுவர் களின் பழக்கவழக்கங்கள் சீர் குழைய அவ் உரிமைகள் வழியேற்படுத்திவிடுவது வேதனைக் குரியது. பாடசாலைகளில் மாணவர் களுக்கு தண்டனைகள் வழங்கப்படல் கூடாது என்ற சட்டத்தால் மாணவர்கள் முரண்பாடான நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். சிறுவர் உரிமைகள் என்ற கவசத்துடன் நாம் நினைத் ததை செய்யும் ஒரு தரமற்ற நிலை உருவாகி வருகின்றது. சில பெற்றோர்களும் இதற்கு உடந்தையாக செயற்படுகின்றனர். போதைப பொருள் பாவணை, சமூக வன்முறையான நடத்தைகள், இளவயதுத் திருமணம் போன்றன அதிகரித்து தமிழர் பண்பாடு சிதைக்கப் படுகின்றது.

தமிழர் பண்பாட்டில் ஆடம்பரத் தேவை களை குறைத்து சிக்கனமாக வாழும் வாழ்க்கை முறையால் சேமிப்புப் பழக்கம் ஒரு மரபாக இருந்தது. ஆனால் இன்று உழைப்புக்கு அதிகமான செலவுகள் மேற்கொள்ளப் படுகின்றன. திட்டமிட்ட வாழ்வியல் முறை அழிவடைந்து வருகின்றது. தேவைகளுக்கு மிஞ்சிய ஆசைகளுக்கு அடிமையாகி தமிழ் தேசியம் தனது சுயத்தை இழந்து வருகின்றது. தமிழனின் சேமிப்பு என்ற பண்பாட்டின் காரணமாகவே மூன்று தசாப்த ஆயுதப்போராட்ட அனர்த்தங்களில் இருந்து மீள முடிந்தது. ஆனால் இன்றைய தமிழ் தேசிய நிலை மாறியுள்ளது. ஆடம்பர வாழ்வியலை நோக்கிய நகர்வு, கடன் பெற்றேனும் ஆசைகளை பூர்த்தி செய்யும் மனப்பாங்கு, லீசிங் வழங்கும் நிதி நிறுவனங்களின் அதீத பிரச்சாரம் தமிழ் தேசியத்தை படுகுழியில் தள்ளி விட்டுள்ளது. தற்கொலைகள் இன்று அதிகரித்துள்ளமைக்கு பண்பாட்டு மாற்றமும் காரணமாக அமைந் துள்ளது. வாழ்வியல் மாற்றத்தால் கடன் சுமை ஏற்பட்டு தற்கொலைக்கு முயற்சிக்கும் போக்கு அதிகரித்துள்ளது.

நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் தமது தேசியத்தின் பசுமையை இழந்து விட்டோம். கட்டிடங்கள் கட்டப்படுவதும், குடியிருப்புக்கள் அமைக்கப்படுவதும் என்ற போர்வையில் இயற்கை அழிக்கப்படுகின்றது. ஒரு காலம் எங்களது ஊர்களில் எங்களது வீடுகளில் உயிர்வேலி இருந்தது. அந்த உயிர்வேலி என்பது வெறும் வேலியல்ல. அது அந்த நிலத்தின் எல்லைகளைப் பிரித்து நிற்கும் பிரகோடுகள் மட்டுமல்ல. ஒரு மூலிகைப் பந்தலாகவும் அமைந்திருந்தது. அந்த வேலியில் சண்டி, பிரண்டை, முருங்கை, தூதுவளை, முசுட்டை, குறிஞ்சா போன்ற மூலிகைகள் படர்ந்திருக்கும். உணவுக்குத் தேவையான வெள்ளைக்கறி சமைக்கும் பொழுதும் பச்சடி செய்யும் பொழுதும் இந்த மூலிகை இலைகளே பயன்படுத்தப்பட்டது. தற்போது சீமேந்துச் சுவர்கள் எழுப்பப்பட்டு உயிர் வேலிகள் அகற்றப்படுகின்றன. இதனால் பசுமையும் போனது இயற்கை உணவும் போனது. சூழல் வெப்பமும் நோய்களுமே வரவாகியது. நாங்கள் முள்முருங்கையை தொலைத்துவிட்டோம். முள்முருங்கையை எப்படித் தொலைத்தோம்? சில பத்தாண்டுகளுக்குள் தான் தொலைத்தோம். எங்களுடைய தாவரவியலாளர்கள். அறிஞர்கள். சூழலியலாளர்கள் தான் இதற்கு பதில் கூற வேண்டும். முள்முருங்கையை தொலைத்தது போல இன்னும் எத்தனை பயனுள்ள மரங்களைத் தொலைக்கப் போகின்றோமோ.

தொழிநுட்ப வளர்ச்சியால் நாம் இன்று உறவினர்களை இழந்துவிட்டோம். அலை பேசிகள், கைபேசிகள், 5G கோபுரங்களின் எழுச்சியோடு நாங்கள் சிட்டுக் குருவிகளை மட்டுமல்ல உறவுகளையும் இழந்துவிட்டோம். ஆரோக்கியத்தையும் இழந்துவிட்டோம் எவருடனும் நேருக்கு நேர் முகம் பார்த்து கதைப்பதில்லை. கைபேசியையே நோண்டிக் கொண்டிருப்பதால் உறவுகளுடன் நேரத்தை ஒதுக்கத் தவறிவிடுகின்றோம். பக்கத்து வீட்டில் இருப்பவரை தெரியாது. ஆனால் வேறு கண்டத்தில் இருப்பவருடன் face book தொடர்பு இருக்கும். இதனால் குடும்பங்களிலும் அமைதியின்மை, சந்தேகங்கள் ஏற்பட்டு குடும்ப பிரிவுகளும் நமது சமூகத்தில் தாராளம். தமிழ் பண்பாடான ஒழுக்கம் என்ற உயரிய விழுமியம் இன்றைய கைத்தொலைபேசி என்ற சவப் பெட்டிக்குள் போட்டு மூடப்பட்டுள்ளது.

தமிழ் பண்பாட்டு மாற்றம் இன்று நகரமயமாதலை ஏற்படுத்தியுள்ளது. எமது நிலங்கள் சிறு துண்டுகளாக்கப்படுகின்றன. முற்றம், கோடி இல்லாது போகின்றது. சீமேந்துத் தரையாக நிலங்கள் மாறுகின்றன. வெப்பமான தீ நிலமாக நம் பிரதேசம் மாறுகின்றது. மழை இல்லை, குடிநீர் இல்லை. யாழ்மாவட்டத்தில் குடிநீர் விலைக்கு விற்கப்படும் நிலை தோன்றும் என முன்பு எவரும் நினைத்திருக்கவில்லை. இன்று குடாநாட்டில் குடிநீர் வியாபாரம் அமோகமாக நடக்கின்றது. குடிநீர் பிரச்சனை ஏன் ஏற்பட்டது என எந்த சூழலியளாளரும் சிந்திக்கவில்லை. வரும் காலத்தில் சுவாசத் துக்குத் தேவையான வழி (ஒட்சிசன்) போத்தல் களில் அடைக்கப்பட்டு கடைகளில் விற்கப்படும் நிலை தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. சூழல் மாசடைதல் பல வழிகளில் நடைபெறுகின்றது. வாகனங்களின் பெருக்கம் கணிசமாக உள்ளது. துவிச்சக்கர வண்டிகளை பாவிப்போர் தொகை வலுவாகக் குறைந்து விட்டது. ஒரு குடும்பத்துக்கு சராசரியாக 3,4 மோட்டார் சைக்கிள்கள் உள்ளது. இதனால் வளிமாசடைதலும் நோய்களும் அதிகரித்து விட்டன.

தமிழ்சமூகம்ஆன்மீகவழிநின்றொழுகிய சமூகம், பயபக்தியான ஆலய வழிபாடுகளின் ஊடாக இறைவனை அன்மித்த மக்களைக் கொண்ட தேசியமாக விளங்கியது. ஆனால் இன்று ஆலயங்கள் ஆடம்பரங்களை நோக்கி நகர ஆரம்பித்து விட்டன. பக்தி பூர்வமான வழிபாடு தொலைந்து போனது. புதிய புதிய ஆலயங்கள் கட்டப்படுகின்றன. கோபுரங்கள் எழுப்பப்படுகின்றன. ஆனால் அடியவர்கள் ஆலயத்துக்கு வருவது குறைந்து விட்டது. பொழுதுபோக்கு விடயமாக வழிபாடு மாறி விட்டது. அமைதியான புனிதமான இடமாக ஆலயங்கள் இல்லை. கோபுரங்கள் எந்த உற்பத்தியையும் தராது. ஆலய பரிபாலன சபையினர் சிந்திக்க வேண்டும். நாட்டில் வேலைவாய்ப்பற்ற இளையோர் பலர் உள்ளனர். அவர்களுக்கான வேலை வாய்ப்புக் களை உருவாக்கக்கூடிய தொழிற்சாலைகளை அமைப்பதுக்கு எவரும் அக்கறை கொள்ள வில்லை. ஆலயங்கள் சமூகத்துக்கு தேவைதான். ஆனால் ஆன்மீகமற்ற சமூகநன்மை கருதாத ஆலயங்கள் எதற்கு? பொறுப்புடையவர்கள் சிந்திக்கவேண்டும்.


இன்றைய வேலையில்லாப் பிரச்சினை களுக்கு தமிழர் பண்பாட்டு மாற்றமும் ஒரு காரணமாக அமைகின்றது. முற்காலத்தில் மக்கள் அனைத்து வேலைகளையும் செய்யக் கூடிய மனப்பாங்கினையும் உடல் தகுதியையும் கொண்டிருந்தனர். இதனால் வேலையில்லாப் பிரச்சினை உருவாகவில்லை. அரசாங்க வேலைதான் வேண்டும் என்று போராட்டங் களில் ஈடுபடவில்லை. உடல் உழைப்பின் ஊடாக வருமானத் தேவைகளை நிறைவு செய்தனர். தற்போது இளையோர் அரசாங்க வேலை தேடி அலையும் நிலையில் காணப்படு கின்றனர். எமது தேசத்தில் பெருமளவு வளம் இருக்கின்றது. உற்பத்தி காரணிகளை ஒன்றிணைத்து இலாபம் பெறும் முயற்சியே

எம்மிடம் இல்லை. பெருமளவு நிலம் நம் தேசத்தில் வீணாக கிடப்பில் உள்ளது. விவசாயம் செய்து பெருமளவு வருமானம் பெறலாம். குடும்பத்துடன் தோட்டங்களில் வேலை செய்யும் மனப்பாங்கு மாறிவிட்டது. விவசாயத்தை தரக்குறைவாக சிந்திக்கும் நிலை மாற வேண்டும். தென்னிலங்கையில் இருந்து பெருமளவு மரக்கறிகள் யாழ்ப்பாணத்துக்கு வருவது ஏன்? நம்மவர்களின் உற்பத்திகள் போதாது – தொழில் இல்லை என்று போராடாமல் முயற்சியில் ஈடுபடல் வேண்டும். பண்ணைகள் அமைக்கலாம். பால் உற்பத்தியில் நிறைந்த வருமானம் பெறலாம். பால்மா பெட்டிக்கான செலவாக பெருமளவு பணம் செலவு செய்யப்படுகின்றது. வெளிநாட்டில் இருந்தே பால்மா பெட்டி இறக்குமதி செய்யப்படுகின்றது. இளைஞர்கள் இவ்விடயத்தில் சிந்திக்கவேண்டும். எல்லோரும் ஒரே தொழிலைச் செய்யும் நிலை மாறவேண்டும். தற்போது கடைகள் அமைத்து வியாபாரம் செய்யவே அனைவரும் முனைகின்றனர். இதனால் வியாபாரம் குறைவடைந்து பின் நட்டமடைகின்றனர். தொழில் முயற்சியை ஆரம்பிக்கும் போது சிந்தித்து செயற்படல் வேண்டும். சந்தையின் கேள்வி, நிரம்பல் அடிப்படையிலேயே இதனை அணுகவேண்டும்.

தமிழர் பண்பாட்டில் சடங்குகள் முக்கிய இடம் பெறுகின்றன. முன்னைய காலங்களில் சடங்கு நடைபெறும் வீட்டுக்கு உதவினர்கள் சில நாட்களுக்கு முன்னரே வந்து விடுவர். உறவினர்கள் எல்லோரும் இணைந்து சடங்கு ஆயத்தங்களில் கூடி வேலை செய்த தமது உறவுகளை வளர்த்துக்கொள்வர். உறவுமுறை கூறி அழைத்து மகிழ்வர். உறவுகள் சங்கமிக்கும் ஒரு இடமாகவும் அன்பு பாசம் ததும்புட் இடமாகவும் சடங்குகள் விளங்கின. ஆனால் இன்று அப்படியான சூழ்நிலை மாறிவிட்டது. மண்டபங்களில் சடங்குகள் செய்யும் பண்பாடு உருவாகி விட்டது. குறித்த சடங்கு நடைபெறும் தினத்தில் குறித்த நேரத்தில் சடங்குகளுக்கு வந்து உடன் சென்றும் விடுகின்றனர். படங்களுக்கு காட்சி கொடுப்பதற்காகவும் படங்களுக்காக மட்டும் சிரிப்பவர்களாகவும் இன்றைய மனிதர்கள் மாறிவிட்டனர். இந்த மண்டபச் சடங்கு முறைகள் எமது பண்பாட்டை மாற்றிவிட்டது சுய உணவுப் பரிமாற்றம் (Self- Serve) எமது பண்பாட்டை சீர்குலைத்து விட்டது. தாமாகவே உணவை எடுத்து ஒரு பக்கத்தில் இருந்து சாப்பிட்டு விட்டு ஒரு பக்கமாகவே சென்றும் விடுகின்றனர். முன்பெல்லாம் வீடுகளில் பந்திப்பாய் விரித்து வாழையிலை போட்டு உணவினை அன்பாக பரிமாறினோம். தற்போதைய மண்டபங்களில் உணவு போதுமா, வேணுமா என்று கேட்பதற்கு கூட யாரும் இல்லை. இரு ஒரு பொருத்தமற்ற பண்பாட்டு மாற்றமாக உள்ளது.

இவ்வாறாக தமிழ் தேசியத்தில் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நல்லதொரு புதிய பண்பாட்டெழுச்சி நமது தமிழ் தேசியத்திற்கு அவசியமாக உள்ளது. கடந்த பத்தாண்டுகளாக நாங்கள் தேங்கத் தொடங்கிவிட்டோம். நாங்கள் இந்தத் தேக்கத்தை உடைக்கவேண்டும். ஒரு பதிய நல்லதொரு பண்பாட்டு எழுச்சி நம்மிடம் நிகழவேண்டும். அரசியலில், பொருளாதாரத்தில், சமூகத்தில் மற்றும் எல்லாத் துறைகளிலும் ஒரு புதிய பண்பாட்டெழுச்சி நமக்கு தேவையாகும். மாற்று என்பது புதிய நல்லதொரு பண்பாட்டு மாற்றமாக அமையவேண்டும். நல்ல பண்பாடுகளை கட்டியெழுப்பும் ஆரோக்கிய சிந்தனையுடைய கட்சிகள் நம்மிடையே தோன்றவேண்டும். சமூகத் தலைவர்கள் சமூக நலனோன்பு விடயங்களில் கரிசணையுடன் செயற்படவேண்டும். தமது இருப்புக்களை தக்க வைப்பதுக்காக சிந்திப்பதை விடுத்து சமூக இருப்பை தக்க வைப்பதுக்கான சிந்தனைகளை மேற்கொள்ளவேண்டும். ஒரு பலம் பெற்ற தேசியமாக நாம் எழுவதூடாகவே இது சாத்தியமாகும். நாம் உணர்வு ரீதியாகவும் செயற்பாடு ரீதியாகவும் எழுவோம் - எழுவோமாக.


முத்துமாரி
Muththumari Cakes Mart
றெஜிபோம் கேக்ஸ்
அன்பளிப்புப் பொருட்கள்
மல்லிகைச்சரம், ஆண்டாள் மாலை, கல்யாண மாலை
ஓர்க்கிட் மாலை, மலர்க் கூடைகள், கொண்டை மாலை,
பொக்கே,நாகசடை, கார் பொக்கே
கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் இருந்து பெறப்பட்ட
இயற்கைப் பூக்களால் செய்து கொடுக்கப்படும்
Station Road, Chunnakam. (Junction)
0773723226 / 0779597207
jeyanithy06@gmail.com
muththumaarycakesmaart


Muththumari
Essences Mart
Cakes for Birthday, Anniversary, Wedding
Engagement, For all Occation Cake Juices,
Ice Cream, Birthday Decoration,
things and Dummy Cakes.
Available here,
Station Road, Chunnakam. (Junction)
077 959 7207




BOC SMARTGEN
The Next Generation's Savings Account

THE DIGITAL BANKING REVOLUTION

OPEN AN ACCOUNT IN JUST TEN MINUTES
INSTANT ONLINE BANKING FACILITY
NO PASSBOOK
INSTANTLY ACTIVATED DEBIT CARD
MONTHLY E-MAIL STATEMENTS
INSTANT SMS ALERTS


1975 BOC CALL CENTRE
www.boc.lk
BOC, TELLIPPALAI BRANCH
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation



கல்வியே எமது தனித்துவத்தின் அடையாளம்
Education is Center to our Personal Identity
சகல விதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கு
தாயகம் டிஜிற்றல்
யாழ்.பல்கலைக்கழகம் அருகில்
021-2219443




NEW
FASHION PARK
என்ன வேண்டும் உங்களுக்கு....எல்லாமே இங்கு இருக்கு!
பட்டுச்சேலைகள், ஜவுளி ரெடிமேட் ஆடைகள்,
வீட்டு உபயோகப் பொருட்கள்,
அழகு சாதனப் பொருட்கள், செல்போன்கள்,
ஆப்டிகல்ஸ் லக்கேஜஸ், காலணிகள்
Fresh கலெக்ஷன்ஸ்
Fantastic விலையில்
No.33 K.K.S.Road,Chunnakam.
T.P : 021 224 0012




THURKKA
DIGITAL STUDIO
Always Pleasant Moments
Sri Lanka,Jaffna Tellippalai
T-P + 94774815889
Facebook . Thurkkadigitalstudio


ரியா
குளிரகம்
ஐஸ்கிறீம்
சர்பத்
பிறேஸ் யூஸ்
நெல்லிகிறஸ்
பாதாம் பால்
சுடச் சுட
றோல்
No.86/A, K.K.S Road, Mallakam.
077 227 1142 / 021 439 1938 / 077 077 1142


ரஞ்சனாஸ் புடவையகம்
Ranjanas Tex
புடவைத் தினிசுகளின்
சங்கமம்
தீபாவளி
மலிவு விற்பனை
இல.4A, மத்திய சந்தை, சுன்னாகம்
தொ.பே: 0212240278


உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு...
பொதிகளிலே பரிசு கொண்டு
செலான் டிக்கிரி
மாதம் வந்தது மீண்டும்
டிக்கிரி மாதம் முழுவதும் டிக்கிரி கணக்கில் சேமிக்கும்
சிறார்களுக்கு, பொதிகள் நிறைய பரிசுகள்
இச்சலுகை 2019 ஒக்டோபர் 01 தொடக்கம் 31 வரை, அல்லது கையிருப்புள்ளவரை மட்டுமே.
011 200 88 88
www.seylan.lk
செலான் வங்கி


பரிசு
பெறுவதற்கு...
உலகை
வெல்வதற்கு...
Isuru Udana
Sisu Udana
இன்றே
மக்கள் வங்கிக்கு
வாருங்கள்...
PEOPLE'S BANK
The Bank of the People












LUXURY EMULSION PAINT | AQLAC WOOD COATINGS | Sunny | Colour box | DEBEER REFINISH | CP FIX | KENLUX | STAR CLASS 2K | Farécla

C.P.T. CAUSEWAY 長堤漆業國卡私人有限公司 PAINTS LANKA PVT.LTD.

# 15, Noel Mendis Mawatha, Modarawila Industrial Estate, Panadura, Sri Lanka.
(+94) 38-2240040 (+94) 38-2240046
info.causewaylanka@causewaypaints.com www.causewaypaints.com
www.facebook.com/causewaylanka www.instagram.com/causewaypaintslanka

மெகா பதிப்பகம் 021 2217939